

# பொற்காலமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாய் வாழ்த்து



நீராருங் கடலுடுத்த
நிலமடந்தை கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ் பரத கண்டமதில்
தக்க சிறு பிறை நுதலும்
தரித்த நற் திலகமுமே
தெக்கணமு மதிற் சிறந்த
திராவிட நற் திருநாடும்
அத்திலக வாசனை போ
லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ் மணக்க
இருந்த பெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோ
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களி தெலுங்குங்
கவின் மலையாளமுந்த துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போ லுலகவழக்
கழிதொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர் மொழி வாழியவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/இராமநாதபுரம் மேற்கு
# அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, வட்டக்கச்சி

## நோக்கு (VISION)

தமிழர்தம் கலாச்சார, விழுமியங்கள், நியமங்கள் தாழ்வுறா வகையில்
கற்றல் - கற்பித்தல் செயன்முறையை முன்னெடுத்தலூடாக எதிர்காலச் சவால்களுக்கு
முகங்கொடுக்கும் சமூகத்தைத் தோற்றுவித்தல்

## போக்கு (MISSION)

பாடசாலையின் அகத்தேயும் புறத்தேயும் உள்ள மனித பௌதீக வளங்களை உரிய
முறையில் முகாமைத்துவப்படுத்தி, மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை
ஒழுங்குப்படுத்துவதன் ஊடாக அறிவைக் கட்டுருவாக்கம் செய்யும்
மாணவ சமூகத்தை உருவாக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்



இயற்றியவர்:
ஈழத்து வீரமணி ஐயா (இனுவில்)
முன்னாள் விரிவுரையாளர்
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
கோப்பாய்

இராகம்: மோகனம்

தாளம்: ஆதி

வாழ்க இராமநாதபுர வித்தியாலயம் என்றும்
வாணி உள்ளம் மகிழ்ந்து வாழும் நித்தியாலயம்
சூழ்க கலை கல்வி வளம் சுந்தராலயம்
எங்கள் சோபனக் கலைமகளின் மந்திராலயம்

இராமநாத புரமேற்கில் நாமகள் கோவில்
அது இனியகலை கல்வி தரும் அன்னையின் வாயில்
தேமதுர செந்தமிழின் தேவி எம் தாயின்
மக்கள் தேடி வந்து ஞானம் பெறும் தெய்வீகசாலை

எண்ணுடனே எழுத்து எமக்கு என்றுமே தந்து
எம்மை ஏற்றமுடன் வாழ வைப்பாள் அன்னை முன்வந்து
கண்ணிரண்டு போல கல்வி கலைகளை ஈந்து
எம்மை கண்ணியமாய் வாழ வைப்பாள் நெறிகள் பல்லாண்டு

கல்விச் செல்வம் ஈர்ந்த அருள் குருவினைப்போற்றி
எங்கள் கலாசாலை துதி வணங்கி பாடுவோம் ஏற்றி
நல்லொழுக்கம் கல்வி ஞானம் வீரம் நாட்டியே
பாரில் நிலை புகழ் நற்சுடர் பரப்பி வாழ்வோம் சத்தியம்

சமரசமே வாழ்க்கையிலே நல்கிடும் நெறி உடல்
திடநிலையும் உள உயர்வும் காட்டிடும் செல்வி
எமது இராமநாத புரவித்தை முதல்வி பாரில்
ஏற்றமுடன் வாழ்க நலம் வாழ்க வாழ்கவே! வாழ்க வாழ்கவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எமது வித்தியாலயத்தில் கல்வி கற்குங் காலை

பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி இட்டு

தாயக மண்மீட்புப் போரில் தம்மையும் - இணைத்து

தாயகக் கனவுடன்

சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளையும்

போரியல் வன்முறைக்குள்

அகப்பட்டு உதிர்ந்துவிட்ட எம் உறவுகளையும்

மனதால் வணங்கி

கைதொழுது நற்பதம் வேண்டி - அவர்தம்

பொற்பாதங்களில் பொற்கால மலரைச்

சமர்ப்பணம் செய்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரினுள்ளே ☞☞☞


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் மனத்திலிருந்து | 01 |
| 2. | மலர்க்குழு | 02 |
| 3. | ஆசிச்செய்திகள் | 03 - 04 |
| 4. | பொற்கால முதல்வரின் செய்தி | 05 - 18 |
| 5. | வாழ்த்தியல் | 19 - 32 |
| 6. | பதிவியல் | 33 - 50 |
| 7. | நயப்பியல் | 51 - 66 |
| 8 | பொதுவியல் | 67 - 78 |
| 9. | நன்றிகள் பல... | 79 |
| 10. | நிறைவாக... | 80 |
| 10. | நினைவியல் | i - XV |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்களில் வாழ மண்தனை நீத்தனையோ?



"நீள நினைந்து நித்தமும் கை தொழுவோம்"
பொற்கால மலர் மலர்வதற்கு முன்
இறைவனின் பொற்பதத்தில் மலர்ந்த
பொற்கால நாயகன்
எங்கள் அதிபர் திரு. கனக மகேந்திரா
அவர்களின்
தீடீர் மறைவு எம்மை
அதிர்ச்சியில் உறைய வைத்திடினும்
அவர் எமக்கானவர்
நாம் அவருக்கானவர்
நமக்குள் பிரிவு இல்லை என்ற
அத்வைத நிலையில்
தொட்ட பணி தொடர்கின்றோம்.
இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை
பழைய மாணவர்களாகிய நாம் அவருக்கான
பொற்கால மலரை எழுதத் தொடங்கிய
போதே விதி அவரது வாழ்க்கைப்புத்தகத்தை
மூடி விட்டது. இதனால் பொற்கால மலர்
"வரலாற்று மலர்"
என்னும் திருப்பத்தைச் சந்தித்தது.
ஆம்!
"அவர் வரலாறு ஆகிவிட்ட வரலாறு"

- மலர்க்குழு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.வேணுகன்
ஊடகவியலாளர் - கனடா
(மலராசிரியர்)



# மலராசிரியரின் மனதிலிருந்து......

இன்னல்களையும், சவால்களையும், ஆளணி வளப்பற்றாக்குறைகளையும் தாண்டி பலதளங்களிலும் சாதனைகளைத் தனதாக்கி தலைநிமிர்வு பெற்றுநிற்கும் எம் பாடசாலை வரலாற்றில் *23.06.1989* முதல் *09.04.1999* வரையான காலமென்பது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பொற்காலமாகும்.

இதனை கல்விச்சமூகத்தினர், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் என அக்காலத்தில் பாடசாலைச்சூழலோடு தொடர்புபட்டிருந்த பலரும் வர்ணிப்பதையும், காலச்சூழல்களால் பெயர்ந்து பாரெங்கும் பரந்தபோதும் அன்னையின் அரவணைப்பில் இருந்து விடுபடமுடியாத குழந்தைகளாய் அவர்கள் ஏங்குவதையும் வார்த்தைகளால் வடிக்கமுடியாது.

ஒரு மாணவனுக்குப் பாடசாலைக்காலம் வாழ்வில் ஒருதடவை தான் வரும். கடந்துபோன தமது பாடசாலைக்காலத்து சிறப்புப்பதிவுகளையும், வளர்ச்சிப்படிகளையும், பசுமை நினைவுகளையும், வரலாற்றுச் சாதனைகளையும் பதிவாக்கி, அடுத்த சந்ததியினரும் அறியுமாறு அவற்றை விரிவாக வெளிக்கொண்டு வரவேண்டுமென நினைப்பதில் வியப்பில்லை.

அந்த வகையில் புலம்பெயர் நாடுகளிலும், தாயகத்தின் பல பகுதிகளிலும் பரந்துவாழும் குறித்த காலத்து பழைய மாணவர்களின் ஏகோபித்த விருப்பிற்கமைய அவர்களின் நிதியில் இச்சிறுமலர் மிகச்சிக்கனமாக 'பொற்காலமலர்' (வாகை இரண்டாம் மலர்) எனும் பெயர்தாங்கி வெளியிடப்படுகின்றது.

நூலின் தன்மையும், தேவையும் உணர்ந்து ஒவ்வொருவர் வீடுகளிலும் பாதுகாக்கப்படுவதிலும், அடுத்த தலைமுறைகளுக்கு கடத்தப்படுவதிலும் இந்நூலின் நோக்கம் வெற்றியடையும்.

நோக்குக்குறித்த காலத்துச் சம்பவக்கோப்பே *23-06-1989* முதல் *09-04-1999* வரையான பொருளாதாரத் தடை, போர் நெருக்கடிகள் நிறைந்த அக்காலச்சூழலில் பாத்திரங்கள், சம்பவங்கள் விலகியிருக்கலாம் மாறியுமிருக்கலாம். அக்காலத்து அத்தனை இடர்களையும் தாண்டி எம் பள்ளித் தலைமைத்துவம் எங்கோ அடையாளப்படாது இருந்த எம் கல்விக்கோயிலை இந்த பத்து ஆண்டுகளுக்குள் தனக்கென்று ஒரு அடையாளத்தையும் ஆலமர விருட்சம் போன்ற ஒரு பள்ளி இராஜாங்கத்தையும் உழைத்து உருவாக்கிக் கொண்ட வரலாற்றை இம்மலர் எடுத்தியம்பும். குறித்த இக்காலத்திற்கு அப்பால் செல்வது எமது நோக்கமில்லை. இன்று திரு, திருமதிகளாய் இருந்தாலும் வயதால் அறிவால், மேல் நிலையில் இருந்தாலும் அன்றைய செல்வன் செல்விகளே எமது பாத்திரமாந்தர்கள் ஆவார்களெனினும் எமது கௌரவத்துக்குரியவர்கள் என்றும் கௌரவத்திற்கு உரியவர்களே. அரங்கம் அன்றும் இன்றும் ஒன்றுதான். இதில் பொருத்தப்பாடு குன்றியிருந்தால் உங்கள் பெருங்குணம் எம்மைச் சுதாகரிக்கும் என நம்புகிறோம். இதனால் எந்த நெஞ்சமும் நோவடையக் கூடாது என்பதே எமது நோக்கு. இவ்வரைபுக்கு ஆவணச்சான்றுகள் பல இன்று இல்லை. எமது கைக்கோப்புகளும், நினைவுக்கோப்புகளும், உங்கள் உள்ளக்கோப்புகளுமே எமது சான்றுகள் ஆகும். எனினும் உங்கள் மிகையான உள்ளக்கோப்புகளே இம்மேலான முயற்சிக்கு எமக்கு உரம் இட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

திரு.ம.வேணுதன் - மலராசிரியர், கனடா

திரு.பே.டட்லிகரன் - பிரித்தானியா

திருமதி.கி.துஸாஜினி - பிரித்தானியா

திரு.இ.யூட் ஸ்ரிபன் - பிரித்தானியா

திருமதி.இ.புவனேஸ்வரி - சுவிஸ்லாந்து

வைத்திய கலாநிதி திருமதி கி.அனுசா - இலங்கை

திரு.ம.ரூபவண்ணன் - அவுஸ்ரேலியா

திருமதி.த.பாமினி - பிரான்ஸ்

# ஆலோசனைக்குழு

திருமதி.நா.கணேஜினி

திரு.ம.தேவகரன்

திரு.பா.வசந்தன்

திரு.வே.பிரதாப்

திரு.சு.சுரேஸ்குமார்

திரு.க.விக்கிரமன்

திரு.இ.இராஜசிங்கன்

திரு.க.கிருபாகரன்

திருமதி.சி.இராகினி

திரு.சி.சபேசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை**

# ஆசிச்செய்தி

கீரிமலைக் கேணியடி விநாயகர் ஆலய பரம்பரை தர்மகர்த்தா மரபில் தோன்றிய உயர்திரு. கனக மகேந்திரா அவர்களை வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன்.

நல்லாசிரியராக, புகழ்பூத்த அதிபராக விளங்கிய இப்பெரியாரின் பவளவிழாக் குறித்து அவரது நன்றிக்கடன் மிக்க மாணவர்கள் வெளியிடும் மலர் சிறக்க வாழ்த்துகிறேன்.

பேச்சாற்றல் மிக்க இவரை சிறுவயதிலேயே நான் நன்கு அறிவேன். தமிழரசுக் கட்சி மேடைகளில் அழகு தமிழில் உரையாற்றிய நாட்களை மறக்கமுடியாது.

இவரது பாரியாரின் குடும்பம் எங்கள் குடும்பத்தோடு மிக நெருக்கமான நட்பைப் பேணிவருபவர்கள். அதனால் இவரது திருமணவைபவத்திலும் எங்கள் குடும்பம் பங்குபற்றினர். அன்னாரின் பண்பும், பணிவும், ஆற்றலும் சிறப்புக்குரியது.

அவரிடம் கற்ற வட்டக்கச்சி இராமநாதபுரம் மேற்கு பாடசாலை மாணவர்கள் பவளவிழா மலர் வெளியிட்டு பெருமைப்படுத்துவதும் மிகவும் நன்றிக்குரிய செயல்.

பவளவிழா நாயகன் சீருடனும் சகல சிறப்புக்களுடனும் பல்லாண்டு வாழ ஆசிகூறி அமைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்சகோதரி மேரி ஜெயக்கொடி
அன்புக் கன்னியர் சபை
மாதகல்.

# ஆசிச் செய்தி

கி/இராமநாதபுரம் மேற்கு பாடசாலையின் முன்னாள் அதிபர் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய திருவாளர் கனக மகேந்திரா அவர்களது பொற்கால மலரிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைவதுடன் என் நல்வாழ்த்துக்களையும் மனம்நிறைந்த ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புக் கன்னியர் சபையின் தலைமையின் பணிப்புரையின்படி பாதிக்கப்பட்ட இடங்களில் பணியாற்ற வேண்டும் என்ற தீர்மானத்திற்கேற்ப 1995ல் இரமநாதபுரத்தில் கால்பதித்தேன். தெரியாத இடம், அறியாத நபர்கள் எனது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள கிளி/இராமநாதபுரம் மேற்கு பாடசாலையில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டேன். பாடசாலையின் அதிபர் திரு. கனக மகேந்திரா இன்முகத்தோடு என்னை வரவேற்று அன்பான வார்த்தைகளாலும் ஆறுதலான சொற்களாலும் உரிய கடமைகள் பொறுப்புக்களைத் தந்து நான் எதுவித தயக்கமும் இன்றி பணியாற்றுவதற்கான அனைத்து சூழலமைவினையும் ஏற்படுத்தி தந்தமை கற்றல் செயற்பாட்டிற்கு பக்கபலமாக அமைந்ததுடன் எனது முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக அமைந்தது.

எண்ணுவது உயர்வு, ஏறுபோல் நட, கற்றது ஒழுகு, நேர்பட பேசு என்ற பாரதியாரின் புதிய ஆத்திசூடிக்கு அமைவாக ஆசிரியர்கள் அனைவரும் வாழ வேண்டும் என்பதனை தனது சொல்லாலும் செயலாலும் அனுதினமும் எமக்கு ஊட்டி நல்வழிப்படுத்தியதுடன் ஆசிரியர்களது திறமைக்கேற்ப பொறுப்புக்களை பகிர்ந்தளித்து ஆசிரியர்களது நலனிலும் வளர்ச்சியிலும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு சவால்கள் நிறைந்த காலத்தில் பொறுமையுடன் எது வந்தாலும் சமரசமாய் உய்த்துணர்ந்து பாடசாலையின் இலக்கு நோக்கி உயர்வான நேரிய சிந்தனைப் பாங்கோடு பணியாற்றினார் எமது அதிபர் திருவாளர் கனக மகேந்திரா.

வெற்றிக்கும் தோல்விக்கும் சிறு வித்தியாசம்தான். கடமை செய்தால் அது வெற்றி. கடமைக்கு செய்தால் அது தோல்வி எனக் கூறிய மகா அலெக்ஸாண்டரின் கருத்துக்கு ஏற்ப மாணவர் நலனில் அதிக அக்கறை கொண்டு எந்த இடர் நேரிடினும் சுமைகளை சுகமாக்கி தன்னை நம்பி வந்த பிள்ளைகளது எதிர்கால வாழ்வினை கருத்தில் கொண்டு தமது சொந்தப் பிள்ளைகளைப் போல் அவர்களை வளர்த்து அவர்களை அனைத்து துறைசார் வெற்றிகளையும் பெற்றுக் கொடுத்த பெருமை அதிபரையே சாரும். சிறப்பாகப் போர்க்கால சூழல்களில் பிள்ளைகளைக் காப்பாற்றி கல்வியிலும் விளையாட்டிலும் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல வெற்றிகளை பெற்றுக் கொள்வதற்குப்பக்கபலமாக இருந்து செயற்பட்டார். பாடசாலை விழாக்களுக்கு பஞ்சமில்லை. இத்தகைய விதமாக ஒரு குடும்ப உறவுபோன்ற உணர்வின் மேன்மையினை வளர்த்தார் என்பது எம் மனதில் ஆழப்பதிந்த விடயமாகிறது. 1997ம் ஆண்டு ஆங்கில பாடத்தில் அனைத்து மாணவர்களும் சித்தி பெறுவதற்கு காரணகர்த்தாவாக காணப்பட்டார். இதற்கு காரணம் எனது கற்பித்தல் செயற்பாடுகள் யாவற்றிற்கும் நேரகாலம் பாராது தேவையான அனைத்து உதவிகளையும் உரிய காலத்தில் ஏற்படுத்தித் தந்தமை பாடசாலையின் உயர்விற்கும் மாணவர்களது சிறந்த பெறுபேற்றினை பெற்றுக்கொள்வதற்கும் ஏற்புடையதாக அமைந்தது.

'நடந்த கால்கள் நன்நிலம் சேரும்' எனும் கவிமணியின் கூற்றிற்கு அமைய அதிபர் அவர்களின் தன்னலமற்ற சேவைகள் எம்மையும் மனநிறைவுடன் பணியாற்ற ஊக்கம் கொடுத்தன. தலைமைத்துவத்திற்கு இலக்கணமாக விளங்கி தன்னிறைவுடன் பணியாற்றிய ஒரு பண்பாளன்.


**வெற்றிகள் எமதாகிட விருப்புடன் முயன்றார்**
**நற்பெயர் நாம் பெற நாளும் உழைத்தார்**
**கலங்கரை விளக்காய் பலர் கரைகாண**
**நலம்பல கண்டு நாமும் வாழ**
**வளம் பல பெற்று பாரினில் மகிழ**
**களமமைத்து கை கொடுத்தார்.**

இறையாசியுடன் எந்நாளும் பவள விழா நாயகன் இன்புற்று வாழ்ந்திட, இறையவன் துணை என்றும் நிறைவாகிட வேண்டி, ஆசிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொற்கால அதிபர்
## 23.06.1989 - 09.04.1999



**கலாபூசணம் கனக மகேந்திரா ( S.L.P.S - 2 I )**
**(அகில இலங்கை சமாதான நீதவான்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்கால முதல்வரின் செய்தி

பாடசாலை என்பது வெறும் ஏட்டுக்கல்வியை மட்டும் ஊட்டும் கூடமல்ல. பல்கலைக் களஞ்சியமாக அமைந்து இனத்தின், பிரதேசத்தின் சமூகத்தின் சமய, கலை, கலாசார, பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களில் தீவிர அக்கறை காட்டி மாணவர்களையும் பெற்றோரையும் ஊக்குவித்து வழிப்படுத்தும் அரங்கமாகும்.

அந்த வகையில் ஒரு சமுதாயத்தின் எழுச்சி, வீழ்ச்சி யாவும் பாடசாலையின் பரிமாணத்திலும் வளங்களிலுமே தங்கியுள்ளது. ஆகவே ஒவ்வொரு பாடசாலையினதும் அதிபர்களும், ஆசிரியர்களும் இவற்றைத் தமது கண்ணான கடமையெனக் கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்படுவார்களேயானால் ஒரு சிறந்த உயர்ந்த சமுதாயக் கட்டமைப்பையும், கல்வி ஒழுக்கங்களில் சிறந்த நற்பிரஜைகளையும் சந்ததிகளையும் பிரசவிக்க முடியும்.

அத்தகையவர்களே உன்னதமானவர்களாக, உதாரண புருசர்களாக என்றும் மதிக்கப்படுவார்கள், நினைவு கூரப்படுவார்கள்.

இதில் அதிபர் என்பவர் தான் சார்ந்த சமூகத்தின், இனத்தின், கலாசார, பண்பாட்டு விழுமியங்களை கல்வியினூடாக மாணவர்களுக்கு ஊட்டி ஒரு மேன்மையான ஒழுக்கமான கல்வியறிவுள்ள சமுதாயக் கட்டமைப்பை உருவாக்கும் சிற்பியாவார்.

# இதயவீணை மீட்டும் போது...............

**இராமநாதபுரம் மேற்கு வித்தியாலயத்திற்கு அதிபராக நியமனம்**

1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர்கள் இருவர். அவர்களில் ஒருவர் நான். 19.06.1989 அன்று திரு.க.கந்தசாமி அவர்கள் புதிய கல்விப் பணிப்பாளராக மாவட்டத்தில் கடமையேற்கிறார். 23.06.1989 அதிகாலையில் திடீரென எனக்கு ஒரு கடிதம் தரப்படுகிறது. ஒரு பாடசாலையின் பெயரைக்குறிப்பிட்டு அப்பாடசாலையின் அதிபர் பதவியை உடனடியாக ஏற்குமாறு பணிக்கும் கடிதமது. மிகவும் அதிர்ச்சியாயிருந்தது கதிகலங்கி நின்ற நான் எனது மறுப்பையும் உடனடியாகவே அறிவித்தேன். “குறித்த பாடசாலை மிகவும் பின்னடைவைச் சந்தித்துள்ளது அதை நிமிர்த்த உங்களால்தான் முடியும். ஒரு வருடமாவது சென்றுவாருங்கள்” என கேட்டுக்கொண்ட கல்விப்பணிப்பாளர் ‘ஒரு வருடத்தால் நீங்கள் திரும்புவதற்கு வேண்டுமானால் நான் உத்தரவாதம் தருகிறேன்’ என்றும் கூறினார். மறுக்க முடியவில்லை, ஏற்கவும் விரும்பவில்லை.

எனது அதிபர் நா.சோதிநாதன் பக்கம் திரும்புகிறேன், ‘உங்கள் ஆளுமைத்திறனுக்கு நீங்கள் சொந்தக்காலில் நிற்பதற்கு கிடைத்த சந்தர்ப்பம் இது’ என்று கூறி ‘என் வலக்கரத்தை இழப்பது கவலைதான் ஆயினும் சென்றுவாருங்கள்’ என முதுகில் தடவி வாழ்த்தி அனுப்புகிறார். பிரதிக்கல்விப்பணிப்பாளர்களான திரு.சி.வேலாயுதம், திரு.தனஞ்சயன் ஆகியோரும் என்னை நெருங்கி வாழ்த்தி அனுப்புகிறார்கள்.

நண்பரும், ஆசிரியருமான திரு.மா.மோட்சலிங்கத்தின் மோட்டார் வாகனத்தில் சக ஆசிரியர் திரு.சதானந்தனுடன் குறித்த பாடசாலைக்குச் செல்கிறேன். அதற்குமுன் மூன்று தடவைகள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் என்ற வகையில் அங்கு சென்றிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப்பாடசாலைதான் அடுத்துவரப்போகும் ஆண்டுகளில் என் வாழ்வோடு கலந்த இத்தனை அனுபவங்களையும், சிறப்புக்களையும் எனக்கு வழங்கவிருக்கிறது என்பதை நான் சிந்தித்திருக்கவில்லை. இன்று நீங்கள் இந்தப் புத்தகத்தை வாசிக்கவும், உங்கள் நினைவகங்களில் நான் வசிக்கவும் காரணமான அந்தப் பாடசாலை வட்டக்கச்சியிலுள்ள கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை தான்.

அப்போது இப்பாடசாலையில் பதில் அதிபராக திரு.அருளானந்தம் கடமையாற்றிவந்தார். சிரேஸ்ட ஆசிரியை திருமதி.செல்லையா வந்து எம்மை வரவேற்கிறார்.

அப்போது கடமையிலிருந்த அனைத்து ஆசிரியர்களையும் சந்தித்து கதைத்துவிட்டு சம்பவத்திரட்டு புத்தகத்தில் ஒப்பமிட்டுவிட்டு கடமை ஏற்றல் கடிதத்தை உறுதிப்படுத்தக் கொத்தணி அதிபரிடம் கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தை அடைகிறேன். அவரும் என்னை இன்முகம் காட்டி வரவேற்று உபசரித்தார்.

**முரண்பாட்டுத்தீர்வு**

இரண்டாம் நாள் பெற்றோரைச் சந்திக்கிறேன். வரவேற்று வாழ்த்துகிறார்கள். மூன்றாம் நாளில் ஆசிரியர் மத்தியில் சிறு சலசலப்பு ஏற்பட்டு முறைப்பாட்டுடன் என்னிடம் வருகிறார்கள். அது மதிய உணவு வழங்கும் காலம். சமையற் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளுக்கு வழங்கலுக்குப் பொறுப்பாகவிருந்த பெற்றோர் ஒருவர் அடித்துவிட்டதால் இருசாராருக்கிடையிலும் முரண்பாடு ஏற்பட்டது. பெற்றோரும் முறைப்பாட்டுடன் வருகிறார்கள். இன்றிலிருந்து சமையலுக்கு உப்பு போதவில்லை என்றாலும் அதிபர் என்ற வகையில் என் கவனத்துக்கே வரவேண்டும். உங்களுக்குள் முரண்பாடு தேவையில்லை எனச் சொல்லிவிடுகிறேன். அன்றுடன் அவர்கள் ஒதுங்கிக்கொண்டனர். பாடசாலைக்கு வருவதில்லை.

**பாடசாலை சூழல்**

பாடசாலைக்கு வேலி இல்லை. தினமும் அயல்வீட்டாரின் ஆடுகளும், மாடுகளும் வகுப்பறைக்குள் சென்று அசிங்கம் செய்வதால் மாணவர்கள் தினமும் அவற்றைக் கழுவிச் சுத்தம் செய்தபின்பே கல்வியை ஆரம்பிக்கவேண்டிய நிலை இருந்தது. இதற்கான தீர்வை வலியுறுத்தி நான் கடமை ஏற்பதற்கு முதல் வாரத்தில் மாணவர்கள் பாடசாலைப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். பாடசாலைக் கிணற்றில் நவம்பர் முதல் மார்ச் வரைக்கும் மட்டுமே தண்ணீர் இருக்கும் மாணவர்கள் குடிநீரை வீடுகளிலிருந்தே கொண்டுவரவேண்டும்.

**மாணவர் ஒழுக்கம்**

பதவியேற்று ஓரிரு நாட்களின் பின்னர் மாணவர்களின் குழப்படி சம்மந்தமான முறைப்பாடு ஒன்றும் கிடைக்கிறது. சம்பந்தப்பட்டவர்களை அழைத்து வரிசையில் நிறுத்துகிறேன். சிறிது நேரத்தில் தண்டனை பெற்று நின்ற மாணவர்கள் வந்து தம்மை யாரோ மாணவர் கிண்டல் செய்வதாக முறையிடுகின்றனர். குறித்த மாணவன் அழைத்து முதற்தடவையாக நீண்ட தடியால் அவரின் பின்புறத்தில் காற்சட்டையில் ஓசை எழும்வகையில் உரத்த குரலில் சத்தம் வைத்து அடித்தேன். பாடசாலையே அதிர்ந்துபோனது. அதுவரை சத்தமும் சந்தடியுமாயிருந்த பாடசாலையில் மயான அமைதி நிலவியது. இது அடியைக் கண்டிராத பாடசாலை. பெரும்பான்மையான ஆசிரியர்கள் பெண்கள். இருந்த ஆண் ஆசிரியர்களும் தடியெடுத்து அடிப்பதில்லை.

இதனால் தான் ஒழுங்கும் கட்டுப்பாடும் பின்நோக்கிச் செல்ல நேரிட்டது. ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லையென்றால் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் சீர்குலைந்துவிடும். பாடசாலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலில் உள்ள வீடுகளின் பிள்ளைகள் கூட வேறு பாடசாலைகளில் சேர்ந்தே கற்றுவந்தனர். அயலில் வாழும் திறன் கூடிய பிள்ளைகளும் ஏனைய பாடசாலைகளுக்கே சென்று கற்றுவந்தனர்.

பொருளாதார வளமும், கற்றல் ஆர்வமும் குன்றிய வீட்டுப்பிள்ளைகளே இங்கு எஞ்சியவர்களாக இருந்தனர்.

அடிவிழுந்த சிறிது நேரத்தில் அலுவலகத்துக்கு வந்த ஒரு ஆசிரியை, கதையோடு கதையாக மூத்த ஆசிரியை ஒருவரின் பெயரைச் சொல்லி அவரின் மகனே அடிவாங்கியவர் என்கிறார். பின்னர் குறிப்பிட்ட மூத்த ஆசிரியையைச் சந்திக்க நேர்ந்தபோது அதைச் சமாளிக்கும் வகையில் பேச்சுத் கொடுத்தேன் அவரும் அதே நோக்கத்தில் "அவன் பெரிய குழப்படிதான் சேர், இண்டைக்கு மாட்டியிட்டான், பிழைவிட்டால் தண்டிக்கத்தானே வேண்டும்" என வெளிப்பட்ட தன் வெப்பியாரத் தையும் சுதாகரித்துக் கொண்டார்.

ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோரும் 'புதிய அதிபர் நெருப்பன்' எனக்கூறுவது என் காதுகளுக்கும் எட்டியது. அந்தக் கடுமையே பாடசாலையை வளமாக்கிவிட்டது என்று திடமாக நம்புகிறேன். "உந்தக் கொசப்புகளை எப்படிச் சமாளிக்கிறாய்" என்றவாறு நேரடியாகவே என்னைக் கேட்ட ஊராரின் கேள்விகளும் காலப்போக்கில் காணாமல் போனது.

**பாடசாலை விடுதியும், பற்றைகளும்**

அடுத்துவந்த சிலநாட்களில் பாடசாலை அலுவலக வாயிலில் கழட்டிவிட்ட எனது காலணிகளைக் காணவில்லை. மனதிற்கு கஸ்டமாகத்தான் இருந்தது. அப்போது நான் தங்கியிருந்த கிளிநொச்சி மகாவித்தியாலய விடுதிக்கு காலணிகளின்றியே சென்றிருந்தேன். அது ஒரு திருட்டல்ல. குறும்பு என்று புரிந்துகொண்டேன். பாடசாலை அலுவலகத்திற்குப் பின்புறம் நாயுருவிப் பற்றைகளே நிறைந்திருந்தன. பாடசாலையின் 5 1/2 ஏக்கர் காணியும் பற்றைக்காடாகவே அமைந்திருந்தது. பாடசாலை விடுதிகளில் அயற்பாடசாலைகளைச் சேர்ந்த ஐந்து ஆசிரியர்கள் தங்கியிருந்தனர். அயலிலுள்ள இரு பாடசாலைகளிலும் இந்திய இராணுவ முகாம்கள் அமைந்திருந்ததால் பாதுகாப்புக் கருதி அவர்கள் இங்கே தங்கியிருந்தனர். அவர்களும் கிணற்று வசதி இல்லாததால் தண்ணீர்த் தேவைகளுக்கு வேறு இடங்களுக்கே சென்று வந்தார்கள்.

விடுதியின் ஜன்னல்களுக்கு கண்ணாடியோ, கதவுகளுக்குப் பூட்டோ இருக்கவில்லை. விடுதியைச் சூழ்ந்த பகுதிகளில் சாம்பல் மேடுகளும் பிசுங்கான் ஓடுகளும், பாம்பு நிறைந்த பற்றைகளும், நிலம் தெரியாத அளவிற்கு மாஞ்சருகும் மூடிப்போய்க் கிடந்தது.

**வாகனப் பாதையும், பாடசாலை வளவும்**

பாடசாலைவளவிற்குள் மேற்குப்புற ஒழுங்கையிலிருந்து வடகிழக்கு மூலைவரை வாகனப்பாதை ஒன்றும் உருவாகியிருந்தது. பாடசாலையின் தென்மேற்கு மூலையில் உருவான பாதையால் வரும் வாகனங்களும், பாதசாரிகளும் வடகிழக்கு மூலையால் வெளியேறிப்போவார்கள். பாடசாலை நேரத்தில் மாணவர்களும் இவ்வழியாக எவருக்கும் தெரியாது வெளியேறிச் சென்றுவிடும் வழக்கமுமிருந்தது. சில ஆசிரியர்களும் அவ்வாறே. அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் ஆசிரியர்களும் திங்கள் நண்பகல் 12.00 மணிக்கு முன்பின்னாகவும், வெள்ளி காலை 10 மணிக்கு முன்னாகவும் பயணம் வைத்து விடுவார்கள். அக்காலத்தில் அநேகமான பாடசாலைகளில் இந்த வழக்கம் இருந்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கை நோக்கிய பயணம் ஆரம்பம் - மூன்றாண்டுத் திட்டம்

என்னில் நம்பிக்கை வைத்து அனுப்பிய கல்விப்பணிப்பாளரின் முகத்தில் முழிக்குமளவிற்குச் செயலாற்ற வேண்டும் என உள்மனது சொல்லிக்கொண்டிருந்தது. இப்பாடசாலைச்சூழலை மாற்றி அமைத்து அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற உத்வேகம் வளர்ந்துகொண்டே இருந்தது. நன்றாகவிருந்த கிளி/மத்திய மகாவித்தியாலயத்தோடு ஒப்பிடுகையில் பெருவாரியான வேலைகளை இங்கு செய்யவேண்டி இருந்தது. அதற்காக மூன்றாண்டுத் திட்டமொன்றை வகுத்தேன். முதலில் எனது இருப்பிடத்தை நகரத்தில் இருந்து மாற்றி பாடசாலை விடுதிக்கே வந்தேன். விடுமுறை நாட்களிலும் வீடு செல்வதைக் குறைத்தேன். கட்டுக்கள் உடைந்து வௌவால் குடியிருக்கும் போறையாகவே கிடந்த கிணற்றுநீரை அருந்தியதால் வாந்தி, வயிற்றோட்டம் அதனைத்தொடர்ந்து நெருப்புக் காய்ச்சலுக்கும் ஆளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். புதிய கிணறு ஒன்றிற்கான தேவையை உணர்ந்தேன்.

### பரீட்சை முடிவு

பதவியேற்ற சிலநாட்களில் வெளியாகியிருந்த பரீட்சை முடிவுகளின் படி 29 மாணவர்கள் தோற்றி அதில் ஒருவர் மட்டுமே உயர்தரம் கற்கத் தகுதி பெற்றிருந்தார். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் எவரும் சித்தியடைந்திருக்கவில்லை. எனது புதிய ஏற்பாட்டின்பின் 1989இல் செல்வி.க.ஜெகதீஸ்வரி முதலாவதாக சித்தியடைந்திருந்தார். அன்றைய தொண்டர் ஆசிரியர்களான செல்வி.சி.நளாயினி, செல்வி.க.பிரேமராணி, செல்வி.செ.ஜெகதாம்பிகை ஆகியோரே மேற்படி பரீட்சைக்காக மாணவர்களைத் தயார்படுத்தினர். யாழ்ப்பாணத்திலிருந்து வரும் ஆசிரியர்கள் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்று நாட்களும் மேலதிக வகுப்புகளை நடாத்த ஒழுங்கு செய்திருந்தேன். அப்போதிருந்த இசையாசிரியர் ஒருவர் 10 மைல் தொலைவிலிருந்து தினமும் ஈருளியில் பயணம் செய்யவேண்டி இருந்ததால் அவரது ஆற்றலின் முழுமையை மாணவர்கள் பெறமுடியவில்லை. எனவே மாவட்டம் பயனுறும் வகையில் திறமையான அந்த ஆசிரியையை இடம்மாற்றி நகர்ப்புற பாடசாலை ஒன்றுக்கு அனுப்பியிருந்தேன். அன்றிலிருந்து எமது பாடசாலைக்கு இசையாசிரியர்கள் எவரும் கிடைக்கவில்லை. நகர்ப்புறத்திலிருந்து ஆசிரியர்களை வரவழைத்து பிரத்தியேக வகுப்புகள் என்ற அடிப்படையில் சங்கீத பொதுப்பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தோற்ற வைத்தேன். சங்கீதம் கற்றிருந்த என் துணைவியாரின் துணையும் இதில் எனக்கும் பெரிதும் உதவியது. தமிழ், மனையியல் பாடங்களுக்கும் இருந்துவந்த ஆசிரியர் வெற்றிடங்களையும் இம்முறையிலேயே கையாண்டேன். கற்றல், கற்பித்தல் முறைமைகளை துரித நடவடிக்கைகள் மூலம் ஊக்கப்படுத்தினேன். ஒவ்வொரு ஆசிரியரிடமிருந்தும் பரீட்சை முடிவை நோக்கிய வாக்குறுதிகளைப்பெற்று குறித்த இலக்கை அடையும்வரை தொடர்ந்து ஊக்கப்படுத்தினேன்.

### பெற்றோர் கவனமும் ஈர்ப்பும்

பாடசாலை ஒன்றின் கல்வி மேம்பாடடைய வேண்டுமாயின் பெற்றோர் கவனமும் மாணவர்பால் ஈர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு பெற்றோரையும் அழைத்து மாணவர்களின் நிலைமைகளை ஆராய்ந்து ஆலோசனை வழங்கி இரவு நேரத்தில் வீடுகளில் கட்டாயமாக நேர அட்டவணையிட்டு படிக்க வைத்தேன். பிள்ளைகள் வீட்டில் படித்த நேரத்தை பாடசாலை பெற்றோர் தொடர்பாடல் கொப்பிகள் மூலம் பெற்றோரின் ஒப்பங்களைப் பெற்று உறுதிப்படுத்திக்கொண்டேன்.

சில வீடுகளுக்கு சிலவேளைகளில் மேற்படி திட்ட மேற்பார்வைக்காகத் திடீரெனச் சென்று வருவதும் உண்டு. இத்தகைய நடவடிக்கைகளால் வீடுகளில் மாணவர்களின் கற்றல் செயற்பாடு ஒழுங்கமைக்கப் பட்டிருந்ததுடன் பெற்றோரும் சந்திப்புக்களின்போது பதிலளிக்க வேண்டியிருந்தது. அதனால் எம்மீது அவர்களுக்கு நம்பிக்கையும் பிறந்தது. மாணர்களின் பாடசாலை வரவு படிப்படியாக சீரமைக்கப்பட்டது. பாடசாலையிலிருந்து இடைவிலகிய பிள்ளைகள் மீண்டும் இணைந்து கல்வியைத் தொடர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாயப்படுத்தினேன். இதனால் என்னைப் பிள்ளைபிடிகாரன் எனப் பிரஸ்தாபித்தவர்களும் இருந்தனர். அடிக்கடி பெற்றோரைச் சந்திப்பதால் பாடசாலைக்கும் பெற்றோருக்குமிடையில் பரஸ்பர நெருக்கமேற்பட்டது.

### எல்லை வேலிகள்

ஒரு பாடசாலையின் கல்வி மேம்பாடடைய வேண்டுமாயின், அங்கு மாணவர் ஒழுக்கம் நன்கு பேணப்பட வேண்டும். அதிபர் ஆசிரியர்களிடம் அர்ப்பணிப்பு மனப்பாங்கு இருக்கவேண்டும். மாணவர்களிடம் கல்வியுடன், பாடசாலைப்பற்றும் ஊட்டப்படவேண்டும். பாடசாலையில் ஒழுங்கு கட்டுப்பாடு பேணப்படின், அங்கு வகுப்பறைகள் அடக்கமாகவும், பாடசாலை வளவு அறிக்கையாகவும் அமைய வேண்டும். அவ்வகையில் பாடசாலை வேலியைப் பலப்படுத்த எண்ணி ஒவ்வொரு மாணவர்களிடமும் வீட்டுக்கு ஐந்து கதியால் வீதம் சேகரித்ததோடு போதாமையைப் போக்க பொதுமக்களிடமிருந்து பேணப்படாதிருந்த வேலிகளின் கதியால்களையும் கேட்டு வெட்டி எடுத்தேன். 5 1/2 ஏக்கர் காணியின் சுற்றுவேலியை அடைக்க பெருந்தொகைக் கதியால்கள் தேவைப்பட்டன. அனைத்தையும் மாணவர்களின் உதவியோடு சேகரித்து சிரமதான அடிப்படையில் முழு வேலியையும் சீர் செய்தேன். இப்போது கட்டாக்காலி மாடுகள் உள்ளே வருவதில்லை. குறித்த வேலிகளில் பத்து அடிக்கு ஒரு வேம்பு, தேக்கு, சமண்டலை என மரநடுகை செய்தேன். வேலி அறிக்கையானதும், காடு மண்டிப்போயிருந்த பகுதிகளில் நடுவதற்கு தேவையான பயிர்களை மாணவர்களே கொண்டு வந்தார்கள். ஏதாவது பயிர்ச்செய்கையை மேற்கொள்வதாயின் தண்ணீர் அத்தியாவசியம். சிரமதானம் மூலம் கிணறு ஒன்றைத் தோண்ட முடிவுசெய்தேன். நீண்டகாலம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக இருந்த திரு.ம.குமாரசாமி அவர்கள் இராமநாதபுரத்தில் வாழ்ந்த பெரியார் அளவெட்டி வேலுப்பிள்ளை அவர்களை அழைத்துவந்து நிலையமெடுத்துத் தர கிணறுவெட்டும் பணிகள் ஆரம்பமாகின.

### சிரமதானம் மூலம் கிணறு

மண் இடிந்து கரைந்துகொண்டிருக்கும், கட்டிடப்பொருட்கள் தடை செய்யப்பட்டிருந்த காலம் இது சாத்தியமற்ற வேலை என பலரும் ஆலோசனை கூறினர். அவர்களின் கூற்றுக்களால் சற்றுத் தயங்கி னாலும் ஒருவித அசட்டுத்துணிவோடு பணிகளைத் தொடங்கினேன். வெட்டி முடித்தேன். பாடசாலையின் அவசியத்தேவைகளில் ஒன்று பூர்த்தியானது.

### பயிர்ச்செய்கை

அதைத் தொடர்ந்து பாடசாலை வளாகத்திற்குள் மா, பலா, தென்னை போன்ற நெடுங்காலப் பயிர்களை நாட்டிவித்தேன். முற்றப்பகுதியை அழகூட்டும் வகையில் அழகு பயிர்களையும் மரக்கன்றுகளையும் நாட்டி வளாகத்தைச் செழிப்பாக்கினேன். பல பாடசாலைகளிலுமிருந்து இங்கு மாணவர்கள் பெருமளவில் இணையத் தொடங்கினார்கள். பாடசாலையின் ஆளணி வளங்கள் சார்ந்தும், பௌதீக வளங்கள் சார்ந்தும் பாடசாலை வரலாற்றில் பல மாறுதல்கள் ஏற்படத்தொடங்கின.

### விவசாய முயற்சிகள்

அக்காலத்தில் காடு மண்டிக் கட்டாந்தரையாக கிடந்த பாடசாலை வளவின் கிழக்குப் பகுதியை உழுது எள்ளுவிதைத்தோம். இதுவே எமது பாடசாலையின் ஆரம்ப விவசாய முயற்சியாகும். பாடசாலையின் மேற்குப் பகுதியில் இருந்த குப்பை மேட்டில் செழித்து முளைத்துக் காய்த்த வாழைக்குலைகளை ஏலத்தில் விற்றோம். அப்போது வர்த்தகரும் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்தவருமான திரு.க.முத்துலிங்கம் அவர்கள் பாடசாலை நன்மைக்காகவும் அதிக விலை கொடுத்து அதனைப் பெற்றுக்கொண்டார். அவரது அன்றைய ஈகைப் பெருமனதே எமது பாடசாலை யின் விவசாய முயற்சியின் மூலதனமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழைத்தோட்டமும், தென்னந்தோட்டமும்**

அதனைத் தொடர்ந்து விவசாயப் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கும் நோக்குடன் சுமார் 125அடி வாழைத்தோட்டத்தை ஏற்படுத்தியதுடன், தென்னை நாற்றுக்களை மாணவர்களிடமிருந்து அன்பளிப்பாக பெற்றும் போதாமைக்கு வாங்கியும் 200அடி தென்னந்தோட்டமொன்றையும் உருவாக்கினோம். இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களாக 1995 நவம்பரில் பாடசாலை ஆகும்வரை பயிர்கள் நல்லமுறையில் பேணப்பட்டு வந்தது.

பாடசாலை வளாகத்தில் இருந்த மாமரத்தில் இருந்து விழுந்த விதைகளைச் சேகரித்து நாற்றுமேடை அமைத்து உருவான மாங்கன்றுகளில் இருந்து ஒட்டுமாங்கன்றுப் பயிற்சிகளை மாணவர்களுக்கு அளித்து வந்தோம்.

இலைக்கஞ்சிக்காக அறிமுகப்படுத்திய மூலிகைகளில் 28வகை மூலிகைகளை நாட்டித் தினமும் அம்மூலிகைகளிலிருந்தே இலைக்கஞ்சி வழங்கிவந்தோம்.

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆண்டுதோறும் நடத்திவந்த விவசாய உற்பத்தித்திறன் போட்டிகளில் மாவட்டத்தில் இரண்டு தடவைகள் முதலாமிடத்தையும், ஒரு தடவை இரண்டாமிடத் தையும் பெற்றோம்.

இக்காலகட்டத்தில் விவசாய ஆசிரியராக இருந்த திரு.பே.திருக்கேதீஸ்வரனும் துணையாக இருந்த ஆசிரியர் திரு.க.கிருஸ்ணமூர்த்தியும் மறக்கமுடியாதவர்கள்.

**பிள்ளைகள் மீளத்தொடங்கினர்**

பாடசாலையின் வளர்ச்சி, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் கற்றலுக்கான கவின்நிலை, பரீட்சை முடிவுகள், பழைய மாணவர்கள், பெற்றோர், பொதுமக்கள், சமூக நிறுவனங்கள் ஆகியோருடனான தொடர்புகள், அவர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும், பாடசாலையில் ஏற்பட்ட மாற்றம், ஒழுக்கம், கட்டுப்பாடு, பிள்ளைகளுக்கு வழங்கிய பாதுகாப்பு, பெற்றோருக்கு என்மீது ஏற்பட்ட நம்பிக்கையும் உறுதிப்பாடும், கலை கலாசார விளையாட்டு துறைகளில் பிள்ளைகளின் வளர்ச்சி, என்பவற்றால் ஈர்க்கப்பட்ட பாடசாலைக்கு அருகாமையில் வசித்த பிள்ளைகள் மீளவும் எமது பாடசாலையில் இணைந்துகொண்டதோடு, ஆறுமுகம் வீதி, கட்சன் வீதி, தகரப்பிள்ளையார் கோவிலடி, சிவிக் சென்ரர், மாயவனூர், புதுக்காடு, பெரியகுளம், தர்மபுரம் கட்டைக்காடு ஆகிய பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் வந்து இணையத்தொடங்கினர்.

குறிப்பாக அயற்பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்களாக இருந்த திருவாளர்கள் பொன்.நித்தியானந்தம், அன்ரன் தேவானந்தா, க.முத்துக்குமாரு, மு.சிவமோகன் போன்றோரும் எமது பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தில் இணைந்து செயலாளர்களாகவும் செயற்பட்டனர்.

பாடசாலைக்குப் பக்கத்தில் இருந்த வீடுகளின் பிள்ளைகள் கூட வேறு பாடசாலைகளுக்குச் சென்று கல்விகற்ற காலம் மாறி தொலைதூரங்களிலிருந்தும் இங்குவந்து கல்வி கற்கும் 'பொற்காலம்' உதயமானது.

இவ்வாறான சூழல் எனக்கும், ஆசிரியர்கள் மாணவர்களுக்கும் மேலும் உற்சாகத்தை வழங்க முன்பிருந்ததைவிட அபிவிருத்திப்பணிகள் வேகமெடுத்தன. விவசாய பயிர்ச்செய்கைக் குழுவினரின் உதவியைப் பெற்று நீரிறைக்கும் இயந்திரம் (Water pump) ஒன்றைப் பெற்றோம்.

இக்காலத்தில் விடுதி இருந்தும் பயனற்று இருந்தமையால் அந்நாட்களில் மக்கள் தேவையறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமம் கிராமமாக நடமாடும் சேவை (Mobile Service) நடத்திக்கொண்டிருந்த அரச அதிபரின் கவனத்திற்கு பாடசாலையின் தேவைகருதி அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு.க.கயிலாயபிள்ளை தலைமையில் வேண்டுகை கொண்டுசெல்லப்பட்டது.

எமது கோரிக்கையை ஏற்று பாடசாலை அதிபர் விடுதியை திருத்துவதற்கு அரச அதிபர் நிதி ஒதுக்கினார். விடுதி திருத்தப்பட்டதும் எனது குடும்பத்தாரையும் அழைத்து வந்து விடுதியில் தங்கினோம். அதன் மூலம் பல சேவைகளை பாடசாலையிலிருந்தே செய்ய முடிந்தது. பொதுமக்கள் பெற்றோர், மாணவர் தொடர்புகள் அதிகரித்தது. யாழ். நகரில் கல்விகற்றுவந்த எனது மகளை எமது பாடசாலையிலே கொண்டுவந்து சேர்த்தேன். அச்செயல் யாழ்ப்பாணம் உட்பட வேறிடங்களுக்கு அனுப்பி பிள்ளைகளை கற்பித்த பெற்றோர் மத்தியில் பெரும் நம்பிக்கையைக் கொடுத்தது. அவர்களும் தம் பிள்ளைகளை எமது பாடசாலைக்கே மீள அழைத்து வந்து சேர்த்தனர்.

இந்நிலையில் அதிகரித்து வந்த மாணவர் சேர்க்கைக்கு ஏற்ப புதிய தற்காலிக கட்டடங்களை ஏற்படுத்தவும் இருந்த கட்டடங்களை சீரமைக்கவும் வேண்டி இருந்தது முதற்தடவையாக அன்றைய நிர்வாக அமைப்பினரால் கூரைத்தகரங்கள் வழங்கப்பட்டன. அவற்றை ஆனைவிழுந்தானிலிருந்து நாமே எடுத்துவரவேண்டிய தேவை இருந்தது. வாகன வசதிகள் இல்லாத அக்காலத்தில் சுமார் 25 மைல் தொலைவுக்கு அப்பாலுள்ள யானைகள் நிறைந்த காட்டுப்பாதையூடாக அவற்றை எடுத்து வருவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. அன்று க.பொ.த சாதாரண தரத்தில் கல்விகற்ற மாணவர்கள் இப்பணிக்கு முன்வர, தனது மாட்டு வண்டியையும் அயலிலுள்ளவர்களின் மாடுகளையும் பெற்றுத்தந்த அமரர். முத்துலிங்கம் மறக்க முடியாதவர். மாணவர் பெற்றோர் இணைந்த கூட்டு உழைப்பில் இந்த முயற்சியும் கைகூடி அதுவரை ஓலைக் கூரையைக் கொண்டிருந்த 40 அடி கொட்டகை தகரக் கொட்டகையாக மாற்றம் பெற்றது.

எனது சேவைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் 7 ஆண்டுகள் அதிபராக சேவையாற்றிய செல்வி. திரவியம் வேலுப்பிள்ளை அவர்களின் முயற்சியால் பாடசாலைக்காகப் பெறப்பட்டிருந்த Band வாத்தியக்கருவிகள் பயன்படுத்தப்படாமலேயே இருந்தன. அதற்கான மாணவர்கள் குழாமொன்று அமைத்து பயிற்றுவித்து முதன்முறையாக எமது பாடசாலையின் Band வாத்திய அணி உருவாக்கப்பட்டது. பின்நாளில் அக்கருவிகளை தம் பாவனைக்காக பெற்றுக்கொள்ள அன்றைய நிர்வாக அலகுகளால் தொடர் நெருக்குவாரங்கள் தரப்பட்டன. அரச அதிபரின் கடிதத்தோடும் சில அதிகாரிகள் வந்தார்கள். மாவட்டத்தில் அப்போது எம்மிடம் மட்டுமே இக்கருவிகள் இருந்தன. இவ்விடயத்தில் என் இறுக்கமான நிலை கண்டு அன்றைய கல்விப்பணிப்பாளர் திரு.பொன்.சபாபதி அவர்களையும் சிலர் நாடினர். எவருக்கும் நான் கிறுங்காததைக் கண்ட அவர் தன்னை நாடியவர்களை என்னை நாடாது தடுத்திருந்தார். என் சேவைக்காலம் முடிந்து நான் பிரியாவிடை பெற்ற பின் அந்த வாத்தியங்களும் பிரியாவிடை பெற்றுக்கொண்டன.

அதிபர் செல்வி.வே.திரவியத்தால் பழுதடைந்த நிலையில் பாவனைக்குதவாது என விட்டுச் செல்லப் பட்ட ஐந்து தமிழ் தட்டச்சு பொறிகளை உரியவர்களை அணுகி திருத்தி மாலைநேர முறைசாராக் கல்வி வகுப்புக்களை நடத்தினேன். அதில் பயின்றவர்களுக்கு அரச சான்றிதழும் பெற்றுக் கொடுத்தேன். அதில் அன்றைய எமது ஆசிரியர்களும் அடங்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் (1989 - 1999)

| ஆண்டு | மாணவர் பெயர் | கற்பித்த ஆசிரியர் |
|---|---|---|
| 1989 | செல்வி. கயிலாயபிள்ளை ஜெகதீஸ்வரி | செல்வி. க.பிறேமராணி |
| 1990 | செல்வி. பத்மநாதன் லக்சாந்தி | செல்வி. மா.மஞ்சுளா |
| 1991 | செல்வி. குணரட்ணம் பாமினி<br>செல்வி. ஆறுமுகம் கலைச்செல்வி | செல்வி. மா.மஞ்சுளா<br>திருமதி. க.பிறேமராணி |
| 1992 | செல்வி. செல்வநாயகம் சந்திரகலா<br>செல்வி. மகேந்திரா ஹம்சானந்தி | செல்வி. சி.நளாயினி |
| 1993 | செல்வன். நடராசா பிரதீபன் | செல்வி.செ.ஜெகதாம்பிகை |
| 1994 | செல்வி. நடராசா பிரதீபா<br>செல்வி. கனகசபாரத்தினம் சர்மிளா | செல்வி. க.தயாரதி |
| 1995 | செல்வி. புவனேஸ்வரன் பூர்ணிகா | |
| 1996 | செல்வன். மகேந்திரன் ரூபவண்ணன்<br>**(மாவட்டத்தில் முதலாமிடம்)**<br>செல்வன். கந்தசாமி சாரங்கன்<br>செல்வி. பாலச்சந்திரன் லிசாமிளா<br>செல்வன். ந.சதீஸ்குமார் | செல்வி. க.தயாரதி |
| 1997 | செல்வன். பாலசுப்பிரமணியம் தயந்தன்<br>செல்வன். மகேந்திரரத்தினம் வேணுதன்<br>செல்வி. குணசீலன் கோசலா<br>செல்வி. முத்துக்குமாரு லக்சிகா<br>செல்வி. கனகராசா கார்த்திகா | செல்வி. க.தயாரதி |
| 1998 | செல்வி. ம.துசாந்தி<br>**(மாவட்டத்தில் இரண்டாமிடம்)**<br>செல்வி. சி.சிறிபிரியா | திருமதி. கௌ.தயாரதி |
| 1999 | செல்வி. பு.கிருஸ்ணகுமாரி<br>செல்வி. த.தர்சிகா<br>செல்வி. பா.வாசுகி<br>செல்வி. கே.கோபிகா | செல்வி. ந.மிருநாளினி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் (1989 - 1999)

| ஆண்டு | பெயர் | D | C | S |
|---|---|---|---|---|
| 1989 | மிருணாளினி - நடராஜா | 1 | 6 | 1 |
| 1990 | கணேஜினி - கணேஸ் | 3 | 4 | _ |
| 1991 | அனுசா - பத்மநாதன் | 2 | 4 | 1 |
| 1992 | தர்சினி - நடராஜா | 2 | 4 | 2 |
| 1993 | துசாயினி - ராஜா | 2 | 5 | 1 |
| 1993 | கோபாலகிருஸ்ணன் - கிருஸ்ணகலா | 2 | 4 | 2 |
| 1993 | குமாரசாமி - அகிலன் | 3 | 1 | 2 |
| 1994 | நிசாந்தினி - ஆறுமுகம் | 1 | 5 | 1 |
| 1994 | பரராஜசிங்கம் - நவஜீவன் | 1 | 3 | 4 |
| 1995 | கணபதிப்பிள்ளை - பிரபா | 1 | 5 | 1 |
| 1995 | ஜெயதீஸ்வரி - கயிலாயப்பிள்ளை | 1 | 4 | 2 |
| 1995 | காயத்திரி - நித்தியானந்தம் | 1 | 5 | 1 |
| 1995 | செஞ்சுடர் - கணேஸ் | 2 | 3 | 1 |
| 1996 | மலர்மகள் - பேரின்பநாயகம் | 6 | 2 | _ |
| 1996 | சபாரட்ணம் - மயூரன் | 6 | 1 | _ |
| 1996 | பாலசுப்ரமணியம் - வசந்தன் | 5 | 1 | 2 |
| 1997 | கலைச்செல்வி - ஆறுமுகம் | 4 | 3 | 1 |
| 1998 | ஹம்சானந்தி - மகேந்திரா | 3 | 4 | 1 |
| 1998 | இராஜதுரை - விஜிராஜ் | 4 | 2 | 1 |
| 1998 | இரத்தினலிங்கம் - நடனராஜ் | 5 | 1 | 1 |
| 1999 | கவிதா - கனகராஜா | 8 | 2 | _ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமது பாடசாலையின் கல்வி மேம்பாட்டின் பங்குதாரர்களான எமது பொற்கால ஆசிரியர் குழுவில் 1989ன் ஆரம்பத்தில் இருந்து பணியாற்றிக் கொண்டு இருந்தவர்களும், புதிதாக நியமனம் பெற்று வந்தவர்களும், இடைவிலகிச் சென்றவர்களும், தொடர்ந்து இருந்து கடமையாற்றியவர்களும், தொண்டர் ஆசிரியர்களும், தொண்டாகக் கற்பித்தவர்களும்.**

★ திருமதி.தெட்சணாமூர்த்தி - சங்கீதம்
★ திருமதி.ஸ்ரீஸ்கந்தராசா - மனையியல்
★ செல்வி.மா.மஞ்சுளா - சமயம், தமிழ்
★ ஜனாப். அசீஸ் - இஸ்லாம்
★ திரு.ச.செல்லத்தம்பி - விவசாயம்
★ செல்வி.லோகநாயகி - சமூககல்வி
★ திருமதி.கோகுலராணி - சமூகக்கல்வி, தமிழ்
★ திருமதி.க.முத்துலிங்கம் - விஞ்ஞானம்
★ திரு.க.செல்லையா - பொதுப்பயிற்சி
★ திருமதி.செல்வரெட்ணம் செல்லையா - ஆரம்பக்கல்வி
★ திருமதி.தனலக்ஸ்மி பற்குணசிங்கம் - ஆரம்பக்கல்வி
★ திரு.பே.திருக்கேதீஸ்வரன் - விவசாயம்
★ அருட்சகோதரி.மேரிஜெயக்கொடி - ஆங்கிலம்
★ திருமதி.மதிவதனி - மனையியல்
★ செல்வி.ந.ஆதிரை - சங்கீதம்
★ திரு.மதுரநாயகம் - கிறிஸ்தவம்
★ திருமதி.பூ.பொன்னுத்துரை - சங்கீதம்
★ திருமதி.ஞானகாந்தினி பத்மநாதன் - மனையியல்
★ திருமதி.சி.சிவலோகநாதன் - ஆங்கிலம்
★ செல்வி.சி.நளாயினி - விஞ்ஞானம், கணிதம்
★ திருமதி.க.பிறேமராணி - ஆரம்பகல்வி
★ திரு.க.கிருஸ்ணமூர்த்தி - தமிழ்
★ திருமதி.பா.பஞ்சலிங்கம் - மனையியல்
★ திருமதி.பத்மநாதன் - மனையியல்
★ செல்வி.கு.இராசபூபதி - ஆரம்பக்கல்வி
★ திருமதி.சி.சந்திரகுமாரி - ஆரம்பக்கல்வி
★ செல்வி.கு.விக்னேஸ்வரி - ஆரம்பக்கல்வி
★ செல்வி.கு.இராசேஸ்வரி - ஆரம்பக்கல்வி
★ திருமதி.கு.ஜெயலலிதா - சமூகக்கல்வி
★ செல்வி.க.கமலலீலா - விஞ்ஞானம்
★ செல்வி.சுடர்மதி - விஞ்ஞானம்
★ செல்வி.சசிகலா - ஆரம்பக்கல்வி
★ செல்வி.கு.சுபாஜினி கௌரி - ஆரம்பக்கல்வி
★ செல்வி.பொ.சூரியகலா - ஆரம்பக்கல்வி
★ செல்வி.செ.கிருதகௌரி - சங்கீதம்
★ செல்வி.ந.பாமினி - நடனம்
★ திரு.இ.வசிகரன் - தமிழ்
★ திரு.சோ.நகுலகுமார் - விஞ்ஞானம்
★ திரு.பொ.பரமேஸ்வரன் - ஆரம்பகல்வி
★ திருமதி.ய.கார்த்திகாயினி - ஆங்கிலம்
★ திருமதி.செல்வராணி சின்னராசா - மனையியல்
★ செல்வி.ந.மிருநாளினி - ஆரம்பக்கல்வி
★ செல்வி.இ.செல்வேந்தரராணி - வர்த்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ★ திருமதி.சி.சுந்தரராசன் - விஞ்ஞானம்
- ★ செல்வி.க.தயாரதி - ஆரம்பக்கல்வி
- ★ செல்வி.தெய்வலக்ஸ்மி - ஆரம்பக்கல்வி
- ★ திரு.நா.பாலசிவராம் - கணிதம்
- ★ செல்வி.திருமகள் - ஆங்கிலம்
- ★ திருமதி.பூ.யோ.பரிமளகாந்தி - ஆங்கிலம்
- ★ செல்வி.நித்தியா - ஆரம்பக்கல்வி
- ★ செல்வி.சோ.சுபோதினி - தமிழ்
- ★ திரு.பூ.திருக்குமார் - சமூகக்கல்வி
- ★ திருமதி.றைசா - ஆரம்பக்கல்வி
- ★ செல்வி.கி.கோமதி - கணிதம்

**மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக உதவியவர்கள்**

- ★ திரு.R.தனராஜா - ஆங்கிலம்
- ★ திரு.ப.பரமோதயன் - சமூகக்கல்வி
- ★ திரு.விக்ரர் ஜோன் - ஆங்கிலம்
- ★ செல்வி. வாசுகி குணராசா - சங்கீதம்
- ★ திருமதி அன்னலட்சுமி மகேந்திரா - சங்கீதம்
- ★ திரு.திருஅருட்செல்வன் - அலுவலகப் பணியாளர்.

**1989 முதல் 1999 வரை எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தை நெறிப்படுத்திய பொற்காலச் செயலாளர்களும், இதர உறுப்பினர்களும்**

**(காலத்துக்குக் காலம் ஏற்பட்ட நிர்வாகிகள் மாற்றத்தின் போது நிர்வாக சபைக்குத் தெரிவாகிப் பதவி வகித்து பாடசாலை அபிவிருத்திக்காக உழைத்தவர்கள்)**

- ★ திரு.கா. கைலாயபிள்ளை
- ★ திரு.ம.குமாரசாமி
- ★ திரு.க.முத்துக்குமாரசாமி
- ★ திரு.பொன் நித்தியானந்தம்
- ★ திரு.நா.தம்பிஐயா (சமாதான நீதவான்)
- ★ திரு.மு.நாகராசா
- ★ திரு.க.செல்லையா (ஆசிரியர்)
- ★ திரு.பொ.மகேந்திரன்
- ★ திரு.து.இராசரத்தினம்
- ★ திரு.ஆ.கணவதிப்பிள்ளை
- ★ திரு.கனக.சபாரத்தினம்
- ★ திரு.நா.பரமேஸ்வரன்
- ★ திரு.வே.நவரத்தினம்
- ★ திரு.வே.நடராசா
- ★ திருமதி.சிவமணி சின்னையா
- ★ திருமதி.ஜெயலக்ஸ்மி
- ★ திருமதி.கலா கோபாலகிருஸ்ணன்
- ★ திரு.பொன்னுத்துரை
- ★ திரு.அன்ரன் தேவானந்தா
- ★ திரு.முத்து சிவமோகன்
- ★ திரு.க.முத்துக்குமாரு
- ★ திரு.சிவநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பாடவிதான செயற்பாடுகள்

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் எமது பாடசாலையின் சாதனைகள் மகத்தானவை. விஞ்ஞான, விவசாய, பொது அறிவு, ஆங்கில மொழிமூலமான போட்டிகளில் கொத்தணி, கோட்ட, மாவட்ட மட்டங்களில் முன்னணியில் திகழ்ந்துள்ளது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆண்டு தோறும் நடத்தி வந்த விவசாய மரம்நடுகைப் போட்டிகளில் மாவட்டத்தில் முதலாமிடங்களை இரண்டு தடவைகளும் இரண்டாமிடத்தை ஒரு தடவையும் பெற்றுள்ளது. 150அடி வாழையும், 200 அடி தென்னையும் பாடசாலை வளவில் நடுகை செய்யப்பட்டு இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களாகப் பாடசாலை இயங்க முன்பு பேணப்பட்டு வந்தது.

கலைத்துறையில் சங்கீத, நடன ஆசிரியர்கள் இல்லாத நிலையிலும் எமது பாடசாலை சிறுவர் நாடகம், சமூக வரலாற்று நாடகங்களுடன் நாட்டுக் கூத்து, இசை நடனம், நாடகம், கிராமிய இசை, கிராமிய நடனம் ஆகியவற்றை மேடையேற்றி மாவட்ட மட்டப் பரிசுகளையும் பெற்றுள்ளது. வன்னி மாவட்டங்களில் கல்வி பண்பாட்டுக்கழகம் நடத்திய போட்டிகளில் எமது நாட்டுக்கூத்து வன்னிப் பெருநிலப்பரப்பிலே முதலாமிடத்தைப் பெற்றுள்ளது. பேச்சுப் போட்டியிலும் எமது மாணவி செல்வி. ஹம்சானந்தி மகேந்திரா வன்னிப் பெருநிலப்பரப்பில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். இசைப் போட்டிகளிலும் எமது மாணவர்கள் சாதனைகள் பலவற்றை நிலைநாட்டியுள்ளனர்.

விளையாட்டுத்துறையில் பல்வேறு விளையாட்டுக்களிலும் மாவட்டம் வரை சென்று முன்னனியில் திகழ்ந்துள்ளனர். பெரு விளையாட்டுக்களிலும் தாச்சிப் போட்டியில் 13,15,17 வயது பிரிவுகள் மாவட்ட மட்ட பரிசுகளைப் பெற்றுள்ளன. 1993ல் எறிபந்துப் போட்டியில் எமது இரு குழுக்களும் மாவட்டச் சாம்பியன்களாகத் தெரிவாகின. வலைப்பந்துக் குழுக்கள் மூன்றுர் ஆண்டுகள் மாவட்டத்தில் முதலாமிடம் வகித்தன. உடற்பயிற்சியிலும் 13, 15 வயதுக் குழுக்கள் மாவட்டச் சாம்பியன்களாக வந்துள்ள போதிலும் 17 வயதுப் பெண்கள் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் மாவட்டச் சாம்பியன்களாகத் தெரிவாகிச் சாதனை நிலைநாட்டியுள்ளனர்.

### காலப்பதிவு

- வட்டக்கச்சி கிழக்கு என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட வட்டக்கச்சி தபால் விநியோக எல்லைக் குள்ளும், வட்டக்கச்சிச் சந்தைக்கருகில் இருக்கும் இப்பாடசாலை இராமதாதபுரம் மேற்கு எனப்பெயர் மாற்றப்பட்டபின் கிழக்கு மேற்கு என்பதில் தெளிவற்ற நிலையில் மக்கள் ஏனைய பாடசாலை களைப்போல் இதனையும் குறிச்சிப் பெயரால் சில்வா ரோட் பாடசாலை என அழைத்தனர். சுமார் 25 முஸ்லிம் குடும்பங்கள் இப்பகுதியில் குடியேற்றப்பட்டிருந்தனர். அவர்கள் சார்ந்த சுமார் 60 பிள்ளை கள் இங்கு கற்றனர். கல்வியமைச்சராக மாண்புமிகு மதியூதீன் முகமட் இருந்த காலத்தில் அரசியல் ரீதியாகத் தமக்கிருந்த நெருக்கடியில் இருந்து பாடசாலையைப் பேண நிர்வாகம் முனைந்து முஸ்லிம் பெற்றோரை முன்னிலைப்படுத்தி வைத்திருந்தது. இக்காரணங்களால் இதனை முஸ்லிம் பாடசாலை என்ற காரணப் பெயராலும் மக்கள் அழைத்தனர். காலப்போக்கில் சமூகத்தில் 90 வீதமானோர் மத்தியில் இப்பாடசாலை ஒரு முஸ்லிம் பாடசாலை என்ற எண்ணமே வலுப்பெற்றிருந்தது. இன்றுதான் அந்த நிலை மாறிக் கொண்டு வருகிறது.
- 66 ஆண்டுப் பழமையும், 58 ஆண்டுகள் க.பொ.த சா/த வகுப்பும் கொண்டு இயங்கும் இப்பாடசாலை 1C வாசலில் வந்து உயர்தர பாடசாலை அனுமதிக்காகக் காத்திருக்கிறது.
- இப்பாடசாலையை மேற்கு பாடசாலை எனவும், முஸ்லிம் பாடசாலை எனவும் அழைத்து வந்த சமூகம் 1990க்குப் பின் வெஸ்ற் எனவும், G.T.M.S எனவும் அழைக்க ஆரம்பித்தனர். எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995க்குப் பின் கனக மகேந்திராவின் பாடசாலை என அழைக்கும் நிலையும் கல்விச் சமூகத்தின் மத்தியில் நிலவிவந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

- இசையும், சுவையும், சாரமும் மழுங்கிக்கிடந்த பாடசாலை கீதத்தை ஈழத்து வீரமணி ஐயா (விரிவுரையாளர்) மூலம் இசையமைத்து பிள்ளைகளைப் பாடவைத்தேன்.

- கழுத்துப்பட்டிக்குப் புதுப்பொலிவு கொடுத்து கவர்ச்சிகரமாக ஆக்கி மாணவர்களின் பாவனைக்கு அறிமுகம் செய்தேன்.

- காலச்சூழலை மனங்கொண்டு தெய்வ நாமங்கள் தாங்கியிருந்த பாடசாலை இல்லங்களை வீர நாமங்கள் தாங்க வைத்து சங்கத் தமிழன் வீரத்திறன் கண்ட வெட்சி, வஞ்சி, வாகை என நாமங்களை மாணவர் தம் மெய்வன்மைத் திறன் காணும் இல்லங்களுக்கு சூட்டினேன்

- பெரியார்கள் மற்றும் முதியோர்கள் அனுபவங்களுடன் ஆராய்ந்து பாடசாலை வரலாறை முதல் தடவையாக எழுதினேன்.

- கௌரவ க.பொ.இரத்தினம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் வட்டக்கச்சி கிழக்கு இராமநாதபுரம் மேற்கு என மாற்றப்பட்டது.

- 66 ஆண்டு வரலாறும், மிகச்சிறந்த க.பொ.த (சா.த) பரீட்சைப் பெறுபேறுகளும், கல்விப்புற நிகழ்வுகளில் தேசியமட்ட சாதனைகளும் பெற்ற இப்பாடசாலை, பிரதேசத்தின் மையப்பகுதியில் அமைந்திருந்தும் 1C தரமுயர்த்தப்படாதது ஏன்? 1995 முதல் இக்கோரிக்கை வலுப் பெற்றுவந்தும் ஏனைய பாடசாலைகளில் கவனம் செலுத்திய கல்விப்பகுதியினரின் கண்கள் இப்பாடசாலை மீது ஓரப்பார்வையாக தொடர்ந்தும் இருப்பது ஏன்?

- இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை 1955 முதல் இற்றைவரை சுமார் 66 வருடங்கள் இதே பெயருடன் தான் இயங்கி வருகின்றது. க.பொ.த. சா/தரம் ஆரம்பிக்கப்பட்டு 58 வருடங்கள் நிறை வடைந்துவிட்டது. இதன் பின் ஆரம்பிக்கப்பட்ட இப்பகுதியில் உள்ள ஏனைய பாடசாலைகள் கல்லூரிகளாகவும், மகாவித்தியாலயங்களாகவும், தேசிய பாடசாலைகளாகவும் தரமுயர்த்தப்பட்டு வரும் இக்காலச் சூழலில் இப்பாடசாலை மட்டும் பாராமுகமாக இருப்பது மனவருத்தத்துக்குரியதே.

- குவிக்கப்பட்ட வளங்களின் அடிப்படையில் மாணவர் தொகை அதிகரிக்கப்பட்டது. மாணவர் தொகையினை காரணமாகக் கூறும் கல்விப்புலம் ஏனைய எல்லாத்துறைகளிலும் பாடசாலை மேலோங்கி அக்கால கல்விப் பணிப்பாளர்களாலும், பிற அதிகாரிகளாலும், சமூகத்தினாலும் பாராட்டப்பட்ட நிலையை மறந்து செயற்படுவது வேதனைக்குரியது.

- மாவட்ட மட்டத்தில் மிகச்சிறந்த பொதுப்பரீட்சை முடிவுகளையும், திறன்களையும், தேசிய மட்டம் வரை உயர்த்தி மேன்மையடைந்ததுடன் 1998 முதல் உயர்தரம் கோரி முயன்று வந்த எமது பாடசாலை இன்றுவரை கவனிப்பாரற்ற நிலையில் பிரதேசத்தின் மையப்பகுதியில் இயங்கி வரும் நிலையில் ஆரம்ப, இடைநிலைக்கல்வி கற்றுவந்த மாணவர்கள் உயர் கல்விக்காக ஏனைய பாடசாலைகளுக்கு சென்று வைத்தியர், பொறியியலாளர் என இன்னும் பல பட்டப்படிப்புகளை பெற்றுவரும் நிலையில் அவர்களின் மேன்மைக்கு காரணமாக இப்பாடசாலை தொடர்ந்தும் 1C பாடசாலையாக இயங்கிவருவது நியாயமா? இப்போக்கினைப் பார்க்கும் போது எதிர்காலத்தில் எமது பாடசாலையை ஒரு கனிஷ்ட நிலைக்குத்தள்ளி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்விப்புல அதிகாரிகளிடம் கேட்கிறேன்.**

- இந்தப்பாடசாலை சரிவர இயங்கவில்லையா? உங்கள் தேவைகளுக்காகவே நீங்கள் அதிபர்களை நியமித்து வந்தீர்கள். அவர்கள் பாடசாலையை தரமுயர்த்துவதில் எந்தவித அக்கறையும் அற்றவர்களாக, அதிகாரிகளின் நலம் பேணுபவர்களாக இருந்ததே இன்றைய இந்த நிலைக்குக் காரணம். நாம் தொடர்ந்தும் இதற்கு ஆதரவாக இருக்கமுடியாது. நீங்களாக தரமுயர்த்தாவிடில் அந்தப்பாதையை நாமாக வகுக்கவேண்டி வரும். முரண்பாடுகள் உருவாவதை தவிர்க்க முடியாது எமது பாடசாலையின் பெயரைத் தொடர்ந்தும் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என பயன்படுத்த முடியாது. காலத்துக்கு காலம் மாறிவரும் கல்விப்புல அதிகாரிகள் பற்றோடும், பண்போடும், சீரிய நோக்கோடும் இருக்க வேண்டும் என்பது எமது ஆவல். அதற்கு இந்தப் பொற்கால மலர் திறவுகோலாக அமைய வேண்டும்

# நிறைவாக.......

**நான் மகிழ்வுடன் வாழ்கிறேன்**

கால நெருக்கடிகளால் புலம் பெயர்ந்து வெளிநாடுகள் சென்றாலும் பிறந்த மண் பற்றுடனும் பாடசாலைப் பற்றுடனும் வாழும் மாணவர்களை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது. இன்னும் தமது பள்ளிக் கனவுகளை மீட்டுக்கொண்டே உடல் அங்கும் உணர்வுகள் இங்குமாக வாழ்பவர்களை நாமும் நித்தமும் நினைத்துப்பார்க்க வேண்டியவர்களாகவே இருக்கின்றோம். கணனி அறை, கணனிகள், மின்பிறப்பாக்கி, நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடம், அமரர் கணேசலிங்கத்தின் நினைவுக் கலையரங்கு, பிள்ளைகளுக்கான கற்றல் வளங்கள், வசதிகள் இன்னும் இப்படியாக அவர்களது சிந்தனையும், செயற்பாடும் தாயகத்தையும், தம் பள்ளியையும் நோக்கியே விரிந்து கொண்டு செல்கின்றது.

முகநூல் மூலம் எமது பழைய மாணவன் மகேந்திரரத்தினம் வேணுதன் எமது பாடசாலையின் படத்தையும் "எங்கள் அதிபர்" என எனது படத்தையும் பதிவிட்டு ஆரம்பித்த ஒன்றிணைவு இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எமது பழைய மாணவர்கள் பலர் புதிதாக இணைந்து என்னைப் பற்றிய பல்வேறு குறிப்புக்களை நன்றியோடு வழங்கி நினைவுகூர்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, அவை எனக்கு புத்துணர்ச்சியையும், மனமகிழ்ச்சியையும் அளிப்பதுடன் ஓய்வுநிலை வாழ்க்கை அக்காலக் கனவுகளுடன் இணைந்து முதுமைக் காலத்தை மகிழ்வுடன் வாழ வைக்கின்றது. பழைய மாணவர்கள் பலர் அடிக்கடி உலகின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து தொலைபேசி மூலம் நலம் விசாரிப்பதுடன் பெருநாட்கள் வரும்போது வாழ்த்துவதையும், பழைய நினைவுகளை மீட்பதையும் எடுத்தியம்ப என்னிடம் வார்த்தைகளே இல்லை.

**"நான் உங்கள் நினைவுகளால் மகிழ்வுடன் வாழ்கிறேன்! வாழ்கிறேன்!!"**

**- கனக மகேந்திரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்கால பிரதி அதிபர்கள்



அமரர். திருமதி.செல்வரட்ணம் செல்லையா
(1989 - 1990)



அமரர். திருமதி.கமலாதேவி முத்துலிங்கம்
(1991 - 2005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபர்கள்

**எமது பள்ளித் தரத்தை ஆரம்பநாள் முதல் (13.05.1955 முதல் 09.04.1999)**
**பொற்காலம் தொட்டு தற்காலம் வரை முகாமை செய்த முதல்வர்கள்**



கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை பழம்பெரும் ஆன்மீக வழிகாட்டியாகவும், கிராம அபிவிருத்திச் சங்க தலைவராகவும் இருந்த சிதம்பரப்பிள்ளை சாத்திரியார் தலைமையில் 13.05.1954ல் ஆரம்பித்துவைக்கப்பட்டது. அன்று முதல் மாணவர்களை கல்வியில் ஊக்கப்படுத்தும் முகமாகத் தினமும் தமது தார்மீகக் கடமையாக தோசையை மதிய உணவாக வழங்கி வந்துள்ளார்.



திருவாட்டி கௌரியம்மா குமாரசாமி
தலத்தின் முதல் ஆசான்

திருவாளர். பா. கனகசபை தலத்தின் முதல் முதல்வர் 13.05.1955 - 30.06.1955
திரு. ச. செல்லத்துரை 01.07.1955 - 30.08.1955
திரு.இ. இராசையா 01.09.1955 - 30.06.1956
திரு. வி.பொன்னையா 01.07.1956 - 08.10.1957
திரு.வே. சிவஞானசுந்தரம் 09.10.1957 - 31.01.1958
திரு.சி.கந்தப்பு 01.04.1964 - 31.12.1970
திரு.ந.மகாலிங்கம் 03.08.1971 - 19.06.1972
இவர்களின் புகைப்படங்கள் கிடைக்கப்பெறவில்லை



திரு. பெ.ஏ.த. ஐயாத்துரை
01.02.1958 - 28.03.1964



திருமதி . செ. செல்லையா
01.01.1971 - 28.07.1971
20.02.1981 - 18.06.1981



திரு.பொ.சுப்பிரமணியம்
01.09.1972 - 21.01.1974
01.01.1977 - 29.03.1979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.சி.பெ.சூசைப்பிள்ளை
22.01.1974 - 31.12.1976



திரு.என்.கே.தருமலிங்கம்
30.03.1979 - 19.02.1981



திரு.இ.இராசரத்தினம்
19.06.1981 - 17.01.1982



செல்வி.தி.வேலுப்பிள்ளை
18.01.1982 - 22.06.1989



திரு. கனக மகேந்திரா
23.06.1989 - 30.05.1999



திரு. ஆ. கருணாநிதி
01.06.1999 - 05.01.2003



திரு.சி.பாலகிருஷ்ணன்
06.01.2003 - 09.01.2007



திரு.சி.திரவியம்
10.01.2007 - 17.11.2014



திருமதி. சி.சுதாகரன்
18.11.2014 - 31.12.2015



திரு. சு.சுதாஸ்கரன்
2016 - இன்றுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்கால ஆசிரியர் குழாம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலை அன்றும் இன்றும் ....

## அன்று



காடு வெட்டி களனி செய்த மண்
கல்லில் நார் உரித்த காலம்
தலைக்குமேல் குண்டு வெடித்த காலம்
போரில் மக்கள் கொத்துக் கொத்தாகக்
கொல்லப்பட்ட காலம்
பங்கரிடம் உயிர்ப் பிச்சை கேட்ட காலம்
பொருளாதாரத் தடை
கட்டிடப் பொருட்களுக்குத் தடை
மக்கள் திறந்த வெளிச் சிறையில்
சிறைப்பட்ட காலம்
கல்வி உபகரணங்களுக்குத் தடை, எரிபொருட்களுக்குத் தடை
போக்குவரத்துக்குத் தடை, சாவைத் தவிர அனைத்துக்கும் தடை
ஜாம் போத்தலில் வால்ரியூப் கட்டை இட்டு
பஞ்சில் எண்ணெய் தோய்த்து
கண்கள் பஞ்சடைய எம் பிஞ்சுகள் கண் விழித்துப் படித்த காலம்
சயிக்கிள் சில்லுச் சுழற்றி றேடியோச் செய்தி கேட்ட காலம்
சேலைன் குழாயை ஊதி மண்ணெண்ணையில் மோட்டார் சைக்கிள் இயக்கிய காலம்
எமது இளம் தலைமைகள் மட்டுமே
எம்மை வழிநடத்திய காலம்
ஆனாலும் எம்மையே நாம் ஆண்ட காலம்
தடைகளிலும் எம் பள்ளி நடை பயின்ற காலம்

## இன்று



அன்று ஊன்றிய வித்துக்கள்
இன்று விருட்சங்களாக
அன்று அத்திவாரமிடப்பட்ட
அடிக்கற்கள் இன்று
அழகு மாளிகைகளாக
அன்று இணைத்த நரம்புகள்
இன்று இனிய கானமிசைக்கும்
வீணைகளாக
இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை
சிறிது சிறிதாக தெளிக்கப்படும் வளத்துளிகள் கொண்டு
எழுவான் திசையில் எழுச்சியுறுகிறது.
எமது இதய வீணை நாளையும் இன்னிசை பரப்பும்
எமது இதயக் கோயில் இராமநாதபுரத்தில் எழுந்து நிற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்கால மாணவர் குழாம் (கிடைக்கப்பெற்ற நிழல் பிரதிகள்)















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தியல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவள விழாக் கண்ட பொற்கால நாயகன்
# (16.02.2021)




புலம்பெயர் பழைய மாணவர்கள் அனுப்பி வைத்த மலர்ச்செண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் பழைய மாணவர்கள் வழங்கிய வாழ்த்துப்பா

## " 75 ஆவது அகவைநாள் வாழ்த்து "

### பவளவிழா நாயகரே வாழ்க..

பொன்னுயர் யாழ்ப்பாணத்தின் சிகரமாய்
பொலிவுறும் நகுலேஸ்வரம் வீற்றிருக்கும்
கீரிமலை ஊரின் மைந்தன் திருவாளர் கனக மகேந்திரா அதிபரே! நின்னை
அகவை எழுபத்தைந்து காணும் இந்நாளில்
அன்புடன் வாழ்த்துகின்றோம்!

குறுநகையுடன் நகைகொண்டு
கொள்கையில் சிறந்து
கடின உழைப்பில் கனமான
ஆளுமை கொண்டு
கல்விக்கடலில் நீந்தி
பெருமைகள் பல சேர்த்த
பெருந்தகையாளனே வாழ்க..

பச்சை வயல் பாய்விரித்து
பசிபோக்கும் வட்டக்கச்சி இரா மேற்கு
மாணவர் வாழ்வினில் ஏற்றம் காண
செல்வத்துள் செல்வம் சீராய்ச் சேர்த்து
சிறந்த நற்பண்பாய் பணிவும் சேர்த்து
வலிமிகு இடர்கள் பல சுமந்து
பள்ளியின் வளங்களில் தகமை சேர்த்து
துல்லிய அன்பின் தூய்மை சேர்த்து
கடமையின் நேர்மையை கல்வியில் சேர்த்த
பெருந்தகையாளனே வாழ்க..

வாழட்டும் ஆரோக்கியம் ஆனந்தம் நீள!
காணட்டும் இல்வாழ்க்கை நீட்சி!
வசந்தமாகட்டும் இறையருள் என்றும்!!!

அன்புடன்
இரா/மேற்கு அ.த.க பாடசாலை
பழைய மாணவர்கள்
16.02.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ சிவஞானம் சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
கிளிநொச்சி



# வாழ்த்துச் செய்தி

## பொற்காலமான பத்து ஆண்டுகள்

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விப்புல வரலாற்றிற்கு வலுச்சேர்த்து நிற்கும் வட்டக்கச்சி மண்ணின் பெருமையை பறைசாற்றும் கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையின் (வட்டக்கச்சி கிழக்கு அ.த.க. பாடசாலை) வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் பெரும்பங்காற்றிய ஓய்வுநிலை அதிபர் திருவாளர் கனகராஜா மகேந்திரா அவர்களின் தடங்களைத் தாங்கி வெளிவரும் 'பொற்காலமலர்' நூலில் எனது கருத்துக்களையும் பதிவு செய்வதையிட்டு பேருவகை அடைகிறேன்.

நான் இந்தப் பள்ளியின் பழைய மாணவன் என்ற அடிப்படையில் அதன் ஆரம்பகாலங்களையும், அதன் பின்னரான வளர்ச்சிப் போக்கையும் கண்கூடாகக் கண்டு மகிழ்ந்தும், நெகிழ்ந்தும் இருக்கிறேன். 1989-1999 ஈழவிடுதலைப்போர் வலுப்பெற்றிருந்த காலம் அது. ஈழத்தமிழர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தடைக்கு மேலாக பாடசாலைகளில் பௌதிக வளங்கள் இல்லை, வசதிகள் இல்லை, போதியளவு ஆசிரிய ஆளணி இல்லை. ஆனால் அவற்றுக்கு மத்தியிலும் கல்வி, கலைகள், விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும் தடம் பதித்து, தன் சமூகத்தையும், நாட்டையும், மொழியையும், இனத்தையும் நேசிக்கின்ற மாணவ சந்ததி ஒன்றை உருவாக்க முடியும் என்பதையும், இத்தனை வளப்பற்றாக்குறைகளுக்குள்ளும் இடம்பெயர்ந்து வந்த மாணவர்களையும் இணைத்து இரு நேரப் பாடசாலையை பாடசாலைக்கு முன்புறமாக உள்ள வீடுகளின் மர நிழல்களில் கூட நடாத்திக்காட்டியிருந்தமையும் இந்தப் பாடசாலை வரலாற்றில் கனக.மகேந்திரா சேரின் காலம் பொற்காலமே என்பதை புரியவைக்கும் சான்றுகள்.

மாவட்டத்தின் ஒரு மூலையில் சிறு மின்மினியாய் மின்னிக்கொண்டிருந்த இப்பள்ளியின் பெயரை அடையாளப்படுத்திய பெருமையும் இவரையே சாரும். கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்துறையை அலங்கரித்த ஆளுமைமிக்க அதிபராக, கிளிநொச்சி மாவட்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் என பல்வேறு பதவிநிலைகளில் இருந்து தான் சார்ந்தோரின் உயர்வுக்காய் உழைத்து சமகாலத்தில் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராக இருந்து தமிழ்ப்பணியும், கலைப்பணியும் சமூகப்பணியும் ஆற்றியிருந்தமையும் விடுதலைப் போராட்டத்தின் மீது அவர் கொண்டிருந்த பற்றும், விருப்பும், அதற்காக அவர் ஆற்றியிருந்த தமிழ்த் தேசியப் பணிகளும் இங்கு மனங்கொள்ளத்தக்கதே!

அவரது குடும்பமே ஓர் கலைக்குடும்பமாக இருந்ததற்கமைய கலாபூசணம், கலா வித்தகர் விருதுபெற்ற ஓர் முன்னணிக் கலைஞனாக இருந்து கலைவிழாக்கள், அரங்க நிகழ்வுகள், இலக்கிய மன்றங்கள் ஊடாக தன் பள்ளி மாணவர்களை செழுமைப்படுத்தியதோடு, கிளிநொச்சி மாவட்டத்திலேயே முதலமுறையாக கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையில் எங்குமில்லாத மிகப்பெரிய இருவழி மேடை அமைப்பை நிறுவி கலை நிகழ்வுகளை அரங்கேற்றிக் காட்டியிருந்தமையும் அவரது கலை ஆர்வத்தின் வெளிப்பாடே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிநடை, கிளித்தட்டு, வலைப்பந்து, கரப்பந்து, எறிபந்து ஆகிய பெரு விளையாட்டுக்கள், மைதான விளையாட்டுக்கள், உடற்கல்விப் போட்டிகள் என அனைத்திலும் பெயர்சொல்லும் படியான திறமைகளை வெளிப்படுத்தும் அளவுக்கு இப்பள்ளி மாணவர்கள் செழுமைப்படுத்தப்பட்டதும் இவரது காலத்திலேயே தான் என்றால் அது மிகையல்ல.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் முதுமொழிக்கு இணங்க ஆண்டவனுக்கு முன்னும், அன்னை தந்தைக்குப் பின்னும் நின்று ஒரு மனிதனை ஆளாக்கும் அறிவுசார் பங்கு ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்குமானதே! உலகில் நடக்கும் தவறுகள், குற்றங்கள், அதர்மம், ஆணவம் எல்லாவற்றிலுமிருந்து கடவுள் அவதாரங்கள் மனிதகுலத்தைக் காத்துநின்ற வரலாறுகளைக் கடந்து, அந்தத் தவறுகளும், குற்றங்களும், அநீதிகளும், அக்கிரமங்களும் நிகழ்ந்துவிடாது தடுக்கும் பாரிய பொறுப்பை ஏற்று நின்ற சமூகச்சிற்பிகளுள் ஒருவராக, அதிகாரிகளின் தவறுகளைக் கூட துணிந்து நின்று எதிர்க்கும் துணிச்சல் மிக்கவராக தானும் இருந்து அது போன்றே தன் மாணவர்களையும் புடம் போட்டிருப்பதற்கு இன்றும் நிலத்திலும், புலத்திலும் நிமிர்ந்து நிற்கும் அவரது மாணவர்களே சாட்சி.

வட்டக்கச்சி மண்ணின் வரலாற்றோடு இரண்டறக்கலந்திருந்து, இராமநாதபுரம் மேற்கு பள்ளி அபரிமிதமான வளர்ச்சி காணுமளவிற்கு அரும்பணியாற்றி பல்லாயிரம் மாணவர்களை உருவாக்கி, என்போன்ற பலரின் அரசியல் பணிக்கான வழிகாட்டியாய் இருந்த கனக மகேந்திரா சேர் எமது மண்ணுக்கும், மக்களுக்கும், மாணவர்களுக்குமாய் ஆற்றிய பணிகள் மகத்தானவை. எமது பிரதேசத்தின் வளர்ச்சிப்படிகள் ஒவ்வொன்றிலும் இவரது சிந்தனைவீச்சும், செயல்திறனும் நேரடியாகவும், மறைமுகமாகவும் படிமம் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஓர் ஆசிரியராக மட்டுமன்றி தனது மாணவர்களின் எதிர்காலம், ஒழுக்கம், மனப்பாங்கு, செயற்திறம், சமூக விழுமியம் போன்றவற்றில் நீண்ட கண்காணிப்பை பேணி வந்தவராக இவரை நான் பார்த்திருக்கிறேன். வட்டக்கச்சி மண்ணுக்கும், மக்களுக்கும், இவருக்குமான நீண்டதோர் பற்றுறுதி மிக்க பந்தத்தின் அடிப்படையில் ஓய்வின் பின்னரும் அவர் இங்கேயே ஓர் காணி, வீடு என்று எமது மண்ணோடும், மக்களோடும் வாழவில்லையே என்ற ஆதங்கம் எப்போதும் என்நெஞ்சில் நெருடலாகவே இருக்கிறது.

இருப்பினும், இந்தப் பாடசாலையில் தான் அதிபராக இருந்த அந்தப் பத்து ஆண்டுகளையும் பாடசாலை வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பொற்காலமாக மாற்றிய இவரது பெரும் பணியை மனங்கொண்டு, இப் பொற்கால மலரை வெளியீடு செய்யும் பழைய மாணவர்களின் பணியை பாராட்டும் அதேவேளை இவ் உயரிய ஆளுமையின் பவள விழாவின் பின்னரான வாழ்க்கைக் காலமும் வசந்தங்கள் நிறைந்ததாய் அமைய வாழ்த்தி நிற்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு.சு.சுதாஸ்கரன்**
**அதிபர்**
**கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை**
**வட்டக்கச்சி**

# இக்கால முதல்வரின் வாழ்த்துச் செய்தி

## கனக மகேந்திரா சேர், ஒரு பொற்காலம்.....

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை அவரது சேவைக்காலத்தில் திறம்பட இயங்கிய பாடசாலையாக ஒரு Bench Markஐப் பதிவு செய்துள்ளதென்றால் அது மிகையாகாது.

அண்மையில் Sir உடைய 75வது பிறந்தநாளை (பவள விழா நாள்) தாயகம், புலம் பெயர்ந்த நாடுகளின் பழைய மாணவர்கள் சேர்ந்து Zoom நிகழ்நிலையில் கொண்டாடி மகிழ்ந்தார்கள். 10 வருடங்களுக்கு மேலாக இப்பாடசாலையில் சேவையாற்றி மாற்றலாகிச் சென்று ஓய்வுபெற்றதன் பின்னர் 22வது வருடத்தில் மீண்டும் தன்னிடம் கற்ற பிள்ளைகளால் பிறந்தநாளைக் கொண்டாடுவது என்பது எல்லோருக்கும் அமையப் பெறாத வரமாகும்.

இவை எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற்போல் அவர்களால் வெளியிடப்படவுள்ள நூலானது சிறப்பாக அமையுமென நான் எதிர்பார்க்கின்றேன். "ஊழி உள்ள காலம் வரை" நீங்கள் செய்த சேவையை இச்சமூகம் மறவாதென எண்ணி பிறந்தநாள் வாழ்த்துக்களையும் கூறி பழைய மாணவர்களால் வெளியிடப்படவுள்ள மலரானது எங்கும் மணம்பரப்ப இறைவனையும் வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவ த.குருகுலராஜா
மேனாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர்
கிளிநொச்சி, முல்லைத்தீவு வலய ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர்

# வாழ்த்துச்செய்தி

## கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையில் வேறுபட்ட சிந்தனையையும், செயற்பாடுகளையும் மூலாதாரமாகக் கொண்டு பாடசாலையை நடத்தி வெற்றி கண்டவர் அதிபர் திரு. கனக மகேந்திரா

திரு. கனக மகேந்திராவின் நிர்வாக அமைப்பு வித்தியாசமானது. அவர் பாடசாலையை நடத்திய முறை முற்றிலும் வேறுபட்டது. யாழ்ப்பாணத்துப் பாரம்பரியப் பாடசாலைகளின் அடிச்சுவட்டிலேயே அவர் தனது பாடசாலையை நடத்தி வந்தார். ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளும், கற்பித்தல் மேற்பார்வை முறைகளுமே பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்குத் தூண்டுதலாக அமைந்திருந்தன. பாடசாலையின் கற்றலுக்கான கவின் நிலையும் இவர் ஏற்படுத்திக் கொண்ட சூழல் அமைப்புமே இவரது வெற்றிக்குக் காரணமாயிருந்தன. பாடசாலைப் பூந்தோட்டமும், நிழல் மரங்களும் பெருவிளையாட்டுக்கான விளையாட்டுத் திடல்களும், அவற்றுக்குச் செல்வதற்காக அமைத்த நேரிய பாதையும் பாதையின் இரு மருங்கிலும் வரிசையாக நாட்டிய சமண்டலை மரங்களும் அவற்றின் இடையே நாட்டிய அழகு பயிர்களும் பாதையின் கிழக்கு எல்லையில் அவர் உருவாக்கிய தென்னை மரத்தோப்பும், வாழைத்தோட்டமும், மூலிகைத் தோட்டமும் ஐந்தரை ஏக்கர் காணியைச் சுற்றி அமைத்த எல்லை வேலிகளும் அவற்றுக்கு அரணாக பத்து அடிக்கு ஒன்றாக நாட்டிய சமண்டலை, தேக்கு, வேப்பம் மரங்களும், மா, பலா, அசோகா ஆகிய பெருமரங்களும் அவரது வித்தியாசமான சிந்தனையையும் செயற்பாட்டையும் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன.

அரசின் பொருளாதாரத் தடையும், கட்டுப்பாட்டுப் பிரதேசப் பிரகடனமும் இவ்விடப் பாடசாலைகளில் அவரது காலத்தில் கட்டிட வசதிகள் எதையும் மேற்கொள்ளமுடியாத நிலையை ஏற்படுத்தியது. இந்த நிலையிலும் 100 அடி, 110 அடி, 120 அடி, 40 அடி, 30 அடி நீளமான 05 கீற்றுக்கொட்டகைகளை (தற்காலிக கொட்டகை) அமைத்து வகுப்பறைத் தேவைகளை நிறைவுசெய்திருந்தார். அத்தோடு ஒரு சிறிய நூலகத்தையும் அமைத்திருந்தார்.

மைதானத்தை நோக்கி கிளிநொச்சி மாவட்டத்தில் எங்குமில்லாத 30 அடி நீளமும் 28 அடி அகலமும் 4 ½ அடி உயரமும் கொண்ட ஒரு கலை அரங்கத்தை உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு அமைத்திருந்தார். பகலில் மண்டபத்திலும், மாலையில் மைதானத்திலும் நிகழ்வுகளை நடத்தக்கூடிய இருவழி அரங்காக அது அமைக்கப்பட்டிருந்தது. இவரது இக்காலத்தில் பல்வேறு விழாக்கள் இந்த மேடையில் நடந்தேறியது.

இந்தப் பாடசாலையில் இரு கிணறுகள் சிரமதான மூலம் தோண்டப்பட்டு கிடைத்த உதவிகளைக் கொண்டு ஒரு கிணற்றைக் கட்டிப் பாவனைக்கு உட்படுத்தினார். கிணறு மூலப்பொருட்கள் இன்மையால் கட்டாமலே மரங்களால் மிதியும், அரணும், அமைத்து, கப்பிமரம் நட்டு கப்பிபோட்டுப் பாவனைக்குட்படுத்தினார்.

பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியும் வித்தியாசமான பாணியில் விளையாட்டு விழா என்றும், விளையாட்டு வாரம் என்றும் அறிமுகப்படுத்தி நடத்திவந்தார். விவசாயம், கலைத்துறை என்பவற்றையும் வேறுபட்ட வித்தியாசமான சிந்தனையுடன் அணுகிச் செயற்பட்டு வந்தமையைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

மேலும் அவரது சிந்தனையும் செயற்பாடுகளும் இராமநாதபுரம் மேற்குப் பள்ளியை வளப்படுத்த வேண்டும் என்பதையே நோக்காகக் கொண்டிருந்தது.

**"வாய்ப்புக்கு நன்றி! மனம் நிறைந்த வாழ்த்துக்கள்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.ப.அரியரத்தினம்
ஓய்வுநிலை வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மேனாள் வடக்குமாகாண சபை உறுப்பினர்

# வாழ்த்துச் செய்தி

## கிளி/இராமநாதபுரம் மேற்க அ.த.க.பாடசாலையின் அதிபர் கனக மகேந்திராவின் சேவைக்காலம் பாடசாலையின் பொற்காலமே

முன்னை நாள் அதிபர் கனக மகேந்திராவின் பவளவிழாவை முன்னிட்டு அவரது காலத்துப் பழைய மாணவர்களால் வெளியிடப்படும் பொற்கால மலருக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் அவரது சேவைக் காலத்தில் கொத்தணி அதிபராக, உதவிக்கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, வலயக்கல்விப் பணிப்பாளராக மாவட்டத்தில் பணியாற்றியவன் என்ற வகையில் அவரது அதிபர் சேவைக்காலம் இந்தப் பாடசாலையின் பொற்காலமே ஆகும். இது எனது கருத்து மட்டுமல்ல. இக்குறித்த காலத்தில் 23.06.1989 முதல் 09.04.1999 வரை மாவட்டத்தில் கடமையாற்றிய கல்விப் பணிப்பாளர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள் அனைவருமே ஏற்றுக்கொண்ட உண்மைக் கருத்தாகும். இதுவெறும் புகழாரம் மட்டுமல்ல. அவரது முதல் நியமனப் பாடசாலையான கண்டாவளை ம.வியில் கடமையாற்றியதில் இருந்து இடம்மாற்றலாகிச் செல்லும்வரை நான் அவரை நன்கு அறிந்தவன். நான் சார்ந்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மாவட்ட செயலாளராக அவர் பணியாற்றிய காலத்தில் அவருக்கும் எனக்குமான நட்பு நெருக்கமானதாக இருந்தது. கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் அவர் பணியாற்றிய காலத்தில் அக்கொத்தணியின் விளையாட்டுத்துறைச் செயலாளராகவும், ஏனைய புற நிகழ்வுகளின் ஒழுங்கமைப்புச் செயலாளராகவும், மேற்படி பாடசாலையின் பிரதி அதிபர்களில் ஒருவராகவும் கடமையாற்றியவர். இக்காலத்தில் பல நாடகங்களையும் பாடசாலையில் அரங்கேற்றி வந்தார். இவற்றால் இக்காலங்களில் இவர் மாவட்டத்தில் அனைவருக்கும் நன்கு அறிமுகமானவராகக் காணப்பட்டார். சில காலம் இவர் கோட்ட, மாவட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி அமைப்பாளராகவும், மாவட்டத்தின் கவின்கலை மன்றச் செயலாளராகவும் பணியாற்றினார்.

இவர் 23.06.1989ல் வட்டக்கச்சி கொத்தணிப் பாடசாலையின் கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலைக்கு அதிபராக நியமனம் பெற்றுவரும்போது அங்கே கொத்தணி அதிபராக இருந்த நான் மகிழ்வுடன் வரவேற்று கொத்தணியின் செயலாளராகவும் நியமித்துச் செயற்பட்டேன்.

அக்காலத்தில் இப்பாடசாலை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. அவர் நன்கு திட்டமிட்டு கல்வித் திணைக்கள அதிகாரிகள், பெற்றோர், பழைய மாணவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்று துரிதமாகவும், தீவிரமாகவும் இப்பாடசாலையைக் குறுகிய காலத்தில் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றார். தனது பாடசாலையின் வளர்ச்சியில் இறுக்கமான போக்கையும், எவருக்கும் விட்டுக் கொடுக்காத தீவிரத்தன்மையையும் கொண்டவராக செயற்பட்டார். இதனால் ஏனைய பாடசாலைகள் சார்ந்தவர்கள் மத்தியில் சில முரண்பாடுகளையும், அதிருப்தியையும் அவ்வப்போது இவர் பெறவேண்டியிருந்தது. இவரது இந்தப்போக்கு ஏனைய பாடசாலைகளையும் போட்டி உணர்வுடன் துரிதமாக முன்னேறுமளவுக்குத் தூண்டுதலாக இருந்தது என்பதையும் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய கல்விப்பணிப்பாளர் க.கந்தசாமி அவர்கள் ஒவ்வொரு மாதாந்த அதிபர்கள், அலுவலகர்கள் கூட்டத்தின் போதும், சிறந்த நிர்வாகம், சிறந்த கல்விச் செயற்பாடு, மாணவர் மத்தியில் ஒழுங்கு கட்டுப்பாடு, சிறந்த சமூக இணைப்பு, பெற்றோர் பழைய மாணவர் தொடர்பாடல் நெருக்கமான கல்வித்திணைக்களத் தொடர்பாடல், சிறந்த விளையாட்டு கலைத்துறை வளர்ச்சி என ஒவ்வொரு துறைக்கும் இராமநாதபுரம் மேற்கு பாடசாலையை முன் உதாரணமாக அடுக்கிக்கொண்டே போவார். இவருக்குப் பின்வந்த கல்விப்பணிப்பாளர் திரு.சி.கமலநாதனும் அவ்வண்ணமே அனைத்துக்கும் இப்பாடசாலையையும், அதிபரையும் உதாரணம் காட்டுவார்.

கல்வித் திணைக்களத்தால் சில பாடசாலைகளின் அதிபர் பதவிக்கான நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டது. அதில் இவர் தோற்றித் தெரிவுசெய்யப்பட்டார். அதனால் கிளி/இராமநாதபுரம் ம.விக்கு இடமாற்றம் வழங்கினோம். இவர் அதனை ஏற்கவில்லை. இறுதிநேரத்தில் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் வட்டக்கச்சி ம.வியின் அதிபராக பொறுப்பேற்கும்படி பகிரங்கமாக அவரது பிரியாவிடையின் போது கூடக் கேட்டேன். இந்தப் பாடசாலைக்காகவே ஆன என் அர்ப்பணிப்பைப் பதவி உயர்வுக்காக விரயமாக்க நான் விரும்பவில்லை என ஆணித்தரமாக மறுத்தார். இவர் பெற்ற திருகோணமலைக்கான இடமாற்றம் அன்றைய சூழலில் இவருக்கு உருவான விபத்து மட்டுமல்ல. எமது மாவட்டத்துக் ஏற்பட்ட ஈடற்ற இழப்புமாகும்.

ஏனைய கல்விப் பணிப்பாளர்கள் கூறிவருவது போல அன்று அனைத்துத் துறைகளிலும் இந்தப் பாடசாலை பாரிய மாற்றத்தைப் பெற்றிருந்தது. அக்கால நிகழ்வுகளை, மறக்கமுடியாத நிலையில் இவர் வளர்த்த மாணவர் சமுதாயம் புலம்பெயர் நாடுகளில் வாழும் நிலையில் கூட இருபது வருடங்களின் பின்பு நன்றியுணர்வோடு இப்பெரும் கைங்கரியத்தை நிறைவேற்றுகிறார்கள். அன்றைய இவரது பிரியாவிடை நிகழ்வின்போது நானும் கலந்துகொண்டேன். அத்தகைய சிறப்பான நிகழ்வு வேறு யாருக்கும் இங்கு இதுவரை நடந்ததை நான் காணவில்லை. ஒருவர் இறந்தபின் அஞ்சலிக்கூட்டங்களை நடத்துவதைவிட வாழும்போதே வாழ்த்தும் செயலாக இதனை நான் கருதுகிறேன். வட்டக்கச்சியிலுள்ள இராமநாதபுரம் மேற்கு பாடசாலையின் பழைய மாணவரும், பெற்றோரும் சிறந்த முன்னுதாரண கர்த்தாக்களாக காணப்படுகிறார்கள்.

**கிளி/கண்டாவளை மகாவித்தியாலயத்தில் இவரது சேவைக்காலம் பொற்காலம்.**

**கிளி/மத்தியகல்லூரியில் இவரது சேவைக்காலம் பொற்காலம்.**

**கிளி/இராமநாதபுரம் மேற்கு வட்டக்கச்சியில் இவரது சேவைக்காலம் பொற்காலம்.**

**திரு. கனக மகேந்திராவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது பொற்கால வாழ்த்துக்கள்.**

**ஏனைய பாடசாலைகளுக்கும் இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.க.முருகவேல்
ஓய்வுநிலை அதிபர் வட்டக்கச்சி ம.வி
ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி



# வாழ்த்துச் செய்தி

## சவால்களை எதிர்கொண்டு சாதனை படைத்தவர்

மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய அதிபர் திரு. கனக மகேந்திரா அவர்களின் பவளவிழா மலரான பொற்கால மலருக்கு வாழ்த்துரை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மிகவும் மகிழ்வடைகிறேன்.

30.05.1978ம் ஆண்டு பழம்பெரும் கிராமமான கண்டாவளை மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரியப்பணியை தொடங்கினார். பின்னர் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் கடமை புரிந்து 23.06.1989 அன்று இராமநாதபுரம் மேற்கு அரசினர் வித்தியாலயத்தில் அதிபர் கடமைகளை ஏற்றுக்கொண்டார். அங்கு அவர் 10 வருடங்களுக்கு மேலாக கடமை புரிந்தது அந்தப்பள்ளிக்கான பொற்காலம் என்று கூறினால் மிகையாகாது.

அவர் அதிபராக கடமையேற்ற காலத்திலேயே நானும் இந்த மாவட்டத்தில் ஆசிரியராக கடமை ஏற்றுக்கொண்டேன்.

என்னைப்போலவே அவரின் குடும்பமும் யாழ்ப்பாணத்தில் வசித்த காரணத்தினால் நாம் விடுமுறை காலத்தில் யாழ் செல்வதற்கு ஊரியான், கொம்படி, கிளாலி, சங்குப்பிட்டி பாதைகளினூடாக பாதுகாப்புக்கருதி இரவோடு இரவாக துவிச்சக்கரவண்டியில் செல்வது வழமை. 70km தூரத்தை பயணிக்க அன்று எமக்கு இரண்டு நாட்கள் தேவைப்பட்டன. உயிருக்கு ஆபத்தான நிலைமைகளில் பயணித்து கல்விச்சேவை ஆற்றியமையை இன்றும் மறக்கவில்லை. முழுநேரமாக கல்விப்பணியாற்ற இவைகள் தடங்கலாக உள்ளமையினால் அவர் தனது குடும்பத்துடன் பள்ளியில் அமைந்துள்ள அதிபர் விடுதியில் தங்கினார்.

பாடசாலை வளவில் அவர் நாட்டிய பயன்தரு மரங்களில் பலா, மா, வாழை குறிப்பாக தென்னை மரங்கள் இன்றும் காய்த்துக் குலைகளாக தொங்கும் காட்சிகளை காணமுடியும். அத்தோடு நிழல்தரு, மரங்களும், அழகு பயிர்களும் சோலையாக காட்சிதந்து அவரின் பெயரை நித்தம் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

இவரின் காலத்திலே இவரின் பள்ளி கல்விசார் போட்டிகள், வலைப்பந்தாட்டம், உடற்பயிற்சிப் போட்டிகள், நாடகப்போட்டிகள் உட்பட பல்வேறு போட்டிகளிலும் முதல்இடம் பெற்று வன்னிப் பெருநிலப்பரப்பிலும் முதல் இடங்களைப் பெற்றன. இதனை இன்றும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

அந்த காலத்தில் தேசிய மட்ட போட்டிகளில் மாணவர்கள் கலந்துகொள்ள வாய்ப்பு இருக்கவில்லை. வாய்ப்பு கிட்டியபோது இந்த பள்ளிமாணவர்களான இவரின் வளர்ப்புகள் தேசியமட்டத்தில் முதற்தடவையாக முதலாம் இடம்பெற்றமை ஒரு வரலாற்று சாதனையாகும். இதற்கான பெருமைகள் காலம் காலமாக இவற்றை ஊட்டி வளர்த்த திரு. கனக மகேந்திராவையே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக தேசிய மட்டப்பொதுப்பரீட்சைகளின் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்தே மாணவர்களின் அடைவுமட்டத்தை கணிப்பார்கள். இவரின் பள்ளியும் 1992இலிருந்து தொடர்ச்சியாக பல ஆண்டுகள் க.பொ.த பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முன்னிலையில் உள்ளதை பகுப்பாய்வு செய்தவன் என்ற அடிப்படையில் உறுதிபடக் கூறுவதில் பெருமை கொள்கிறேன்.

மிக பிரதானமாக பள்ளி மாணவர்களின் ஒழுக்க மேம்பாட்டிற்காக கனகமகேந்திரா அதிபர் முழுமையாக அர்ப்பணித்து உழைத்தவர். இவரின் தலைமைத்துவத்தின் கீழ் கற்ற மாணவர்கள் திறமையும் நல்லொழுக்க மனப்பாங்குகளையும் கொண்டவர்களாக இருந்ததை நான் கண்டு வியந்து மகிழ்ந்ததுண்டு.

22 வருடங்களுக்கு மேலாக இவர் கிளிநொச்சி மாவட்டத்திலே அந்த மண்ணுக்கு சொந்தக்காரனாக இல்லாமல் அர்ப்பணிப்புடன் இரவு பகல் பாராது கல்விப்பணி, சமூகப்பணி ஆற்றியதை நாம் நன்றியுடன் நினைவில் கொள்கிறோம். பல்வேறு சவால்களின் மத்தியில், பெரிய பாடசாலைகளின் போட்டி மனப்பாங்குகளுக்கு மத்தியில் வெற்றிகரமாக அவற்றை எதிர்கொண்டு சாதனை படைத்தவர். அவரின் சாதனைகள் எவராலும் மறக்கமுடியாதவை. ஓய்வுநிலையில் திருகோணமலையில் வாழ்ந்து வரும் தமது அதிபருக்கு இத்தனை ஆண்டுகளுக்குப்பிறகு கொரோனாவையும் வென்று அவரது மாணவ சமுதாயம் பவளவிழா கொண்டாடுவது சிறந்த ஒரு பற்றுதியான வரலாற்றுப் பதிவாகும். அவரது பாடசாலைச்சமூகத்துடன் இணைந்து நானும் அவரையும், அவரது மனைவி, அப்பாடசாலையின் பழைய மாணவர்களான அவரது பிள்ளைகளையும் மகிழ்வோடு வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. பொன். நித்தியானந்தம்
மேனாள் உதவி அரசாங்க அதிபர்
(கரைச்சி - கிளிநொச்சி)

# வாழ்த்துச் செய்தி

## கனக மகேந்திரா காலத்தால் வெல்ல முடியாத கருமங்களை ஆற்றியவர்

வட்டக்கச்சி கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையில் 1989முதல் 1999 வரையான காலத்துக் கல்விச் செயற்பாடுகளைச் சித்திரிக்கும் பொற்கால மலர் என்னும் நூலுக்கும் அக்காலத்து அதிபர் திரு. கனக மகேந்திராவின் பவள விழாவுக்கும் எனது வாழ்த்துக்களை வழங்குவதில் நான் மிகவும் மனம் மகிழ்கிறேன்.

இந்தப் பாடசாலை அதிபரதும் ஆசிரியர்களதும் அயராத முயற்சியினால் ஒரு தலைசிறந்த பாடசாலையாக மிளிர்கிறது. இந்தப் பாடசாலை, கல்வி, கல்விப்புற நிகழ்வுகளில் வளர்ச்சியடைந்த பாடசாலைக்கு இணையாகச் செயற்பட்டு வருகிறது. இங்கே கல்வியுடன் விவசாயம், கலை, விளையாட்டு, அனைத்துக்கும் மேலான ஒழுக்க நெறிகள், சமூகத்தில் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அதிபரின் இயல்பு என்பன நான் கண்ட விசேட அம்சங்களாகும்.

ஆசிரியர் தட்டுப்பாடு, வளப்பற்றாக்குறைகள் நிறைந்த அக்காலத்தில் வேண்டியவர்களைப் பொறுப்பானவர்களைத் தேடித்தேடி அணுகிப் பாடசாலைத் தேவைகளை நிறைவுசெய்து பாடசாலையை வளப்படுத்தினார். இவரது நிர்வாகத் திறனையும், பாடசாலையின் துரித வளர்ச்சியையும் அவதானித்த நான் வேறு பாடசாலைகளில் கற்றுவந்த எனது மூன்று பிள்ளைகளையும் இங்கேயே இணைத்து அவர்கள் கல்வியில் உயர்நிலை அடைய அடித்தளமிட்டேன்.

இவர் காலத்தால் வெல்லமுடியாத பல கருமங்களை ஆற்றியமையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இவர் இடமாற்றம் பெற்று ஓய்வு பெற்று 22 ஆண்டுகளுக்குப் பிறகும் இவரது காலத்துப் பழைய மாணவர்கள் விழா எடுப்பதும் அவரது காலத்து வரலாற்றைச் செப்பும் பொற்கால மலர் என்னும் ஒரு மலரை வெளியிடுவதும் ஒரு வரலாற்றுச் சிறப்பாகும். எனது பிள்ளைகளும் இவரது காலத்துப் பழைய மாணவர்கள் என்ற பெருமையைப் பெற்றவர்கள்.

இவரது காலம் பாடசாலை வரலாற்றில் ஒரு பொற்காலமே ஆகும். பவளவிழா நாயகனுக்கும் பொற்கால மலருக்கும் எனது மனமுவந்த வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



த.மகாசிவம்
மேனாள் பொதுச் செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

# வாழ்த்துச் செய்தி

## நான் அறிந்த கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையின் வளர்ச்சியும், சிறப்பும்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக 1979ல் நான் தெரிவானபோது திரு. கனக மகேந்திரா கண்டாவளை ம.வி இல் ஆசிரியராக கடமையாற்றி சங்கத்தின் யாழ் மாவட்ட பிரச்சாரச் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அவர் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு மாற்றலான பின்னர் கிளிநொச்சி மாவட்ட செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டு கடமையாற்றினார். அத்துடன் அகில இலங்கைக் கல்வித் திணைக்கள ஊழியர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் வட பிராந்திய பிரதிநிதியாகவும் (E.D.C.S) இரண்டு தடவைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தார். தேசிய மட்டத்திலான இப்பதவியுடன் மாவட்டச் செயலாளர் பதவியையும் வகித்துத் திறமையாகச் செயற்பட்டு வந்துள்ளார். மாவட்டத்தில் உள்ள அதிபர், ஆசிரியர்களின் நட்பும், அங்குள்ள பாடசாலைகளின் வளர்ச்சி, நிர்வாகச் செயற்பாடுகளை நன்கு அறிந்திருக்கவும் இதனால் முடிந்தது. இந்நிலையில் இவர் 1989ல் கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது இத்தகைய பட்டறிவும், ஆளுமைத்திறனும், அர்ப்பணிப்பும் மேற்படி பாடசாலையின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் பெரிதும் பயன்பட்டன.

ஏனைய இடங்களைப் போல் இவரது பாடசாலைக்கும் ஆசிரியர் சங்க விடயமாக நான் செல்வதுண்டு. அகில இலங்கை ரீதியாகப் பல பாடசாலைகளுக்கும் சென்றுவந்த எனக்கு இப்பாடசாலையும் அங்கிருந்த கவின் நிலையும், பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பும், அவை பற்றிய கல்வித்திணைக்களத்தின் மதிப்பீடும், விடுதலைப்புலிகளின் கல்வி நிர்வாகப் பிரிவின் கருத்தும் எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது.

நாங்கள் இருவரும் காங்கேசந்துறையின், கீரிமலை, தெல்லிப்பளைக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள். தந்தை செல்வாவின் பாசறையில் ஊறி வளர்ந்தவர்கள். இவை அடிமனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தவே செய்யும். திரு. கனக மகேந்திரா அன்றைய எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசந்துறை பாராளுமன்ற உறுப்பினருமான உயர்திரு அ.அமிர்தலிங்கத்தின் தலைமையில் தனது திருமாங்கல்யதாரணத்தை அமைத்துக்கொண்ட தீவிர கொள்கைவாதியுமாவார். நானும் அந்தத் திருமண நிகழ்வில் கலந்து கொண்டேன்.

**"மேற்படி பாடசாலைக்கும் அதிபர் கனக மகேந்திராவுக்கும் எனது வாழ்த்துக்கள்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. க.வைரமுத்து
ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் - கிளிநொச்சி
மேனாள் வடக்கு மாகாண அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர்

# வாழ்த்துச் செய்தி

## பாடசாலைக்கே தன்னை அர்ப்பணித்தவர் கனக மகேந்திரா

சில பாடசாலைகளின் அதிபரின் பெயரைச் சொன்னால் அல்லது காலத்தைச் சொன்னால் தான் சமூகம் சுலபமாகப் புரிந்து கொள்ளும். இந்தப் பாடசாலைக்கும் புரிதலை மேற்கொண்டிருந்தோம். முஸ்லீம் பாடசாலை என அழைக்கப்பட்ட இப்பாடசாலை இப்போதும் கனக மகேந்திராவின் பாடசாலை என்றே அழைக்கப்படுகிறது. வட பகுதியில் அதிபர்களின் பெயரால் இப்பொழுதும் பல பாடசாலைகள் அழைக்கப்படுகின்றது. ஒரு நிர்வாகியின் மறக்கமுடியாத செயலாற்றுகைகள் காலத்தால் அடித்துச் செல்லப்படக் கூடியனவல்ல.

முதல்வரின் முயற்சியால் தான் ஒரு ஸ்தாபனம் வளர்ச்சியடையும். கனக மகேந்திரா முதல்வரும் இதையே இங்கு செய்துள்ளார். இவருடைய சிறந்த நெறிப்படுத்தல்கள் திறன்கொண்ட பலரை இந்த மண்ணுக்கு உருவாக்கிக் கொடுத்துள்ளது. பத்துவருடத்துக்கு மேல் இங்கு பணியாற்றிய இவர் ஒரு ஏக்கர் காணி கூட வாங்கவில்லை. ஒரு ஏக்கர் வயல்கூட, விதைக்க எத்தனிக்கவில்லை. இங்கு வரும் எவரும் இப்படி இருந்ததில்லை. உழைப்பையே அதிகமாக நாடியுள்ளனர். இவர் வீடு, குடும்பம் என்ற எண்ணமே இல்லாது பாடசாலைக்கே தன்னை அர்ப்பணித்துள்ளார் என்பதே எனது கருத்தாகும். ஒரு வளர்முகப் பாடசாலையின் அதிபர் ஆனவர் ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவரை அரவணைத்துச் செல்லும்போதே வெற்றிக்கு வித்தாக அமையும். இவருக்கு எடுக்கும் பவளவிழாவும் மலர் வெளியீடும் ஒழுங்கமைப்புக்களும் இதையே எமக்கு உணர்த்துகின்றன.

மாணவர்களின் ஒழுக்கம் பண்புகளால் இந்தச் சமூகத்தையே இவர் மாற்றியுள்ளார். அதனால் அனைவரதும் ஒத்துழைப்பையும் பெற்று வெற்றிவாகை சூடியுள்ளார். செய்யும் தொழிலை தெய்வமெனக் கொண்டு இவரது செயல்கள் வன்னிப் பாடசாலைகளுக்கே ஒரு முன்மாதிரியான மைல்க் கற்களாக அமைந்துள்ளது. இவரது காலத்துப் பழைய மாணவர்களின் முன்மாதிரியும் அவ்வாறே அமைந்துள்ளது.

இவர் கல்விப் பணியோடு மட்டுமல்லாது சமூகப்பணிகளிலும் தீவிர ஈடுபாடு காட்டியுள்ளார். கிளிநொச்சி தமிழ்ச்சங்கம், ஆசிரியர் சங்கம், வன்னி மாவட்ட கல்வி அபிவிருத்திச் சபை ஆகியவற்றுடன் இடப்பெயர்வுக் காலத்தில் இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிய தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

**" பவளவிழா நாயகனை வாழ்த்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வே.இறைபிள்ளை**
**நிறுவுனர்/வாழ்நாள் தலைவர்**
**தமிழ்ச் சங்கம் - கிளிநொச்சி மாவட்டம்**

# வாழ்த்துச் செய்தி

## உள்ளம் கவர்ந்த கலையரசு கனக மகேந்திரா

இராமநாதபுரம் மேற்கு அ.த.க பள்ளியின் பொற்கால மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். 50 ஆண்டுகால வரலாற்றில் தொடர்ச்சியாக 11ஆண்டுகள் (1989-1999) முதல்வராக கடமையாற்றிய பெருமை கலையரசு கனக மகேந்திரா அவர்களையே சாரும்.

**"தோன்றிற் புகழுடன் தோன்றுக அஃதிலார்**
**தோன்றலில் தோன்றாமை நன்று"** என்பது வள்ளுவம்

அதாவது தோன்றலின் நோக்கம் புகழுக்குரிய பணிகளைச் செய்து அப்பணிகள் மூலம் தனி முத்திரை பதிப்பதே. அவ்வாறு வாழமுடியாதவர்கள் பிறக்கக் கூடாது என்றார். அந்த வகையில் கலையரசு கனக மகேந்திரா அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய வள்ளுவர் வாக்குக்கேற்ப பள்ளியில் அர்ப்பணிப்புடன் செறிவார்ந்த ஈடுபாட்டுடன் பல செயற்கரிய பணிகளைச் செய்து அப்பணிகள் மூலம் தனி முத்திரை பதித்துள்ளார் என்று கூறினால் மிகையாகாது.

கனக மகேந்திரா அவர்கள் கலையார்வமும் தொண்டு உள்ளமும் கொண்டவர். குற்றால அருவியென உள்ளத்தைக் குளிர்விக்கும் திறம் பெற்றவர். நாடும் மொழியும் இருகண்களென வாழ்பவர்.1995ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தால் திருவள்ளுவர் விழாவும் மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையில் கொண்டாடுவதற்கு எண்ணியிருந்தோம். இந்தத் தகவலை மேனாள் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.சி.கமலநாதன் அவர்களிடம் தெரிவித்தோம். அதற்கு பணிப்பாளர் இராமநாதபுரம் மேற்கு அ.த.க பள்ளியில் கலை ஆர்வமும், மிகுந்த தமிழ்ப் பற்றும் மிக்க முதல்வர் கனக மகேந்திரா இருக்கின்றார். சிறப்பான ஒரு மேடையையும் அமைத்துள்ளார் விழாவை சிறப்பாக நடாத்துவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்து மிகவும் சிறப்பாக நடத்த துணையாக இருப்பார் எனக் கூறினார். இத்தகவலை நாம் பள்ளி முதல்வரிடம் கூறினோம். அவர் மிகவும் மகிழ்ந்தார். ஆர்வமுடன் செயற்பட்டார்.

ஆளுமைத்திறன் கொண்ட திரு.கனக மகேந்திரா அவர்கள் உடனே பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்து கொள்ளும் கூட்டத்தை ஒழுங்குபடுத்தி தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் விழா எமது பள்ளியில் நடப்பது எமது ஊருக்கும், பள்ளிக்கும் சிறப்பையும் புகழையும் அளிக்கும் என அவர்களிடம் உற்சாகமாக எடுத்துரைத்தார்.

நாம் அவ்விழாவில் கலந்து கொள்ளச் சென்றபோது பள்ளிச் சமூக மக்களின் உதவியோடு பள்ளிவளாக உட்புறமும், வெளிப்புறமும், விழா நடைபெறும் திடலும் சூழலும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு எழிலாகக் காட்சியளித்ததை அவதானித்தோம். விழாவின் தொடக்கமாக பண்பாட்டு ஊர்வலத்தில் சுமங்கலிப் பெண்கள் திருநிறைகுடங்கள் ஏந்திச் செல்ல மாணவர்கள் குறட்பாக்களை இசைக்க மிகவும் சிறப்பாக அலங்கரிக்கப்பெற்ற ஊர்தியில் திருவள்ளுவர் திருவுருவப்படம் மங்கல வாத்தியங்கள் முழங்க அருள்மிகு மாவடி அம்மன் கோவிலில் இருந்து எடுத்துச் சென்ற காட்சி மறக்கமுடியாதது. எல்லோராலும் பாராட்டப் பெற்ற அந்த நிகழ்வு சிறப்புக்குரியது. இவ்வாறு சிறப்புறுவதற்கு தமிழ் மீதும் கலைகள் மீதும் தனியுறு விருப்பும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறிவார்ந்த ஈடுபாடும், நனிமிகு வேட்கையும் கொண்ட கலையரசு கனக மகேந்திராவின் வழிகாட்டலும் செயற்றிறனுமே காரணம்.

இவருடைய செயற்கரிய செயற்பாட்டையும், ஆள்வினைத்திறனையும், பழகும் மனிதப் பண்பாட்டையும் எண்ணி

**'இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து**
**அதனை அவன் கண்விடல்'**

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத் தலைவர் பதவியை இவருக்கு அளித்தோம். கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கததின் தலைவராக 1997ஆம் ஆண்டும், 1998ஆம் ஆண்டும் பதவி வகித்தார். இக்கால கட்டத்தில் ஜெயபுரத்திலும், கந்தபுரத்திலும் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் சிறப்பாகச் செயலாற்றினார்.

இவரது மகள் கண்ணகியாக நடித்த 'சிலம்புச் செல்வி' நாடகத்தை அரங்கேற்றினார். 1998ஆம் ஆண்டு தமிழ்ச் சங்கத்தின் முதலாவது நூலான 'தமிழர் வாழ்வில் தமிழ்' நூல் வெளியிடப் பெற்றது. இவரது தமிழ்ப் பணியையும், கலைப் பணியையும் பாராட்டி கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் சங்கச் சான்றோர் விருது வழங்கி கௌரவித்தது.

பொற்காலத்தில் தொடர்ச்சியாக 11 ஆண்டுகள் என்பது பெரும் சாதனை ஆண்டுகளாகும். இன்றும் இவர் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்புகொண்டு ஆக்கமும் ஊக்கமும் வழங்குபவர். செயற்கரிய செயல்களை செய்யும் பெரியார். வையத்துள் வாழ்வாங்கு வாழும் இவர் நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத**
**தமிழ் என்று சங்கே முழங்கு - பாரதிதாசன்**

**மொழியில்லாமல் இனமொன்றும் இல்லை**
**இனமில்லாமல் நாடொன்றும் இல்லை - பாவாணர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகிறோம்



## கனகராசா மகேந்திரா

(முன்னாள் அதிபர்
அகில இலங்கை சமாதான நீதிவான்)




[illegible]

வாழ்த்துவோர்

முன்னாள் ஆசிரியர்கள், மாணவர்கள்,

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (15.12.2010) புதன்கிழமை
கலாபூஷணம் விருது பெற்ற

## கனகராசா மகேந்திரா

(அதிபர்)

எமது மாவட்டத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரி, கண்டாவளை மகா வித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு -வட்டக்கச்சி ஆகிய பாடசாலைகளில் கல்வியோடு கலை, இலக்கிய, நாடகத்துறைகளில் அளப்பரிய சேவைகள் செய்து திருகோணமலையிலும் இச் சேவையைத் தொடர்ந்து சேவையால் உயர்ந்து கலாசார அமைச்சினால் வழங்கப்படும் கலாபூஷணம் விருதைப் பெற்ற கீரிமலையைச் சேர்ந்த எமது முன்னைநாள் அதிபர் கனக. மகேந்திரா அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்த்துவோர்:
முன்னைநாள் ஆசிரியர்களும்,மாணவர்களும்,
கிளிநொச்சி, வட்டக்கச்சி.

17-12-2010
உதயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயக் கல்வி பணிமனை
கிளிநொச்சி
කලාප අධ්‍යාපන කාර්යාලය
කිලිනොච්චි
ZONAL EDUCATION OFFICE
KILINOCHCHI

මගේ අංකය
எனது இல
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

Date: 10.05.1999

திரு.கனகராசா மகேந்திரா கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையில் 23.06.1989 முதல் பதில் அதிபராக கடமையேற்ற இவரது காலத்தில் இப்பாடசாலை மாவட்டத்தில் தரம் 1C, 1AB பாடசாலைகளுக்கு இணையாக விளங்கியது.

**புலமைப் பரிசில் பரீட்சை**

1989 ஆம் ஆண்டிலேயே முதற் தடவையாக இப்பாடசாலையில் இருந்து 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகளில் மாணவர் சித்தியடையத் தொடங்கி தொடர்ச்சியாக நல்ல பெறுபேறுகளைப் பெற்று வருகிறது. 1996இல் மாவட்டத்திலேயே இப்பாடசாலை மாணவன் அதிகூடிய புள்ளிகளைப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**க.பொ.த (சா/த)**

இப்பாடசாலை க.பொ.த (சா/த) பரீட்சையில் 1991இல் கொத்தணியில் மிகச் சிறந்த பரீட்சை முடிவையும் 1992இல் அரச பரீட்சைத் திணைக்கள பாடசாலை வினையாற்றுகைச் சுட்டி அறிக்கையின்படி மாவட்டத்திலேயே பாடரீதியாகவும், விகிதாசாரப்படியும் அதி சிறந்த பரீட்சை முடிவையும் பெற்றிருக்கிறது. 1995 இல், 1997இல், 1998இல் எமது திணைக்கள கணிப்பின்படி மாவட்டத்தில் மாணவ விகிதாசாரப்படி அதிசிறந்த பரீட்சை முடிவுகளைப் பெற்றிருக்கிறது.

**மாவட்ட உடற் பயிற்சி**

மேற்படி போட்டிகளில் 1992 முதல் 1999 வரை இப்பாடசாலையில் பெண்கள் குழு தொடர்ச்சியாக முதலாம் இடத்தைப் பெற்றிருக்கிறது.

**வலைப் பந்தாட்டம்**

வலைப் பந்தாட்டப் போட்டியில் 17 வயதுப் பெண்கள் குழு 1991, 1992, 1993ம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக மாவட்ட விருதினைப் பெற்றிருக்கிறது.

**எறிபந்து போட்டி**

1992இல் 17, 19 வயது பெண்கள் குழு மாவட்ட விருதினைப் பெற்றிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாச்சிப் போட்டி**

மேற்படி போட்டியில் 1992இல் 15, 17 வயது ஆண், பெண் குழுக்கள் மாவட்ட விருதினைப் பெற்றிருக்கின்றன.

**சிரமதானம்**

இப்பாடசலையிலுள்ள இரண்டு கிணறுகள் 1991 இலும், 1996 இலும் சிரமதானம் மூலம் தோண்டப்பட்டது.

**விவசாயம்**

1992, 1993, 1994ம் ஆண்டுகளில் நடைபெற்று விவசாய மரநடுகைப் போட்டிகளில் மாவட்டத்திலேயே இப்பாடசாலை தொடர்ச்சியாக முதலாமிடத்தைப் பெற்றதுடன், 1994இல் 200 தென்னங்கன்றுகளும் 125 வாழை மரங்களும் ஏனைய பயிர்களுடன் நாட்டப்பட்டன.

**கலையரங்கு**

1993இல் மாவட்டத்திலேயே நீள அகலத்தால் மிகப்பெரிய திறந்த வெளி கலையரங்கு மண்டப அரங்குமாக பாவிக்கும் வகையில் கலையரங்கு அமைக்கப்பட்டது.

**கலை**

1994, 1995, 1997ம் ஆண்டுகளில் இவரால் நெறிப்படுத்தப்பட்ட நாட்டுக்கூத்து மாவட்டத்தில் தொடர்ச்சியாக முதலாமிடத்தையும் 1998இல் இவரால் நெறிப்படுத்தப்பட்ட நாட்டிய நாடகம், வரலாற்று நாடகம், கிராமிய நடனம், கிராமிய இசை என்பன வன்னி மாவட்டத்திற் முதலாம் இடத்தையும் பெற்றன.

**போட்டிகள்**

இவரது காலத்தில் விவசாய, விஞ்ஞான, ஆங்கில, பொது அறிவுப் போட்டிகளில் பாடசாலை மாணவர்கள் மாவட்டத்தில் முதலாமிடங்களைப் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலை சமூக ஈடுபாடிலும் கல்வி, கல்வியோடு இணைந்த ஏனைய முறைகளிலும் ஒழுங்கு கட்டுப்பாட்டிலும் மிகச்சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக அவரது காலத்தில் விளங்கி வருவதுடன் மாணவர் தொகையாலும் வளர்ந்து வருகின்றது.

ப.அரியரத்தினம்
வலயக்கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவைநலன் பாராட்டு விழா – 1999

### பாடசாலை ஆசிரிய சமூகம் சார்பாக...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பாக...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாடசாலையில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம் நடத்திய திருவள்ளுவர் விழாவின் போது

சுமங்கலிப் பெண்களான எமது பாடசாலையின் ஆசிரியர்களும், பெற்றோர்களும் இராமநாதபுரம் ஊரக ஊர்தி ஊர்வலத்தின் போது திருவள்ளுவர் சிலையின் முன் நிறைகுடம் ஏந்தி வரும் சமூக எழுச்சிக் காட்சி



## விழாவில் எமது மாணவர்களின் வில்லுப்பாட்டு மற்றும் 'கற்புக்கனல்' நாடகக் காட்சி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரியாவிடையின் போது வழங்கிய வாழ்த்துப்பா - 1999ல்

# "பொய்மையற்ற சேவையினால் பொன்னாக மிளிர்ந்தீர்."

கால மழையில் கரைந்திடாத
கல்விச் சேவை தனை
கண்ணாகக் கருதி நின்ற
கனக மகேந்திராவே!

இராமநாத புரம் மேற்கில்
இலங்கி நின்ற கல்விச்சோலை
அவனி தனில் தழைத்தோங்கி
அழியாப் புகழ் பெற்றிடவே
மண்ணிடையோர் மணிவிளக்காய்
மகுடமாக ஏற்றி வைத்தீர்.
வித்தகனே நீ வாழி!

அட்ட திக்கிலும் எமது பள்ளி
அருங்கலைக் கூடமாக
தொட்ட தெல்லாம் பொன்னாக்கும்
தலைவனாய்க் கால்பதித்தீர்
நாட்டமுடன் வருகை தந்து
நல்ல பல பணி செய்தீர்
தெவிட்டாத சேவை தனை
பத்தாண்டு நல்கி நின்றீர்
தலைவனே நீ வாழி!

மாணவர் சேவை ஒன்றே
மகத்தான சேவை என்று
இரவு பகல் பாராது
ஊன் உறக்கம் நோக்காது
வித்தியாலய உயர்வதுவே
சிந்தையில் நிறைந்திடவே
பள்ளி மண்ணில் வந்துதித்த
பகலவனே நீ வாழி!

க.பொ.த சாதாரணம்
கற்றுவிட்ட மாணவர்கள்
பரீட்சைதனில் சித்தி பெற்று
உயர்தரம் செல்வதுவும்
புலமைப்பரிசில் மாணவர்கள்
சாதனைகள் குவிப்பதுவும்
மாவட்டத்தில் எம்பள்ளி
என்றுமே முன் நிலையில்
சித்தியின்மை என்ற பெயர்
சிறிது கூட வந்திடாமல்
சிந்தை வைத்து உழைத்திட்ட
செம்மலே நீ வாழி!

கலைத்திறன் போட்டிகளில் உம்
கைவண்ணம் கலந்துவிட்டால்
முதலிடம் தானே வரும்
வேறென்ன முடிவு வரும்
நாடகத் துறை தனிலே
வன்னி நிலப்பரப்பதிலே
நமக்கோர் முத்திரையை
நவமுடனே பதித்து விட்டீர்
கண்கவரும் அரங்கங்கள்
கதை சொல்ல வாய் திறந்தால்
கனக மகேந்திராவின்
கலை ஆற்றல் முதல் கூறும்
கலைஞனே நீ வாழி!

மெய்வன்மை நிகழ்வுகளில் உம்
மெய்வண்ண உழைப்பதனால்
விளையாட்டுத் துறை தனிலே
வீங்கு புகழ் நாம் பெறவே
வினைத் திறனாய்ச் செயற்பட்ட
வீரனே நீ வாழி!

காற்றிலே நின் அறிவுரைகள்
கலந்து வந்தெங்கள் காதில்
ஏற்றிடும் உணர்வை நாங்கள்
எப்படி உவமை சொல்வோம்
நேற்று வரை பள்ளி மண்ணில்
நின் கையும் வாயும் செய்த
ஆற்றலைக் கவியில்ச் சொல்ல
ஐயனே முடியாதையா

பொய்மையற்ற சேவையினால் இங்கு
பொன்னாக மிளிர்ந்தது போல்
செல்லும் இடம் எங்கும்
சிறப்புடனே வாழியவே!
இறைவனின் அருள் உமக்கு
இறுதி வரை கிடைத்திடுமே
இதங்கனிந்த நன்றியுடன்
இருகரம் கூப்பி நின்று
இன்குருவே உந்தனுக்கு
நின் சேவை பாராட்டி
வாழ்த்துக்கள் வந்தனங்கள்
வனப்புடனே நல்கிநிற்கும்.....

பாடசாலைச் சமூகம்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை

கவி ஆக்கம் : இ. வசீகரன் (ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த**
**அமரர் தி.இராசநாயகம் அவர்கள்**
**பாடசாலை நிகழ்வில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி**

# பாடசாலை வளர்ச்சியின் காரணகர்த்தா அதிபர் கனக மகேந்திரா

அதிபர். கனக மகேந்திரா இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் அளப்பரிய பங்களிப்பைச் செய்துள்ளார். ஏனைய பாடசாலைகளின் அதிபர்களோடு ஒப்பு நோக்குகையில் திரு.கனக மகேந்திராவினை பாராட்டாமல் இருக்க முடியாது. சிறந்த பரீட்சை முடிவுகளுடன் பொது, சமூக, கலை, கலாசார நிகழ்வுகளில் இவரது கிளி/இராமநாதபுரம் மேற்கு பாடசாலை பெரும் சாதனைகளைப் படைத்துள்ளது. நாடகங்கள், பேச்சுப்போட்டிகள், கலை நிகழ்வுகளில் முன்னணியில் துலங்குகிறது. இவரது பிள்ளைகளும் நாடகம், பேச்சு ஆகிய துறைகளில் இந்தப் பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர். விவசாயத்துறையிலும் இந்தப் பாடசாலை பெரும் சாதனைகளைப் படைத்துள்ளது. பாடசாலை வளவு பெரும் சோலையாக மிளிர்வதற்கு இவரே காரணகர்த்தா என்பது பெருமைக்குரிய விடயம்

என்னால் அறிமுகம் செய்யப்பட்ட போசாக்குத் திட்டத்தின் கீழ் இலைக்கஞ்சி வழங்கும் செயற்பாட்டினை இந்தப்பாடசாலை ஏனைய பாடசாலைகளைப் போலன்றி மிகச்சிறப்பாக முன்னெடுத்துள்ளது. மேற்பார்வைக்கு என இப்பாடசாலைக்கு வந்த எனது அலுவலக அதிகாரிகள் சிறப்பாக பாராட்டினார்கள். இவரது விவசாயத் தோட்டத்தில் என்னால் அறிமுகம் செய்யப்பட்ட 34 கீரை வர்க்கத்தில் 28 கீரை வர்க்கத்தை இவர் உற்பத்தி செய்தே கஞ்சிக்கு பயன்படுத்தினார். பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட உற்பத்தித் திறன் போட்டியில் தொடர்ந்து இரண்டு வருடங்கள் முதலாம் இடத்தை இப்பாடசாலை பெற்றுள்ளமை பாராட்டத்தக்கது. பற்றைக் காடாய்க் கிடந்த பாடசாலைக் காணியைச் சுத்திகரித்து எள்ளு விதைப்பதில் ஆரம்பித்து 125 அடியில் வாழையும், 200 அடியில் தென்னையும் இவரால் நாட்டப்பட்டது. நெற்பயிர்ச்செய்கையிலும் இடைஇடையே இவர்கள் மாணவர்களை வயல்களுக்கு அழைத்துச் சென்று பயிற்சி கொடுத்துள்ளார்கள். பாடசாலை அலுவலகத்தின் பின்பக்கம் உள்ள இரண்டு பரப்பு காணியில் நாற்று நடுகைப் பயிற்சிகளும் இங்கு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

பாடசாலை வளவில் உள்ள மாமரங்களிலிருந்து சிதறும் விதைகளைச் சேகரித்து விதைத்து நாற்று மேடைகளாக்கி அதில் வளரும் மாங்கன்றுகளிலிருந்து ஒட்டும் பயிற்சியையும் மாணவர்களுக்கு அளித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. க.கந்தசாமி அவர்கள்**
**01.08.1993ல் நடைபெற்ற இல்ல விளையாட்டு விழாவில்**
**முதன்மை விருந்தினராக வருகை தந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி**

# நான் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற பின் நியமித்த முதலாவது சிரேஷ்ட அதிபர் திரு. கனக மகேந்திரா

இந்தப் பாடசாலைக்கு நான் ஒரு நல்ல அதிபரைத் தந்துள்ளேன். அவரது ஆற்றலையும், திறமையையும் நன்கு ஆழ்ந்து அறிந்தே அனுப்பிவைத்தேன். அவரது தலைமையில் இந்தப் பாடசாலை நன்கு முன்னேறி வருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். எனது திணைக்கள அதிகாரிகளும் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். சிறந்த நிர்வாகத்தை நடத்தி ஆசிரியர், மாணவர், பெற்றோர், சமூகம், கல்வித் திணைக்களம் ஆகியோருடன் நெருக்கமான நல்லுறவைப் பேணிக் கல்வித்துறையில் நல்ல பரீட்சை முடிவுகளையும் இந்தப் பாடசாலை அண்மைக் காலமாகப் பெற்றுவருகிறது. பல்வேறு போட்டிகளிலும் முன்னிலையில் நிற்பதையும் விளையாட்டுத்துறையில் கரப்பந்து, எறிபந்து, தாச்சி, வலைப்பந்து, உடற்பயிற்சிப் போட்டிகளில் இந்தப் பாடசாலை எமது கல்வி வலயத்தில் முதலிடமும், முன்னணியும் வகிப்பதையும் பாராட்டுவதில் நான் பெருமையடைகிறேன்.

சிறந்த முறையில் சிறந்த ஒழுங்கமைப்பில் இன்றைய விளையாட்டுப் போட்டி அமைந்திருப்பதைப் பார்க்கும்போது இதற்கு எல்லாவகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகிய உங்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பைப் பெற்றுச் சிறந்த இந்த விளையாட்டுப் போட்டி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. நான் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற பின் நான் நியமித்த முதலாவது சிரேஷ்ட அதிபரான கனக மகேந்திராவை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

இன்று முதலிடமும், பரிசுகளும் பெற்ற மாணவர்களை நான் பாராட்டுகிறேன். பெரிய பாடசாலைகளுக்கு இணையாக இப்பாடசாலை முன்னணியில் திகழ்வதையிட்டு எங்களது வலயம் பெருமையடைகிறது. மொத்தத்தில் அதிபர் கனக மகேந்திராவுக்கு எனது பாராட்டுக்கள். எல்லாத்துறையிலும் மேலும் இப்பாடசாலை வளர்ச்சியடைய எனது வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய அமரர் பொன். சபாபதி பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் தொடர்பாக பல்வேறு நிகழ்வுகளில் தெரிவித்த கருத்துக்கள்



*கல்வித் திணைக்களத்தின் அதிபர்கள், அதிகாரிகள், அலுவலர்களின் மாதாந்தக் கூட்டங்கள் நடைபெறுவது வழக்கம். அக்கூட்டங்களின் போதெல்லாம் வலயத்தின் கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமி அவர்கள் சிறந்த கல்வி நிர்வாகம், கல்விச் செயற்பாடுகள், பரீட்சை முடிவுகள், அதிபர் ஆசிரியர் உறவு, ஆசிரியர் மாணவர் உறவு, அதிபர் பெற்றோர், பழைய மாணவர் உறவு, சமூகத் தொடர்பாடல், கல்வித் திணைக்களத்துடனான தொடர்பாடல், பாடசாலையினதும், சூழலதும் கற்றல் கவின்நிலை இவை அனைத்தையுமே வட்டக்கச்சியில் உள்ள இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாவில் காணலாம். நீங்கள் வேண்டுமானால் அங்கே போய்ப் பாருங்கள் அங்கிருந்து பல விடயங்களைக் கற்றுக் கொள்ளுவீர்கள்*

அது ஒரு கிராமியப் பாடசாலை. நகர்ப்புறத்தில் இருந்து ஐந்து மைல் தூரத்தில் அமைந்துள்ளது. அன்று காலை 7.30 மணிக்கு தனியாளாக அங்குசென்று அலுவலகத்திற்குப் பக்கத்தில் இருந்த வகுப்பறையில் அமர்ந்து கொண்டேன். அக்காலத்தில் பாடசாலைகள் 8.30 மணிக்கு ஆரம்பமாகும். அலுவலகம் திறந்திருக்கிறது. சில மாணவர் வகுப்பறைகளை கூட்டிச் சுத்திகரிக்கிறார்கள். சிலர் முன்பக்க முற்றத்தைச் சுத்திகரிக்கிறார்கள். மாணவர்கள் சிலர் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். பெண் பிள்ளைகள் வலைப்பந்தாட்டத் திடலில் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். மாணவிகள் சிலர் முற்பக்கத்தில் கூட்டிக்கோலம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். சிலர் கரப்பந்தாட்டத்திடலில் விளையாடிக் கொண்டிருக் கிறார்கள். ஆங்காங்கே ஓரிரு பெண் ஆசிரியர்களின் தலைகளும் தெரிகின்றன. அதிபர் அலுவலகத்திற்கும் வலைப்பந்தாட்டத் திடலுக்கும் இடையில் போடப்பட்டிருக்கும் நடைபாதையில் பூக்கன்றுகளின் முன்னால் மாணவர்களுடன் பூக்கன்று நடுகிறார். மாணவர்களும் ஆசிரியர்களும் பிரதான நுழைவாயிலால் வந்து கொண்டிருக்கின்றனர். பாடசாலை வளவு பற்றைகள், குப்பைகள் இன்றி மிக அழகாகவும், சுத்தமாகவும், ரம்மியமாகவும் இருந்தது.

**கேள்வி :-** இது எந்தப் பாடசாலை என எண்ணுகிறீர்கள்.?
**பதில் :-** இராமநாதபுரம் மேற்குத் தான்.
அக்காலத்தில் கிளி/அக்கராயன் மகா வித்தியாலயத்தில் இயங்கிய கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை யில் நடைபெற்ற அதிபர்கள் கூட்டத்தின் போது வினாத்தொடுத்தது - அன்றைய கல்விப்பணிப்பாளர் திரு. பொன்.சபாபதி. விடைபகர்ந்தது - அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அதிபர்களில் சிலர்.

நான் நீண்ட காலமாக இந்தப் பகுதி பாடசாலைகளுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தவன். இப்பிரதேசத்து விளையாட்டுப் போட்டிகளை நன்கு தரிசித்தவன். இந்தப் பாடசாலையின் இன்றைய விளையாட்டுப் போட்டி வழமையை விட வித்தியாசமான பாணியில் அமைந்திருந்தது. பயிலுனர் ஆசிரியர்களும் தொண்டர் ஆசிரியர்களும் இந்தப் போட்டியின் தளகர்த்தாக்களாய் இருந்து நிரந்தர ஆசிரியர்களுக்கே முன்மாதிரியாக இந்தப் போட்டியில் செயற்பட்டிருந்தனர். மைதானம் ஆரம்பமுதல் இறுதிவரை மிகவும் சுறுசுறுப்பாகவும் விறுவிறுப்பாகவும் அமைந்திருந்தது. குழுநிகழ்வுகள், தனி நிகழ்வுகள், பரிசில் வழங்கல்கள் யாவும் சமகாலத்தில் இடைவெளியின்றி நடந்துகொண்டிருந்தமை பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும். நிகழ்ச்சிகள் யாவும் தரம் மிக்கவையாக அமைந்திருந்தன. பாலர் விளையாட்டுப் போட்டியில் கொடியேற்றி ஆரம்பித்து அடுத்த இருநாட்களும் தெரிவுப் போட்டிகளை நடத்தி இறுதிநாளில் இறுதி விழாவுடன் ஒரு விளையாட்டு வாரமாக அமைக்கப்பட்டிருந்தது. உடற்பயிற்சிக் கண்காட்சி மிகவும் தரமாக அமைந்திருந்தது. வினோத உடைப்போட்டி வினோத உலகமாய் அமைக்கப்பட்டிருந்தது. அணிநடைப் போட்டி நல்ல பயிற்சியுடன் அழகாக அணி பிசகாது அமைந்திருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக பாடசாலையில் படிக்கும் அத்தனை மாணவர்களும் போட்டிகளில் பங்கு தாரராய் அரங்கினுள் இடம் பெற்றிருந்தனர். எல்லா மாணவர்களும் பங்குபற்றியதால் மைதானத்தில் செயற்படும் தமது பிள்ளைகளைப் பார்ப்பதற்காக பெற்றோரும் பெரிய அளவில் பார்வையாளர்களாக வந்திருப்பதைக் காணமுடிந்தது. முற்றிலும் வித்தியாசமான பாணியில் இப்போட்டியை ஒழுங்கு செய்திருந்த அதிபர் ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரும், வடக்கு கிழக்கு இணைந்த மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளருமாக கடமையாற்றிய சி. கமலநாதன் அவர்களின் மனப்பதிவு

*1994ம் ஆண்டு எங்கள் பாடசாலையின் விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக அன்றைய கல்விப்பணிப்பாளர் திரு.சி.கமலநாதன் எம்மால் அழைக்கப்பட்டிருந்தார். அவருடன் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறுவை நாகராசனும் அழைக்கப்பட்டிருந்தார்.*

அண்மைக்காலமாக இந்தப்பகுதியில் இப்பாடசாலை துரிதமாக கல்வியிலும் கல்விப்புற நிகழ்வுகளிலும் சாதனைபடைத்து வருவது யாவரும் அறிந்ததே. குறிப்பாக O/L சிறந்த பரீட்சை முடிவுகளையும், விளையாட்டுத்துறையில் வலைப்பந்தாட்டம் உடற்பயிற்சிப் போட்டிகளில் மாவட்டத்தில் முதலாமிடங்களையும் பெற்றுள்ளது. விளையாட்டுப்போட்டி சார்ந்த கருத்துக்களைத் தொடர்ந்து பேசுகையில் பாதையிலே பல பஸ்கள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒரு பஸ் பழுதடைந்து வீதியின் நடுவில் நிற்கிறது. அதற்குத் தேவையான சகல செலவுகளையும் செய்து Spair parts ம் வழங்கியும் அது ஓடுவதாக இல்லை. நல்ல பெயர் பெற்ற விற்பன்னர்களையும் அனுப்பியும் அதை ஓட வைக்க முடியவில்லை. பின்னால் வந்த பஸ் நீண்ட நேரமாக கோண் அடித்துக்கொண்டு நிற்கிறது. என்ன செய்யலாம். ஓடமுடியாத பஸ்சை ஓரமாக எடுத்து வைத்துவிட்டு கோண் அடித்துக்கொண்டு நிற்கும் பஸ்சை ஓடவிடுவதைத் தவிர வேறு வழியில்லை.

(**குறிப்பு:** எமது பாடசாலையில் உயர்தர வகுப்புகளை ஆரம்பித்து வைக்கும் விண்ணப்பம் தொடர்பாக, வேகமாக இயங்கும் பாடசாலையான எமக்கு வழங்க வேண்டுமென்பதையே சூசகமாக இக்கருத்தில் வெளிப்படுத்தினார்.)

### திரு. சி.கமலநாதன் உடனான திரு. கனக மகேந்திராவின் சம்பவப் பதிவு

அவர் மிகவும் கண்டிப்பானவர். அவரது பெயரைச் சொன்னாலே அதிபர்கள் ஆசிரியர்கள் மிகவும் பயப்படுவார்கள். 1992இல் கிளிநொச்சிக் கல்விவலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய போது திடீரெனப் பாடசாலைக்கு வருகை தருகிறார். அவர் நுழைவாயிலில் நுழையும்போதே அனைத்துத் திக்கையும் அங்கும் இங்குமாக நோட்டமிட்டவாறு எமது அலுவலகத்தினுள் நுழைகிறார். அவரை வணக்கம் கூறி வரவேற்கிறேன். முகத்தில் எந்தவித மலர்ச்சியும் இன்றி பதிலுக்கு நன்றிகூடச் சொல்லாது கடுகடுப்பான முகத்துடன் அலுவலக ஆவணங்கள், வகுப்பறை ஆவணங்கள் எல்லாவற்றையும் பார்வையிடுகிறார். இறுதியாக இலவச புத்தக இருக்கைகளைப் பார்க்கிறார். "எப்படி இவ்வளவு புத்தகம் இங்கே வந்தது? இவ்வளவு தொகையாக ஏன் எடுத்தீர்கள்? பிள்ளைகளுக்கு ஏன் கொடுக்கவில்லை." வினவுகிறார். அதற்கு அனைவருக்கும் கொடுத்துவிட்டேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நவம்பரில் தான் எமக்கு பாடப்புத்தகம் வந்தது. அவ்வருடம் நான் பல்வேறு இடங்களிலும் உதவி பெற்று பிள்ளைகளுக்கு வேண்டிய புத்தகங்களை வழங்கிவிட்டேன். அதன்பின்னர் வருடந்தோறும் டிசம்பரில் வகுப்பேற்றம் செய்தவுடன் புத்தகங்களையும் கொடுத்து விடுவேன். விடுமுறையில் அவர்கள் ஆர்வமாய் உறைபோட்டுப் படித்துப் புத்தாண்டில் கல்வியைத் தொடரத் தயாராக வருவார்கள். முந்திப் படிக்கிற காலங்களில் நாங்களும் அப்படித்தானே சேர்" என்றேன். அப்போது தான் அவரது முகம் மலர்ந்தது. குட் (Good) என்றார். தலையை அசைத்தார். முகமலர்வில் பாராட்டும் உணர்வு தென்பட்டது. "நான் இப்போ உங்கடை ஆசிரியர்களைச் சந்திக்கலாமா" என்றார். அனைவரையும் அழைத்தேன். கலந்துரையாடினார். "உங்கடை பாடசாலைக்கு முன்னர் பலதடவைகள் வந்துள்ளேன். இன்று வரும்போது பாடசாலை புதுப் பொலிவுடன் இருப்பதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. பாடசாலையும் வளவும், வகுப்பறையும் அழகாகவும் சுத்தமாகவும் நல்ல கல்வி நிலையிலும் காணப்படுகிறது. இதன் மூலம் உங்கள் அதிபர் சிறப்பாகவும், உற்சாகமாகவும் செயற்படுவதாக கருதுகிறேன். நீங்களும் அவருக்கு நல்ல ஒத்துழைப்பை வழங்கவேண்டும்" என்றார். அப்போது தான் வழமையாக இவரைக் காணும்போது எனது மனதை நிறைத்திருந்த சலனமும் நீங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. நா.சோதிநாதன்
ஓய்வுநிலை அதிபர்
கிளி/மத்திய மகா வித்தியாலயம்

# துடிப்பான நண்பர் கனக மகேந்திரா

**(1994ல் பாடசாலையின் விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி மத்திய கல்லூரியின் அதிபர் திரு.நா.சோதிநாதன் ஆற்றிய உரையின் ஒரு பகுதி)**

அன்று 23.06.1989. எனது வலது கரத்தை நான் இழந்தேன். எனது இரண்டு பிரதி அதிபர்களில் கல்விப்புற நிகழ்வுகள், ஒழுங்கு கட்டுப்பாடுகட்கு பொறுப்பாக நான் நியமித்த துடிப்பான நண்பர் கனக மகேந்திரா அவரது இன்றைய பாடசாலை நிகழ்வில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

அவரது தலைமையில் இப்பாடசாலையின் துரித வளர்ச்சியையும், சமூகத்தில் இருந்து அவருக்கு கிடைக்கும் ஆதரவையும், பாராட்டையும் கண்டு பெருமையடையும் அதேவேளை அவரது பிரிவால் எனது பாடசாலை பெறவேண்டிய பெருமையை இழந்து நிற்கிறது என்ற உள்ளத்தாக்கமும் என்னை வருடிக்கொண்டே இருக்கிறது. அவர் அடிக்கடி என்னிடம் பயின்ற நிர்வாகத்திறன் என்றும் கிளி/மத்திய மகாவித்தியாலயம் என்ற பயில்களத்தில் பயின்ற திறன் என்றும் கூறிக்கொள்வது "ஈன்றபொழுதில் பெரிதுவக்கும்" என்ற திருக்குறள் அடிகளை நினைவூட்டி என்னைப் பெருமைப்படுத்தினாலும் நான் சொல்லக்கூடியது அவர் இயல்பாகவே ஆற்றல் உள்ளவர். திறன் உடையவர். ஆர்வம்மிக்கவர். சேவை மனப்பாங்கு நிறைந்தவர். இந்தப் பாடசாலையை நீண்ட காலமாக நான் நன்கு அறிந்தவன். இன்றும் அறிகின்றேன், நாளையும் அறிவதில் ஆர்வமாக உள்ளேன்.

திரு.கனக மகேந்திரா சிறந்த நாடகக்கலைஞர், இலக்கிய ஆர்வலர் இப்படிப் பல முகங்கொண்டவர். காலத்தேவைக்கு ஏற்ப பல நாடகங்களை அறிமுகம் செய்தார். பல நாடகங்களில் முதலிடமும், வெற்றிப் பரிசுகளும், பாராட்டுகளும் பெற்றுள்ளார். எமது பாடசாலையில் இவர் விதைத்த விதை இன்றும் அங்கு பிரகாசித்து வருகிறது. 1988ல் சிறந்த நாடகத் தயாரிப்பாளர் எனக் கவிஞர் காரை சுந்தரம் பிள்ளையால் எமது பாடசாலையில் வைத்துப் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

கடவுள் அவரையும் அவரது வெற்றிக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கிவரும் பெற்றோர், ஆசிரியர், மாணவர், நலன்விரும்பிகள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இசைக்குழு - Band











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்கால இல்ல விளையாட்டு விழா பதிவுகள்














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.க.கிருஸ்ணமூர்த்தி
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்,
வலயக் கல்விப் பணிமனை
கிளிநொச்சி



# "கனக மகேந்திரா" ஒரு சகாப்தம்

எனக்கும் நரைவிழத் தொடங்கிவிட்டது. அங்கங்கே இலேசாகப் பழுப்பு முடிகள் நாரைத்தவம் கூடப் பண்ணத் தொடங்கிவிட்டன. இப்பொழுதெல்லாம் பழைய நினைவுகளைத்தான் மனம் அடிக்கடி நினைத்துப் பார்க்கிறது. நான் இங்கே தான் குந்தியிருக்கிறேன். என்னைச் சுற்றிலும் நிழல்தரும் தருக்களும் வெள்ளுடை உடுத்த இருகாற் பட்டாம்பூச்சிகளுமாக அப்பாடசாலையே உற்சாகத் தீயில் கரகமாடுவதாய்ப் பட்டதெனக்கு. மாஞ்சோலைகளும் பூஞ்சோலைகளும் என்னை முன்பே கண்டதுபோல தலையசைத்துக்கொண்டிருந்தன. அவற்றின் தலையசைப்புக்களின் பின்னால் இருக்கும் குட்டிக் குட்டிக் கதைகளெல்லாம் எனக்கு உடனுக்குடன் வந்து போயின.

என்ன? என் கதை உங்களுக்குக் குழப்பமாக இருக்கிறதா? குழப்பம் வேண்டாம் பொறுத்திருங்கள் முழுக்கதையும் சொல்லத்தானே இங்கே வந்திருக்கிறேன். நான் இப்பொழுது அமர்ந்திருக்குமிடம் வட்டக்கச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும் ஆனாலும் இந்த முகவரிக்காகப் பாடுபட்ட ஒருவரைப் பற்றித்தான் இப்போது நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். உண்மையைச் சொல்லப்போனால் இந்தப் பாடசாலைப் பிள்ளைக்குப் பெயர் கிடைத்ததே இவரின் வளர்ப்பில் வளர்ந்தபோதுதான். அவர் யார் தெரியுமா? அவர்தான் திருவாளர் கனக மகேந்திரா எனும் பேராளுமை.

வியர்வையோடு வாங்கிய இடமாற்றல் கடிதத்தைச் சுமந்துகொண்டு சைக்கிளை மிதிக்கிறேன். சக்கரங்களைப் போலவே மனதும் சுழன்றுகொண்டிருந்தது. முன்பும் நான் இவ்வூருக்குச் சைக்கிள் மிதித்திருக்கிறேன். ஆனால் இப்போதுதான் வட்டக்கச்சி நோக்கி ஓர் ஆசிரியனாகப் பயணித்துக் கொண்டிருக்கிறேன். ஜெயந்தி நகருக்கும் வட்டக்கச்சி இராமநாதபுரம் மேற்குக்கும் இடையிலான தூரத்தை மனத்தால் அளந்துகொண்டே என் சைக்கிளை வேக வேகமாக மிதிக்கிறேன். ஏனோ பாதை நீண்டுகொண்டிருப்பதாகவே மனதிற்பட்டதெனக்கு.

1990களின் ஆரம்பம் அது. ஒரு திங்கட்கிழமையென்று நினைக்கிறேன் முதுகு வேர்வை பெனியனை நனைக்க ஒருவழியாகப் பாடசாலைக்குள் போயாயிற்று. அலுவலகமும் என்னை வரவேற்றுக் கொண்டிருந்தது எனக்குத் தெரிந்தது. என்னைக் கண்டதுமே இன்முகம் காட்டிச் சிரித்தார். அந்தச் சிரிப்பே எனக்குப் பெரும் உற்சாகமளித்தது.

"சேர், நான் கிருஸ்ணமூர்த்தி, தமிழ் ரீச்சர்...." பதிலுக்கு ஒரு சிரிப்புடன் கடிதத்தை நீட்டினேன். வாங்கிக்கொண்டே....
"கதிரைல இருங்க சேர்" என்றார். நான் பவ்வியமாக அமர்ந்ததையும் அந்த ஆளுமை கவனிக்கத் தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்கே ஏற்கனவே, நானும் திருக்கேதீஸ்வரன் சேரும்தான் ஆம்பிளையாக்கள் இண்டைல இருந்து நீரும் எங்களோட மூன்றாவது ஆளாக, ஆணாக இருக்கலாம்" என்று சொல்லிச் சிரித்தார்.

கொஞ்சம் கொஞ்சமாகப் பாடசாலையும் அதன் சூழலும் அதிபருமாக எனக்குப் பிடித்துப் போனது. அதிபர் அழகியலில் ஆர்வம் மிகுந்தவர் என்பதைப் பழகிய சில நாட்களிலேயே புரிந்துகொண்டேன். தன்னைச் சூழவுள்ள சூழலை அழகாக வைத்திருப்பதில் பெரும் சிரத்தை எடுத்துக்கொள்வார்.

சில விடயங்களில் மிகப்பிடிவாதக்காரனாய் இருப்பார். அவை கல்வியும் ஒழுக்கமும். இவற்றில் மாணவர்கள் சிறந்து விளங்கவேண்டுமென்பது அவரது எழுதப்படாத கொள்கையாகும். ஆசிரியர்களும் அதற்குத் துணைபோயினர். 1991ற்குப் பின்னர் வீழ்ச்சியடையாத க.பொ.த (சா/த) பரீட்சைச் சிறந்த பெறுபேற்றுக்குத் தொடக்கப்புள்ளியாய் அமைந்ததென்று எந்தக் கூச்சமுமின்றிச் சொல்லலாம். பலமுறை வருடா வருட உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெறுவதற்கும் தேசிய ரீதியில் முதலிடம் கிடைப்பதற்கும் ஆசிரியை நளாயினியைத் தயார்ப்படுத்தி எம் பாடசாலையின் புகழை முழுநாடும் அறிய வழிசமைத்தார் என்பது அப்போதைய பலரும் அறிவர். பசுமரத்தாணி போல இப்பொழுதும் அந்த நினைவுகள் என் மனச்சுவரில் பதிந்து கிடக்கிறது.

"சேர், இந்த - ப்ரின்சிப்பல் ஒப்பீஸ் - தூரத்தில இருந்து பாக்கேக்க மொட்டையா இருக்கிற மாதிரிக் கிடக்கு ஏதாவது பூக்கண்டு வைப்பமோ?" "ஓமடாப்பா, நானும் நெடு நாளாய் இதைப்பற்றி யோசிச்சனான். நாளைக்கே ரெண்டு மூண்டு பூக்கண்ட வாங்கிக்கொண்டு வந்து வைப்போம்" என்றார்.

மறுநாள் பள்ளிக்கூடத்திற்கு வருகை தந்தேன். நாலைந்து ரோஜாச் செடிகள் கறுத்தப் பொலித்தீன் பைக்குள்ளால் தலை நீட்டி என்னைப் பாத்துக்கொண்டிருந்தன. எனக்கு விளங்கிவிட்டது இன்றைய கற்பித்தல் வேலைகளோடு பூக்கன்று நடுகையும் பிரதான வேலையாக இருக்குமென்று நான் அனுமானித்து விட்டேன்.

என்னை மெதுவாக அழைத்தார், சில மாணவர்களையும் பெயர் சொல்லிக் கூப்பிட்டு "சேர், இந்தப் பூக்கண்டுகள வளர்த்துப் பூக்க வைக்கிறது உங்கட பொறுப்பு" என்று ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார். எனக்கு அது பிடித்த சவாலாகவே இருந்தது. உடனே களத்தில் இறங்கினேன். அந்தக் காலத்தில் இருக்கும் தகரப் பந்தல் போல வடிவமைத்து வளர்க்கத் திட்டம் தீட்டினேன். எங்கிருந்தோ கொண்டுவந்த பூவரசுத்தடிகளைப் பற்றுக்கோடாக நட்டு ரோஜாக்களையும் இன்னும் சில பசன்புறுட், மல்லிகை, கொடிமுல்லைச் செடிகளையும் நட்டுவளர்க்கத் தொடங்கினேன். பாடசாலை முடிந்ததும் அவற்றிற்கு நீரூற்றி மகிழ சில மணி நேரங்களாகும். உயிர்ப்புத் தண்ணீரை நானும் அதிபருமாக ஒவ்வொரு நாளும் ஊற்றினோம். மழைகாலத்தில் மட்டும் நீர் ஊற்ற மறப்போம். சில மாதங்கள் கழித்துப் பாடசாலையையே கண்வைத்துக் கண்படுமளவிற்குப் பந்தல் பச்சையாய்ப் படந்தது. மங்கல நிகழ்வுகள் என்றால் ஆசிரியைகளும், வளர்ந்த பெண்பிள்ளைகளும் அந்த ரோசாப்பூக்களுக்காக என்னைப் பின்தொடருவார்கள்.

அந்த இன்பம் பலநாட்கள் கைகூடவில்லை. எனக்கு சிறிய இடைவெளியில் இடமாற்றல் கடிதம் வந்தது. பாடசாலையைப் பிரிவதை விட அப்பச்சைப் பந்தலைப் பிரிவது எனக்குக் கடினமானது. பின்னர் ஒருநாள் அந்தப் பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கு வருகைதருமாறு அழைப்பு வந்தது. விளையாட்டுப் போட்டியைக் காண்பதை விட என் பச்சைப் பந்தலைக் காண ஆர்வத்தோடு போனேன். என் பந்தல் கந்தலாகிக் கிடந்தது. அவை நீட்டி நிமிர்ந்து வளர்ந்த தடங்களேயில்லை. அவ்விடம் துன்பச்சுழலில் சிக்கியதாக உணர்ந்தேன். அப்போதிருந்த புதிய அதிபரிடம் நேரடியாகவே சென்று கேட்டேன்.

"சேர், இதில் இருந்த பூக்கண்டுப் பந்தல் எங்க?" திகைப்புடன் கேட்டேன். "அத வெட்டிற்றம்" சர்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாய்ச் சொன்னார். "ஏன்? சேர், நாங்கள் கஸ்டப்பட்டுத் தண்ணி ஊத்தி வளர்த்தது." கவலையோடு சொன்னேன்.

"பூக்கண்டுகள் தானே எப்பவும் வைக்கலாம்" என்று அசட்டையாக கூறினார். தொடர்ந்து அவரோடு உரையாட மனம் இடம்கொடுக்கவில்லை. வெளியே வந்தேன். வெட்டப்பட்ட சில தலையற்ற அடிக்கட்டைகள் என்னைச் சோகம் தோய்ந்த முகத்தோடு பார்த்தன. நான் இருண்ட முகத்தோடு விளையாட்டுப் போட்டிகளைக் காண விரைந்த ஞாபகம் இன்னும் இருக்கிறது.

இப்படி எத்தனை எத்தனையோ துன்பமும் இன்பமும் எங்களை மாறிமாறிக் கட்டிப்போடக் காலங்கள் மெல்ல மெல்ல உருளத்தொடங்கியது. பாடசாலை ஆசிரியர்களை ஒற்றுமையாக வைத்திருந்தாலே பாடசாலை முன்னேறும் என்று அடிக்கடி சொல்வார். அதைச் செய்தும் காட்டுவார். அவர் காலத்தில் நமக்கிடையே கருத்து முரண்பாடுகளே வந்ததில்லை. இதுவும் அதிபரின் ஆளுமைகளுள் ஒன்றென்று அடிக்கடி திருக்கேதீஸ்வரன் சேர் என்னிடம் சொல்லுவார். ஒவ்வொரு நாளும் கனக மகேந்திரா என்ற பெயர் என் உள்ளத்தில் கோபுரமாய் வளர்ந்துகொண்டே போனது. இராமநாதபுரம் முஸ்லீம் பாடசாலை என்ற நாமத்தை இல்லாமல் செய்து இராமநாதபுரம் அ.த.க.பாடசாலை என்ற பெயரை நிலைநிறுத்தியவர் இவர்தான் என்றால் உங்களுக்கு அவரின் ஆளுமை விளங்கும்.

நான் ஐந்தாண்டுகள் இங்கே கற்பித்த காலத்தில் ஆசிரியராகவும், நண்பராகவும் அவரோடு பழகியிருக்கிறேன். அவரின் வீட்டிற்குச் சென்றால் அவரின் மனைவியார் சிரித்த முகத்தோடு தேநீர் தருவார். சில வேளைகளில் உணவும் அளிப்பார். அந்தக் காலங்களை இப்போது நினைக்கையில் கவலைதான்

திடீரென்று ஒருநாள் அதிபர் டிரான்ஸ்பர் கேட்டுத் திருகோணமலையோடு போய்விட்டார் என்றதும் என்னால் நம்பமுடியவில்லை. கற்றவர் எங்கு சென்றாலும் சிறப்படைவார் என்று மட்டும் தெரிந்து வைத்திருந்தேன். அவரும் எங்கும் சிறப்படைவார் என்பது எனக்குத் தெரியும். பின்னாட்களில் நாட்டின் போர்ச்சூழல் காரணமாக யாழ்ப்பாணம் செல்வதென்றால் திருகோணமலை போய்த்தான் செல்லவேண்டும். அந்த மாதிரியான ஒரு காலகட்டத்தில் சேரின் வீட்டில் ஒருமாதகாலம் தங்கிநின்று நான் யாழ்ப்பாணம் போய்ச்சேர்ந்தேன். நாட்டுநிலையை மனதில் வைத்து என் ஆசிரியத் தொழிலை யாழ்ப்பாணத்தில் ஒருவருடம் மேற்கொள்ள மாகாணக்கல்விப் பணிப்பாளரிடம் அவர் அனுமதி கேட்டு என் வாழ்க்கைக்கு மீண்டும் மீண்டும் ஒளியேற்றினார். இவைகளை இப்போது நினைக்கையில் கண்ணோரம் நீர் கசிகிறது. இப்பாடசாலையில் எங்கிருந்தோ நாம் பேசிச் சிரித்தபோது மௌனமாய் பார்த்திருந்த காற்றலைகள் என்மேல் மோதி பழைய நினைவுகளை மீட்டிச் சென்றது. அவரின் நலனுக்காகவும் சேவைக்காகவும் நான் இறைவனைப் பிரார்த்திக்கிறேன். காலங்கள் எத்தனை வேகமாய்ப் புரட்டிப் போடுகின்றன. கடந்து வரும் ஆண்டுகளையும் நகர்ந்து செல்லும் நாட்களையும், இன்னும் ஓரிரு ஆண்டுகளில் நானும் மணிவிழாக் காணவிருக்கும் காலம் கனியக்கிடக்கிறது. ஏனோ இந்த மனதில் கனக மகேந்திரா எனும் பேராளுமையின் நினைவுகள் மாத்திரம் கொட்டிக்கிடக்கிறது. வாழ்க! என் அதிபர் கனகமகேந்திரா.

**"உண்மையில் நீங்கள் ஒரு சகாப்தம்தான்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சோ.நகுலகுமார்
(முன்னாள் ஆசிரியர்)
பிரித்தானியா



# எமது மாவட்டத்தில் முழுமையும் முன்மாதிரியுமான பாடசாலை

**(கிளி/இராமநாதபும் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் ஒன்றியத்தின் பிரித்தானியக் கிளையின் வருடாந்த ஒன்றுகூடல் 15.02.2020ல் பிரித்தானியாவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திரு. சோ.நகுலகுமார் கலந்து கொண்டு ஆற்றிய உரையின் ஒரு பகுதி)**

எனது வாழ்வில் கிளி/இராமநாதபுரம் மேற்கு பாடசாலையில் கற்பிக்க கிடைத்தமை நான் பெற்ற பாக்கியம் என்றே நினைக்கிறேன். அதனால் பெருமகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

சகல துறைகளிலும் இப்பாடசாலை முழுமையும் நிறைவும் பெற்ற மிகச்சிறந்த ஒரு முன்மாதிரிப் பாடசாலையாகும். எமது மாவட்டத்தில் இப்படி ஒரு நிறைவான சிறந்த பாடசாலையை நான் காணவில்லை. இப்பாடசாலையின் அக்கால அதிபர் திரு. கனக மகேந்திரா மிகவும் கண்டிப்பானவரும், சிறந்த ஒரு நிர்வாகியும் ஆவார். இப்பாடசாலையைக் கல்வி, கலை, விளையாட்டு, ஒழுக்கப்பண்புகளில் முழுமை நிறைந்த ஒரு பாடசாலையாக நான் கண்டேன். கிளிநொச்சியில் ஒரு தரமான பாடசாலையில் கற்பித்தவன் என்ற பெருமையும், மேற்படி அதிபரின் கீழ் கடமை ஆற்றியவன் என்ற பெருமையும் இன்னும் எனக்கு நிறைய உண்டு. இத்தகைய ஒரு பாடசாலைக்கு இன்னும் உயர்தரம் வழங்கப்படாதது கல்வித் திணைக்களத்தின் ஒரு கண்மூடித்தனமான செயற்பாடு என்றே நான் நினைக்கிறேன். இத்தகைய சிறப்பும், வளமும், வனப்பும் நிறைந்த இப்பாடசாலை ஏனைய பாடசாலைகளுக்கு இன்னும் ஒரு வழங்கல் பாடசாலையாக நிரந்தரமாக ஆக்கப்பட்டிருப்பது கவலைக்குரியதும் கண்டனத்துக்குரியதுமாகும்.

மிகச்சிறந்த ஒழுக்க விழுமியங்களைக் கொண்டதாக இம்மாவட்டத்தில் இப்பாடசாலை அமைந்திருப்பதை உணராத கல்விப்புலம் சார்ந்த எவரும் இந்தமாவட்டத்தில் இருக்கமுடியாது கனக மகேந்திரா சேர் போன்றவர்களின் அர்ப்பணிப்பான சேவைக்கு கல்வித்திணைக்களம் அளித்த வெகுமதியும் பரிசும் இது என்றே நான் கருதுகிறேன்.

**தொகுத்து வழங்கியவர் :**
**இக்னேசியஸ் - யூட்ஸ்ரீபன்**
**தலைவர்**
**பழைய மாணவர் ஒன்றியம் - பிரித்தானியக் கிளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயப் பயிற்சிக்காக வயல்களில் எமது மாணவர்கள்







பயிற்சியின் போது

அதிபரும், பிரபல விவசாயியும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளருமான திரு.க.முத்துக்குமாரு அவர்களும், விவசாய பாட ஆசிரியர் திரு.பே.திருக்கேதிஸ்வரன், திரு.க. கிருஸ்ணமூர்த்தி ஆகியோரும் , மாணவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்கால அதிபரினால் நடுகை செய்யப்பட்ட வாழ்நாள் பயன்தரு மரங்கள்





பள்ளியின் அபிவிருத்திப் பணியில் எமது முதல் மாணவர் குழு
1991ல் மாட்டுவண்டிகளில் ஆனைவிழுந்தான் சென்று தகரம் ஏற்றி வந்தனர்.
(க.பொ.த சா/தர மாணவர்கள்)
இவர்களின் அர்ப்பணிப்பே எமது பாடசாலை அபிவிருத்தியின் அத்திவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் இடம்பெற்ற கலை நிகழ்வுகள்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்தினப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம் பெற்ற இலக்கிய நாடகம்













ஆங்கில தினப் போட்டியில் முதன்மை இடம் பெற்ற நாடகம்

ஆசிரியர் தின விழா நாடகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு.கா.கயிலாயப்பிள்ளை**
**மேனாள் செயலாளர்**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் அறிக்கை (1989 முதல் 1999 வரை)

இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையில் 1989-1999 காலப்பகுதியில் பாடசாலை அபிவிருத்தி சபையின் நிர்வாக சபை உறுப்பினராகவும், செயலாளராகவும் தொடர்ந்து பெரும்பாலான காலம் பணியாற்றி வந்துள்ளேன். இக்காலம் திரு.கனக.மகேந்திரா அதிபராகப் பணியாற்றிய காலம். எனது அனுபவத்திலும், அவதானத்திலும் இவரது இச்சேவைக்காலம் பொற்காலமேயாகும். அதிபர் மிகச் சிறப்பாகவும், உற்சாகமாகவும் பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டார்.

எமது சபையின் ஒத்துழைப்பையும் பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள், பாடசாலைச் சமூகத்தவர் யாவரதும் ஆதரவையும், கல்வித் திணைக்களத்தினரின் அனுசரணையையும், ஆசிரியர்களின் ஒத்துழைப்பையும் நிறைவாகப் பெற்று இப்பாடசாலையை நிர்வகித்தார். இக்காலத்தில் எமது பாடசாலை துரிதகதியில் வளர்ச்சி கண்டது. கல்வியில், கல்விப்புற நிகழ்வுகளில் குறிப்பாகக் கலைத்துறை, விளையாட்டுத்துறை, சமயம், விவசாயம் ஆகிய துறைகளில் நிகரற்ற வளர்ச்சியைப் பெற்றிருந்தது.

இவரின் வரவின் பின் பாடசாலைக்கு பாதுகாப்பாக நீண்ட எல்லைவேலி போடப்பட்டது. 1991ல் பாடசாலைப் பாவனைக்கென சிரமதானம் மூலம் ஒரு கிணறும், 1996ல் இடம் பெயர்ந்து பாடசாலையில் தங்கியிருந்த மக்களின் சிரமதானம் மூலம் மேலும் ஒரு கிணறும் அமைத்தார். அதைத் தொடர்ந்து பாடசாலையைக் குளிர்மையான ஒரு சோலையாக மாற்றிய பெருமை இவரையே சாரும். பாடசாலையின் கிழக்கு, தெற்குப் பக்க எல்லைகளை அக்காணிகளின் உரிமையாளர்களோடு காணி அபிவிருத்தி அலுவலர் முகதாவில் பா.அ.சபை உறுப்பினர்களையும், சூழலில் உள்ள பெரியார்களையும் அழைத்துக் கலந்துரையாடி அன்றைய அசாதாரண நிலை மாறி சுமூக நிலை ஏற்பட்டு காணியின் உறுதி, காணியின் எல்லைப்படம் (Map) வரும்வரைக்கும் தற்காலிக ஏற்பாடு ஒன்றை சமரச அடிப்படையில் ஏற்படுத்திப் பாடசாலைக்குரிய காணியைப் பாடசாலைக்கே ஆக்கி எல்லை வேலிகளை அமைத்து பாடசாலை வளவை அறிக்கைப்படுத்தினார்.

தரவுகள் மூலம் பாடசாலை வரலாற்றை முதலில் வரைந்ததும் இவரே. வாழைத்தோட்டம் மூலிகைத்தோட்டம், தென்னந்தோட்டம் என்பன இவரது முயற்சியில் உருவானது. கட்டாந்தரையாக பற்றைக்காடாக கிடந்த பாடசாலை வளவு பசுஞ்சோலையானது.

இவர் 1989ல் முதல் தடவையாக ஒரு மாணவியை 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்ற வைத்து சித்தியடைய வைத்தார். அதனைத் தொடர்ந்து மாவட்டத்திலேயே அதிகூடிய புள்ளிகளை இப்பாடசாலை மாணவன் பெற்றதும், மாணவர்கள் தொடர்ந்து குறித்த பரீட்சையில் சிறந்த கூடிய புள்ளிகளைப் பெற்றுவந்ததும் இக்காலத்துச் சிறப்பம்சங்களாகும். மாவட்டத்தில் வளர்ச்சியடைந்த பெரிய பாடசாலைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையாக, சவாலாக எமது பாடசாலை இயங்கியதையும் பரீட்சை முடிவுகள், கல்விப்புற நிகழ்வுகளில் அப்பாடசாலைகளை விடச் சிறப்பான முடிவுகள் அமைந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். க.பொ.த. சா/த பரீட்சையில் 1992ல் மாவட்ட மட்டத்தில் சிறந்த பரீட்சை முடிவுகளைப் பெற்றதை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வினையாற்றுகைச் சுட்டி (புள்ளிவிபர அறிக்கை) குறிப்பிட்டுள்ளது. தொடர்ச்சியாக 1998வரை மாவட்டத்தில் சிறந்த பரீட்சைமுடிவுகளை பெற்றுவந்துள்ளதாக கிளிநொச்சி கல்வி வலய புள்ளிவிபர அறிக்கை தெரிவித்துள்ளது. க.பொ.த.(சா/த) முன்னோடிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றதனால் தேசியத் தலைவரின் பரிசினையும் இப்பாடசாலையின் மாணவியே பெற்றுள்ளார்.

வருடாந்த உடற்பயிற்சிப் போட்டியில் 13 வயது, 15 வயது, 17 வயதுப் பெண்கள் குழு தொடர்ச்சியாக மாவட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுவந்தன. இக்காலத்தில் மாவட்டம் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என அரசாங்கத்தால் தனிமைப்படுத்தப்பட்டிருந்தமையால் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ள வாய்ப்பின்றி இருந்தார்கள். 2002ல் தடைநீக்கப்பட்டவுடன் தேசியமட்டத்தில் கலந்து முதலாமிடத்தைப் பெற்றார்கள்.

இந்த வெற்றிகளெல்லாம் செல்லடி விமானத்தாக்குதல்களுக்கும், பொருளாதாரத் தடைக ளுக்கும் மத்தியிலான இப்பாடசாலையின் சாதனைகளாகும். பங்கரிலும் ஜாம் போத்தலில் தயாரித்த சிக்கன விளக்கிலும் படித்த பிள்ளைகள் டாக்டர்களாகவும், எஞ்சினியர்களாகவும், கணக்காளர் களாகவும், உயர்பட்டம் பெற்ற பட்டதாரிகளாகவும் வெளியேறினர். இப்பாடசாலை மாணவர்கள் இக்காலத்தில் கலை, விளையாட்டு என எந்தப் போட்டிக்குச் சென்றாலும் மாவட்டம் வன்னிப் பெருநிலப்பரப்பு மட்டங்களில் எல்லாம் முதலாமிடங்களைத் தமதாக்கிக் கொண்டவருவது இவர்களது வரலாறாகும். இங்கு வரும் எந்த அதிகாரியும் பாடசாலையையும், அதிபரையும் பாராட்டாமல் சென்றது கிடையாது.

1995 - 1996 களில் இடப்பெயர்வுக் காலத்தில் 1850க்கு மேற்பட்ட பிள்ளைகள் இங்கு இணைந்து கற்றனர். இடம்பெயர்ந்தோர் முகாமாக இந்தப் பாடசாலை மாற்றப்பட்டிருந்த வேளையில் பாடசாலைக்கு முன்னால் உள்ள தனியார் காணிகளில் உள்ள அடர்ந்த மரநிழல்களின் கீழ் பாடசாலையை இருநேர வகுப்புகளாக அதிபர் நடத்திவந்தார். ஏனைய பல பாடசாலைகள் மூடப்பட்டுக்கிடந்த காலத்தில் இப்பாடசாலையைத் தொடர்ந்து நடத்திவந்ததால் கல்விச்சமூகம் உட்பட அனைவராலும் இவர் பாராட்டப்பட்டார்.

பகல் வேளை முழுவதும் பாடசாலை நிர்வாக வேலைகளைக் கவனித்துவிட்டு இரவுவேளை களிலேயே அலுவலக வேலைகளைக் கவனிப்பார். அதனால் இரவு ஒரு மணிக்குக்கூட அலுவலகத்தில் விளக்கெரியும்.

இவரது காலத்திலே ஒழுக்கமுள்ள சிறந்த மாணவ சமுதாயத்தைக் கட்டி எழுப்பினார். இவரது இறுக்கமான இந்த நடவடிக்கை கிராமத்திலேயே பாரிய மாற்றத்தை அன்று ஏற்படுத்தியது. இதன்மூலம் பெற்றோரின் நம்பிக்கையைப் பெற்று பாடசாலை வரலாற்றில் இக்குறித்த காலத்தில் படித்த பிள்ளைகள் டாக்டர்களாகவும், பொறியியலாளர்களாகவும், கணக்காளர் மற்றும் உயர்பட்டம் பெற்ற பட்டதாரிகளாகவும் வெளியேறினர்.

போட்டிகள் என்றால் தனது மாணவர்கள் வெற்றிபெறும்வரை முயலுவார். வெற்றியை இலகுவில் எந்தப் பாடசாலைக்கும் விட்டுக் கொடுக்கமாட்டார். தமக்குக் கிடைக்க வேண்டியவை கிடைக்காவிட்டால் எந்த அதிகாரிக்கும் தலைகுனியமாட்டார். அதிகாரிகளும் நியாயத்தை உணர்ந்து ஏற்று அவரை மரியாதையாக அணுகுவர். அடிமட்டத்துக்குத் தள்ளப்பட்டிருந்த பாடசாலை இவரது காலத்தில் கொடிகட்டிப் பறந்தது எனலாம். இவரின் வருகைக்குப் பின்பே எமது பாடசாலை உயர் முகவரியைப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996ல் இடம்பெயர்ந்தோர் நினைவாக அவர்களால் சிரமதான மூலம் வெட்டப்பட்டு மரங்களால் மிதிபோட்டுக் கப்பிபோட்டுப் பாடசாலைக்குத் தந்த குடிநீர்க்கிணறு மூடப்பட்டுக்கிடந்ததும் பெற்றோரின் உதவியுடனும் அன்பளிப்புகளுடனும், பரோபகாரி ஒருவரால் சிலையும் செதுக்கி, ஆகம முறைப்படி அத்திவாரமும் போட்ட முற்றத்து வழிபாட்டுக் கோயிலைக் கட்டவிடாததும் இவருக்குப் பெரும் தாக்கத்தைக் கொடுத்தது. அக்காலங்களில் இவரோடு இணைந்து செயற்பட்டவன் என்றவகையில் இதனை அக்காலச் செயலாளர் என்ற உரிமையில் எனக்குக் கூறி வருத்தப்பட்டதையும் இங்கு நான் குறிப்பிடாமல் விட முடியாது.

அரசின் கட்டிடப் பொருட்கள் தடையான காலத்தில் உள்ளக வளங்களையும் இயற்கைப் பொருட்களையும் கொண்டு சிரமதானம் மூலம் பெற்றோர், பழையமாணவர்களால் அமைக்கப்பட்ட மாவட்டத்தில் எங்குமில்லாத பெரிய இருவழிக் கலையரங்கு அகற்றப்பட்டு இருந்ததைக் கூறியும் கவலைப்பட்டார்.

**"எது எவ்வாறு இருப்பினும் அதிபர் கனக மகேந்திராவின் காலம் இப்பாடசாலை வரலாற்றில் பொற்காலம் என்பதை பெருமையுடன் கூறிக் கொள்வதில் மகிழ்வடைகிறேன்."**

**'செயற்கரிய செய்வார் பெரியார்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.முத்து சிவமோகன்
மேனாள் செயலாளர் - பா.அ.ச
கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் - கிளிநொச்சி மாவட்டம்
செயலாளர் - கிளிநொச்சி இரணைமடுக் குள கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனம்
தலைவர் - இராமநாதபுரம் மாவடி ஸ்ரீ மாரியம்பாள் ஆலய தர்மகர்த்தா சபை

# எமது பாடசாலையும் அதிபரின் ஆளுமையும்

முற்காலத்தில் வன்னி அரசர்களால் எமது கிளிநொச்சி மண் ஆளப்பட்டு அந்நியரின் ஆட்சியில் மக்களும் அவர்களின் வாழ்விடங்களும் வாழ்வியல் அடையாளங்களும் அழிந்து காடு அடர்ந்து ஏறக்குறைய 300 ஆண்டுகளின் பின் மீண்டும் கரைச்சி (கிளிநொச்சி) என்ற ஊர் 1900ஆம் ஆண்டுகளில் செழிப்புற தொடங்கியது. இதன் ஆதிகால ஊர்களாக பூநகரி, குஞ்சுப்பரந்தன், பழங்கமம்(முரசுமோட்டை), கண்டாவளை, புளியம்பொக்கனை, பழைய வட்டக்கச்சி என்பன இருந்தன.

இக்காலப்பகுதியில் தான் 1855ஆம் ஆண்டுகளில் கனேடிய-பிரிட்டன் அதிகாரி "சேர் ஹென்றிபாட்" அவர்கள் இப்பிரதேசம் போரால் காடாகி இருப்பினும் ஆதிகாலத்தில் மக்கள் வாழ்ந்த தொல்லியல் அடையாளங்களை கண்ணுற்றதால் இரணைமடு என்ற தேக்கத்தை உருவாக்கும் சிந்தனையை அப்போதைய அரசஅதிபர் "டேக்" அவர்களிற்கு முன்வைத்தார்.

இதன் பயனாக 1866இல் நீர்ப்பாசன பொறியியலாளரும் தொல்பொருள் ஆய்வாளருமான "ஹென்றிபாக்கர்" அவர்கள் இரணைமடுவிற்கான திட்டத்தை வரைந்தார். இதன் பின்னர் 1900இல் பொறியியலாளர் "பிரவுண்" அவர்களும், கரைச்சி வாசியான திரு "வெற்றிவேலு" அவர்களும் இணைந்து கனகராயன் ஆற்றுப்படுக்கையின் காடுகளை ஆய்வு செய்தபோது தற்போதைய இரணைமடுக் குளத்தின் தென்கிழக்கு திசையில் இரண்டு மடுக்கள் இருந்ததை கண்டறிந்ததோடு இவற்றிற்கு தென்திசையில் "கருமாரி" எனப்படும் முழுமையாக அழிவடைந்த கிராமமும் இதற்கு தெற்கே அம்பகாமமும், புலிமிச்சினாதிகுளம், கருப்பட்டைமுறிப்பு, ஒலுமடு ஆகிய ஆதிகால கிராமங்களையும் கண்டறிந்து கொண்டனர்.

இருமடுக்களின் சுவடுகளும் தற்போதும் உள்ளன. இவ் இருமடுக்களையும் இணைத்த பேராறு இரணைமடு என்றும் தற்போதைய தேக்கத்தை திட்டமிட்டனர். இரணைமடுக் குளத்தை கட்டுவதற்கு கூடுதலான மனிதவலு தேவையாக இருந்தமையால் 'பிரவுண்' அவர்கள் முதலில் "றையார் குளத்தை" கட்டி (தற்போதைய கிளிநொச்சி குளம்) மக்களை குடியேற்றி அம் மக்களைக் கொண்டும், குஞ்சுப்பரந்தன் மக்களைக் கொண்டும் இரணைமடுக் குளக் கட்டுமானத்தை 1902இல் ஆரம்பித்தார்.

குளத்தின் முதலாவது கட்டுமாணம் 1920ஆம் வருடம் பத்தொன்பது இலட்சத்து நாலாயிரம் ரூபா (1904000.00) செலவில் 24 அடி ஆழம் கொண்டதாகவும் 40,000 ஏக்கர் அடி நீர் கொள்ளளவு கொண்டதாகவும் கட்டி முடிக்கப்பட்டு "சேர் பொன் இராமநாதன்" அவர்களின் 1000 ஏக்கர் கமத்திற்கு நீர் விநியோகம் செய்யப்பட்டது. தொடர்ந்து 1936இல் குடியேற்றப்பட்ட கணேசபுரத்திற்கும் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டாம் கட்ட குள அபிவிருத்தி 1948-1951இல் நடைபெற்று 30 அடி ஆழமாகவும் 82,400 ஏக்கர் அடி கொள்ளளவும் கொண்டதாகவும் அமைக்கப்பட்டு நிறைவுற்றது. இதன்போது உருத்திரபுரம், வட்டக்கச்சி, றைஆறு மத்திய வகுப்புத்திட்டம் என்பவற்றிற்கு நீர் வழங்கப்பட்டது.

மூன்றாவது கட்ட குள அபிவிருத்திப்பணி 1954 - 1956இல் நடைபெற்று 32 அடி ஆழமாகவும் 93,500 ஏக்கர் அடி நீர் கொள்ளளவாகவும் அமைக்கப்பட்டு நிறைவுற்றது. இதன்போது இராமநாதபுரம், முரசுமோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளிற்கும் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. 1966இல் உருவாக்கப்பட்ட திருவையாறு ஆற்று நீர்ப்பாசனத்திற்கும் நீர்வழங்கல் ஆரம்பிக்கப்பட்டது.

நான்காம் கட்ட குள அபிவிருத்தி 1975 - 1977இல் நடைபெற்று 34 அடி ஆழமாகவும் 106,500 ஏக்கர் அடி கொள்ளளவாகவும் அமைக்கப்பட்டு நிறைவுற்றது. இதன்போது வில்சன் வீதி மத்திய வகுப்புத்திட்டம், ஊரியான் கிராம விஸ்தரிப்பு திட்டம் என்பவற்றிற்கும் நீர்விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது குளம் மேலும் 2 அடி உயர்த்தும் நோக்குடன் வான் கதவுகள் 36 அடி நீர் தேக்கும் வகையில் அமைக்கப்பட்டது.

ஐந்தாம் கட்ட குள அபிவிருத்தி 2015 - 2018இல் நடைபெற்று 36 அடி ஆழமாகவும் 119500 கன அடி நீர் கொள்ளளவாகவும் அமைக்கப்பட்டு நிறைவுற்றது. இதன்போது குமரபுரம், பழைய வட்டக்கச்சி, பெரியகுளம் ஆகிய பகுதிகளில் 1200 ஏக்கர்களும் பரீட்சார்த்த நீர் 2020இல் வழங்கப்பட்டது.

இரணைமடுவே வாழ்வு என காட்டி குடியேற்றப்பட்ட மக்களில் வட்டக்கச்சி, இராமநாதபுரம் மக்களும் நற்பயன் பெற்ற நிலையில் கல்வியிலும் உயர்வடைய பல வித்தியாலயங்கள் அமைக்கப்பட்டன அதில் ஒன்று இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை. இப்பாடசாலை இரு கிராமங்களிற்கும் மத்தியில் வட்டக்கச்சியின் கிழக்கு எல்லையில் அமைந்தது எமக்கு வரப்பிரசாதமே.

இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையின் கலங்கரை விளக்காக 1989 காலப்பகுதியில் வந்து அமைந்தவர் ஆளுமையின் அடையாளம் உயர்திரு.கனக மகேந்திரா அதிபர் அவர்கள். இவரின் ஆளுமையை என்னால் இயம்ப இயலாவிட்டாலும் நான் கண்டு அறிந்து பயன்பெற்றவைகளில் சிலவற்றையாகிலும் பதிவிட விரும்புகின்றேன்.

நான் இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று இராமநாதபுரத்தில் வசித்து வந்தபோதும் இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை அதன் வரலாற்றில் ஓர் ஆளுமை மிக்க அதிபரை பெற்றதன் காரணமாக மாணவர்கள் கல்வி, ஒழுக்கம், விளையாட்டு மற்றும் ஒன்றிணைந்த செயற்பாடு என்பவற்றில் எதிர்பார்க்காத முன்னேற்றங்களை அடைந்து பெற்றோர் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியதோடு பெற்றோர் தாமும் அதிபரோடு இணைந்து பயணிக்க ஆரம்பித்தனர். இதன் தனித்துவம் வலய மட்டத்தில் முன்னிலை பெற ஆற்றல்மிக்க ஆசிரியர்களை இப்பாடசாலை நோக்கி வர தூண்டியது. வளக்குறைபாடுகள் இருந்தாலும் அதன் இடைவெளி மாணவர்களின் வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தாதவாறு அதிபரின் ஆளுமை சமன் செய்து பாடசாலை முன்னிலை பெற்றது. இதன்பால் கவரப்பட்ட நானும் எனது பிள்ளைகளை இப்பாடசாலையிலே ஆரம்பநிலையில் சேர்த்து கல்வியூட்ட விரும்பினேன். என்னாலான பங்கினையும் பாடசாலைக்கு வழங்கினேன். பின்நாளில் திரு. ஆ. கருணாநிதி அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளராகவும் பணியாற்றினேன். திரு.கனக மகேந்திரா அதிபர் அவர்களின் உயரிய கற்பனை வடிவமான இப்பாடசாலை இன்றும் தடம்மாறாத தலைமை பெற்று சிறப்புறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்கால மாணவர்கள் சிலரின் முதலாவது முகநூல் ஒன்றுகூடலில்...

You, ஜெயராஜினி கிரிதரன், ... and 5 others like this.

ஜெயராஜினி கிரிதரன் நினைத்ததை நிறைவேற்ற முடியாத பொருளாதாரத் தடையும், யுத்தமும், வெளி உலகத்துடன் தொடர்பே இல்லாத கால கட்டமும் இல்லாது இருந்திருந்தால் இதே போன்ற ஒரு வரலாறு கனக மகேந்திரா அதிபரால் எமது கிராமத்திலும் நிலை நாட்டப்பட்டிருக்கும் என்று நினைக்கத்தோன்றுவதை யாராலும் மறுக்க முடியாது. ஆனாலும் எமது பாடசாலையிலும் எமக்குள்ளும் ஏன் எமது கிராமத்திலும் கூட அவர் வரவு கொண்டுவந்த வளங்கள் என்றுமே அழிக்க முடியாத ஒரு சாதனை தான். கனக மகேந்திரா என்றும் பெயரை நினைக்கையிலேயே பார்த்தவுடன் கனம் பண்ணத் தோன்றும் அவரது தோற்றமும் அவரின் மாணவர்கள் என்ற பெருமையும் மட்டுமல்லாமல் எங்கோ கிராமத்தின் ஒரு தெருவில் யாராலும் கவனிக்கப்படாமல் கிடந்த ஒரு பாடசாலையை அகில இலங்கைப் போட்டிகளில் வெல்ல வைத்து அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்த அவரது உழைப்பையும் அந்தப் பாடசாலையின் மாணவர்கள் என்று கூறிக் கொள்வதில் நாம் பெருமை கொண்ட இனிய நினைவுகளையும் என்றும் மறக்கவே முடியாது.

Like 2

ம. வேணுதன் எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்களை ஒருவரான மதிப்பிற்குரிய திரு. கனக மகேந்திரா அவர்கள். இப்பாடசாலையில் அதிக காலம் அதிபராகப் பணியாற்றிய என்ற பெருமைக்குரியவர்.



Kn/Ramanathapuram West G.T.M.School

ம. வேணுதன் அள்ளிக்கொடுத்த பள்ளிக்கு கிள்ளிக்கொடுக்கும் மனமிருந்தும், அதற்கான வளமிருந்தும்.
களத்திலிருந்து ஒருங்கிணைக்க தகுந்த ஆளுமைக்கான வெற்றிடத்தை நினைக்கையிலும்
இப்பதிவை படிக்கும் கணங்களிலும் அடிக்கடி கனக மகேந்திரா சேர் ஞாபகத்துக்கு வந்துபோறத தடுக்க முடியேல.

ம. வேணுதன் உண்மைதான் அக்கா.
சாதாரணமாக பாடசாலைத்தேவைக்கு ஒரு வாகனம் ஒழுங்கு செய்வதிலிருந்து அபிவிருத்திப்பணிகளை செய்வது வரை ஒவ்வொரு விடயத்துக்கும் எவ்வளவோ போராடவேண்டிய சூழலை அன்றைய சமூகநிலையும், அரசியல் சூழலும் அவருக்கு ஏற்படுத்தியிருந்ததை நாம் அறிவோம். அந்த இடர்பாடுகளுக்குள்ளும் இன்றும் நினைத்துப்பார்க்கும் அளவிற்கு செயற்பட்ட அந்த ஆளுமை எமக்கு பெருமை தருவது மட்டுமல்ல, எம் தனிப்பட்ட வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்னுதாரணமானதும் கூட.

Like 2

ம. வேணுதன் ஆரோக்கியமான நிர்வாக கட்டமைப்பு பற்றி பேசும்போது நாம் மறந்துவிட முடியாத மிக முக்கிய பாத்திரம் முத்துலிங்கம் ரீச்சர்.
ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் ஒருமாணவனை கம்பெடுத்து அடிக்க நேர்ந்தால் அந்த மாணவன் அழுவதற்கு முதல் தானும் அழுது அழுதவாறே அறிவுரை சொல்லும் அந்த தாய்மை கொண்ட அரவணைப்பை நான் நேரடியாகவே உணர்ந்திருக்கிறேன். இவர்களை பெருமைப்படுத்த நாம் என்ன செய்திருக்கிறோம் என்றால் முன்னால் விழுவது பூச்சியமே. ஆனால் ஒன்றை கூற முடியும் சேவைக்காலம் முடிந்து பல ஆண்டுகளானாலும் இன்றும் நாம் அவர்களைப்பற்றி கருத்தாடல் செய்கின்ற நிலை இருக்கிறதென்றால் அவர்கள் சேவையில் அவர்கள் முழுமை பெற்றிருக்கிறார்கள் என்பது மாறுதலடையாதது.

Like 2

**SidduAbi** மதிப்புக்குரியஆசான்

பெருமைக்குரியஅதிபர்,

சிறந்தவழிகாட்டி...

வட்டக்கச்சிமக்களின்இதயங்களில்எப்போதும்இருக்கும்திரு.கனகமகேந்திராஅவர்களுக்குஎம்இனியபிறந்தநாள்வாழ்த்துக்கள்.....

இறைவன்இவருக்குநீண்டஆயுளைவழங்கவேண்டும்...

கிளி/இராமநாதபுரம்மேற்குஅ.த.கபாடசாலைமாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும்,

அதிபருக்கும்வட்டக்கச்சிமக்களுக்கும்எப்போதும்இவரின்அன்பும்,அறிவுரையும், வழிகாட்டுதலும்,

கண்டிப்பும்இருக்கவேண்டும்என்பதேஎம்பெருவிருப்பு.

**SuthaKaranMuthiah** மறக்கமுடியாத G.T.M.S பெருவிருட்சம். ஆசான்-

திரு.மகேந்திரா.அவர்களுக்குபிறந்தநாள்வாழ்த்துக்கள்.

**Tham**

**Logan** பாடசாலையின்ஆணிவேர்எமதுஒளிவிளக்குஎங்கள்அதிபர்திரு.கனகமகேந்திரா.அவர்கட்கு பிறந்தநாள்நல்வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயப்பியல்

கற்றனைத்தூறும் அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரை விந்தன்
உதவிக் கல்விப்பணிப்பாளர்
வலயக் கல்விப் பணிமனை
கிளிநொச்சி



## கண்டாவளையில் இருந்து வட்டக்கச்சி, திருமலை வரை மனம் நிறைந்த குருவுக்காய் மாணவன் வரையும் மடல்

கனக மகேந்திரா உயரிய ஆளுமையின் அடையாளம். அவரது பவளவிழா மலருக்கு நானும் இரண்டுவரியாவது எழுதவேண்டும் என்ற ஆவல் மேலோங்க ஆரம்பித்தேன். என் ஞாபகக் குதிரையைத் தட்டி விடுகிறேன். விரைகிறது குதிரை. கண்டாவளை என்ற என் தாய் மண்ணில் தரித்து நிற்கிறது. இன்னும் ஒரு பாய்ச்சல் பாய்ந்து எங்களது தாய்ப்பள்ளி கண்டாவளைப் பாடசாலையில் கால்பதித்து அந்த வளாகம் முழுக்கச் சுற்றித்திரிகிறது. எழுபதுகளின் நடுப்பகுதியைக் கடக்கும் காலம். நாங்கள் 09, 10, 11ம் வகுப்புக்களை கடக்கும் காலம். எங்கள் பள்ளிக்கு ஒரு புதிய ஆசான் வருகை தருகிறார். ஐயாத்துரை வாத்தியார் அதிபராக இருந்து செங்கோலோச்சிய வசந்தகாலமது. வருகை தந்த ஆசான் வேறு யாருமல்ல. அவர் தான் கனக மகேந்திரா என்ற வரலாற்று நாயகன். பன்முக ஆளுமையாளன். கற்பித்தலில் வகுப்பறைகளை கட்டும் விளையாட்டு மைதானத்தில் அவர் நின்றால் கலகலக்கும். கலைத்திறன் அவர் கை வண்ணம். மேடைப்பேச்சுக்கும் நாடகத்துக்கும் அவர் வள்ளல்; ஆமாம் எமக்கு அவற்றை வாரி வழங்கிய வள்ளல்: நான் நினைக்கிறேன் எனது வாழ்க்கையில் எத்தனையோ அரங்குகளை அதிரவைத்தவன் நான். ஆனால் எனது முதல் அரங்கை அதிரவைத்த ஆசானை நான் மறப்பேனா? "பாரதியின் சுதந்திர தாகம்" அவரது நண்பர் அமரர் கருணானந்தசிவம் அவர்களது கைபட எழுதியது. அதை எம்மிடம் தந்து மனனம் செய்ய வைத்து உரையாற்றப் பழக்கி எம்மைப் பார்த்து மற்றவர் வியக்கும் வண்ணம் செதுக்கிய வித்தகன் கனக. மகேந்திரா சேர்.

அக்காலங்களில் நானும் எனது நண்பன் இராசேந்திரமும் களை கட்டி நின்றோம். மேடைகளில் உறுமும் காளைகளாய், பசுமரத்தாணியான நெஞ்சத்துப் பதிவுகள் அவை. சின்னப்பெடியனாய் நாங்கள் கொஞ்சப்பேர் எங்கள் வீட்டடியில் தங்கம் மாமி வளவுப் புளியமரத்தின் கீழ் விளையாட்டுப்போட்டி வைத்து, பனங்கொட்டைத் தும்பிலே தாடி செய்து அதனை அணிந்து பாத்திரமேற்று நாடகமாடி விளையாடியது எல்லாம் ஞாபகம் வருகிறது. எமது தாய்ப்பள்ளி அரங்கிலே எம்மை முதலில் நாடகமாட வைத்த பெருமை எங்கள் ஆசான் மகேந்திரா சேருடையது. "வீரகாவியம", "அவள் ஒரு காவியம்", "பிரகலாதன்", "ஒரு புத்தகம்" ஆகிய நாடகங்கள் மூலம் எங்கள் பள்ளியை நினைக்க வைத்தவர் எங்கள் ஆசான். அவரின் பின் மேடைகளைக் கண்டு அரங்குகளைக் கண்டு நான் கூசியதில்லை, குறுகியதில்லை, குனிந்ததில்லை நிமிர்ந்து நின்று கனன்று கொண்டிருக்க வைத்தவர் எங்கள் ஆசான். எங்கள் பள்ளியின் ஏழாண்டுப் பணியில் எமது குடும்பத்தில் இளையவரைத் தவிர ஏனைய அனைவரும் அவரின் கைப்பட வளர்ந்தோம். அவரின் நாடக மைந்தர்களுமானோம். யாருக்குக் கிடைக்கும் இந்தப்பேறு?

காரணம் அவர் பள்ளிக்கூட வாத்தியாராக மட்டுமில்லை. கிராமத்துக் குடும்பங்களோடும் ஐக்கியமானவர். எமது பெற்றோர் அவர்மீது கொண்டுள்ள மதிப்பும் பாசமும் மிகப்பெரிது. அதனால்தான் அவர் எங்கள் ஊரின் வரலாற்றில் ஒரு மைல்கல். அவரது பவளவிழா மலருக்காய்ப் படையல் செய்யும் இந்த நேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுக்குதிரை வாலைக்கிளப்பிச் சிலிர்த்துப் பாய்ந்த படியே திரிகிறது. அந்தக் காலத்தில் தான் அவரது திருமணம் நடைபெறுகிறது. நானும் நண்பர்கள் இராசேந்திரம், இரவிக்குமார், பாலகிருஸ்ணன் ஆகியோர் திருமணத்துக்காக அன்போடு அழைக்கப்பட்டிருந்தோம். அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அமிர்தலிங்கத்தின் கைகளிலிருந்து தாலியைப்பெற்றுத் தன் மனைவியின் கழுத்தில் அணிந்த காட்சி என் கண்முன்னே விரிகின்றது. இன்றுவரை அந்த வாழ்க்கையை சிறப்பாக ஓங்கச்செய்த இறைவனுக்கு நன்றி சொல்வேன்.

பின்பு நான் உயர்தரம் கற்கச் சென்று, பல்கலைக்கழகம் சென்று படித்து நாடக மாடிப்பட்டம் பெற்ற காலமெல்லாம் தொடர்பு அறாமலே இருந்தது. மகேந்திரா சேர் பின் கிளி/மத்திய கல்லூரிக்கு ஆசிரியராகச் சென்றுவிட்டார். 1989ல் நான் அங்கு பட்டதாரி ஆசிரியராகக் கடமை ஏற்கிறேன். இனியதான உறவு தொடர்கிறது.

விவாத மேடைகளில் நானும் அவரும் எதிரெதிரான அணிகளில் நின்று முழங்கியிருக்கிறோம். அவர் தந்தது. அவரோடு முழங்கும்படி காலமமைந்தது. ஈழத்தமிழ் நாடக வரலாற்றில் திருப்புமுனை "மண்சுமந்த மேனியர்" அதில் முக்கிய பாத்திரமேற்றவர்களில் நானும் ஒருவன். கலாநிதி சிதம்பரநாதனின் காற்றுப்பட்டு நிமிர்ந்த காலமது. தொண்ணூறுகளில் எமது குழு கிளிநொச்சியில் கால்பதித்து ஆசிரியர்களுக்கான அரங்கப்பட்டறையை நடத்தும் வாய்ப்பைப் பெற்றது. முன்னாள் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி சேரின் சாதனையது.

நவீன நாடக அரங்க உத்திகளோடு நடத்தப்பட்ட அந்தப்பட்டறையில் எமது ஆசான் கனக மகேந்திரா சேரும் ஒரு பயிலுனராக கலந்து கொண்டார். தனது வயதைப் பதவி நிலையை எல்லாம் உதறிவிட்டு நவீன நாடகத்தைக் கண்டறிய வேண்டும் என்ற ஒரே நோக்கோடு மாணவர் எம்முடன் இணைந்து கலந்து கொண்ட அந்தப் பெருமையை என்னவென்பேன். பட்டறையுடன் தயாரிக்கப்பட்ட மூன்று நாடகங்களுடன் நாம் கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் வலம்வந்தோம். அந்தக் குழுவை வழிநடத்தும் பாரிய பொறுப்பு என்னிடம் இருந்தது. அந்தக்குழுவுடன் ஊரூராய்த் திரிந்து அரங்காடிய எம் ஆசானின் அகன்ற மனதைக் கண்டு நான் வியந்திருக்கின்றேன். மற்றவர்கட்கும் இது எடுத்துக்காட்டான முன்மாதிரியாகும்.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இவர் இருந்த காலத்தில் இவர் நாட்டிய நாடக வித்துக்கள் மிகவும் பிரபல்யம் அடைந்து கோலோச்சுவதை இன்றும் நாம் காணலாம். பல சிறப்பு வெற்றி நாடகங்களை அரங்கேற்றியதுடன் கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை போன்றோரின் கௌரவிப்புக்களையும் இவர் இங்கே பெற்றுள்ளார்.

இராமநாதபுரம் மேற்கு பாடசாலையில் அதிபராக இருந்த போதும் நன்றாகவே அசத்தினார். வருடத்தில் இரண்டு நாடகங்கள், கூத்துக்கள், கவின்கலை நிகழ்வுகள், இதனால் வன்னிப் பெருநிலப்பரப்பிலேயே கலைத்துறையில் பிரபல்யமானார். கட்டிடப்பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்த காலத்தில் உள்ளூர் மூலப் பொருட்களைக் கொண்டு மாவட்டத்திலேயே எங்குமில்லாத இருவழிப் பாவனைக்கான உயர்ந்த கலைஅரங்கை நிறுவியிருந்தார். இது இவரின் கலை ஆளுமையின் ஒரு சின்னமாக அமைந்திருந்தது. தானியங்கிய தன் பாடசாலை மாணவர்கட்குப்பல வெற்றிப் பரிசுகளையும் ஈட்டிக்கொடுத்தார். காலச்சூழல் இவரைத் திருகோணமலைக்குச் செல்லவைத்தது. அங்கேயும் ஒரு கலை நிகழ்வு, முதன்மை விருந்தினராக நான் அங்கு அழைக்கப்பட்டேன். மூத்த கலைஞராக முன்வரிசைக் கலைஞராக பல அசத்தல்களின் நாயகராக அங்கேயும் எங்கள் சேரைக் கண்டேன். வியந்தேன் கட்டித்தழுவினேன். அவரது வாருசுகளே கலைக்குடும்பமாய் தொடர்ந்து எங்களுடன் பயணிக்கிறது. பவளவிழா நாயகன் மேலும் சிறப்பாக வாழ நீடூழி வாழ இறைவனை வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய கலாநிதி கி.அனுசா
(பழைய மாணவி)
மாவட்ட வைத்தியசாலை
கிளிநொச்சி



# கனக மகேந்திரா என்னும் முதல்வர்

**"நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன்
உண்மையறிவே மிகும்"**

கூரிய அறிவு வழங்கக்கூடிய நூல்களை ஒருவர் கற்றிருந்தபோதும் அவரது இயற்கை அறிவே மேலோங்கி நிற்கும் என்பது வள்ளுவர் வாக்கு. அந்த வகையிலே அறிவும் ஆளுமையும் மிக்க ஒரு அதிபராக எமது மதிப்பார்ந்த கனக மகேந்திரா அதிபரை நான் பார்க்கின்றேன்.

கிளி/இராமநாதபுரம் மேற்குப் பாடசாலையில் எங்களுக்கு நல்லதிபராய், நல்லாசிரியராய், நல்லதொரு நிர்வாகியாய், சிறந்த தலைமைத்துவமுடைய முகாமையாளராய் பல்வேறு கோணங்களில் தன்பணியைச் செவ்வனே ஆற்றி மாணவர் மனங்களில் நிலையான ஓர் இடத்தினைப் பெற்றவர் என்றால் மிகையாகாது.

அழகும் அருளும் நிறைந்த எமது பாடசாலையினை மேலும் மெருகூட்டி தேசியம் வரை புகழ் பெறச் செய்திருந்தார். கலைகள் இவருக்கு கைவந்த கலையாயிருந்ததனால் அக்காலத்தில் மாணவர் களுக்கான சங்கீத, ஆசிரியர் இல்லாமையால் இப்பாடத்தில் பரீட்சைக்குத் தோற்ற முடியாத சூழல் காணப்பட்டது. இவரது துணைவியாரும் இப்பாடங்களைக் கற்பித்து நாம் சித்தியடைய வழிவகை செய்தனர்.

நாடகம், நடனப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு தானே வழிகாட்டியாகிப் பயிற்சியளித்து கல்விக்கு அப்பால் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஆளுமை வளர வழிகாட்டி நின்றதை மறக்கமுடியாது.

மாணவரையும், அவர்களுக்கான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்து கொண்டிருக்கும் வேளையிலே வகுப்பறைகளில் மயான அமைதி ஒன்று சூழும்.

**"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத திண்மையும்
திமிர்ந்த ஞானச் செருக்குமுடையவராய்"**

எமது உயர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தமையை என்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். உடல் நலமும், உள நலனும் மேம்பட்டு நீடூழி காலம் நிறைவுடன் வாழ இறைவனின் இன்னருளை இறைஞ்சி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.ரூபவண்ணன்
(பழைய மாணவன்)
Engineer, Australia.



# எனது பாடசாலை பொற்கால அனுபவங்கள்

**"எண்ணுடனே எழுத்தெமக்கு என்றுமே தந்து எம்மை**
**ஏற்றமுடன் வாழ வைப்பாள் அன்னை முன் வந்து"**
- இது எமது பாடசாலைக் கீதம்

கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் பழைய மாணவனாக எம் பாடசாலையின் வரலாற்றை பதிவிடுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். வயலும் வரப்பும் வாய்க்காலால் வளம் பெறுகின்ற வட்டக்கச்சி என்கின்ற எம் விவசாய கிராமத்தில் கல்வி, விளையாட்டு, கல்வியோடு இணைந்த பிற கலாசார நிகழ்வுகள், நற்பழக்கவழக்கங்கள் என பல்துறைகளிலும் சிறந்து விளங்குகின்ற மாணவர்களை உருவாக்குவதில் எங்கள் அன்னையாம் கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் வித்தியாலயத்தின் பங்கு ஈடு இணையற்றது. சரியாக இடப்பட்ட அத்திவாரம் தான் பலமான கட்டடங்களை கட்ட உதவும், எம்போன்ற மாணவர்களுக்கு முறையாகவும் சிறப்பாகவும் அடிப்படை கல்வியை தந்து நற்பிரஜைகளை உருவாக்குவதில் கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தனிப் பங்காற்றி வருகின்றது. தன்னலம் கருதாது மாணவ சமூகத்தின் உயர்வினையே கருத்தாய்கொண்டு சேவை ஆற்றிய எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் நன்றிக்குரியவர்கள்.

எமது பாடசாலை பல அதிபர்களினால் சிறப்பாக வழி நடத்தபட்டிருந்தாலும் அதிபர் திரு. கனக. மகேந்திரா அவர்கள் அதிபராக இப்பாடசாலையில் இருந்த காலம் இப்பாடசாலை வரலாற்றின் ஒரு பொற்காலமாக காணப்படுகின்றது. அதிபர் திரு. கனக மகேந்திரா அவர்கள் மாணவர்களிற்கு முறையான கல்வியை தருவதோடு, கல்வியோடு இணைந்த கலை, கலாச்சார, விளையாட்டு திறன்களையும் நற்பண்புகளையும் வளர்க்க வேண்டும் என்பதை தன் ஒருமித்த குறிக்கோளாக கொண்டு மாணவர்களை வழிநடத்தி வந்தார். இவரின் காலத்தில்தான் எமது பாடசாலையும் எமது கிராமமும் ஒருமித்து மிகுந்த முன்னேற்றம் பெற்றது என்றால் அது மிகையாகாது. தலைமை பண்புகள் அனைத்தும் ஒருங்கே கைவரப் பெற்றவரான, இவரின் கண்டிப்பு கலந்த வழிகாட்டல் தான் நாம் இன்று கல்வியில் சிறந்து விளங்க உதவியது என்பதில் சந்தேகமேயில்லை. தரம் ஒன்று முதல் தரம் பதினொன்று வரையுமே கொண்டுள்ள எங்கள் பாடசாலையானது இலங்கையில் உள்ள எந்த ஒரு பாடசாலைக்கும் எந்த துறைகளிலும் சளைத்தது அல்ல. இத்தகைய பெருமை மிகுந்த கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தரம் ஒன்று முதல் தரம் பதினொன்று வரை எனக்கு கற்க கிடைத்ததை ஒரு பெரும்பேறாக நான் கருதுகின்றேன். அதிலும் அதிபர் திரு. கனக மகேந்திரா அவர்களின் வழிகாட்டுதல் எமக்கு கிடைத்தமையையிட்டு நான் மிகவும் பெருமிதம் அடைகின்றேன்.

ஒரு சமுதாயத்தின் முன்னேற்றமானது இளம் சமுதாயத்தின் முன்னேற்றத்திலேயே தங்கி உள்ளது. ஆனால் இளம் சமுதாயத்தின் ஆளுமை, திறமை, அறிவு என்பன பாடசாலையிலேயே தங்கி இருக்கின்றது. அந்த வகையில் இளம் சமுதாயத்தை வழிப்படுத்துவதுடன் சமூகத்தை உயர்த்துவதில் எமது பாடசாலை முன்னுதாரணமாக திகழ்ந்தது. அதற்கு எமது அதிபரின் தன்னலமற்ற தூரநோக்கு சிந்தனையுடன் கூடிய வழிநடத்தல்களே காரணமாகின. எமது பாடசாலை கற்றலில் மட்டுமல்லாது பிற திறன்களிலும் முன்னிலையிலேயே இருந்து வருகின்றது. மாவட்ட மட்ட உடற்பயிற்சி போட்டியில் வரலாற்றிலே எமது பாடசாலை தசாப்த காலங்களாக முதலிடத்திலேயே இருந்து வருவதோடு மாகாண, தேசிய நிலைகளிலும் ஒரு தனி முத்திரை பதித்துள்ளது. போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவாக இருந்த காலங்களில எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் உழவியந்திரத்திலும், பார ஊர்தியிலும் அக்கராயன், கிளிநொச்சி, தர்மபுரம் என பல இடங்களிற்கும் சென்று முதலிடம் பெற்று வருவது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். தமிழ்த்தின விழா ஆங்கில தின விழா என சகல நிகழ்வுகளிலும் போட்டிகளிலும் எம் பாடசாலை தனி முத்திரை பதித்து வருகின்றது.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரண தர பரீட்சை, தமிழ்த் தினவிழா, ஆங்கில தின விழா, உடற்பயிற்சிப் போட்டி என பலதுறைகளிலும் எமது பாடசாலை முதல்நிலை பெறுவதற்கு அதிபரின் ஆக்கமும் ஊக்கமும் அளப்பெரும் பங்கு வகிக்கின்றது. பொருளாதார தடைகளும், பலவித அரசியல் சமூக தடைகளும் ஏற்பட்ட போதிலும் எதற்கும் அஞ்சாமல் நேர்மையின் வழி நின்று பாடசாலையை சிறந்த முறையில் வழிநடாத்தி சென்றதில் திரு.கனக மகேந்திரா அவர்களுக்கு நிகர் யாருமில்லை. வந்தோரை வரவேற்கும் வட்டக்கச்சியில், வந்தவர்களை வரவேற்க எமது பாடசாலையும் என்றும் தவறியதில்லை. போர்ச் சூழல் காரணமாக எமது பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்து வந்த மக்களை ஆதரித்து புகலிடம் வழங்கியதோடு மட்டுமல்லாது இடம்பெயர்ந்த மாணவர்கள் தம் கல்வியை இடை நிறுத்தாது தொடர்ந்து முன்னிலையில் வருவதற்கும் எமது பாடசாலை மிகுந்த பங்காற்றியது. வகுப்பறைகளுக்கு மிகுந்த தட்டுப்பாடு நிலவிய போதும் கற்றல் செயற்பாடுகள் மரங்களிற்கு கீழே தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.

தமிழ் மீது அதிக பற்றுகொண்ட அதிபர் கனக மகேந்திரா எமது பாரம்பரியங்களை கட்டிக் காப்பதில் மிகவும் அக்கறை செலுத்தி வந்தார். இவரின் தலைமையில் இடம்பெற்ற தமிழின் பெருமையை கூறும் திருக்குறள் விழாவாகட்டும், கலாசார விழாக்கள் ஆகட்டும் தமிழின், தமிழரின் பெருமையை, பாரம்பரியங்களை பறைசாற்றி நின்றன. தமிழ் தினப் போட்டிகளில் இவர் தன் நேரடி நெறியாள்கையில் உருவாக்கும் வரலாற்று சமூக நாடகங்கள் என்றும் முதலிடம் பெற தவறியதில்லை. அரிச்சந்திர மயான காண்டம், சிலம்பின் செல்வி, காத்தவராயன் கூத்து முதலிய நாடகங்கள் அவற்றில் சிலவாகும். ஆசிரியர்களிற்கு மிகுந்த தட்டுப்பாடு நிலவிய காலத்தில் எமது பாடசாலைக்கு ஆசிரியர்களை (குறிப்பாக ஆங்கிலம், சங்கீதம் ஆசிரியர்களை) நியமிப்பதில் இவரின் முயற்சிகள் அளவிடத்தக்கன அல்ல. பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளான காலப்பகுதியில் எமது பாடசாலையே மிகச்சிறந்த திறந்த வெளி அரங்கு மற்றும் மைதானம் என்பவற்றை கொண்டு திகழ்ந்தது.

எமது அதிபரின் தூரநோக்கு சிந்தனை, நீண்டகாலத் திட்டமிடல் என்பவற்றை பாடசாலையின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் காண முடிந்தது. பாடசாலையின் நிதித் தேவையை நிறைவு செய்ய அமைத்த தென்னம்தோப்பு, சுத்தமான குடிநீர் கிணறு அமைத்தது, மாந்தோப்பு போன்றன சிறந்த உதாரணங்களாகும். அடுத்து பாடசாலையின் பொதுப்பணியோ அல்லது பாடசாலையில் இருந்து கிடைக்கும் நன்மைகளோ அனைத்து மாணவர்களிற்கும் பங்கு உண்டு என்ற சிந்தனையுடன் செயலாற்றியவர்.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையிலும், க.பொ.த.சாதாரண தர பரீட்சையிலும் அதிக மாணவர்கள் சித்தி பெறுவதில் அதிபர் அவர்களின் பங்கு மிகவும் போற்றத் தக்கதாகும்.எந்த வித மின்சார வசதியோ, இணைய வசதியோ அற்ற காலத்தில் பரீட்சை முடிவுகள் வெளிவரும் சமயத்தில் மாணவர்கள் பாடசாலை முற்றத்தில் ஆர்வத்துடன் முடிவுக்காக இரவு வேளைகளிலும் வந்து குழுமி நிற்க, நேரம் காலம் பாராமல் அதிபர் அவர்கள் கல்வித் திணைக்களம் சென்று பரீட்சை முடிவுகளை பெற்றுவரும் நிகழ்வு, மாணவர்களின் வீடுகளிற்கே சென்று பரீட்சை முடிவுகளை தெரிவித்து வாழ்த்துச் சொல்லும் காட்சிகள் என் கண்களில் என்றும் பசுமையாக நிற்கின்றன.

பாடசாலையில் கோவில் ஒன்று அவசியம் என்பதை உணர்ந்து சரஸ்வதி கோவிலுக்கான அத்திவாரம் அதிபர் அவர்களின் தலைமையில் இடப்பட்டது. ஆயினும் இவரின் இடமாற்றம் காரணமாக கோவில் கட்டுமாணப் பணி பூர்த்தியடையவில்லை என்பது வருத்தத்திற்குரிய விடயமே. எம் பாடசாலையில் அதிபர் திரு. கனக மகேந்திரா அவர்களின் வழிகாட்டலின் கீழ் கற்ற ஒவ்வொரு நாட்களும் எம் பாடசாலையின் பழைய மாணவர்களுக்கு தம் வாழ்வில் மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்க்கத் தோன்றும் மகிழ்ச்சிகரமான நாட்களே! பல்வேறு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள வேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாக உள்ளது. எனவே அனைத்து பழைய மாணவர்களும் ஒன்றிணைந்து எமது பாடசாலையின் அபிவிருத்தியில் பங்கெடுக்க வேண்டுமென அழைப்பதுடன், மேன்மேலும் எமது பாடசாலை சிறக்க எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

**"You can teach a student a lesson for a day. But if you can teach him, to learn by creating curiosity, he will continue the learning process as long as he lives"** **- Clay P. Bedford -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. தர்சினி தமிழழகன் (SLEAS)
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்விப் பணிமனை
துணுக்காய்

# என்னை உயர வைத்த என் மனம் நிறைந்த அதிபரைப் பற்றி.....

**"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்"**

பெருமை உடையவரின் செயலை பெருமை பெற்றவராலேயே ஆற்ற முடியும் என்பதனை நிரூபித்துக் காட்டியவர் எங்கள் கனக மகேந்திரா அதிபர். இவ்வுலகம் எவ்வாறு நிலைபெற்று வாழ்கின்றதென புறநானூறு என்னும் நூலில் புலவர் "தமக்கென முயலா நோன் தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே" எனக் குறிப்பிட்டார். அதாவது பெருமை பொருந்திய குணங்களை உடையவர்கள் ஒருபோதும் தமக்கு என்று முயற்சிக்காது பிறருக்கென்று நல்லது செய்து வாழ்வார்கள். இத்தகையவர்களால் தான் இவ்வுலகம் இன்னும் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்பது அதன் பொருளாகும். அத்தகைய பெருமைக்குரியவர்களுள் ஒருவராகவே எங்கள் அதிபர் அவர்களையும் நான் உணர்கின்றேன்.

எங்கள் அதிபர் தன் சேவைக்காலத்திலும் சரி, அதன் பின்னரும் சரி, உயரதிகாரிகளாயினும் சரி, சக பணியாளர்களாயினும் சரி அனைவரையும் தன் உறவுகளாகவே கருதி மதித்து அன்பு காட்டி பணி செய்தார். மாணவர்களாகிய எங்களை தன் பிள்ளைகளாகவே கருதி ஒவ்வொரு பிள்ளையினதும் தனிமனித இயல்புகளை ஆற்றல்களை இனங்கண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காய் பாடுபட்ட பெருந்தகை எங்கள் அதிபர். இதனால் கற்றோர், மற்றோர் என்ற பாகுபாடு பார்த்ததில்லை கருத்தினில் கல்வி விருத்தி, மனதினில் மனித நேயம், அன்பின் நெகிழ்ச்சி பண்பு ஆகியவை இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை சமுகத்தினரை எங்கள் அதிபர் மேல் நம்பிக்கை கொள்ள வைத்ததது.

இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை வரலாற்றில் எங்கள் அதிபரின் காலம் பொற்காலமாகும். தடைக் கற்களை படிக்கற்களாக்கி, எதிர்மறைகளை நேர்முகமாய் மாற்றி, அறைகூவல்களை வெற்றி கொண்டு எதை இழப்பினும் கல்வியை நாம் இழந்துவிடக்கூடாது என்ற இலட்சிய நோக்கோடு எங்கள் பாடசாலையில் அளப்பெரும் சேவையாற்றி எம்மை சாதிக்க வைக்க வழிகாட்டியவர் எங்கள் அதிபர்.

**"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்"** என்பது திருக்குறள்.

சொல்லுவது எல்லோருக்கும் எளிது. சொல்லியதை சொன்னவாறே அச்செயலை திட்டமிட்டு படிமுறைகளை வகுத்து அவற்றை செயலுருவாக்கி நிறைவேற்றிக் காட்டியவர் எங்கள் அதிபர். அவர் மாணவர்களாகிய எம்மீது காட்டிய அன்பில், அரவணைப்பில் கனிவான பேச்சில் அன்னையையும், எம்மீது கொண்ட அக்கறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையையும் எமது அறியாமையை அகற்றி ஞானத்தை வழங்குகையில் குருவையும் எங்கள் அதிபரிடம் ஒருமித்து பார்த்ததில் அவர் எங்களை வளப்படுத்திய ஒரு நடமாடும் தெய்வமாகவே காணப்பட்டார். நிச்சயமாக எங்கள் அதிபர் போன்ற அற்புதமான மனிதர்கள் காட்டிய படிகளில் ஏறியே நாம் இன்று இருக்கும் உயரத்தை அடைந்திருக்கிறோம். ஏட்டுக்கல்வியை மட்டும் எமக்குப் போதிக்காது ஒழுக்கம், ஆற்றல், விடாமுயற்சி தன்னம்பிக்கை, ஊக்கம், கலாசாரம், பண்பாடு என வாழ்க்கைக்குத் தேவையான அத்தனையையும் எமக்குக் கற்றுத்தந்தவர் எங்கள் அதிபர். நாம் வாழ்க்கையில் முன்னேறத் தூண்களாய் நின்று வழிகாட்டியவர். எம்மை சாதிக்க வைக்க ஆக்கம் கொடுத்து ஊக்கம் ஊட்டியவர். கடிகார முள்ளாய் சுழன்று காலம் பாராது கடமைக்காய் இருபத்து நான்கு மணித்தியாலங்களும் பாடசாலை வளாகத்திலேயே சுற்றித் திரிவதை எத்தனை நாட்கள் பார்த்திருப்போம். ஆதிபரின் அயராத முயற்சியும் அர்ப்பணிப்பான சேவையுமே விட்டில் பூச்சிகளாக இருந்த எம்மை விமானங்களாக்கியது.

கல்வியில் சாதனை புரிந்தது மட்டுமின்றி விளையாட்டுத்துறையிலும் கூட பல தடவைகள் எமது பாடசாலை தேசிய மட்டம் வரை சாதனை புரிந்தது. எங்கள் அதிபரின் சேவைக்காலத்திலேயே விளையாட்டுத் துறையில் இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையின் பெயர் இன்றும் பேசப்படுவதை நான் கேட்டிருக்கிறேன். உடற்பயிற்சி போட்டி என்றால் இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலைக்கு தனி இடம் உண்டு. இவை அனைத்திற்கும் அடித்தளம் இட்டவர் எங்கள் கனக மகேந்திரா அதிபர். மாணவர்களான எங்களின் ஆளுமை விருத்திக்காக, தலைமைத்துவப் பண்பு விருத்திக்காக எத்தனை எத்தனை இணைப்பாடவிதான செயற்பாடு களில் எம்மை ஈடுபடச் செய்து எமது ஆற்றல்களை வெளிக் கொணரச் செய்து வழிகாட்டிய பெருமை எங்கள் அதிபருக்கே உரியது.

விளையாட்டுப்போட்டி, தமிழ்த்தினப்போட்டி, நாடகப்போட்டி, பண்ணிசைப்போட்டி, கோலப்போட்டி, மாணவர் மன்றச் செயற்பாடுகள் அத்தனையும் எம்மை செம்மைப்படுத்துவதாகவே இருந்தது. அதன் பிரதிபலன்களை இன்றும் என்னால் உணர முடிகின்றது. எனது தொழில் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு எனது பாடசாலையில் எங்கள் அதிபரின் காலத்தில் நான் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் பெரும்பங்காற்றியுள்ளன. தொழிலில், வாழ்க்கையில் முன்னேற இவ் அனுபவங்கள் நம்பிக்கையைத் தந்தன.

இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலைக்கென ஒரு பாடசாலைக் கலாசாரத்தை உருவாக்கி பாடசாலைக்கென ஒரு தனி இடத்தை பெற்றுக் கொள்வதற்கு அதிபரின் பணி அளப்பரிய பங்காற்றியுள்ளது. மாணவர்களின் தேவைகளை ஆராயும் வல்லமை, தவறுகளை சுட்டிக்காட்டி, தட்டிக் கேட்டு சீர் செய்யும் துணிவு, மாணவர்களை தட்டிக்கொடுக்கும் பண்பு என உயர் தகைமைகளைக் கொண்டு ஆற்றிய சேவையே இன்று எங்களை உச்சத்திற்கு கொண்டு செல்ல வழிகாட்டியது. இவ்வாறு எங்கள் அதிபரின் சேவையை சொல்லிக் கொண்டே போகலாம்.

எமது பாடசாலையும், மாணவர்களாகிய நாமும் சிறக்க காரணமாக இருந்த எங்கள் அதிபரின் சேவையை நான் மதிக்கின்றேன். இத்தகைய ஒரு அதிபரின் கீழ் நாங்கள் கல்வி கற்றமையை நான் பெருமையாக கருதுகின்றேன். எங்கள் கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையையும், எங்கள் கனக மகேந்திரா அதிபரும், எங்களை நல்வழிப்படுத்திய ஆசான்களும் என்றுமே மறக்க முடியாதவர்கள். எங்கள் அதிபரின் குடும்ப அங்கத்தவர்கள் எங்கள் குடும்பங்களில் ஒருவராகவே எங்களுடன் பழகியவர்கள். அனைவரும் எம்மால் மறக்கமுடியாதவர்கள். எமது பாடசாலைக் கால நினைவுகள் பசுமையானவை. என்றும் மறக்க முடியாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி.துஸாஜினி கிரிகரன்**
PGCE Qualified Teacher & BscEngineering, UK
**செயலாளர், இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை**
**பழைய மாணவர் சங்கம், பிரித்தானியக் கிளை**



## பாடசாலைக்கு முகவரி தந்த அதிபர்

இராமநாதபுரம் மேற்கு பாடசாலையை விட்டு உடலளவில் வெளியேறி கிட்டத்தட்ட 29 வருடங்கள் ஆகின்றது. பாடசாலையை நினைத்தாலே பச்சை பசுமையாய் நேற்றுத்தான் ஓடித்திரிந்தது போன்று மலரும் நினைவுகள் நெஞ்சை விட்டகலாது. எல்லோர் மனதிலும் பள்ளிப்பருவம் மறக்க முடியாதது தான். ஆனால் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையைப் பொறுத்தவரையில் நாம் வாழ்ந்த காலம் வெறும் மலரும் நினைவுகளோடு மட்டும் மரித்து விடாமல், அழிந்து விடாமல் உயிரோட்டமாய் நிமிர்ந்து நின்று தடங்கள் பல பதித்து, வரலாற்றில் காலூன்றி அகில இலங்கை போட்டிகளிலும் வெற்றிகள் குவித்த ஒருபொற்காலம்.

அந்தக் காலத்தில் எங்கள் சம வயதில் கல்வி கற்றவர்கள் அனைவருக்குமே இதே உணர்வுதான் இருக்குமென்றால் அது மிகையாகாது. அந்தப் பொற்காலத்தை எங்களுக்கு அளித்தவர் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய அன்றைய எமது வித்தியாலய முதல்வர் திரு.கனக மகேந்தரா அவர்கள்.

பெயரைக் கேட்டாலே எழுந்து கனம் பண்ணத் தோன்றும். அவரது தோற்றமும் ஒரே குடும்பமாய் அனைத்து விடயங்களிலும் எம்மை கட்டுக்கோப்பாய் வளர்த்துவிட்ட அவரது ஆளுமையும் தான் உடனே ஞாபகத்துக்கு வரும். ஒரு பாடசாலையின் அதிபர் என்பதற்கு மேலாக எல்லா கோணத்திலும் அந்தப் பாடசாலையை ஒரு பெருமைமிக்க பாடசாலையாக உருவாக்க அவர் காட்டிய பெரு முயற்சியும் அக்கறையும் இன்றுவரை அவரது காலத்தில் அங்கு கல்வி கற்ற ஒவ்வொரு மாணவ மாணவியரதும் மனதில் அகற்ற முடியாத நினைவுகளாகவே இருக்கின்றது.

அந்த நினைவுகளில் சிலவற்றையாவது அவரது இந்த 75வது அகவையில் என் எழுத்துக்களில் இங்கு பதித்துப் பகிரக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு அவரின் வழிகாட்டலில் வளர்ந்த மாணவியாகிய நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

அவர் எம் பாடசாலையிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றம் பெற்றபோது பிரியாவிடையில் பங்களிக்கும் சந்தர்ப்பம் கூட நாட்டுச் சூழலால் புலம் பெயர்ந்த என் போன்ற பல மாணவர்களுக்கு எட்டவில்லை. ஆனாலும் இத்தனை காலம் தாண்டியாவது அவரை கௌரவிக்கக் கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பம். அவர் எங்களுக்கும் எங்கள் பாடசாலைக்கும் ஆற்றிய பெருஞ்சேவைக்கு நன்றி சொல்லும் அளவிற்கு அவருக்கு நன்றிக் கடன் எதுவும் நாம் செய்யவில்லையே என்ற உள்ளக் கிடக்கையை சிறிதளவாவது ஆற்றிவிடும் என நம்புகின்றேன்.

1989ஆம் ஆண்டு பாடசாலையில் அவர் காலடி எடுத்து வைத்த போது கல்விச் சூழல், பாடசாலைச் சுற்றாடல், மாணவர்களது ஒழுக்கம் முதற்கொண்டு அனைத்துமே முன்னேற்றம் காணவேண்டிய நிலையிலிருந்தன.

மாணவர்களின் முன்னேற்றத்தில் ஒழுக்கத்தைக் காண்பிக்காத எந்தப் பாடசாலையும் அதன் வேறு எந்த முன்னேற்றத்தைப் பற்றியும் பெருமைப்பட முடியாது. அந்தளவுக்கு கல்வி என்ற கருத்தோடு மாணவர் ஒழுக்கம் சம்பந்தப்பட்டுள்ளது. இதைக் கண்ணும் கருத்துமாய் நடைமுறைப்படுத்துவதிலேயே பாடசாலை வளர்ச்சியிலான அவரது முதல் தடம் பதிக்கப்பட்டது.

வந்த முதல் வாரத்திலேயே பாடசாலையில் ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்த சில கடுமையான ஒழுக்காற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளை பாடசாலையில் மட்டுமல்ல பாடசாலைக்கு வெளியிலும் அவர் துணிச்சலாக மேற்கொண்டமையானது முதல் முதலில் இங்கேயும் ஒரு பாடசாலை உள்ளதென அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

இதில் நாம் அதிசயப்பட்டது என்னவென்றால் சிறிது காலத்துக்குள்ளேயே அவர் கடுமையாக ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொண்டவர்களையே ஆளுமைப்படுத்தி, எமது பாடசாலை, 'எம் பாடசாலைச் சமூகம்' என்ற மன நிலைக்கு அவர்களைக் கொண்டுவந்து அவர்களையும் பாடசாலை வளர்ச்சியில் பங்கெடுக்க வைத்ததுதான். கல்வி அறிவும், ஒழுக்க வளர்ச்சியும் ஒன்றாகச் சேர்ந்து அமையக் கூடிய ஒரு குடும்ப சமூக அமைப்பு பாடசாலை என்பதை அவர் நன்குணர்ந்து நடைமுறைப்படுத்தினார்.

எல்லைகளும் வேலிகளுமற்ற கட்டாக்காலிக் கால் நடைகள் புகும் இடமாக புதர்களோடு இருந்த பாடசாலைச் சுற்றுப் புறமும் மைதானமும் அவரின் முயற்சியின் பயனாய் அழகிய வேலிகளுடன் கூடிய ஒரு பாடசாலையும் மைதானமுமாய் காட்சியளிக்கத் தொடங்கியது. பாடசாலை விழாக்கள் மட்டுமல்ல வெளிப்புற விழாக்களும் அந்த தோற்றப்பாட்டின் அழகை உணர்ந்து எமது பாடசாலை மைதானத்தில் களை கட்டத் தொடங்கிய போது, மைதானத்தை நோக்கிய பெரிய மேடை ஒன்றினை அமைக்கும் சிந்தனை அவரிடம் உதித்தது. சிந்தனையில் உதித்ததை செயலாக்கத் தொடங்கி அதில் வெற்றியும் கண்டு அந்த அரங்கத்திலேயே நிகழ்சிகளையும் அரங்கேற்றியமை அவரது சிறப்பாற்றலுக்கு ஒரு எடுத்துக்காட்டு. அதற்கும் ஒரு படி மேலே போய் பெற்றோர்களான ஊரின் விவசாயிகளின் உதவியைத் திரட்டி பாடசாலைக் காணியின் மறுபுறத்தில் வாழைகளையும், தென்னைமரக் கன்றுகளையும் நட்டு, விவசாய பாட மாணவர்களுக்கு செய்முறைப் பயிற்சிக்கு ஏதுவானதாக்கி, அதன் வருவாயை பாடசாலை வளர்ச்சிக்கு ஒரு வித்தாக ஊன்றினார். அவரின் நாடி நரம்பெல்லாம் பாடசாலையின் வளர்ச்சியும் சிந்தனையும் மட்டுமே அந்த நேரம் இரத்தமாக ஓடிக்கொண்டிருந்தது என்பதையும் அதற்கு இணையாகவும் துணையாகவும் அவரின் பாரியாரும் குழந்தைகளும் சேர்ந்து ஒத்துழைத்தார்கள் என்பதையும் இன்றும் எம் கிராம மக்கள் அந்த இடத்தைப் பார்த்து நினைவு கூருவார்கள்.

எம் அதிபர் அவர்கள் பாடசாலைக்கு வந்த காலத்தில் பாடசாலைக்கு அருகில் உள்ள மாணவர்களே வேறு பாடசாலையை நாடி செல்ல மாணவர் தொகை வெகுவாகக் குறைந்திருந்தது. அந்த மாணவர் தொகையை அதிகரிக்க பெற்றோர்கள், அருகிலுள்ள பாடசாலை அதிபர்கள் எல்லோருடனும் கதைத்து விவாதித்துப் பெருமுயற்சி எடுத்தார். இந்த முயற்சி வெறும் பேச்சுக்களோடு சாத்தியமாகின்ற காரியம் அல்ல. ஒரு பாடசாலையின் மீது அதை சூழவுள்ள பெற்றோருக்கு நம்பிக்கை வரவேண்டும். அப்பாடசாலையில் கல்விகற்கும் எமது புதல்வர்களுக்கு வளமான எதிர்காலம் உண்டு என பெற்றோர் நம்புமளவு தொடர்ச்சியான கல்வி வளர்ச்சியை நிரூபிக்க குறைந்தது அரைத் தசாப்தங்களாவது வேண்டும். அப்படியான ஒரு வளர்ச்சியை மிகக் குறைந்த காலத்துக்குள்ளேயே அவர் செயற்படுத்திக் காட்டினார். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சையில் யாரும் சித்தியடைவதே இல்லை என்ற நிலையிலிருந்த பாடசாலையில் மாலை நேர வகுப்புக்கள், புலம் பெயர்ந்த பெற்றாரின் உதவியுடன் புலமைப் பரிசில் பெறும் மாணவர்களுக்காக அவர் உருவாக்கிய சிறிய நிதியம் என்பவற்றால் ஆண்டுதோறும் பல மாணவர்கள் புலமைப் பரீட்சையில் சித்தியைத் தரிசிக்கத் தொடங்கியது மட்டுமல்லாமல், எமது சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியபோது, கனக மகேந்திரா சேரின் பாடசாலைப் பெறுபேறுகளை முதலில் பாருங்கள் என்று அன்றைய கல்விப்பணிப்பாளர் திரு.குருகுலராஜா அவர்கள் கூறுமளவிற்கு கல்வி வளர்ச்சி மிளிர்ந்து எமது பாடசாலை முன்னணிப் பாடசாலை என்பதை அனைவருக்கும் உணர்த்தியது.

இத்தனை முயற்சிகளின் பலனாய் அவரின் காலத்தில் மாணவர்கள் தொகை கணிசமாய் அதிகரித்தது மட்டுமல்ல இந்த அதிவேக வளர்ச்சியை புரிந்துகொண்ட பெற்றோர் தாமாகவே பிள்ளைகளை எம் பாடசாலையில் இணைத்துக் கொண்டார்கள்.

பாடசாலையின் நினைவுகள் நெஞ்சை விட்டகலாதது போலவே இன்னும் அந்த பாடசாலையின் கீதமும் என் நாவின் நுனியில் நடமாடிக் கொண்டிருக்கின்றது. இன்றுவரை பாடப்பட்டு வரும் இந்த இனிய கீதத்தை முதலில் இசைத்த மாணவர்கள் என்ற பெருமிதம் எங்களுக்கு உண்டு. அதுவே எங்களுக்குப் பெருமை என்றால், இன்றுவரை பாடசாலையைப் போற்றத் தூண்டும், அதிலுள்ள ஒவ்வொரு வரியும் நிஜமானதாய் தோன்றும் வரிக்கு வரி எங்கள் கல்லூரி வளர்ச்சியை சாற்றி நிற்கும் அந்தக் கீதத்தை வித்துவான் வீரமணி ஐயர் மூலம் இயற்றுவித்து இசையமைத்து நடைமுறைப்படுத்திய பெருமை எங்கள் அதிபர் கனக மகேந்திரா அவர்களையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றும் முழுதாகச் சாரும். அந்த பாடசாலைக் கீதத்தின் ஒவ்வொரு அர்த்தம் பொதிந்த வரிகளின் உணர்வுகளும் மாணவர்கள் இசைக்கும்போது இராகத்திலேயே வெளிவர வேண்டுமென அவர் அதைச் சரியாகப் பாடும்வரை எங்களைப் போட்டு உருட்டி எடுத்ததையும் இன்னும் நினைவுகளிலிருந்து நீக்க முடியவில்லை.

அவரின் பன்முகத் தன்மைக்கு இது மட்டுமல்ல சான்று. வெறும் புத்தகத்தில் மட்டுமே நாடகம் என்பதை அறிந்து வைத்திருந்த எங்களை, அவராகவே தமிழ்த் தாயின் செம்மொழி மணம் கமழ நாடகம் இயற்றி, திறமைகளை இனம் கண்டு, அவரவர்க்கு தகுந்த பாத்திரமளித்து அனைவரும் வியந்து பார்க்க பலபல மேடைகளில் ஏற்றினார். அந்தக் காலத்துக்குரிய கருப்பொருளைச் சுமந்து வந்த அந்த நாடகங்களை, சிறு பிள்ளைகளாகிய எங்களுக்கு தனித்தனியாக உணர்ச்சியுடன் நடிக்கக் கற்றுக் கொடுத்து வெற்றிகரமாக மேடையேற்றுவது என்பது இலகுவான காரியமில்லை. இவ்வளவு நீண்ட காலத்தின் பின்னும் இன்றும் என்னை காணும் சிலர் கனக மகேந்திரா சேரின் நாடகத்தில் இந்தப் பாத்திரத்தில் நீங்கள் நடித்தது நினைவில் இருக்கிறது என்று கூறுவார்கள். அவரின் ஆக்கத்தில் அரிய தமிழ்க் கூத்தான காத்தவராயன் கூத்தைக் கூட எங்களுக்குப் பழக்கி மேடையேற்றி வெற்றி கண்டிருந்தார்.

மாணவர்களில் தமிழ்க் கலையையும், கலாசாரத்தையும் கட்டியெழுப்பும் வகையில் கிடைத்த எந்த வாய்ப்பையும் அவர் பயன்படுத்தத் தவறியதில்லை. இதற்கான மிகச் சிறந்ததொரு உதாரணம் பிரதி வெள்ளி தோறும் பாடசாலை முன்றலில் கோலம் போடும் கலையை அவர் வளர்த்தமை மட்டுமல்ல அவ்வளவு வேலைப் பழுவிற்குள்ளும் காலை ஒன்று கூடலில் மறந்து விடாமல் திறமையான கோலங்களைப் பாராட்டவும் செய்வார். அவரது பாராட்டைப் பெறுவதற்காகவே நாங்கள் விதவிதமாய்க் கோலங்கள் வடிவமைத்து பெருமை பெற்றதும் அந்தக்கலை இன்றுவரை எமக்கு கை கொடுப்பதும் மறக்கமுடியாதது.

வருடாவருடம் விளையாட்டுப் போட்டி மட்டுமல்ல பேச்சு, கவிதை, சிறுகதை, பாட்டுப்போட்டிகளையும் பாடசாலையில் நடத்தி மாணவர்களை ஊக்குவித்து பரிசில்களையும் வழங்கினார். மாணவர்களை மட்டுமல்ல அந்த மாணவர்களுக்கு பயிற்றுவித்த ஆசிரியர்களையும் அவர் கௌரவிக்கத் தவறியதில்லை. அதன் பயனாய் எங்கே இருக்கின்றதென கேட்கும் நிலையிலிருந்த எங்கள் பாடசாலை மாவட்டம், மாகாணம், பின் அகில இலங்கை மட்டத்தில் விளையாட்டுக்களிலும் கலைகளிலும் வெற்றியீட்டத் தொடங்கியது. வலைப்பந்தாட்டம், கிளித்தட்டு, உடற்பயிற்சிப் போட்டிகளில் இந்தச் சிறிய பாடசாலைக்குள் இத்தனை திறமைகளா என எல்லோரும் அண்ணாந்து பார்க்க பரிசில்களை அள்ளி வந்தோம்

அவர் எமது பாடசாலையில் நிலைநிறுத்திய சாதனைகளை எழுதுவதென்றால் இன்னும் நிறைய பக்கம் பக்கமாக ஏன் ஒரு முழு நூலாகவே எழுதலாம்.

பாடசாலை வரலாற்றில் அவர் பெரும்பான்மைக் காலம் பதவி வகித்து, இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு முகவரி தந்த ஒரு அதிபராக, வரலாற்றில் மிகப் பெரிய சாதனைகளை நிகழ்த்தியிருக்கின்றார். பாடசாலைக் காலத்தில் மாலையில் கீதம் இசைக்கையில்

**"நல்லொழுக்கம் கல்விஞானம் வீரம் நாட்டியே பாரில்**
**நிலை புகழ்நற் சுடர் பரப்பி வாழ்வோம் சத்தியம்"**

என்று நித்தமும் எம்மை சத்தியம் ஓத வைத்து அதனைப் போலவே வாழ வைத்தவர். இன்றுவரை எம்மைக் கண்டால் குடும்பத்துடன் அழைத்து விருந்து வைத்து உபசரித்து மகிழ்பவர். தொலைபேசியில் அழைத்து அக்கறையாக எம் குழந்தைகளைக் கூட தன் பேரக்குழந்தைகளாய் நலம் விசாரிப்பவர். தன்னுடன் வாழ்ந்த ஆசிரியர்களையும் மாணவர்களையும் மறந்துவிடாது இன்றும் அவர்களின் இன்ப துன்பங்களில் எல்லாம் நேரில் சென்று பங்கேற்பவர். பல நாடுகளிலும் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கும் அவரது அன்பு மாணவர்கள் என்றும் அதை மறக்கமாட்டார்கள். இத்தகைய எங்கள் அன்பு ஆசான், இன்னும் பற்பல ஆண்டுகள் மகிழ்வாய் நலமாய் வளமாய் ஆண்டவன் அருளுடன் சந்ததி செழிக்க வாழ வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் முதல் கையெழுத்துப் பிரதியான "வாகை" மலர் வெளியீடு - 1998






திரு.சி.சிறிதரன் - வெளியீட்டுரை
திரு.சி.புவனேஸ்வரன் - அறிமுகவுரை
திருமதி. சி. நித்தியானந்தன் - பாராட்டுரை
செல்வி. மணிமேகலை குமாரசுவாமி - ஆய்வுரை
திரு.சொலமன் சிறில் - வாழ்த்துரை

## மாவட்ட நிலையில் பொற்காலத்தில் 1991 - 1998 வரை தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெற்று சாதனை படைக்க கற்பித்த ஆசிரியர் திருமதி.தயாரதி கௌரிபாலன் அவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு



1996 அதிகூடிய புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதல்நிலை பெற்ற செல்வன் ம.ரூபவண்ணனின் தந்தை திரு. பொ. மகேந்திரன் நன்றிச் சன்மானம் வழங்கி ஆசிரியரை கௌரவிக்கிறார்.
இதன்போது சித்தி பெற்ற மாணவர்களும் ஆசிரியைக்கு தங்கச் சங்கிலி அணிவித்து கௌரவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் அதிபர் திருமதி.செ.செல்லையா அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா நிகழ்வு 1991







சேவை நலன் பாராட்டு விழாவில்

* திரு.திருவாட்டி செல்லையா இணையர்
* முன்னாள் அதிபர்
  - செல்வி திரவியம் வேலுப்பிள்ளை
* வட்டக்கச்சி தெற்கு அ.த.க.பாடசாலை அதிபர்
  - திருவாட்டி தங்கம்மா
* உருத்திரபுரம் கொத்தணி அதிபர்
  - திரு.பொன் சபாபதி
* வட்டக்கச்சி கொத்தணி அதிபர்
  - திரு.த.குருகுலராஜா
* முன்னாள் பாடசாலை அபிவிருத்திச்சபை செயலாளர் - திரு. குமாரசாமி
* பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்
  - திரு.மு.நாகராஜா
* பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயளாளர்
  - திரு.கா.கைலாயபிள்ளை

## ஆசிரியர் திரு.வை. செல்லத்தம்பி அவர்களின் பிரியாவிடை நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த சா/தர மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வுகளின் பதிவுகள் சில





அதிபர், ஆசிரியர்களுடன்
1990, 1991 க.பொ.த (சா/த)
அணி மாணவர்கள்



முதன்மை மாணவன் செல்வன். சி. சுதர்சன் தலைமையில் வருடாந்த ஒன்று கூடல் - 1992
முதன்மை விருந்தினர் அக்கராயன் கொத்தணி அதிபர் திரு.சி.சின்னராசா அவர்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மாணவ முதல்வன் செல்வன் ப. நவஜீவன் தலைமையில் ஒன்றுகூடல் நிகழ்வு 1993





ஒன்றுகூடல் நிகழ்வு 1994

பிரதம விருந்தினர் - திரு.பொன்.நித்தியானந்தன் - பிரதேச செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவ முதல்வன்
செல்வன் பா.வசந்தன்
தலைமையில்
ஒன்றுகூடல் நிகழ்வு - 1995

முதன்மை விருந்தினர் - திரு.கா.கயிலாயபிள்ளை
செயலாளர் - பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பேரம்பலம் டட்லிகரன்**
**(பழைய மாணவன்)**
**பிரித்தானியா**

## காலம் கடந்த பின்னும் எங்கள் பொற்கால நினைவுகள்....

தமிழர் வரலாறுகளில் பேசப்படும் சில கால வரலாறுகள் போல கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க. வித்தியாலய வளர்ச்சியிலும் அதன் சூழல் சமூகச் செயற்பாடுகளிலும் உயர்திரு.கனக மகேந்திரா அதிபர் அவர்களுடைய காலம் ஒரு பொற்காலமே. போற்றிப்புகழப்பட வேண்டியதே...

காலங்கள் பல கடந்தும் அந்த நினைவுகள் மனதில் நிறைவும் மகிழ்வும் தருவதாக உள்ளன.
எமது அதிபர் அவர்களின் சிறந்த ஆளுமையும், கடமையில் நேர்மையும், ஆசிரியர்களை நெறிப் படுத்தும் தன்மையும், மாணவர்களிடத்தில் நேர்ச்சிந்தனைகளை வளர்த்தமையும், பெற்றோர்களிடத்து நல்லுறவுமுறையை பேணியமையும், ஊர் இளைஞர்களை பாடசாலைச் செயற்பாடு தொடர்பில் சிந்திக்க வைத்தமையிலும் எம் அதிபருக்கு நிகர் அவரே.

பாடசாலை அயலவர்களே வேறு பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்த்துக்கொண்டிருந்த காலம்... மைதானமும் மண்டபமும் பட்டிமாடுகளாலும் சாணிகளாலும் நிறைந்திருந்த காலம்... இவை பற்றிக் கேட்கப்போனால் தெருச்சண்டியர்கள் பாடசாலைக்குள் நுழைந்த காலம்.... மாறி தனது அன்பாலும் தகுந்த கட்டுப்பாடுகளாலும் பாடசாலையை கொத்தணி, வலயம், மாவட்டம், வன்னிப்பிரதேசம், மாகாணம் (வ/கி) மற்றும் தேசியம் என பேசப்படும் நிலைக்கு உயர வித்திட்டவர் உயர்திரு கனக மகேந்திரா அதிபர் அவர்கள். இதனால் வேறு பாடசாலைகளில் இருந்து குடும்பம் குடும்பமாக மாணவர்கள் எமது பாடசாலை நோக்கி நகரத்தொடங்கினார்கள். பெற்றோர்கள் சகல வழிகளிலும் அதிபருக்கு ஒத்துழைத்தார்கள்.

அதிபர் அவர்கள் எமது மாணவர் வீடுகளோடு மட்டுமல்லாது எமது ஊரின் அனைத்து வீடுகளோடும் பெற்றோரோடும் சிறந்த தொடர்பில் இருந்தார். இதுவே ஊராரின் பற்று அவர்மீது அதிகமாவதற்கு காரணமாகியது. அவர் பாடசாலை விடுதியிலேயே தங்கியமை 24 மணிநேரமும் பாடசாலை தொடர்பில் பணி செய்வதற்கு வழிவகுத்தது. பாடசாலை மற்றும் மைதானத்தைச் சுற்றி மிகவும் அறுதியான வேலி மாணவர்கள் அனைவரின் கதிகால் பங்களிப்புடன் சீரமைக்கப்பட்டது ஆசானின் வழிநடத்தலுடனேயே. பசுமைத்திட்டத்தை அப்போதே எம் அதிபர் நடைமுறைப்படுத்தியதன் அடையாளமாக எம்மால் நாட்டப்பட்ட அசோகா மரங்கள் உள்ளன. அவருடைய காலத்திலே மைதானத்தை நோக்கியும் மண்டபத்தை நோக்கியும் இரு வழிப்பயன்பாட்டுக்கு உகந்ததாக மண்டபத்தோடு இணைத்து பெருமேடை அமைத்தோம். அன்றைய நாட்களில் கிளிநொச்சி மாவட்டம் சார்ந்த நிகழ்வுகள் பல மாபெரும் நிகழ்வுகளாக அந்த மேடையில் நடந்தன. வெறும் மாணவ வளத்தைக்கொண்டும் பெற்றோரின் பங்களிப்புடன் அந்த மாபெரும் மேடையை அமைத்தவர் எங்கள் ஆசான். பாடசாலைக்கும் எமக்குமான தொடர்பு வீட்டுக்கும் எமக்குமான தொடர்பைவிட அன்னியோன்னியமாகி இருந்தது. அதற்கு மூல காரணியாக இருந்தவர் எம் ஆசான்.

கல்விசார் வளர்ச்சி மட்டுமல்லாது விளையாட்டு, விவசாயம், தொழில்நுட்பம், கலைகலாசார நாடக வளர்ச்சியிலும் போட்டிகளிலும் வெற்றி பெற்றுக்காட்டிய காலம் உயர்திரு கனக மகேந்திரா அவர்களின் காலம் என்பது மிகையல்ல. அனைத்து மாணவர்களையும் சமூகச்செயற்பாடுகளிலும், ஆலயங்களில் இடம்பெறும் கலைநிகழ்வுகளிலும் எமது பாடசாலை மாணவர்கள் பெருமையோடு ஈடுபடத்தொடங்கிய காலம் எம் ஆசானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம். பழைய மாணவர்களை பாடசாலையோடு இணைந்து பயணிக்கச் செய்தவர். பொருளாதாரத்தடையும் போரும் மிகவும் உக்கிரமாக இருந்த காலப்பகுதியில் மாமரத்தின் கீழ் மிகப்பாதுகாப்பான பங்கர்கள் அமைத்து எம் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாதுகாத்தவர் எம் பெருமைக்குரிய அதிபர். இவரது அர்ப்பணிப்பான அனைத்து செயல்களுக்கும் முழு ஆதரவுடன் இருந்த அன்ரிக்கும் (திருமதி. கனக மகேந்திரா) எம்பாடசாலை பழைய மாணவர்களாகிய அவரது அன்புப்பிள்ளைகளுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள். எம்பாடசாலை தொடர்பில் அதிபரின் செயற்பாடுகளை வெறுமனே சொற்களுக்குள் சுருக்கி புத்தகத்திற்குள் அடக்கிவிட முடியாது. எம்பாடசாலை உள்ளவரை அவரது செயற்பாடுகள் நன்றியுடன் நினைவுகூரப்படும்.

பொறுப்பற்று இருந்த பலரை சமூகப்பொறுப்புடையவர்களாக்கிய எங்கள் நாயகன் உயர்திரு கனக மகேந்திரா அவர்களின் 75வது பிறந்தநாள் பரிசாக "சோதனைகளை கடந்து சாதனைகள் படைத்த அவரின் எம்பாடசாலைச் செயற்பாடுகள்" தொடர்பான மலரைக் கண்டு மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றோம். அன்புக்குரிய ஆசானுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள். இன்னும் பல்லாண்டு சிறந்து வாழ்ந்து தொடர்ந்து எம்பாடசாலைக்கும், அதன் பழைய மாணவர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் இருக்க எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டுகின்றேன்.

**டட்லிசுரன் அவர்களது முகநூல் பதிவு.**

அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அதிபர் திரு.கனக மகேந்திரா அவர்களைப் பார்க்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை யாகிய எமது பாடசாலையைப் பொறுத்தவரை திரு. கனக மகேந்திரா அதிபருக்கு முன்னானகாலம் அவருக்கு பின்னானகாலம் என்றே வகைப்படுத்தலாம்.

சோனகப் பள்ளிக்கூடம் என்று கூறிக்கூறியே கொச்சைப்படுத்தியோர் மத்தியில் தனது கடுமையான முயற்சியால் பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் கொண்டுசென்றவர் இவரே.....

இப்பாடசாலை தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், பல சாதனைகள் படைத்தது இவரின் காலத்திலேதான்.

"அவன்ரமாடு மைதானத்திலே சாணி போட்டால் ஏன் என்ர மாடு சாணி போடக்கூடாது" என்று கேட்கும் பெற்றோர். பள்ளிக்கூட வளர்ச்சி பற்றியே சிந்திக்காத பழைய மாணவர்கள், தமுப்படிக்காக மட்டுமே பாடசாலை வரும் என் போன்ற மாணவர்கள், சேவை மனப்பாங்கு இல்லாது சம்பளத்துக்காக மட்டுமே வந்து போகும் சில ஆசிரியர்கள்..... இவர்கள் எல்லோரிடத்திலும் மனமாற்றம் ஏற்படுத்தி எல்லோரையும் ஒன்றிணைத்து பாடசாலையை பெரும் யுத்தக்காலப்பகுதியில் கட்டியெழுப்பியவர் திரு.கனக மகேந்திரா அவர்களே.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனேஸ்வரி (புவனா)
(பழைய மாணவி)
சுவிற்சலாந்து



# "அது ஒரு பொற்காலம்"

பேரிளம் வயதில் மீட்டிப்பார்க்க
ஆயிரம் நினைவுகள் நம்முன்
அந்நினைவினை மனதில் தீட்டிப்பார்க்க
ஆயிரம் ஏக்கங்கள் நம்முள்!

வாழ்க்கை எனும் போர்க்கலையில்
விழிகொடுத்து ஒளிதந்த அதிபர்,
ஆசிரியர்களின்
மறக்க முடியாத நினைவுகள் பல....

கொத்தாக வெள்ளைச் சிட்டாக
சிறகடித்து சத்தமிட்ட எம்மை-செல்வ
சொத்தாக நினைத்து
முத்தாக முழுதாக்க
கத்தி கத்தி இளைத்த
செல்வரத்தினம் ரீச்சரின்
முழுதான நினைவுகள்
அது ஒரு பொற்காலம்!

மாமரத்தில் தடியெறிந்து
மாங்காய் பறித்து குத்தி
கத கதவென நாலுகடி கடிக்கையில்
அதிபரின் வரவுகண்டு அரைமாங்காய்
எறிந்துவிட்டு
தலை தாழ்த்தி வகுப்பறையுள்
நுழைந்தது...
அது ஒரு பொற்காலம்!

அன்பை, பண்பை, ஒழுக்கத்தை
கனமான கட்டுப்பாட்டை
அழுத்தி, திருத்தி உணரவைத்த
கனக மகேந்திரா அதிபரின்
ஆளுமை, அர்ப்பணிப்பு
இன்றும், நம் மனக்கண்ணின்
சிந்தனைக்குள்
அலை அலையாய் மலரும்
அது ஒரு பொற்காலம்!

வசதிக்கட்டணமே
கட்டமுடியாத வசதியில்லா
காலம் என்றாலும்
மகிழ்வுக்கு பஞ்சம் இல்லாத
மகிழ்வான பொற்காலம்!

குறும்புகள் செய்து
குழந்தைகள்போல் நடமாடி
பலர்கவனம் ஈர்த்த பலமான
பொற்காலமது...
மறக்க முடியாத அந்நினைவுகளை
நரைவிழுந்தும் தவமிருந்து கிடைக்காது
ஏங்கும் நம் காலம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. க.விக்கிரமன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை



# வரலாறு ஒருபோதும் மறவாது

எமது பாடசாலையான கிளி இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை பல நிலைகளிலும் பின்தங்கியிருந்த வேளை அதனைப் பொறுப்பெடுத்த அதிபர் திரு. கனக மகேந்திரா அவர்களின் அயராத முயற்சியினால் குறுகிய காலத்தில் உயரிய வளர்ச்சியைப் பெற்றது. யுத்த மேகங்கள் சூழ்ந்த நெருக்கடியான காலகட்டத்தில் பொருளாதாரத்தடைகள், போர் நெருக்குவாரங்கள் சூழ்ந்திருந்தபோதும் துணிந்து எங்கள் பாடசாலையை நெறிப்படுத்தினார்.

கட்டட வசதிகள் பெறமுடியாத அந்தக் காலத்தில் பல ஓலைக்கொட்டகைகளை அமைத்துள்ளார். உள்ளூர் வளங்களைக் கொண்டே இத்தனை பெரிய மேடையை அமைத்தார். தூர்ந்திருந்த கிணற்றுக்குப் பதிலாக வளமான இரண்டு கிணறுகளை சிரமதானம் மூலம் அமைத்து பாடசாலையை சோலையாக மாற்றினார். ஆசிரியர் தட்டுப்பாடான பாடங்களுக்கு தொண்டர் ஆசிரியர்களை நியமித்து எமது கற்றல் தேவையை நிவர்த்தி செய்து மிகச் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளை எமக்குப் பெற்றுத் தந்துள்ளார்.

இவரது துணைவியார் திருமதி. அன்னலட்சுமி மகேந்திரா (அன்ரி) எல்லா வகையிலும் எமக்கு அனுசரணையாக இருந்ததுடன் சங்கீதம் கற்பித்து சங்கீத பாடத்தில் ஆசிரியர் இல்லாக் குறையையும் தீர்த்து எம்மில் பலரைச் சித்தியடைய வைத்துள்ளார். எங்கள் மாவட்டத்தில் போட்டிகள் என்றால் வெற்றி எமக்கென்று எழுதப்பட்டதாக அமைந்துவிடும். கலைத்திறன், விவசாயம், விளையாட்டு அனைத்திலுமே எமது பாடசாலையின் வளர்ச்சி தேசியமட்டம்வரை ஓங்கி நிற்கிறது. எங்கள் அதிபர் அழகுபடுத்துவார். ஆவன எல்லாம் செய்வார். மீண்டும் மீண்டும் அவற்றை மெருகூட்டுவதிலேயே குறியாக இருப்பார். இவரது எந்த செயலுக்கும் நாமும் பெற்றோரும் எம்மாலான ஒத்துழைப்பை முடிந்தவரை செய்திருக்கிறோம்.

இந்தப் பாடசாலையின் நிர்வாக நேரம் காலை 8 மணி தொடக்கம் 2 மணி வரை என்று சொல்ல முடியாது. எந்த நேரமும் எங்கும் எமக்கு அதிபர் தான் முன்னால் நிற்பார். நாங்கள் யாரும் வேலியால் கதைக்கமுடியாது. வேலிக்குள்ளால் போகமுடியாது. சயிக்கிள்களில் தொடுத்துச் செல்லமுடியாது தெருவில் கூட்டமாக நிற்கமுடியாது. எந்த நேரமும் எமது வாழ்வு வளம்பெற எம்மை வளப்படுத்தி யதுடன் எமது பிரதேசத்தையும் நெறிப்படுத்திய எங்கள் அதிபரை வரலாறு ஒரு போதும் மறக்காது. கனக மகேந்திரா சேர் என்றும் எங்கள் சேரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைதனை நினைவுகூர்ந்து செப்புகின்றோம் நல்வாழ்த்துக்களை

**1991ஆம் வருட**
**க.பொ.த(சா/த)**
**மாணவர்கள்**

**உயர்திரு. கனக மகேந்திரா**
**அதிபர்**
**கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை**


சேவைதனை நினைவுகூர்ந்து செப்புகின்றோம்
நல்வாழ்த்துக்களை
உயர்திரு. கனகமகேந்திரா
அதிபர்
கிளி. இராமநாதபுரம் மேற்கு அ. த. க. பா.
1991ஆம் வருட க.பொ.த (சா/த)
மாணவர்கள்

கடந்த ஒரு தசாப்த காலமாக கல்விச் சேவையை
அள்ளி வழங்கியதோடு மட்டுமன்றி - எம்
பள்ளிக்கு காவல் தெய்வம் போல கடமைகள்
பல புரிந்து காலத்தின் தேவைக்கேற்ப
கருத்துடனே செயற்பட்டு கல்விச் சேவையுடன்
கலை பண்பாடுகளையும் அள்ளியே வழங்கி - எம்
கிராமத்தின் ஒளிவிளக்காக பள்ளியை மாற்றியே
மாவட்ட மட்டம் வரை உயர வைத்ததுடன்
பள்ளியின் பரிமாணத்தை மேலும் உயர்த்திடவே
அசோகமரச் சோலையுடன் பயன்தரு பலமரங்களையும்
சிறுவர் எம் தாகம் தணித்திடவே
சிறந்த நற் கிணறுகளையும் அமைத்ததுடன்
சித்தமுடனே உவந்து நல்லதோர்
அரங்கையும் அமைத்துத் தந்த - எம்
ஆசானாம் அதிபர் கனக மகேந்திரா அவர்களின்
இடமாற்ற செய்தி கேட்டு
ஏங்குகின்ற இவ்வேளையிலே
எங்கு சென்றாலும் எம் அதிபர் அவர்கள்
பார் போற்றும் பல பணிகளை புரிந்து
பல காலம் சீரும்சிறப்புடனும் - வாழ்கவென
வாழ்த்துகின்றோம் பழைய மாணவர்கள் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியும் தடியும் (மாணவர் மனப்பதிவு)

அதிபர் அடித்தால் ஒரு கணம் பாடசாலையே அதிரும். அடிக்குரலில் அந்தாப்பிச்சு, நீட்டுத்தடியால் பின்புறக் கழுசானில் பட பட என ஒலி எழ அடி விழும். அவ்வேளை துப்பாக்கி வெடியும் ஆமி நகர்வும் மனதுக்குள் பதியும். ஆசிரியர்கள் கண்பிதுங்கி வெல வெலத்து நிற்பர். பள்ளி முழுவதும் மயான அமைதி படரும். பயத்தால் மாணவர் குலைப்பன் நடுக்கம் எடுப்பர். சிலவேளை காற்சட்டையையும் நனைப்பர். ஆனால் பையனோ தனக்கு நோகவில்லை என்று காட்ட மற்றவர்களைப்பார்த்து ஒரு சிமிட்டல் நகைப்பு விடுவான். அப்போது தான் ஒரு அடி அவன் காலில் படும். துடித்து எழுவான், அழுவான், காலை வருடுவான். அதிபர் அடியில் இப்படியும் ஒரு வெடி.

**பிரதி அதிபர் திருமதி. க.முத்துலிங்கம்**

அதிபரைத் தவிர எவரும் பாடசாலையில் தடி எடுப்பது குறைவு. பிரதி அதிபர் அல்லவா? தடி எடுக்கத்தானே வேண்டும். தவிர்க்க முடியாத நிலையிலேயே தடியை எடுப்பார். அடிப்பார். பிள்ளை அழுது கண்ணீர் விட முன்பே அவர் அழுது கண்ணீர் வடித்து விடுவார்.

**திருமதி.செ.செல்லையா ஆசிரியை**

வருவார். வரும்போதே முன் கொய்யகத்தை வீசித் தோழில் போட்டு சேலைத் தொங்கலை இடுப்பில் இறுக்கிச் செருகுவார். கிட்டவந்ததும் கொஞ்சம் நிமிருவார். அவரது மனக்கனதியை விடக் கனதியான கண்ணாடியால் அங்கும் இங்கும் பார்ப்பார். மாணவனைப் பார்த்து ஒரு செருமல். டேய்... "கொப்பன் என்ன செய்கிறான், அவனிட்டைச்சொல்லு நான் வரச் சொன்னது எண்டு" மிரட்டலே முடிந்து விடும். இதன் அடக்கம் என்னவென்றால் அந்தப் பொற்றோரும் அவரது மாணவர்களே. இது அவரது தண்டனை..

**செல்வி.சி.நளாயினி ஆசிரியை**

தடி எடுத்ததைப் பார்த்து இருக்கிறோம். பல்லைக்கடித்தபடி அடித்ததையும் பார்த்து இருக்கிறோம். ஆனால் ஆரும் அழுததைப் பார்க்கவில்லை. கண்டிப்பு கனதியானது தான்.

**திரு.பே.திருக்கேதீஸ்வரன் ஆசிரியர்**

அவரும் அப்படித்தான் தடியை எடுப்பார் அடிப்பார் ஆரும் அழுததை நாம் பார்த்ததில்லை. முறைப்பு கனதியானதாகத்தான் இருக்கும்.

**திரு.க.கிருஸ்ணமூர்த்தி ஆசிரியர்**

தடியோடு தான் திரிவார். அடியும் போடுவார். கூப்பிட்டு வைச்சு ஆலோசனையும் சொல்லுவார். அணைப்பும் அமைதியாக இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. கணேஜினி நாவேந்தன்
சிரேஸ்ட முகாமைத்துவ அலுவலர்
(பழைய மாணவி)



# 'முத்தாக எமக்கமைந்த முத்துலிங்கம் ரீச்சர்'

**(பொற்காலத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றி (1991-2005) ஓய்வுபெற்று அமரத்துவமடைந்த திருமதி. கமலாதேவி முத்துலிங்கம் அவர்களின் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகின்றது.)**

ஒவ்வொரு மனிதனும் தன் பிறப்பிலிருந்து இறப்புவரை கற்றுக்கொண்டே இருக்கிறான். அதற்காக பல்வேறு ஆசிரியர்களை அவனது வாழ்நாளில் சந்திக்க வேண்டியவனாகிறான். இருட்டுக் கருவறைக்குள்ளும் பாதுகாப்புணர்வைக்கொடுத்து தன் உதிரத்தால் உணர்வையும் ஊட்டிய அன்னை முதல், ஞானஒளியூட்டி முக்தியை வழங்கும் ஆண்டவன் வரை பலரும் இவர்களில் அடக்கம். கற்ற பாடங்களே வெவ்வேறு பருவங்களில் மறக்கப்படும் நிலையில் எல்லா ஆசிரியர்களும் இறுதிக்காலம் வரை நினைவகங்களில் காக்கப்படுவார்களா?

ஆனால், பள்ளிப்பருவம் கழித்து பலவருடங்களாகியும் மாணவர்களால் மறந்துவிடமுடியாத பல ஆசிரியர்களை எம் பாடசாலை பெற்றிருக்கிறது. அவர்களில் முக்கியமானவர் "முத்துலிங்கம் ரீச்சர்" ஒரு ஆசிரியராக, பிரதி அதிபராக பல சந்தர்ப்பங்களில் பதில் அதிபராக எம் பாடசாலையில் அவர் கடமையாற்றியிருக்கிறார். பதவி நிலைகளுக்கான பொறுப்புக்களைக் கடந்தும் தன் சேவைக் காலத்தில் மாணவர்களிடமும், சக பணியாளர்களிடமும் அவர்காட்டிய தூய அன்புதான் அவருடைய மறைவுக்குப்பிறகும் தம் மறைவுவரை அவரோடு பழகியவர்களை நினைக்கவைத்துக் கொண்டிருக்கிறது. சிறந்த நிர்வாக உதவியாளராக மட்டுமன்றி சிறந்த விஞ்ஞான ஆசிரியராகவும் அவர் துலங்கியுள்ளார். பாடசாலை வளர்ச்சியில் இவருடைய துணைவர் திரு.முத்துலிங்கம் ஆற்றிய உதவிகளையும் ஊக்கத்தையும் பாடசாலைச் சமூகம் இலகுவில் மறந்துவிடாது. இவரது ஆரம்ப கால சிறிய நிதிப்பங்களிப்பே இன்றைய தென்னஞ்சோலையின் உருவாக்கம்.

மாணவர்களைத் தண்டிக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் சிறுகுச்சி எடுத்து நீட்டிய கையில் அடிக்க நேர்ந்தால், அந்தமாணவர்கள் அழுவதற்குமுன்பே அவருடைய கண்களில் கண்ணீர்த்துளிகளைக் காணலாம். அடுத்தகணமே அன்னைக்குரிய அரவணைப்போடு குரல் தழுதழுக்க அவர் வழங்கும் அறிவுரைகள் வாங்கிய அடியைவிட ஆழமாய் இதயத்தில் இறங்கும். அவருடைய காலத்தில் மாணவராயிருந்த நானும் மற்றும் பலரும் இந்த உணர்வை பெற்றிருக்கிறோம். பொறுப்புடனான அந்தப்பரிவை மாணவர்களோடு சேர்ந்து சக பணியாளர்களும் ஊராரும் பல சந்தர்ப்பங்களில் உணர்ந்ததுண்டு. துரதிஸ்டவசமாக அண்மையில் காலன் அவர் உயிரைப் பறித்துக்கொண்டாலும் அவரோடு பழகக்கிடைத்த இத்தகையோரின் நினைவுகள் மூலம் காலங்களைக் கடந்தும் அவர் வாழ்ந்துகொண்டிருப்பார். பாடசாலை வரலாற்றைப் புரட்டப்போகும் எதிர்காலத்தவரால் கொண்டாடப்பட்டுக் கொண்டிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. ஹம்சானந்தி உமாசுதன்
பட்டதாரி ஆசிரியர்
தி /இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
திருகோணமலை
(பழைய மாணவி)

# எமது பாடசாலையின் உடற்பயிற்சி விளையாட்டு அனுபவங்கள்

அன்று பல பெரிய பாடசாலைகளுக்கு மத்தியில் தலைநிமிர்ந்து நின்ற பாடசாலைதான் சில்வா றோட்டில் உள்ள இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை சுமார் எழுபது முஸ்லீம் பிள்ளைகள் படித்ததால் இது முஸ்லீம் பாடசாலை எனவும் அழைக்கப்பட்டது.

பல ஆண்டுகளின் பின்பு பல தொண்டர் ஆசிரியர்களும், பயிலுனர் ஆசிரியர்களும் நியமனம் பெற்ற தோடு பாடசாலையில் ஒரு புதுயுகம் ஆரம்பமானது. அப்பொழுது தான் ஆசிரியர்களான செல்வி. சி.நளாயினி, செல்வி. நா.ஜெயராணி ஆகியோர் விளையாட்டுத்துறையில் தம்மை இனம் காட்டத் தொடங்கினர். அப்பொழுது கொத்தணி அமைப்பு முறை காணப்பட்டது. போட்டிகளும் முதலில் கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெறும். அப்பொழுதெல்லாம் மூலாதாரப் பாடசாலைகளைத் தோற்கடித்து எமது பாடசாலை விளையாட்டில் சாதனை படைக்கும். அன்று நடைபெற்ற தாச்சிப் போட்டி, எறிபந்து, கரப்பந்து, வலைப்பந்து, உடற்பயிற்சி அனைத்திலுமே எமக்கு முதலிடம் கிடைத்தது. முதலிடம் என்றால் அது எமக்கு மட்டுமே நிரந்தரம் என்பதில் சந்தேகமே இருக்காது.

நிரந்தரமான வலைப்பந்துத்திடல், கரப்பந்துத்திடல், பூப்பந்தாட்டத்திடல், உதைப்பந்தாட்டத்திடல் என்பன எமது பாடசாலையில் அமைத்து, அவற்றிற்குச் செல்லும் பாதையின் இரு மருங்கும் பூந்தோட்டம், பாடசாலையைச் சூழ பயன்தரு நிழல் மரங்கள், என்பன காட்சி தர மாணவர்கள் மைதானத்தில் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபடுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இவ்வாறு விளையாட்டில் மட்டும் ஈடுபடாமல் கல்வியிலும், கலைகளிலும் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டது என்பதற்கு பாடசாலைக்கு கிடைத்த வெற்றிகள் கட்டியம் கூறி நிற்கின்றன.

கலைத்துறையில் குறிப்பாக நாடகத்துறையில் நாமீட்டிய சாதனைகள் கல்விச் சமூகத்தையே ஒரு கணம் எம்பக்கம் ஈர்த்தது எனலாம். விவசாயத்துறையில் முன்னணி வகித்ததுடன் தொடர்ச்சியாக பரிசில்களையும் பெற்றது எமது பாடசாலை. அதன் பின் பல திக்குகளிலும் இருந்து மாணவர்கள் எம் கலாசாலையில் இணைந்தார்கள். எமது சொந்த மாணவ வளத்தோடு பாடசாலை பின்னர் பிரகாசிக்கத் தொடங்கியது.

உடற்பயிற்சிப் போட்டியில் மூன்று குழுக்கள் வெற்றிபெறும். மாவட்டத்தில் 17 வயதுப் பெண்கள் குழு நிரந்தரமாக முத்திரை பொறிக்கும். ஆனால் மாவட்டத்துக்கு வெளியில் நகரமுடியாதபடி அரசின் முட்கம்பி அரண்கள். அதனால் வெற்றிகள் அத்துடன் நின்றுவிடும். மாவட்டத்துக்கு வெளியில் நகரமுடியாத நிலை தேசியத்தை சந்திக்க முடியாத நிலை. அரண்கள் அகற்றப்பட்ட அடுத்த ஆண்டே சின்னப் பொடுகுகள் தம் ஆற்றலைத் தேசியமட்டத்தில் அரங்கேற்றிக் காட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுப் போட்டி என்றால் எமக்கென்றொரு தனித்துவம். புதிய பாதை, புதிய பாணி மற்றைய பாடசாலைகள் போல் நடத்தப்படுவதில்லை. இராமநாதபுரம் மேற்கில் விளையாட்டுப் போட்டி என்றால் புதுமைகள் காண சனத்திரள் கூடும். சொந்தமாக கட்டிக் காத்த Band இசைக் குழுவின் மெருகூட்டலும் அதில் இணைந்து இருக்கும். படிக்கும் பிள்ளைகள் அத்தனைபேரும் மைதானத்தில் பங்காளிகள் ஆவர். விருந்தாளியாக வரும் அதிகாரிகளின் அவதானமும், பாராட்டுரைகளும் எம் விழாவின் சிறப்பையும் புதுமையையும் பறைசாற்றும்.

இத்தனைக்கும் அன்று விஞ்ஞானப் பயிற்சி பெற்ற கணிதம் கற்பிக்கின்ற ஆசிரியையே இவற்றின் களநாயகியாக மிளிர்வார். அவர்தான் எங்கள் அன்பு ஆசிரியை நளாயினி சின்னத்தம்பி. பொற்கால அதிபர் திரு கனக மகேந்திரா அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆசிரியை அவர்கள் பொற்காலத்தின் மெருகூட்டலில் பாரிய பங்களிப்பினை வகித்திருந்தார் என்றால் அது மிகையாகாது. ஆசிரியையின் ஊக்கமும், உணர்வும், சிந்தனையும், செயற்பாடுமே அவரின் அபரிமிதமான வெற்றிக்கு காரணமாய் இருந்தன. போட்டி என்ற ஒன்று வந்துவிட்டால் அது முடியும்வரை அவர் பசிநோக்கார். கண் துஞ்சார், மெய்வருத்தம் பாரார். பயிற்சியாளர்களின் முன் அக்குவேறு ஆணிவேறாகச் சிந்தித்துச் செயற்பட்டு, கையாளும் புதுப்புது உத்திகள் சிறுசிறு திறன்களைக் கூட நுணுக்கமாகப் பேணி உட்புகுத்தி விடுவார். அடுத்தவர் தொடராதபடி அடிக்கடி உத்திகளையும் சீருடைகளையும் மாற்றிக் கொள்வார். இதனால் போட்டிக்கு வரும் எதிர் அணிகள் ஏமாந்து விடுவதுண்டு.

பயிற்சியும், வேகமும், தோல்வியை ஏற்றுக் கொள்ளத் தயாரற்ற மன எழுச்சியும், விவேகமும் ஏனைய உடற்கல்வி ஆசிரியர்களைப் போல் இல்லாது சலசலப்பின்றிப் பேணும் அமைதியான போக்கும் கொண்ட எமது ஆசிரியரின் வழிநடத்தலில் எமது பாடசாலை மாணவர்களின் முயற்சியோடு தேசியத்தில் நாம் சாதனையாளர்களாகத் திகழ்ந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. கிருஷ்ணகலா(ஜீவா) அன்பழகன்
சுவிட்சலாந்து
(பழைய மாணவி)



# பொற்காலச் செதுக்கற் சிற்பிகளில் ஒருவர்

எமது பாடசாலையின் விளையாட்டுத் துறையிலும், கணித, விஞ்ஞான பாடங்களிலும் சிறப்புச்சிற்பியாகச் செயற்பட்டு பொற்கால முதல்வர் அதிபர் திரு. கனக மகேந்திரா அவர்களின் பெருமைக்கு அணிசேர்த்த ஆசிரியையாக செல்வி. நளாயினி சின்னத்தம்பி திகழ்கின்றார்.

எமது வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகளின் போது தொடர்ச்சியாக விளையாட்டுத் துறைச் செயலாளராகப் பணியாற்றி வருடந்தோறும் விளையாட்டு விழாக்களை வெற்றிகரமாக சிறப்பாக நடாத்துவதில் பெரும்பங்கினை ஆற்றிவந்த வீராங்கனையுமாவார். பெரு விளையாட்டுத்துறைகளில் தாச்சி எறிந்து கரப்பந்து, வலைப்பந்துக் குழுக்களுக்கு வலிமை மிகு சிறப்புப் பயிற்சிகளை வழங்கி மாவட்ட மட்டம், வலய மட்டப் போட்டிகளில் முதலாமிடம் எமக்கே என்பதை நிரந்தரப் பதிவாக ஆக்கித்தந்த கொடையாளி எமது ஆசிரியையே ஆவார்.

வலைப்பந்தாட்டம் என்றால் ஒரே கலகலப்பு. பல களங்களைத் தாண்டும் போட்டி அது. எத்தனை களங்களைத் தாண்டினாலும் எழுதப்பட்ட வெற்றி மாவட்டம் வரை எமக்கே. எந்தக் குழுவும் மாவட்டத்துக்கு வெளியே போக முடியாதபடி அரசால் தனிமைப்படுத்தப்பட்ட காலகட்டத்தில் வன்னிப் பெருநிலப்பரப்பு (உபமாகாணம்) சென்று எமது வெற்றியை நாம் போட்டிகளில் நிலை நிறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதே போன்று உடற்பயிற்சிப் போட்டிகளிலும் நாம் தொடர்ச்சியாக கீழ்ப்பிரிவு, மேற்பிரிவுப் போட்டிகளிலும், மத்தியபிரிவுக்கு போட்டிகள் நடந்த காலம் உட்பட மாவட்ட முதன்நிலையை எமக்கு நிரந்தரமாக்கி மாவட்டம் கடந்து வன்னிப் பெரு நிலப்பரப்பு வரை முதலாமிடத்தை கைப்பற்றி அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதும் தேசிய மட்டத்தில் இரண்டு தடவைகள் மோதி முதலாமிடத்தை சுவீகரித்தது. இது வடபகுதியில் குறிப்பாக வன்னிப் பாடசாலைகள் வரலாற்றில் எமது பாடசாலையின் **முதற் தர சிறப்புச் சாதனைப் பதிவுமாகும்.**

விளையாட்டுத்துறைப் பயிற்சி பெற்ற P.T.ஆசிரியரல்லாத விஞ்ஞான ஆசிரியரான இவர் விஞ்ஞான, கணித பாடங்களிலும் சிறந்த ஆசிரியையாகத் துலங்கி அப்பாடங்களில் க.பொ.த.சா/த பரீட்சையில் மாவட்டத்தில் 1992 முதல் அதிசிறந்த பரீட்சை முடிவுகளையும் பெற்றுத்தந்த சாதனையாளர். அனைத்துக்கும் மேலாக 2006ல் சிறந்த நல்லாசிரியருக்கான வடக்கு கிழக்கு மாகாண விருதையும் தான் பெற்று எமக்கும் பெருமை தேடித்தந்துள்ளார். தனது தாயாரைத் தொடர்ந்து இப்பாடசாலையிலேயே தனது ஆசிரியர் சேவையினை ஆரம்பம் முதல் தொடர்ந்து ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றிய ஆசிரியப் பயில்களம் எமது பாடசாலை என்பதில் எமது பாடசாலை பேருவகை கொண்டு நன்றியுடன் தலைநிமிர்ந்து நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருவிளையாட்டு சாதனையாளர்கள்



தாச்சிப்போட்டி 1992
மாவட்ட மட்டத்தில்
முதலாமிடம்



வலைப்பந்தாட்டப் போட்டி
1991
மாவட்ட மட்டத்தில்
முதலாமிடம்




வலைப்பந்தாட்டப் போட்டி - 1992
மாவட்ட மட்டத்தில் முதலாமிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொற்காலத்தில் கோட்டம், மாவட்டம், மாகாணம், தேசியம் ஆகிய நிலைகளில்**
**சாதனைகள் படைத்த உடற்பயிற்சிக்குழு**
**பயிற்றுவித்த ஆசிரியர் - திருமதி. நளாயினி ஜெயபாலசிங்கம்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம்
செல்வி.கு.கயலினி
தரம் - 9 (1998)



# ஒரு கணப்பொழுதில்......

**கணப்பொழுதில் கதைத்தொடர்.....**
அந்த வேளை எமது பாடசாலை முற்றத்தில் காலை ஒன்று கூடல் நடந்து கொண்டிருக்கிறது. விமானத்தின் குண்டு தந்த அதிர்ச்சியில் அனைவருமே நிலைகுலைந்தோம். பல மாணவர்கள் பக்கத்தில் இருந்த பங்கருக்குள் பதுங்கிவிட்டனர். சிலர் முற்றத்தில் விழுந்து தவண்டனர். நாமோ பிள்ளைகளுடன் நின்று பரிதவித்தோம். அவர்களின் பதற்றத்தையும், கண்ணீரையும் ஆற்ற எம்மிடமோ சக்தி இல்லை பரிதவித்து ஓடி வந்த பெற்றோர் பிள்ளைகளை அழைத்துச் சென்றனர். நாங்கள் உடையார் வீட்டை நோக்கி.................

உடையார்!
இப்படித்தான் அவரை அழைப்பார்கள் இவரது இயற்பெயர் வேலாயுதம். இவரது பேரனார் 1920ம் ஆண்டுகளில் விதானையாகவும், உடையாராகவும் உத்தியோகம் பார்த்தார். அதனாலே வேலாயுதம் அவர்களின் குடும்பப் பெயர் அவரது பேரனாரின் உத்தியோகப் பெயரால் அழைக்கப்பட்டார்.

உடையார் குடும்பத்தின் வீடு எமது வட்டக்கச்சி கிராமத்துக்கு அருகில் உள்ள பழைய வட்டக்கச்சி கிராமத்தின் ஆதிக் குடிகளில் ஒன்று.

உடையார் விவசாயத்தில் திளைத்தவர். உழவுத்தொழில் தருகின்ற ஆத்ம திருப்தியை வேறு எந்த தொழிலிலும் அனுபவிக்க முடியாது. அந்த திருப்தியை வேறு எந்த தொழிலாலும் அனுபவிக்க முடியாது. அந்த திருப்தி அவரது நிறைவான வாழ்க்கையிலும் பளிச்சிட்டது.

பழைய வட்டக்கச்சி கிராமத்தின் நடுவில் மா, பலா, கமுகு, வாழை, தென்னை மரங்களின் பரந்து விரிந்த நிழலில் உழைப்பின் வெகுமதியாய் உடையாரின் கல்வீடு நிமிர்ந்து குளிர்ந்து நின்றது.

வீட்டைச் சுற்றி பரந்து காணப்படுகின்ற வயல் நிலங்கள் ஒரு போதும் போகங்களைத் தவறவிடாது பயன்படுத்தி தளதளவென்று செழித்து வளர்ந்து கிடக்கும்.

தன்னுடைய நிலம் தனக்கு வாரி வழங்கியதை இல்லையென்று கேட்போர்க்கு உடையார் இல்லையென்று சொல்லாது கொடுத்தார். இராணுவத்தின் அட்டூழியங்களால் நிலமிழந்து நிலை தளர்ந்து வேலை செய்ய வந்தவர்களுக்கு வேலை கொடுத்து வயிற்றை நிறைத்தார்.

தன்னிடம் வேலை செய்பவர்களை தன் உறவுகளாய் அரவணைத்து ஆதரித்த உடையார் குடும்பம் இன்று உருக்குலைந்து கிடக்கிறது.

26-03-98 எப்போதும் போலவேதான் அன்றும் விடிந்தது. ஒரு இரத்த நிறத்தை சந்திக்கப் போவது தெரியாமல் அந்தக் காலைப்பொழுது சுறுசுறுப்போடு அசைந்து கொண்டிருந்தது.

உடையார் வீட்டில் எட்டு நாட்களுக்கு முன்பு நிகழ்ந்த திருமணத்தின் கலகலப்பு இன்னும் தான் கலையவில்லை பாவம். அந்தக் குடும்பம் ஒரு பயங்கரம் அவர்கள் மீது படியப்போவதை எந்த ஒரு கெட்ட சகுனமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு உணர்த்தவில்லை.

காலை 8.00மணி பேரிரைச்சலைக் காற்றில் நுழைத்தபடி ஒளிக்கீற்றுகளென வானில் முளைத்த இரண்டு கிபீர் விமானங்கள், அழகிய அபாரத்தை தெளிவான வானில் வரையத் தொடங்கின.

யாரைப் பலியெடுப்பதற்கு இந்த இராகங்கள்? நானா? நீயா? எங்களையா? அவங்களையா? வட்டக்கச்சியா? அல்லது வேறெங்கோவா? நிலத்தில் உயிர்கள் தவித்தன. அந்தத் தவிப்பும், பீதியும் முகத்தில் வழிய விமானங்களை வெறித்தபடி உடையாரும் அவரது பிள்ளைகளும், அவரோடு இருக்கின்ற அவரது ஊழியர்களும் வீட்டின் முற்றத்தில் கூட்டமாக இருந்தனர்
வெளிக்கண்டல் குடியிருப்பைத் தமது பலிபீடமாக தெரிவுசெய்த விமானங்கள் குண்டுகளை வீசி அந்தக் குடியிருப்பை உலுப்பி விழுத்தின

உடையார் "எந்த வயிறு பத்தியெரிய யாரைக் கொத்திக்கொண்டு போறானோ தெரியல்ல" என்று புலம்பிக்கொண்டிருக்கும் போதே அந்த அகோரம் அவர்மீதே தரையிரங்கியது.

உடையார் வீட்டையும் பலிபீடமாக தெரிந்தெடுத்த விமானங்கள் அதன்மீது குண்டுகளைத் துப்பின. பேரொளியும் பெரு முழக்கமும் அந்தக் கணத்தையே இடித்து நொருக்கின. பூமி பிளந்து அப்பிரதேசத்தையே உள்ளிழுத்த பிரமை ஒரு வினாடிப் பொழுதில் அங்கேயிருந்த சிருஸ்டியின் உன்னதங்கள் எல்லாம் சிதைந்து போயின. தடங்கலாக நின்ற காற்றசைத்து வீச அங்கே மண்டிக் கிடந்த கந்தகப் புகை கலைந்து போனது.

சற்றுமுன் அழிந்த திசைகள் உயிர்த்திருந்தன பூவும், பிஞ்சும், காயும், கனியுமாய் முற்றத்தில் கொத்தாய் நின்ற அவர்களை குண்டுகள் இறைச்சிகளாய் அறுத்துப் போட்டன. வீட்டின் மீது ஒன்றும், பின் வளவில் இரண்டும், முற்றத்தில் ஒன்றுமாக நான்கு குண்டுகளை வெடித்துச் சிதறிய அந்த அரங்கு சிதைந்து கிடந்தது.

இதமாக இருக்கும் வீடும் வீட்டைச் சூழ்ந்த சோலைகளும் சின்னாபின்னமாக கிழிந்து கிடந்தன. அப்போது நாம் சோடினை செய்த மாலைகள் இப்போது ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. எமது வகுப்பின் கணிதபாட ஆசிரியை. ஆசிரியை என்ற முறையில் எம்முடன் மிகவும் நெருங்கிப் பழகினார். இப்போது அதை எண்ணும்போது கண்கள் குளமாக வடிகின்றன. சாமி அறையின் மீது குண்டு விழும்போது பக்கத்து அறையில் நின்ற பாமினிக்கு வயிறு துளைபோட்டு இரத்தம் கொப்பளித்தது. இடிந்து வீழ்ந்த சுவரை ஏறிக்குதித்து முற்றத்திற்கு ஓடிவர அடிவயிற்று ஓலங்களால் முற்றம் அதிர்ந்து கொண்டிருந்தது.

வெடிப்பின் அதிர்வு - இரத்தப் பெருக்கு - மரணஓலம். மூன்று அதிர்ச்சி அலைகள் ஒன்றாய்த் திரண்டு பாமினியின் புலன்களை அழித்து அருகிலுள்ள கிணற்றுக்குள் விழுத்திவிட்டன. அவளின் உயிரை அயலவர்கள் கிணற்றிலிருந்து தூக்கிவிட்டனர்.

கூட்டி அள்ளி, எரித்து கழுவி, துடைத்து எல்லாம் முடிந்துவிட்டது.

பாமினிக்குத் திருமணமாகி எட்டுநாள்தான் நிரம்பியிருந்தன. தாம்பத்திய வாழ்வின் பூரிப்புத் ததும்பிய முகத்தில் இப்போது மரண பீதியைத்தான் காணமுடிகிறது.

அந்த வீட்டில் எஞ்சியிருக்கின்ற யார் முகத்தில்தான் அந்தப் பீதி பிரதிபலிக்கவில்லை. அது அயல் வீட்டுக்காரரிலும் ஒட்டிக் கிடக்கிறது.

அங்கே உயிர்பிழைத்த மனிதர்களுக்கு ஒரு கொடிய அனுபவத்தைத் தவிர வேறு எதுவும் மிச்ச மில்லை. இடியுண்ட மனை, தறியுண்ட மரங்கள், உருக்குலைந்த அந்த வீடு, ஒரு பயங்கரம் நடந்து முடிந்த சற்றுமுன் வரைக்கும் அந்த வீட்டுக்கு சுமையூட்டிய உயிர்களில் ஆறு உயிர்களைக் குண்டுகள் உறிஞ்சி எடுத்துவிட்டன.

அந்த ஆறு உயிர்களில் ஒன்று உடையாரின் இரத்தப் பூ. 21 வயது நிரம்பிய யாழினி. அந்த மாணவியின் மகிழ்ச்சியின் சுடர் தெரிந்த வாழ்வை, தொடைகிழித்த இரும்புத்துண்டு ஒன்று வழித்தெடுத்துச் சென்றுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற ஐந்து பேரும் வேலையாட்களாய் வந்து உடையாரின் உறவுகளாய் நெருங்கியிருந்தவர்கள்.

உடல்களைக் கிழித்து உயிரை எடுத்த இரும்புத்துண்டுகள், வேறு ஆறு சீவன்களில் உடலை மட்டும் கிழித்துவிட்டு உயிரை எடுக்காமல் விட்டுவிட்டன. அந்த ஆறு உயிர்களில் உடையாரின் மூத்த மகள் பாமினியும் ஒருவர். பாமினி என்பவர் எமது பாடசாலையின் ஆசிரியை. இவருக்குத் தான் எட்டு நாட்களுக்கு முன்பு திருமணம் கோலாகலமாக நடந்தது. அதில் நாங்களும் பங்கேற்றோம். எச்சங்கள் துலக்க விகாரமாகவும் பரிதாபமாகவும் காட்சியளித்தது.

வீட்டுக்கருகில் உடையார் அமைத்திருந்த பதுங்குகுழி மட்டும் அலுங்காமல் குலுங்காமல் அப்படியே இருக்கிறது. அது மனிதர்களை பொத்திக்காக்க வாய்ப்பளிக்கவில்லை. யூதன் கொடுத்த சிங்க குட்டிகளால் தற்போதைய காலத்தில் பற்பல இடங்களில் நடக்கின்றது. இதுவே இவையெல்லாம் இஸ்ரேயில் நாட்டவன் செய்த கிபீர்ச் சிங்கக் குட்டிகளை இன்று ஸ்ரீலங்கா சொந்த நாட்டவனான எம்மீது பாய விட்டு பழி வாங்குகிறது.

ஊழிக்கூத்தில் உடல்கள் சிதைந்தன
உருக்குலைந்தது இருதயம் அஞ்சிப்போய்
ஓலமிட்டன காக்கைகள், நாய், நரி
ஊளையிட்டன குருதி பொழிந்தது.

பள்ளி முற்றத்தில் காலை ஒன்று கூடல் நடக்கிறது. அதிர்வலைகள்
நெஞ்சைப் பிளக்க மாணவர்கள் நிலத்தில் விழுந்தார்கள், உருண்டார்கள்
பக்கத்து பங்கருக்குள் பாய்ந்தார்கள் பெற்றோர் படபடத்து ஓடிவந்து
பிள்ளைகளை இழுத்துச் சென்றார்கள்.
நாங்கள் பயமின்றி வீட்டைநோக்கி.........

**(1998ல் வெளியான எமது பாடசாலையின் முதலாவது கையெழுத்துப் பிரதியான 'வாகை' இதழ் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஆக்கம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.மா.கணபதிப்பிள்ளை
(பழைய மாணவன்)
B.A.Econ M.A (Pol.sc) Dip.in.Edu.PG DEM
S.L.E.A.S - 1I
முன்னாள் பிரதி அதிபர்
றோயல் கல்லூரி
கொழும்பு 07



# கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையில் 40 வருடங்களுக்கு முந்திய அனுபவம்

கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையாகிய எமது பாடசாலை கற்றல்கற்பித்தல் பணியிலும், புறக்கிருத்திய இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் கடந்த பல ஆண்டுகள் தன் சேவையைச் செய்து தலைநிமிர்ந்து நிற்பது கண்டு புளங்காகிதம் அடைகின்றேன். பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்குப் பின், ஆறாம் தரத்தில் 1966ஆம் ஆண்டு இப்பாடசாலையில் மாணவனாகச் சேர்ந்து க.பொ.த (சா/த)வரை கல்வி கற்ற காலத்தில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல், ஒரு வரலாற்றுப் பதிவாக இருக்கலாம் என்பதால், இத்தலைப்பில் எழுதலாம் எனத் தீர்மானித்தேன்.

**அறிமுகம்**

வட்டக்கச்சிக் குடியேற்றத்திட்டம், 1953ஆம் ஆண்டு இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசனத்தை மையமாகக் கொண்டு வழங்கப்பட்டது. இக் குடியேற்றத்திட்டத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள 13 D.R.O பிரிவுகளில் இருந்து வந்த மக்கள் குடியேறி இருந்தனர். புதிய குடியேற்றம் கொடுக்கப்பட்டு 5 ஆண்டுகளின் பின் படித்த வாலிபர் திட்டம் வழங்கப்பட்டது. அக்காலத்தில் பேரூந்து சேவையில்லை. தட்டிவான் ஒன்று, இரண்டு தடவைகள் கிளிநொச்சிக்கும், இராமநாதபுரத்திற்கும் ஓடும். சனிக்கிழமைகளில் கிளிநொச்சியில் சந்தை, அங்குதான் பெரும்பாலான பொருட்கள் விற்றல், வாங்கல் நடைபெறும். தெருக்கள் எல்லாம் கிறவல் வீதிகள் தான்.

வாய்க்காலில் எந்நேரமும் இரணைமடுக் குளத்தில் இருந்து நீர் பாய்ந்து கொண்டு இருக்கும். இன்று மாயவனூர் என்று அழைக்கப்படும் இடமெல்லாம் அடர்ந்த காடுகள். வாய்க்கால் கரையோரங்களும் காடாகத்தான் இருந்தன. பின்னர் அயலில் உள்ள காணிச் சொந்தக் காரார்கள் பலாத்காரமாக இக்காடுகளை அழித்து, தமது காணிகளுடன் சங்கமமாக்கிக் கொண்டனர்.

மாலை நேரத்தில் நுளம்புச்சத்தம் தான். மழையற்ற காலத்தில் பனி தொடர்ந்து பெய்து கொண்டிருக்கும். யானைகள் அடிக்கடி வந்து கிராமத்து தென்னைகளையும் வாழைகளையும் நாசம் செய்யும். பகலில் குரங்குகளின் தொல்லை. மாமரங்களோடு தென்னை இளநீரோடும், காய்கறிகளோடும் அவை விளையாடும். பாம்புகள் நிறைந்த பகுதி; விசப்பாம்புகள் கடித்துப்பலர் இறந்தனர்.

இத்தனை பிரச்சினைகளுக்குள்ளும் குருவிகளின் ரீங்காரமும், கால் நடைகளின் ஓசைகளும், கேட்டவண்ணம் இருக்கும். அக்காலத்தில் வாழ்ந்த நாங்களும் பிரச்சினைக்குரியவர்கள் தான். வீடுகளில் வீதியோரத்தில் நிற்கும் மாமரங்களுக்கு கல்லால் எறிந்து காய் பறித்தல், கொய்யாக்காய் பறித்தல், மகிழங்காய், பலாப்பழம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளாம்பழம் பறிக்க எனப்பல பகல்நேரங்களில் தெருக்களில் அலைந்து திரிவோம். வீடுகளுக்கு ஒரே தொல்லை; எல்லாத் தொல்லைகளிலும் இன்பம் கண்டிருந்த ஊர் அது.

**மக்கள்**

பலபிரதேசங்களில் இருந்து வந்திருந்த போதும், ஒருவரை ஒருவர் நேசித்து ஒருவருக்கொருவர் உதவி வாழ்ந்தனர். கூட்டுறவு அடிப்படையில் கிணறு கிண்டுதல், அரிவி வெட்டுதல், கொத்துதல், காடழித்தல், சூடடித்தல், கட்டை பிடுங்கல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு இருந்தனர். ஆரம்பக் காலங்களில் தங்கள் தங்கள் சொந்த ஊரை நேசித்து, அங்குள்ள ஆலயங்களில் திருவிழாக்கள் வைபவங்களுக்கு சென்ற மக்கள் படிப்படியாக வட்டக்கச்சிக் கிராமத்தில் கோயில்களை அமைத்துக்கும்பிட்டனர். வட்டக்கச்சி முருகன் கோவில், சில்வா வீதி ஐயனார் கோயில், பன்னங்கண்டிப் பிள்ளையார் கோயில், குளக்கட்டுப் பிள்ளையார் கோயில், சோதி என்ற பெரியவரால் ஏற்படுத்தப்பட்ட தகரப்பிள்ளையார் கோவில், கட்சன் வீதியில் உள்ள கத்தோலிக்க தேவாலயம், சிவசுந்தரம் வீதியில் உள்ள முஸ்லீம் பள்ளி வாசல் போன்றவை அக்காலத்தில் வழிபாட்டுத் தலங்களாகின. வட்டக்கச்சிக்கு வந்த வெவ்வேறு கிராமிய மக்கள் திருமண பந்தங்களாலும் இணைந்தனர். இதனால் ஒரு தாய் பிள்ளைகள் போல் வாழ்ந்தனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தான் பங்கீட்டு அடிப்படையில் பொருட்களை வழங்கும் கூப்பன் முறையில் அரிசி, மா, சீனி போன்ற பொருட்கள் வழங்கப்பட்டன. கட்ஸன் வீதியில் உள்ள சங்கக்கடை எனப்படும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இக்கிராமிய மக்களின் தேவையை நிறைவு செய்தது. இதே சந்தியில் இருந்த அப்பாக் குட்டியாரின் கடை (அன்பு நண்பன் யோகராசாவின் தந்தையார்) ஒன்றுதான் அங்கிருந்தது. சிவசுந்தரம் வீதி சில்வா வீதிகளில் சில கடைகள் இருந்தன. சில்வா வீதி உள்வீதியில் ஒரு ப.நோ.கூ.சங்கக்கடையும், ஆறுமுகம் வீதியில் ஒரு சங்கக்கடையும் பின்னர் திறக்கப்பட்டன. இக்காலத்தில் இங்கு கட்சன் வீதியில் ஒரு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, அடுத்தது சில்வா வீதியில் அமைந்திருந்த இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, இன்னொரு பாடசாலை குளக்கட்டுப் பகுதியில் படித்த வாலிபர் திட்டம் கிடைத்ததன் பின் உருவாக்கப்பட்டு இருந்தது. வட்டக்கச்சியில் ஒரு உபதபாலகமும் குடியேற்ற அதிகாரி அலுவலகமும் (C.O.Office) ஒரு கிராமிய வைத்தியசாலை என்பன கட்சன் வீதிச் சந்திக்கு அண்மையில் அமைந்திருந்தன. ஏனைய இடமெல்லாம் காடாகத்தான் இருந்தது. பன்னங்கண்டி என்று சொல்லப்படும் கனகராயன் ஆற்றுக்கு மேலாகப் போடப்பட்டு இருந்த பாலம் அப்போதிருக்கவில்லை. மழைகாலத்தில் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டு இருக்கும். இவ்வளவு வளர்ச்சி அடைந்த நிலையிலும் பன்னங்கண்டியில் ஒரு மேம்பாலத்தை அமைக்க முடியவில்லை. அக்காலத்தில் க.பொ.த(சா/த) பரீட்சை கிளிநொச்சி மகாவித்தியாலய பரீட்சை நிலையத்தில் தான் நடைபெறும். நாங்கள் டிசம்பர் மாதம் பன்னங்கண்டியால் பயணம் செய்யமுடியாது. இருபுறமும் அடர்ந்த காடு. திருவையாறு போன்ற குடியேற்றத் திட்டங்கள் கொடுக்கப்படாத காலம். இரவு நேரப் பயணம் என்பது நினைத்துப் பார்க்க முடியாது.

இத்தகைய பிரச்சினைகளையும் தாங்கிக் கொண்டு மிகச் சந்தோசமாக மக்கள் வாழ்ந்தனர். மிக நேர்மையாக இருந்தனர். பொய்ச்சாட்சி சொல்லமாட்டார்கள். மிகப்பலம் பொருந்தியவராக இருந்தாலும் அவர்முன் சரியானதை சரியென்று வாதிடும் இயல்புடையவர்களாக இருந்தனர். ஒரு மங்கள வைபவமா? அது அந்தக் கிராமத்தின் மங்கள வைபவம் தான். ஒரு துக்க நிகழ்வா? அது அந்தக் கிராமத்தின் துக்கமாக இருந்தது. இத்தகைய பண்புடைய மக்களைத் தன்னகத்தே கொண்டு வட்டக்கச்சிக் கிராமம் உயிர்ப்புற்று நின்றது.

கறுப்பி குளம், குஞ்சு மிசாக் குளம், மம்மில் குளம் என்ற மூன்று குளங்கள், வாய்க்கால்கள் தான் இங்குள்ள நீர்த்தடாகங்கள். மதகுகளில் இருந்து பாய்ந்து வாய்க்கால் நீரோடு ஓடி, நீரடித்து விளையாடிய அந்த நாட்கள் எல்லாம் மனதில் இன்பம் தருபவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராமநாதபுரம் மேற்குப் பாடசாலையில் இணைந்த பின் நான் பெற்ற இனிமையான என் அனுபவம்:**

ஆறாம் தரத்தில் நான் பாடசாலையில் சேர்ந்தபோது 1966ஆம் ஆண்டு கௌரவ சி.கந்தப்பு அவர்கள் (கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்) அதிபராக இருந்தார். இதற்கு சிறிது காலத்துக்கு முன்தான் கௌரவ (குல்லா) ஐயாத்துரை மாஸ்ரர் அவர்கள் அதிபராக இருந்து இளைப்பாறி இருந்தார். திரு.திருமதி.கந்தப்பு பண்பட்ட சைவக் குடும்பத்தினர். வேட்டி, நசனல், சால்வை அணிந்து திருநீறு நெற்றியில் துலங்க வருவார். இச்சையின்றி எல்லோரும் கையெடுத்துக் கும்பிடும் பண்பினர். இன்று பல ஆசிரியர்களின் ஆதங்கம் தம்மை மாணவர்கள் மதிப்பதில்லை என்பதாகும். மாணவர்கள் மதிக்கத்தக்க வகையில் நாம் எவ்வாறு நடந்து கொள்ளலாம் என்ற நுட்பங்களைத் தெரிந்து அவர்களை கவர்தலும் ஆசிரியத்துவத்தின் பண்புகளில் ஒன்றாகும். அவ்வகையில் அக்காலத்தில் மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தவராக அதிபர் செயற்பட்டார்.

திரு.சி.கந்தப்பு அவர்கள் பாடசாலையை மிகச் சிறப்பாக வழி நடத்தினார். உண்மையில் இப்பாடசாலை தான் மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டு இருக்கவேண்டும். ஆனால் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் க.பொ.இரத்தினம் அவர்கள் தற்போதைய இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தைத் தரம் உயர்த்தியதால், வட்டக்கச்சி மக்களின் அழுத்தமான வேண்டுதலுக்காக கட்சன் வீதியில் உள்ள தற்போதைய வட்டக்கச்சி மகா வித்தியாலயமும் தரம் உயர்த்தப்பட, இப்பாடசாலை கனிஸ்ட பாடசாலையாகவே 1971வரை (க.பொ.த சா/த) தரத்துடன் இயங்கி, அதற்குப்பின் சிறிதுகாலம் 9ம் ஆண்டுவரைதான் இப் பாடசாலையில் இருந்தது. பின்னர் வந்த அதிபர்களின் அர்ப்பணிப்பால் தற்போது தரம் 11வரை உள்ள தரம் II பாடசாலையாக நிலைத்து நிற்கிறது. இப்பாடசாலையை நிலைகுலையாது, பாதுகாத்து அதன் நற்பெயர் பாதுகாக்கப்பட்டு வருவதை நான் நன்கறிவேன். அத்தகைய பணியில் ஈடுபட்டோர் யாவருக்கும் எனது பணிவான நன்றிகள்.

பாடசாலை என்பது தாய் போன்றது. எந்த மோசமான முட்டாளும் தாயையும் தாய்மையையும் மதிப்பான். அது போலத்தான் கற்ற பாடசாலை என்பது எல்லோர் வாழ்விலும் முக்கியமானது. பலர் பெரிய மக்கள் விருப்புள்ள கல்லூரிகளில் படிப்பதை பெருமையாகக் குறிப்பிடுவர். ஆனால் எனக்கு இப்பாடசாலைதான் பெரியது. இங்கு பெற்ற அனுபவங்களும் அன்பும், பாசமும், கருணையும் அதற்கு பின் நான் எங்கும் பெறவில்லை. இதை நான் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளேன். திருமதி.செல்லையா செல்வரத்தினம் அவர்கள் எங்கள் எல்லோரதும் எழுத்தையும், சொல்லாட்சியையும் செவ்வைப்படுத்தச் செய்த இந்த அர்ப்பணிப்பான சேவையை நினைத்துப் பார்க்கின்றேன். பயிற்சிப் புத்தகங்களை எல்லா மாணவர்களிடமும் இருந்து எடுத்துச் சென்று, வீட்டுக்கு கொண்டு போய் அடுத்தநாள் குறிப்புகளுடன் தண்டனையை தனது அன்பான கண்டிப்புடன் தந்து, அவர்கள் கற்பித்த முறைமை பாடத்தில் ஆர்வத்தையும், கற்றலில் விருப்பத்தையும் உருவாக்கின. கௌரவ சுப்பிரமணியம் அதிபர் இப்பாடசாலையின் அதிபராக இருந்த அக்காலமும் பாடசாலையில் பல முன்னேற்றம் ஏற்பட்டது. அவரிடம் நான் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற காலம் ஒரு பொற்காலம் ஆகும்.

கல்விச் சிந்தனையாளர் "ரூசோ" குறிப்பிடும் போது 'School Should be better home' என்பார். (பாடசாலை வீட்டை விட விருப்பமான இடமாக இருக்கவேண்டும்) உண்மையில் நாம் எமது பாடசாலைக்குப் போகாது வீட்டில் நிற்க விரும்புவதில்லை. ஏனெனில் எங்களது பெற்றோரை விட எங்கள் மீது அன்பும், ஆதரவும் காட்டிய ஆசிரியர்கள் பாடசாலையில் இருந்தனர்.

அக்கால கிராமத்தவர்களைப் பாடசாலைகளுடன் இணைக்க அதிபர் சில உத்திகளை கைக்கொண்டார். வயல்களில் புல்லுப்பிடுங்கும் காலத்தில் தெரிவு செய்யப்பட்ட வயல்களில் மாணவர்களாகிய நாங்கள் போய் கால்களால் வயல்களில் மிதித்து உழக்குவோம். உண்மையில் புல்லும் நெல்லும் மடிந்துகிடக்கும். பின்னர் நெல் நிமிர்ந்து விடும் புல் முறிந்துவிடும். வயல் உரிமையாளர்களுக்கு பெரிய மகிழ்ச்சி. எங்களுக்கு பணிசும் தேநீரும் தருவார்கள். வயல் உரிமையாளர்கள் பாடசாலைக்கு பக்கபலமாக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு ஆசிரியரதும் பங்களிப்பு சொல்லி மாளாது. நடுநிலை தவறாது நற்பண்புடன் தன்பிள்ளைகளையும் மாற்றார் பிள்ளைகளையும் ஒன்றாக மதித்து வாழ்ந்த அவர்களின் பண்பியல் வாழ்வியல் முறைமை எல்லோருக்கும் உதாரணமாக அமையலாம். நாம் விதைத்ததை தான் அறுவடை செய்ய முடியும். அந்த ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையால் தான் நாங்கள் இன்று இந்நிலையில் இருக்கின்றோம். இன்று பெற்றோர்கள் தான் பிள்ளைகளுக்கு உதவவேண்டும். அப்படி அன்று எமது ஆசிரியர்கள் எண்ணி இருப்பின் நாங்கள் யாரும் படித்திருக்க வாய்ப்பில்லை. இன்று இப்பாடசாலை மாணவர்கள் அகில இலங்கை ரீதியான போட்டிகளிலும் முன்னணியில் நிற்கிறார்கள் என்று குறிப்பிடுகின்றனர். அத்தகைய அர்ப்பணிப்புடன் செயற்படும் அதிபர்கள் ஆசிரியர் குழாத்தை வட்டக்கச்சி மக்கள் சார்பாக நன்றியுடன் நினைவு கூருகின்றேன். நான் எழுதியுள்ள இந்த குறிப்புக்கள் ஒரு சிந்தனைக் கிளறல் மட்டுமே இத்தகைய பதிவுகள் முறையாக எழுதப்படல் வேண்டும். இல்லையேல் மகாவம்சம், சூளவம்சம் போன்ற இலக்கியங்களால் மறைக்கப்பட்டுப் போன எங்கள் வரலாற்றைப் போல இக்கிராமத்தினதும், இப்பாடசாலையினதும் வரலாறுகள் அற்றுப் போகலாம். இந்தக் கிராமத்தைப் பற்றி பூரண புள்ளிவிபர ஆதாரங்களுடன் வரலாற்றுப் பதிவு செய்ய வேண்டும் என்ற ஆதங்கத்தின் அத்திவாரமாகவே இக்குறிப்புக்களை எழுதுகின்றேன்.

என் பாடசாலை அன்னை பல்லாண்டு பல்லாயிரம் மாணாக்கரை நன் மக்களாக்கி நீண்டு நிலைத்து நிற்பாள். அந்தப் பணியில் ஆர்வமுடன் சங்கமமாகும் அனைத்து ஆளணியினருக்கும் நீண்ட வாழ்வும் சுகமும் இறைவனிடம் வேண்டி நிறைவு செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை. (பாடசாலை வரலாற்றுக் குறிப்பு)

வட்டக்கச்சிப்பகுதியில் ஆரம்ப குடியேற்றமாக அமைந்த காரணத்தால் இப்பகுதியை பழைய குடியேற்றத் திட்டமென அழைப்பர். இக் குடியேற்றத் திட்டம் 12.10.1953-ல் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு குடியேற்றத் திட்டத்தின் அத்தியாவசிய இடை அம்சங்களில் ஒன்றான கல்விக்காக 13.05.1954-ல் இப்பாடசாலை 19 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது.

காணி அபிவிருத்தித் திணைக்களத்தினரால் 110அடி . 20அடி நீளமண்டபம், ஒருஅதிபர் குடி மனை, மலசலகூடம், கிணறு ஐந்து ஏக்கர் காணி அதில் ஒரு விளையாட்டு மைதானம் ஆகிய வசதிகள் அமைத்தும் அடங்கிய இப்பாடசாலை வட்டக்கச்சி கிழக்கு இந்து அ.த.க. பாடசாலை என்னும் பெயரில் நிறுவப்பட்டது அப்போது திரு க. கனகசபை அவர்கள் முதல் தலைமை ஆசிரியராகவும் செல்வி. கா. கௌரியம்மா உதவி ஆசிரியராகவும் கடமையாற்றினர். 27.5.1955ல் இப்பாடசாலை அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு வைபவ ரீதியான நிகழ்ச்சிகளுடன் அன்றைய வடமாநில வித்தியாதிபதியினால் திறந்துவைக்கப்பட்டது. இப்பகுதி சாவகச்சேரித் தொகுதியாக இருந்த காரணத்தால் அன்றைய தொகுதியின் பாராளு மன்ற உறுப்பினர் திரு. வி. குமாரசாமி. காமாக்க அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்த, உதவி அரசாங்க அதிபர் திரு. பத்மநாதன், மற்றும் வித்தியாதரிசிகள், குடியேற்றத் திட்டப்பெரியோர், கிராமசபைத் தலைவர் / ஸ்ரீயோர் திரு. சிதம்பரப்பிள்ளை சாஸ்திரியார் தலைமையில் நடந்த இத் திறப்புவிழாவில் கலந்து கொண்டனர்.

1-ம்வகுப்பில் இருந்து 5-ம் வகுப்புவரை கொண்டதாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை படிப்படியாக உயர்ந்து 1965-ல்10-ம் வகுப்புவரை கொண்டதாக வளர்ந்திருந்தது. இப்பாடசாலை 1955-ம் ஆண்டிலேயே 178 பிள்ளைகளையும் 1956-ல் 206 பிள்ளைகளையும் கொண்டதாக இருந்தது. இலவச மதிய உணவு, இலவசப் பால் என்பன பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டு கல்வியில் அவர்கள் ஊக்கப்படுத்தப்பட்டார்கள். அவர்களுக்கு மதிய உணவாக தினமும் தோசை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. திரு. பே. வே. த. சோமசுந்தரம், திரு. சி. கந்தப்பு ஆகிய அதிபர்கள் சுமார் ஆறு ஆண்டுகள் வரை கடமையாற்றிய காரணத்தினால் இவர்கள் காலத்தில் பாரிய மாற்றங்களை காண முடிந்தது. திரு. பே. வே. த. சோமசுந்தர அதிபராக இருந்த காலத்தில் 277 மாணவர்களும் 11 ஆசிரியர்களும் உடைய பாடசாலையாக உயர்ந்திருந்தது. 10-ம் வகுப்புப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றி கணிசமான பரீட்சை முடிவுகளைப் பெற்றனர்.

1960-ல் ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு முதல் தடவையாக மாணவர் தோற்றினர் 1962-ல் முதல் தடவையாக இல்லவிளையாட்டுப்போட்டி நடைபெற்றது. இக்காலத்தில் கலைவிழா பாரிய அளவில் நடைபெற்றது. திரு. கந்தப்பு அதிபராக இருந்த காலத்தில் 1966-ல் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை என்னும்பெயர் மாற்றத்தைப் பெற்றது. முதற் தடவையாக இப்பாடசாலை மாணவர்கள் சிலர் உயர்தர வகுப்புக்கு தகுதி பெற்றனர். இடைக் காலத்தில் மாணவர்கள் தொகையில் சிறிய வீழ்ச்சி ஏற்பட்டாலும் பிற்பகுதியில் அதனை ஈடு செய்ய காண முடிந்தது. ஆனால் ஆசிரியர் தொகையில் வீழ்ச்சி இருக்கவில்லை. 1975-ம் ஆண்டளவில் மாணவர் தொகை 327 ஆக நாமிருந்தது. 1980-ல் 400 மாணவர்களும், 1985-ல் 430-மாணவர்களும், 1988-ல்527-மாணவர்களும், 1990-ல் 507 மாணவர்களும் உடையதாக வளர்ச்சி பெற்றது. பயிற்றப்பட்ட ஆசிரியர் தொகை 1987-ல் 18-ஆகவும் 1990-ல்21-ஆகவும் அதிகரித்தது. இப்பாடசாலை வட்டக்கச்சி கொத்தணியில் ஒரு சிறிய பாடசாலையாக இருந்தாலும் இங்கே Band வாத்தியக் குழுவினர், முறைசாராக் கல்விப் பிரிவில் தமிழ் தட்டெழுத்து வகுப்பு என்பன1990-ல் ஆரம்பிக்கப்பட்ட விசேட அம்சங்கள் ஆகும். 90' 20' அளவில்ஒரு இரண்டு மண்டபமும்40' 20' அளவினையுடைய அலுவலகமும் கொண்டதாக இப்பாடசாலை இயங்கி வருகிறது. 1990-ல் நடைபெற்ற மாவட்ட இசை நடன நாடகப்போட்டியில் வட்டக்கச்சிக் கொத்தணிக்கான விருதை இப்பாடசாலை பெற்றுக்கொண்டனர். 1990-ல் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் வெற்றி பெற்ற நாடகக் குழுவினர் மாகாணப் போட்டியிலும் கலந்து கொண்டனர். 1989-ல் இரண்டு நாடகங்களும் 1990-ல் இரண்டு நாடகங்களும் மேடையேற்றி கல்வி, விளையாட்டு ஆகியவற்றுடன் இப்பாடசாலை கலைத்துறையிலும் தனித்துவம் பெற்று இயங்கி வருகிறது. இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் பட்டியல் பின்வருமாறு அமைந்துள்ளது.

Sgd. [signature]
11/01/91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை பொன்விழா நிகழ்வில்
பொற்கால அதிபர் திரு. கனக மகேந்திரா அவர்கள்




கிளி/இராமநாதபுரம் மேற்கு வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் (16.02.2016)
விருந்தினராக கலந்து சிறப்பிக்கும் பொற்கால அதிபர்




அன்றைய தினம் தனது 70 ஆவது பிறந்த தினத்தை (16.02.2016)
வித்தியாலய சமூகத்தினருடன் இணைந்து கொண்டாடிய வேளை......



அதிபர் சு.சுதாஸ்கரன் அவர்களுடன்



ஆசிரியர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அரங்கத் திறப்பு விழாவில் விருந்தினர்

திருமதி.க முத்துலிங்கம் ஆசிரியையின்
சேவை நலன் பாராட்டு விழாவில்
பொற்கால நாயகனின்
பிரதிநிதியாக அவரது மகள்





கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை
வைரவிழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பொற்கால அதிபர்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள் பல ...........

புதுப்பிக்கப்படும் எதிர்காலத்திற்காக கடந்துபோன ஒவ்வொரு காலங்களும் ஒவ்வொரு தளங்களும் பதிப்பிக்கப்படுவது அவசியம். அவ்வகையில் எம் பாடசாலை வரலாற்றின் பொற்கால மெனப் போற்றப்படும், திரு. கனக கமகேந்திரா அவர்கள் முதல்வராகப் பதவிவகித்த பத்துவருட காலத்தின் பதிவாக இந்நூல் அமைகிறது. அக்காலத்தில் எம் பாடசாலையின் சூழல், எம் மாணவர்கள் பதித்துவைத்த தடங்கள், பாடசாலை வளர்ச்சிக்குச் சவாலாக இருந்த தடங்கல்கள், தடங்கல்களைத் தாண்டி தடங்களைப் பதிக்க எம் அதிபரும் அவரோடு இணைந்த ஆசிரியர்களும் எதிர்கொண்ட சவால்கள் என அனைத்தையும் பதிவுசெய்வது இந்நூலின் நோக்கம்.

அந்தப்பத்து வருடங்களில் நாடு எதிர்கொண்டிருந்த சூழலில் ஆளணி வளங்கள் ரீதியாகவும், பௌதீக வளங்கள் ரீதியாகவும், ஒரு பாடசாலையை அசுரவேகத்தில் வளரச்செய்வது அவ்வளவு இலகுவான விடயமல்ல. ஊராரின் ஒத்துழைப்புக்களோடும், கல்விசார், கல்விசாரா கட்டமைப்புக்களின் அனுசரணைகளோடும் அவற்றை நடத்திக்காட்டியவர்களின் உழைப்பு நன்றியோடு மரியாதை செய்யப்பட வேண்டியது இனிவரப்போகும் எம் தலைமுறைகளுக்கு முன்னுதாரணமாக அமையக்கூடிய ஒன்று. இலத்திரனியல் ஊடகங்கள் பல்கிப்பெருக ஆரம்பித்த காலங்களில், நூல்களுக்கும் அச்சு ஊடகங்களுக்குமான தேவை எதிர்காலத்தில் குறைந்துவிடும் என்ற கருத்து துறைசார்ந்த பலரிடமும் இருந்தது. ஆனால் சமகாலம் அக்கருத்தை தவறாக்கி இருக்கிறது என்பதே நிதர்சனம். குறிப்பாக ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை யாழ்ப்பாண நூலக எரிப்பில் தொடங்கி இன்றுவரை அவர்களின் தொன்மையையும் சிறப்புகளையும் வெளிப்படுத்தும் ஆதாரங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டுவரும் நிலை அதிகரித்தே வருகிறது. இந்நிலையில் ஒவ்வொரு காலச்சூழலிலும் தமிழரின் வாழ்வியலை நிலைத்த ஆவணங்களாக்கவேண்டிய ஒரு காலக்கடமையும் எமக்குண்டு. அதனை அச்சுத்துறையால்தான் அதிகமாகச் செய்யமுடியும். அந்தவகையில் இந்நூலுக்கான தேவை என்பது எமது பாடசாலையின் வரலாற்றுத்தேவை என்பதைவிட ஒரு இனத்திற்கான கடமையும் கூட.

பாடசாலையின் "பொற்காலத்தை" எடுத்தியம்பும் கருத்துகளையும், இந்நூலுக்கான ஆக்கங்களையும், வழங்கிய அனைவருக்கும் மலர் ஆசிரியர் குழாம் சார்பில் எம் நன்றிகள். குறிப்பாக தம்மிடமிருந்த நூலுக்குகந்த அரிய ஆவணங்கள் பலவற்றையும் பகிர்ந்துகொண்ட எமது பாடசாலையின் பொற்கால முதல்வர் திரு.கனக மகேந்திரா அவர்களுக்கு இந்த ஆவணங்களுக்காகவும், பாடசாலைக்கு பொற் காலமொன்றை தன் உழைப்பினால் உருவாக்கியமைக்காகவும் எம் சிரம்தாழ்ந்த நன்றிகள். நூலாக்கத்தின் போதான இலக்கண, இலக்கிய, சொல்லாடல் திருத்தங்களையும், நூலின் மெருகூட்டலுக்கான ஆலோசனைகளையும் தந்துதவிய எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திரு. இ.வசீகரன் அவர்களுக்கும், எமது உணர்வுகளை அதிகபட்சமாய் உள்வாங்கி அழகிய நூலாக வடித்துத் தந்த திருகோணமலை ஏ.ஆர். பதிப்பகத்தாருக்கும் சிறப்பான நன்றிகள்.

இந்நூல் வெளியீட்டு விழாவுக்காகவும் இந்நூலை முக்கிய தளங்களுக்கு எடுத்துச் செல்வதற்காகவும் கூட்டாக உழைத்த, எதிர்காலத்தில் உழைக்கப்போகும் அனைவருக்காகவும் அதற்கான வசதிகளை முன்வந்து ஏற்படுத்திக்கொடுத்த எம் பாடசாலையின் தற்கால முதல்வர் திரு.சு.சுதாஸ்கரன் அவர்களுக்கும் நன்றி பாராட்டி மகிழ்கிறோம்.

**"தமிழின் மேன்மை தொன்மையில் மட்டுமல்ல தொடர்பிலும் இருக்கிறது"**

**மலர்க்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவாக......

இப்பொற்கால மலருக்காய் ஆர்வத்துடன் நேரத்தை ஒதுக்கி நூல்தாங்கிய பதிவுகளை இருத்திய அனைவருக்கும் எம் நன்றிகள். இந்நூலை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் இப்பாடசாலையோடு அவர்கள் கொண்ட தொடர்பின் அடிப்படையில் வெவ்வேறு வகையான பல உணர்வலைகள் ஏற்பட்டிருக்கும் என்றே நம்புகிறோம். "செல்லரித்துப் போனவைபோக இவைமட்டும் எஞ்சின" என திருமுறைகள் மீட்கப்படும்போது சிதம்பரத்தில் ஒலித்த அசரீதி போல, காலத்தின் கோலத்தில் இல்லாதுபோன ஆவணங்கள் போக எஞ்சியவற்றிலிருந்தும், எமது பொற்கால அதிபர் திரு. கனக மகேந்திரா அவர்களின் நினைவகங்களில் பத்திரப்படுத்தப்பட்டிருந்த நினைவுகளிலிருந்தும், அவர் காத்து வைத்திருந்த சில சொந்த ஆவணங்களிலிருந்தும் தொகுக்க முடிந்த தகவல்களை மட்டுமே தொகுத்திருக்கிறோம். எனவே பகிரப்பட்டிருக்க வேண்டிய தகவல்கள் ஏதேனும் தவறவிடப் பட்டிருந்தால் பொறுத்தருள வேண்டுகிறோம்.

கடந்த காலங்களை பதிவுசெய்வதும், மீட்டுப் பார்ப்பதும், ஆவணமாக்குவதும் வெறும் தனிமனித புளகாகிதமடைதலுக்காக மட்டுமல்ல என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறோம். எதிர்காலத்தின் தொடர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் கடந்தகாலம் பதித்த தடங்களே அத்திவாரங்கள். நாட்டின் போர்ச்சூழலும், பற்றாக்குறைகளும், ஏற்படுத்திய சிரமங்களைத் தாண்டியும் கடந்தகாலங்களில் எமது பாடசாலை அடைந்த வளர்ச்சியும் புரிந்த சாதனைகளும் பிரமிப்பை ஏற்படுத்துபவை. அதன் தொடர்ச்சியில் இன்னும் அடையவேண்டிய பல இலக்குகளையும், நீண்டகாலமாக எமக்கிருந்த சில ஏக்கங்களையும் இத்தருணத்தில் பகிர்ந்துகொள்ள விழைகிறோம்.

ஆளணி வளங்களிலும், பௌதீக வளங்களிலும் பற்றாக்குறைகளிருந்தும் மனித உழைப்பால் மட்டுமே அனைத்திலும் வளர்ச்சியைப் பதிவுசெய்த எமது பாடசாலையைத் தரமுயர்த்தக்கோரி 1995ம் ஆண்டிலேயே விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை அது நடந்தபாடில்லை என்பது பழைய மாணவர்களாகிய எம் ஒவ்வொருவருடைய பெரும் கவலையாகும். நாட்டின் போர்ச்சூழல் தணிந்து எம் பாடசாலையின் அயற்பாடசாலைகள் உட்பட பல பாடசாலைகளும் தரமுயர்த்தப்பட்டுள்ள சூழலில் பல வருடங்களுக்கு முன்பே அதற்காக விண்ணப்பித்திருந்தும் எம் பாடசாலை சார்ந்த குறித்த கோரிக்கை கிடப்பில் போடப்பட்டிருப்பதென்பது சில சந்தேகங்களையும், ஒருவகையான ஏக்கத்தையும் எமக்குள் ஏற்படுத்துகின்றது.

புறக்காரணிகள் எதுவாயிருப்பினும், எமக்கிருந்த சவால்கள் எமது அடுத்த தலைமுறைக்கேனும் குறைக்கப்பட வேண்டுமெனும் கோரிக்கையிலுள்ள நியாயத்தன்மையை புரிந்துகொண்டு இந்நூலைப் படிக்கும் கல்விப்புலத்திற்கு உரியவர்கள் ஆவன செய்யவேண்டுமெனவும், எம் பாடசாலைச் சூழலோடு தொடர்புபட்டவர்கள் இதை நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டங்களை வகுத்து வலுவாகச் செயற்பட வேண்டுமெனவும் உரிமையுடன் கேட்டுக்கொள்கிறோம். இந்நூலால் வெளிப்படுத்திய பொற்காலத் தடங்கள் அழியாச்சுவடுகளாய் தொடரும் நீண்ட பயணத்தின் நெடிய வரலாறாய் நிலைத்திருக்கும்.

நன்றி!!

**பொற்காலத்து பழைய மாணவர்கள்**

**கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் வித்தியாலயம், வட்டக்கச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவியல்



மண்ணில் 16 - 02 - 1946

மனங்களில் 30 - 04 - 2021

## அமரர் கலாபூசணம் கனகராசா மகேந்திரா

**ஓய்வுநிலை அதிபர்**

**(அகில இலங்கை சமாதான நீதவான்)**

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃது றுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீள நினைந்தோம்

**"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்து இவ்வுலகு"**

என்பது வள்ளுவன் வகுத்த வாய்மொழி. எங்கள் மனங்களில் சுடராகப் பிரகாசிக்கும் எங்கள் குலதீபமும் இந்த வரையறைக்குள் வலம் வந்துவிட்டார்.

வாழ்வாங்கு வாழ்ந்த எம் இதய தெய்வத்தின் வாழ்க்கைப்பாதை, இரத்தினச் சுருக்கங்களாய்

**தோற்றம்**

இலங்கைத் திருநாட்டில் தமிழ் மணம் கமளும் வடபுலத்தில் சைவத்தின் மேன்மையும், தொன்மையும் கைவரப்பெற்ற ஈழத்தின் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரம் அமையப்பெற்ற புனித பூமியாம் கீரிமலையில் இருந்து அருள்பாலிக்கின்ற தீர்த்தக்கரை விநாயகர் ஆலய தர்மகர்த்தா பரம்பரையில் உதித்த நாகமுத்து பொன்னையா அவர்கள், இசையும் கலையும் இனிதே குடிகொண்ட அளவெட்டிப் பகுதியில் வீரசைவ குலத்தில் கோயில் வளவார் வழித்தோன்றிய சின்னப்பு ஐயரின் தலை மகள் பொன்னம்மா அம்மையைக் கரம்பற்றி நடத்திய இல்லறத்தின் பயனாக கனகராசா தவப்புதல்வனாய் தாய் மடி தொட்டார்.

கனகராசா அவர்கள் மாவிட்டபுரம் கிளாண் பிரதேசத்தில் பண்ணிசை ஆசானும், புகையிரத ஊழியரு மாகிய அண்ணாவியார் செல்லையா முத்தம்மை மண இணையரின் தவப்புதல்வியும், இசை வல்லுனருமாகிய நல்லம்மா அவர்களுடன் மனையறம் புகுந்து மங்கல மாட்சியோங்க நன்மக்கட் செல்வங்களாக தலைமகனும் எங்கள் நாயகனுமாம் மகேந்திரா முதற்கொண்டு இராசேந்திரா, புவனேந்திரா, பாலேந்திரா, யோகேந்திரா, விஜயேந்திரா, சிவனேந்திரா, ஞானேந்திரா, இரவீந்திரா, தவனேந்திரா, கஜேந்திரா ஆகிய அருமைச் செல்வங்களை ஈன்று பெரிதுவத்ததோடு பன்னிரண்டாவது செல்வமாய் நாகேந்திரத்தையும் தத்தெடுத்துக் கொண்டனர்.

தலைமைப் புதல்வனான மகேந்திரா 1946 ஆம் ஆண்டு பார்த்திப வருடம் மாசி மாதம் பதினாறாம் நாள் (16.02.1946) மாசி மக நட்சத்திரத்தில் மண்ணில் நல்ல வண்ணம் வாழ பொற்பதம் பதித்தார்.

**கல்விக்கரையில்**

மகேந்திரா தனது ஆரம்பக் கல்வியை யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்திலும், இடைநிலைக்கல்வியை யா/காங்கேசந்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும் கற்றுத்தேர்ந்து தன் உயர்கல்வியை யாழ்ப்பாணம் தொழிநுட்பக் கல்லூரியில் பயின்று கொண்டார்.

**தொழில்**

1966 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முதலாம் நாள் அவர் தன் தொழில் நிமித்தம் தனது குடும்பத்தைப் பிரிந்து திருகோணமலையிலுள்ள அவரது பெரிய தந்தையாரின் வீட்டில் தங்கி 1966ல் திருகோணமலை துறைமுக அதிகார சபையிலும், 1974ல் திருகோணமலைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும், 1977ல் திருகோணமலை ப.நோ.கூ.சங்கத்தின் கிராமிய வங்கியிலும் பணியாற்றினார். ஆயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பணியை விடவும் ஆசிரியப் பணியே மேன்மையானது எனக் கருதியவர், ஆசிரியப் பணிக்கு முயற்சித்துக்கொண்டிருந்த வேளை எண்ணம் போல் அவ் அற்புதப்பணியும் அவருக்கு இனிதே கைகூடியது.

### ஆசிரியப்பணி

1978ல் கிளிநொச்சி கண்டாவளை மகா வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியை ஆரம்பித்த மகேந்திரா, 1981–1983 கால இடைவெளியில் கோப்பாய் ஆசிரியப்பயிற்சிக் கலாசாலையில் பயின்று பின் 1983 முதல் கிளிநொச்சி பரந்தன் இந்து மகாவித்தியாலயத்திலும் பின் மீண்டும் கிளி/கண்டாவளை மகா வித்தியாலயத்திலும் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

### அதிபர் பணி

1985ல் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றலாகி அங்கு பிரதி அதிபராக கடமையாற்றிய வேளை 1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அதிபராக பதவி உயர்வுற்று பொறுப்பேற்றுக்கொண்டார். இப்பாடசாலையில் ஒரு தசாப்த காலத்திற்கும்மேல் அதாவது 1989 – 1999 எனும் பெரும்காலப்பகுதியில் அதிபராகப் பணியாற்றி தனது பன்முகப்பட்ட திறன்களாலும் தலைமைத்துவப் பண்புகளாலும் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றி பாடசாலையின் இன்றைய அடையாளத்திற்கும், அபிவிருத்திக்கும் காரணகர்த்தா ஆகினார்.

1999ல் காலத்தின் தேவை கருதி திருகோணமலை மாவட்டத்திற்கு கல்விப்பணிக்காய் இடமாற்றம் வழங்கப்பட்டு தி/செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராக நியமிக்கப்பட்ட அவர் 2003 ஆம் ஆண்டு முதல் அதே பாடசாலையில் அதிபராகவும் பெரும்பணி புரிந்தார்.

2006 ஆம் ஆண்டு அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் ஓய்வுக்காலத்தைப் பயனுறும் வகையில் செலவிட எண்ணி 2008-2009 ஆம் ஆண்டுகளில் ஒபர் சிலோன் எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் இணைந்து பணியாற்றினார்.

### கல்விசார்ந்த இதர பணிகள்

கல்விச் சேவையோடு சேர்ந்தே 1978ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்ட பிரச்சார செயலாளராக பெரும் சேவையாற்றியதோடு, 1986ம் ஆண்டளவில் கிளிநொச்சி மாவட்ட செயலாளராகவும் சேவைபுரிந்தார். 1990ல் கிளிநொச்சி மாவட்ட நுண்கலைமன்றத்தின் உறுப்பினராக அதிபர்கள் சார்பில் நியமிக்கப்பட்டார். வட்டக்கச்சி கொத்தணி பாடசாலைகளின் செயலாளராகவும், 1992ம் ஆண்டு சித்திர பாடத்திற்கான தொலைக்கல்விப் போதனாசிரியராகவும், 1998ம் ஆண்டு சித்திர பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகராகவும் பின்னர் கிளிநொச்சி மாவட்ட பரீட்சைகள் சபையின் வினாத்தாள் தயாரிக்கும் பிரதம பரீட்சகராகவும் நியமிக்கப்பட்டார். இவை தவிர அகில இலங்கை கல்வித் திணைக்கள ஊழியர்களின் கூட்டுறவுச் சங்க (E.D.C.S) வடபகுதிக்குப் பொறுப்பாளராகவும், வட்டக்கச்சி கொத்தணியின் கலாச்சார சபை பொருளாளராகவும் பின்னர் தொடர்ந்து அதன் செயலாளராகவும் கல்விக்கும் கலைக்குமாக சேவையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இல்லறம் என்னும் நல்லறத்தில்**

மகேந்திரா 1979 ஆம் ஆண்டு இல்லற வாழ்வில் இணைந்துகொள்ள நாட்டம்கொண்டு யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்த வீரசைவக் குலத்திலுதித்த நடராசா வாலாம்பிகை தம்பதியினரின் இரண்டாவது புதல்வியாம் அன்னலட்சுமியை மனைத்தக்க மனையாளாக கரம் பற்றினார்.
'மங்கலம் என்ப மனை மாட்சி மற்று அதன் நன்கலன் நன்மக்கள் அதன் பேறு.'
என்பதற்கமைவாக இத்தம்பதியினர் ஹம்சானந்தி, நிதர்சனா, மயூரதன் ஆகிய மூன்று பிள்ளைச் செல்வங்களை இல்லற வாழ்வின் நல் விளைவுகளாக ஈன்று பெரிதுவந்தனர்.

தலைமைப் புதல்வியாம் ஹம்சானந்தி 1982 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் முதல்நாள் பிறந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிகத்துறைப் பட்டதாரியான இவர் தன் தந்தையைப்போல ஆசிரியப்பணியே அறப்பணி என எண்ணி திருகோணமலை ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலத்தில் ஆசிரியராக நியமனம் பெற்று, தற்போது தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். இவருக்குத் தனது அக்காவின் மகனும் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராக பணியாற்றுகின்றவருமான உமாசுதனை மாங்கல்யதாரணம் செய்துகொடுத்து அதன் பயனாக ஆருக்சணி, ஆதீஸ்வர் என்கிற இரண்டு பேரப் பிள்ளைகளை காணும் பாக்கியத்தினையும் பெற்றார்.

இரண்டாவது புதல்வியாம் நிதர்சனா, 1989ம் ஆண்டு மார்கழி மாதம் முப்பத்தோராம் நாள் பிறந்தார். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பட்டதாரியான இவரும் தன் தந்தையைப் போலவே நாடகத்துறை ஆசிரியராக திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் கடமையாற்றி தற்போது திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்தின் நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கான வளவாளராக பணியாற்றி வருகிறார்.

தன் குலம் தழைக்க ஆண் மகவொன்றைப் பெற்றிட வேண்டித் தவமாய் தவமிருந்து 1992ம் ஆண்டு வைகாசி மாதம் பதின்நான்காம் நாள் மயூரதனைப் பெற்றெடுத்தார். இவர் மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல்பீடப் பட்டதாரியாக வெளியேறி திருகோணமலை டோக்கியோ சீமெந்துக் கம்பனியில் விநியோக ஒழுங்கமைப்பு நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றி வருகிறார். இவ்வாறாக தனது மக்கள் செல்வங்களை கல்வித் துறையிலே மிளிர வைத்து

**"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து**
**முந்தியிருப்பச் செயல்."**

என்ற வள்ளுவன் வாக்கைத் தனதாக்கிக் கொண்டார்.

**சமூகப் பணி**

பொதுப்பணியில் மிகவும் ஈடுபாடு உடையவரான இவர் தனது இளமைக்காலம் தொட்டு இறுதிக்காலம் வரை தன்பணிக்கு அப்பால் கல்வி, சமயம், கலை கலாசாரம், அரசியல் எனப் பலதுறைகளிலும் நாட்டம் கொண்டு சேவையாற்றினார்.

சிறுவயதிலேயே கீரிமலை நகுலேஸ்வரா சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டு கழகத்தின் தலைவராக, காங்கேசந்துறை இளந்தமிழர் மன்றத்தின் கலைத்துறைச் செயலாளராக தொடர்ந்து தலைவராக, தமிழரசு வாலிப முன்னணியின் கீரிமலைக்கிளைச் செயலாளராக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீரிமலைக் கிளைச் செயலாளராக, வலி வடக்கு சன சமூக நிலையங்களின் சமாச செயலாளராக, கிளிநொச்சி தமிழ்சங்கத் தலைவராக, தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டத் தலைவராக, ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் தலைமை மாணவனாக என பல்வேறுபட்ட களங்களிலும் பற்பல நிலையங்களிலும் தலைமைத்துவம் ஏற்றுக் கொண்டார்.

பிற்பட்ட காலங்களில் திருகோணமலையில் அகில இலங்கை சமாதான நீதவானாகவும், திருகோண மலை நகரசபை நூலக ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் இருந்து பல பொதுப் பணிகள் புரிந்ததுடன் திருகோணமலைப் பாடசாலை மாணவர்களுக்கான சிறுவர் நாடகங்கள் மற்றும் நாடகக் களப் பயிற்சிப்பட்டறைகள், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கிராமங்கள் தோறும் சென்று விழிப்புணர்வு நாடகங்கள் போன்ற பலவற்றை ஆற்றுப்படுத்தினார். திருகோணமலையில் கவின் கலை மன்றம் எனும் முத்தமிழ் மன்றம் ஒன்றையும் நிறுவி அதன் இயக்குனராக தலைவராக இருந்து இம்மன்றத்தின் ஊடாக “சாம்பல் மேடு” என்னும் நாடக நூல் ஒன்றையும் வெளியிட்டார்.

திருகோணமலையில் துறைமுகக் காவல் துறையில் சமாதானக் குழு உறுப்பினராகவும், 2007ல் விழிப்புக் குழு உறுப்பினராகவும், 2008ல் சனசபாவின் வில்லூண்டி கிளைத் தலைவராகவும், திருகோணமலை வலய மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களங்களால் பாடசாலை மாணவர் களுக்காக நடாத்தப்படுகின்ற தமிழ் மொழித்திறன், கலைத்திறன் போட்டிகளில் நடுவராகவும், திருகோணமலைப் பிரதேச சபையின் கலாசார உறுப்பினராகவும் தன் சேவையினால் சமூகத்தினை பயனுறச்செய்தார்.

திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் இராஜகோபுரத் திருபணிச்சபையின் உப தலைவராகவும், தொண்டர் சபையின் தலைவராக இருந்து சமயத்தையும், சமய மலர்ச்சியை சமூகத் தில் உருவாக்குவதிலும், அறநெறிப்போதனைகளை கற்பித்தலின் மூலம் இளம் சமுதாயத்தை வளப்படுத்துவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

**விருதுகளும் கௌரவிப்புகளும்**

- 2010ம் ஆண்டு இலங்கை கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன், கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு இலங்கையில் கலைத் துறையின் முன்னேற்றத்தின் பொருட்டு பங்காற்றிய மிகச்சிறந்த சேவைக்கான உபகாரமாக “கலாபூசணம் அரச விருதினைப்” பெற்று மகிழ்ந்தார்.
- 2010ம் ஆண்டு கிழக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் காணி, காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் நாடகத் துறைக்கு சிறப்பாகப் பணியாற்றியமைக்கு “கௌரவ முதலமைச்சர் விருது (நாடகத்துறைக்காக)” வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.
- 2010ம் ஆண்டு திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் கல்வி மற்றும் நாடகத்துறையில் சேவையாற்றியமையப் பாராட்டி “பிரதேச சாகித்திய விருது” வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- 2013 ம் திருகோணமலையில் நடைபெற்ற தமிழ் விழாவில் நெடுநாள் இலக்கியச் சேவையையும் அர்ப்பணிப்பையும் நினைவுகூர்ந்து “மூத்த எழுத்தாளர்” கௌரவிப்பினைப் பெற்றுக் கொண்டார்.
- 2014ம் ஆண்டு திருகோணமலை நகரில் கலை இலக்கியத்துறையில் சிறப்புப் பணிக்கும் அதன் நேர்மைகளுக்கும் பங்களித்தமைக்காக (சிறந்த கலா வித்தகர் விருது) “நகரமுதல்வர் விருதும்” இவருக்கு வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2014ம் (2013 இற்குரிய) ஆண்டு கிளிநொச்சி மாவட்டத் தமிழ் சங்கத்தினால் கலைத்துறையினூடாக தமிழையும், தமிழ் பண்பாட்டையும் வளர்ப்பதில் முன்னின்று உழைத்தமைக்காக "தமிழ் எழில் விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

- 2018ம் ஆண்டு அகில இலங்கை தமிழ் விவாதிகள் கழகத்தினால் விவாதத்துறையின் வளர்ச்சிக்கு அரும்பணியையும், அர்ப்பணிப்பையும் ஆற்றியமைக்காக "சொற்சிலம்பம் விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

- 2017ம் ஆண்டு திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம் மற்றும் பழரதேச கலாசாரப் அதிகார சபையும் இணைந்து நடாத்திய பிரதேச சாகித்திய விழாவில் "மூத்த கலைஞராக" கௌரவிக்கப்பட்டார்.

**நாடக ஆற்றுகைகள்**

> **"ஆடுதல் பாடுதல் சித்திரம் - கவி**
> **யாதி யினைய கலைகளில் - உள்ளம்**
> **ஈடுபட் டென்றும் நடப்பவர் பிறர்**
> **ஈன நிலை கண்டு துள்ளுவார்........."**

என்ற பாரதியின் கவி வரிகளுக்கிணங்க அரங்கக் கலைகளில் தன்னிகரற்று விளங்கினார்.

**யாழ்ப்பாணம்**

இவரது ஏழாவது வயதில் அவரது முதல் மேடையேற்றம். ரஸ்யக்குடியரசின் குழுவொன்று கீரிமலைக்கு விஜயம் செய்தது. அவர்களை வரவேற்பதற்கான வரவேற்புரையை நிகழ்த்தப் பணிக்கப்பட்டார். மழலைத்தமிழ் மாறாதிருந்தவரின் பேச்சாற்றலாள் கவரப்பட்ட அங்கு நின்ற ரஸ்ய குழுவினர் தூக்கி மடியில் வைத்து ரஸ்ய நாட்டு சின்னம் பொறித்த பதக்கமும், லெனின் உருவம் பொறித்த கேடையமும் வழங்கி பாராட்டினர். அதுவே அவரது முதல் அரங்கம். அன்று தொடக்கம் அரங்கப் பேச்சாளனாக பலர் பாராட்டயும் பரிசில்களையும் பெற்று மிளிர்ந்தார்.

தனது ஒன்பதாவது வயதில் மாமனாரின் நகுலகான நாடக சபாவின் தென்னிந்திய ஸ்திரிபாட் நடிகை T.P. இராமலெட்சுமியின் "நல்ல தங்காள்" நாடகத்தைப் பார்ப்பதற்காக சென்ற வேளை மூத்த பிள்ளைக்காக பழக்கப்பட்ட நடிகர் அன்று வரவில்லையென்பதால் நடுநிசியில் நித்திரையிலிருந்து எழுப்பப்பட்டு மேடையில் ஏற்றி நித்திரைத்துயரில் இருந்த இவரிடம் மேடையின் நான்கு பக்கமும் நின்று "ஓடு ஓடு மாட்டன் என்று சொல்லு, ஏன் அம்மா என்னைக் கொள்ளுகிறாய்...... என்று கேள்" எனச் சொல்லிக் கொடுக்க அதைக் கேட்டு நடித்ததில் இருந்து தன்னுடைய நாடகப் பிரவேசத்தைப் பலரும் பாராட்ட செவ்வனே ஆரம்பித்தார். தொடர்ந்து வந்த ஆர்வமும் உற்சாகமும் உத்வேகம் கொடுக்க நாடகத் துறையில் தன் சுவடுகளைப் பதிக்கத் தொடங்கினார். சிறுபிள்ளை விளையாட்டாகக் கூட அகண்ட வாங்குகளை மேடைபோல் அமைத்து அயலில் உள்ள சிறுவர்களை அழைத்து பார்த்த சினிமாக்களையும், ஊரில் நடந்த நாடகங்களையும் பார்த்த பாவனையில் வசனம் பேசி நடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

கலைப்பேரரசு அ.த.பொன்னுத்துரை நெறியாள்கையில் உருவான "வல்லவனுக்கு வல்லவன், நல்ல மனைவி, நிறைகுடம்" ஆகிய நாடகங்களில் முக்கிய கதாபாத்திரங்களேற்று நடித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரிமலை நகுலேஸ்வரா சனசமூக நிலையத்தின் சார்பில் "பண்ணையார் மகள்" நாடகத்தை நெறியாள்கை செய்து நடித்து சிறந்த நடிகர் பரிசினைப் பெற்றுக்கொண்டார்

காங்கேசந்துறை இளம் தமிழர் மன்றத்தில் இணைந்து பல நாடகங்களை நடித்துள்ளார். "புயல் அடங்குமா, மாவீரன் அலெக்சாண்டர், தமிழ் தந்த வாழ்வு, மான வீரன் கும்பகர்ணன், பாஞ்சாலி சபதம், மந்தரை சூழ்ச்சி, மனக் கோயில், வீர காவியம், பைத்தியம் எழுதின கவிதை, உயிர் உனக்கே, பென்னாத்தை, குடிப்பேனடி பொலிடோள், தம்பி கொழும்பாலை, முடிச்சு" போன்ற பல நாடகங்களில் இவர் முக்கிய கதாப்பாத்திரமேற்று நடித்துள்ளார்.

அமரர் பொன்.கணேசமூர்த்தி, அமரர் நா.கருணானந்த சிவம், முன்னால் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தமிழ் நாடகத் தயாரிப்பாளர் பி.விக்னேஸ்வரன் ஆகியோருடன் பல நாடகங்களில் நடித்து முன்னணிக் கலைஞர் என்ற நிலையில் திகழ்ந்தார்.

இவர் இளங்குமரன் கலாமன்றத்தில் இணைந்து கலாபூசணம் க.செல்லத்துரை அவர்களின் நெறியாள்கையில் உருவான "கண்ணீர், நீதிக்கொருவன்" ஆகிய நாடகங்களிலும், கவிஞர் கைலாசபிள்ளை அவர்களின் நெறியாள்கையில் உருவான "நீ செய்தது சரி" என்னும் நாடகத்திலும் நடித்துள்ளார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் "வீர காவியம்" என்னும் நாடகத்தை தயாரித்து நடித்து முதலாம் இடத்தைப் பெற்றதுடன் சிறந்த நடிகர் பரிசையும் பெற்றுக் கொண்டார். அங்கு "அரிச்சந்திர மயானகாண்டம்" இசை நாடகமும் இவரின் தலைமையில் நடிக்கப்பட்டது. இவரது ஏனைய நாடகங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். "பாதுகை பெற்ற பாக்கியம், காதலே நீ வாழி, சாணக்கியன்" முதலான நாடகங்களில் இவர் நடித்து பலரின் பாராட்டுக்களையும் பெற்றார்.

**கிளிநொச்சி**

தனது ஆசிரியப்பணி, அதிபர் பணிக்காகத் தான் அமர்ந்திருந்த பாடசாலைகளில் நாடகத்தைத் தயாரித்து நெறியாள்கைசெய்து மாணவர்கள் மூலம் அவற்றை ஆற்றுகைப் படுத்தினார். அந்த வகையில் கண்டாவளை மகா வித்தியாலயத்தில் இவரால் எழுதப்பட்டு நெறியாள்கை செய்யப்பட்ட "பிரகலாதன் நாடகம்" வட மாகாணத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. மேலும் அப்பாடசாலையில் "அவள் ஒரு காவியம், வீர காவியம், போலிகள், ஒரு புஸ்தகம்" ஆகிய நாடகங்களும் இவரால் நெறியாள்கை செய்யப்பட்டன.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழாவில் அவரால் எழுதி நெறியாள்கை செய்து முதன்மைப் பாத்திரமேற்று நடித்த "ஒரு ஆசிரியர் ஓய்வு பெறுகிறார்" என்ற நாடகத்திற்காக கவிஞர் காரை.சுந்தரம்பிள்ளை அவர்களினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்

இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இவரால் இயற்றப்பட்டு மேடையேற்றப்பட்ட "தேர் வருகுது" என்ற நாடகமும் "சிலம்புச்செல்வி" என்ற நாடகமும், மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றிருந்தது. "காத்தவராயன் சிந்து நடைக் கூத்து" கூத்துக்களில் முதலிடம் பெற்றது. "மயானகாண்டம்" இசை நாடகப் போட்டியில் இரண்டாம் இடத்தினைப் பெற்றது. மேலும் அப்பாடசாலையில் "பிசாசுகள், வாலி வதை, தேர் வந்தது, மானிட மொட்டொன்று கருகுகிறது. நாளை விடியும், காட்டில் ஒரு மாநாடு, சிறுவர் நாடகம்" ஆகிய நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1978ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாட்டில் முற்றிலும் பெண்களைக் கொண்ட "வீரகாவியம்" மற்றும் "காவியம்" எனும் நாடகங்களையும் நெறியாள்கை செய்து அரங்கேற்றினார். தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவர்களுக்காக "கற்புக்கனல்" ,செல்வநாயகபுரம் இந்து மகளிர் கல்லூரிக்காக "புத்திமான் பலவான், காட்டில் ஒரு களியாட்டம்", தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரிக்காக "அடம்பன் கொடிகள், சம்பிரதாயத்தேர்" நாடகங்களும் தி/ஆத்திமோட்டை தமிழ் மகா வித்தியாலயத்திற்காக "நெறிநின்றார்" நாடகத்தினையும் எழுதி நெறியாள்கை செய்தார். இவை தவிர "மண்ணின் அவதாரம், புட்டிப்பால், இரத்தம் இரத்தம், சாம்பல்மேடு ஆகிய சமூக சீர்திருத்த நாடகங்களையும் எழுதியும் நெறியாள்கை செய்து திருகோணமலையின் பின்தங்கிய பிரதேசங்களில் மேடையேற்றினார். திருகோணமலை பிரதேச சாகித்திய விழாவிற்காக பிரதேச சபை ஊழியர்களைக் கொண்டு "நெற்றிக்கண்" நாடகத்தையும் "மனிதத்தைத் தேடும் மனிதம்" நாடகத்தினையும் தயாரித்து நெறியாள்கை செய்தார். இவைகள் திருகோணமலையில் இவரால் தயாரித்து நெறியாள்கை செய்யப்பட்ட நாடகங்கங்களில் சிலவாகும்.

ஒரு "மானிடமொட்டு கருகுகிறது" மற்றும் "சாம்பல் மேடு" எனும் இரு நாடக நூல்களையும் இவர் வெளியிட்டிருந்தார். இதில் சாம்பல்மேடு நூலில் "புட்டிப் பால், இரத்தம் இரத்தம், சாம்பல்மேடு" ஆகிய மூன்று நாடகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்விதமாக நாடகத் துறையில் இவர் சிறந்த நடிகராக, சிறந்த நெறியாளராக, தயாரிப்பாளராக, நாடக எழுத்தாளராக, நாடக ஆசிரியராகவும் முன்னணிக் கலைஞராகவும் திகழ்ந்தமை யாவரும் அறிந்த உண்மையாகும்.

"இருந்தாலும் இறந்தாலும் பெயர்சொல்ல வேண்டும் இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்" என வாழ்ந்து காட்டிய வள்ளல்.

## நிறைவாக.......

ஊரும், உலகமும் பாராட்டும் வண்ணமும் தன் சொந்தமும், சுற்றமும் பெருமை கொள்ளும் வண்ணமும் நல்லதோர் கணவனாய், தந்தையாய், உற்றாராய், உறவினராய் கிடைக்கும் கணங்களில் எல்லாம் கல்விப்பணி, கலைப்பணி, சமயப்பணி, சமூகப்பணி மற்றும் கலாச்சாரப்பணியென வாரிவழங்கும் தலைவனாய் எங்கள் இதயதெய்வம் தன் வாழ்க்கைப்பாதையை செவ்வனே முன்னெடுத்துச் சென்று கொண்டிருந்த வேளையிலே தான் அவர் வாழ்க்கை என்னும் புத்தகத்தின் இறுதிப்பக்கத்திற்கு எம்மையறியாமலே வந்து நாம் நின்றோம். அந்த நதி கடலில் கலக்க இருப்பதை அவர் கூட அறிந்திருக்கவில்லை.

நம்ப முடியவில்லை, 2021ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 29ம் நாள் நள்ளிரவு ஒரு பொழுதாகக் கழியாது எங்கள் வாழ்வைக் கவிழ்த்து, 30ம் நாள் முன்னிரவு எம் இதய தெய்வத்தின் நல் இதயம் துடிப்பதை நிறுத்திக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நான் நிரந்தரமானவன்**
**அழிவதில்லை**
**எந்த நிலையிலும்**
**எனக்கு மரணமில்லை"**

என்பதே எங்கள் குல தெய்வத்தின் குரலாக எமக்குள் ஒலித்துக் கொண்டிருக்கிறது. நிறைவான பெரு வாழ்வை அன்று கண்டவர் மரணமில்லாப் பெரு வாழ்வை இன்று பெற்று விட்டார்.

**"வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல மற்றவர் மனதில் நீ வாழும் வரை"** என்ற அன்னை தெரேசாவின் அமுத வாக்கின் வழி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து மனங்களில் உறையும் நடையின் நின்றுயர் நாயகனை எங்கள் சுவாசக் காற்றாக சுவாசித்த வண்ணம் பயணிக்கிறோம்.

**"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்து**
**உள்ளத்துள் எல்லாம் உளன்"**

**ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !**

**-குடும்பத்தினர்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுரை

**கிளிநொச்சி மாவட்டத்தின் தனிப்பெரும் ஆளுமை அதிபர். கனக மகேந்திரா அவர்கள்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் பெரும்பங்காற்றிய ஓய்வுநிலை அதிபர் திருவாளர்.கனக.மகேந்திரா அவர்கள் இன்று அதிகாலை இறைபதம் அடைந்திருப்பது எம் எல்லோரது இதயங்களையும் கனக்கச் செய்கிறது.

தான் வாழ்ந்த காலத்தே அவர் இந்த மண்ணுக்கு ஆற்றியருக்கின்ற பணி மிகக் கனதியானது. கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையின் பழைய மாணவன் என்ற அடிப்படையில் அதன் ஆரம்ப காலங்களையும், கனக.மகேந்திரா சேரின் காலத்தேயான வளர்ச்சிப் போக்கையும் நான் கண் கூடாகக் கண்டு மகிழ்ந்தும், நெகிழ்ந்தும் இருக்கிறேன்.

1989-1999 ஈழ விடுதலைப்போர் வலுப்பெற்றிருந்த காலம் அது. ஈழத்தமிழர்கள் மீது விதிக்கப் பட்டிருந்த பொருளாதாரத்தடைக்கு மேலாக பாடசாலைகளில் பௌதீக வளங்கள் இல்லை, வசதிகள் இல்லை, போதியளவு ஆசிரிய ஆளணி இல்லை ஆனால் அவற்றுக்கு மத்தியிலும் கல்வி, கலைகள், விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும் தடம் பதித்து, தன் சமூகத்தையும், நாட்டையும், மொழியையும், இனத்தையும் நேசிக்கின்ற மாணவ சந்ததி ஒன்றை உருவாக்க முடியும் என்பதையும், இத்தனை வளப்பற்றாக்குறைகளுக்குள் இடம்பெயர்ந்து வந்த மாணவர்களையும் இணைத்து இரு நேரப் பாடசாலையை நடாத்திக்காட்டியிருந்தமையும் அந்தப் பாடசாலை வரலாற்றில் கனக.மகேந்திரா சேரின் காலம் பொற்காலமே என்பதை புரியவைக்கும் சான்றுகள்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்துறையை அலங்கரித்த ஆளுமைமிக்க அதிபராக, கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கத்தின் தலைவராக, இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக என பல்வேறு பதவிநிலைகளில் இருந்து தன் சார்ந்தோரின் உயர்வுக்காய் உழைத்த சமகாலத்தில் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்து தமிழ்ப்பணியும், கலைப்பணியும் ஆற்றியிருந்தமையும் விடுதலைப் போராட்டத்தின் மீது அவர் கொண்டிருந்த பற்றும், விருப்பும், அதற்காக அவர் ஆற்றியிருந்த தமிழ்த் தேசியப் பணிகளும் என்றும் எம் மனங்களில் நிறைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அவரது குடும்பமே ஓர் கலைக்குடும்பமாக இருந்ததற்கமைய கலாபூசணம் விருது பெற்ற ஓர் கலைஞனாக இருந்து கலைவிழாக்கள், அரங்க நிகழ்வுகள், இலக்கிய மன்றங்கள் ஊடாக தன் பள்ளி மாணவர்களை செழுமைப்படுத்தியதோடு, கிளிநொச்சி மாவட்டத்திலேயே முதல்முறையாக கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையில் இருவழி மேடை அமைப்பை நிறுவி கலை நிகழ்வுகளை அரங்கேற்றிக் காட்டிய பெருமையும் அவருக்குரியதே! அணிநடை, கிளித்தட்டு, பெரு விளையாட்டுக்கள், மைதான விளையாட்டுக்கள், உடற்கல்விப் போட்டிகள் என அனைத்திலும் பெயர்சொல்லும் படியான திறமைகளை வெளிப்படுத்தும் அளவுக்கு அப்பள்ளி மாணவர்கள் செழுமைப் படுத்தப்பட்டதும் இவரது காலத்திலேயே தான்.

உலகில் நடக்கும் தவறுகள், குற்றங்கள், அதர்மம், ஆணவம் எல்லாவற்றிலுமிருந்து கடவுள் அவதாரங்கள் மனிதகுலத்தைக் காத்துநின்ற வரலாறுகளைக் கடந்து, அந்தத் தவறுகளும், குற்றங்களும், அநீதிகளும், அக்கிரமங்களும் நிகழ்ந்து விடாது தடுக்கும் பாரிய பொறுப்பை ஏற்று நின்ற சமூகச் சிற்பிகளுள் ஒருவராக, அதிகாரிகளின் தவறுகளைக் கூட துணிந்து நின்று எதிர்க்கும் துணிச்சல் மிக்கவராக தானும் இருந்து அது போன்றே தன் மாணவர்களையும் புடம் போட்டிருப்பதற்கு, இன்றும் நிலத்திலும், புலத்திலும் நிமிர்ந்து நிற்கும் அவரது மாணவர்களே சாட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டக்கச்சி மண்ணின் வரலாற்றோடு இரண்டறக்கலந்திருந்து இராமநாதபுரம் மேற்கு பாடசாலை அபரிமிதமான வளர்ச்சி காணுமளவிற்கு அரும்பணியாற்றி பல்லாயிரம் மாணவர்களை உருவாக்கி, என்போன்ற பலரின் அதிபர் பணிக்கான வழிகாட்டியாய் இருந்த கனக.மகேந்திரா சேர் எமது மண்ணுக்கும், மக்களுக்கும், மாணவர்களுக்குமாய் ஆற்றிய பணிகள் மகத்தானவை. எமது பிரதேசத்தின் வளர்ச்சிப்படிகள் ஒவ்வொன்றிலும் இவரது சிந்தனைவீச்சும், செயல்திறனும் நேரடியாகவும், மறைமுகமாகவும் படிமம் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒரு ஆசிரியராக மட்டுமன்றி தனது மாணவர்களின் எதிர்காலம், ஒழுக்கம், மனப்பாங்கு, செயற்திறம், சமூகவிழுமியம் போன்றவற்றில் நீண்ட கண்காணிப்பை பேணி வந்தவராக இவரை நான் பார்த்திருக்கிறேன். ஆனாலும், வட்டக்கச்சி மண்ணுக்கும், மக்களுக்கும், இவருக்குமான நீண்டதோர் பற்றுறுதி மிக்க பந்தத்தின் அடிப்படையில் ஓய்வின் பின்னரும் அவர் இங்கேயே ஓர் காணி, வீடு என்று எமது மண்ணோடும், மக்களோடும் தன் இறுதிக் கணங்களை கழித்திருக்கலாமோ என்ற ஏக்கம் என் நெஞ்சில் நெருடலாகவே இருக்கிறது.

ஆரம்பத்திலிருந்தே தனது சொல்லாலும், செயல்களாலும் தமிழ்த் தேசியப் பற்றாளனாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டதோடு, தன் இறுதி மூச்சு வரை தமிழ்த்தேசியத்தையும், கிளிநொச்சி மண்ணையும், மக்களையும் நேசித்து வாழ்ந்து, உடலால் மறைந்தாலும் எம் எண்ணங்களெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் கனக.மகேந்திரா சேரின் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுவதோடு அவரது திடீர் மறைவால் மீளாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் அவர் சார்ந்த அனைத்து உறவுகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்.**
**பாராளுமன்ற உறுப்பினர்.**
**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சமூகச் சீர்திருத்த நாடகங்களை உருவாக்குவதிலேயே கவனம் செலுத்துகின்றேன்'

சமூக சீர்திருத்த நாடகங்களை வழங்கி சமூகப் புரட்சியை ஏற்படுத்தியவர் ஓய்வுபெற்ற கல்லூரி அதிபரும் மூத்த நாடகக் கலைஞருமான கனக.மகேந்திரன். 'சாம்பல்மேடு' என்ற பெயரில் அவர் எழுதிய சமூக சீர்திருத்த நாடகங்களின் தொகுப்பு அண்மையில் திருகோணமலையில் வெளியிடப்பட்டது. அவற்றில் ஒன்றுதான் 'பட்டிப்பால்'. மற்றவை இரத்தத்தின் இரத்தம், சாம்பல்மேடு ஆகியன. இளவயது திருமணம், குடும்ப வன்முறை, சிறுவர் வன்முறை ஆகியவற்றைக் கருப்பொருள்களாகக் கொண்டு அவர் இந்நாடகங்களை எழுதியிருக்கின்றார்.

புரட்சிப் படைப்பாளியாக தமிழ் இலக்கிய உலகில் மதிக்கப்படும் கனக.மகேந்திரன் தினக்குரல் வாசகர்களுடன்.

கேள்வி : உங்கள் நாடக உலகப் பிரவேசம் பற்றிக் கூறுவீர்களா?

பதில் : [illegible] நாடகம் [illegible] இராமலிங்கம் [illegible] நடித்துக் கொண்டிருந்தார். [illegible] எழுப்பி [illegible] போட்டுவிட்டான். மூத்த [illegible] பாத்திரத்திற்குத் தெரிவான நடிகர் [illegible] அழைக்கப்பட்டேன். [illegible] பாராட்டப்பட்டேன். [illegible] நாடகத்தில் தொடர்ந்து நடிக்க [illegible] காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் [illegible] 'காண்டம்' நாடகத்தின் [illegible] நாடகங்களிலும் [illegible] ஆசிரியராக [illegible] பொன்னுத்துரை [illegible] மனைவி, [illegible] முக்கியமான பாத்திரங்களில் நான் நடித்தேன். எனது 12,13ஆம் வயதில் [illegible] 'இன்று நீ நாளை நான்', 'சிங்கள [illegible]' ஆகிய நாடகங்களை நெறியாள்கை செய்தேன். காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மாணவர், [illegible] மாணவர் இணைந்து காங்கேசன்துறை இளந்தமிழ் மன்றம் என்ற கலை, இலக்கிய அமைப்பை ஆரம்பித்தனர். அம்மன்றத்தின் நாடகத்துறை செயலாளராக நீண்டகாலம் இருந்தேன். பின்னர் தலைவராகவும் பணியாற்றினேன். மன்றத்தின் முதல் அடங்குமா, [illegible] நாடகங்களில் [illegible] அமரர் கருணாநந்தசிவம், [illegible] கூட்டுத்தாபனத்தின் முன்னாள் நாடகத் தயாரிப்பாளர் பி.விக்னேஸ்வரன் ஆகியோருடனும் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். [illegible] நெறிப்படுத்தலில் இளவாலை இளங்குமரன் [illegible] நெறிப்படுத்தலில் [illegible] நாடகத்திலும் முன்னாள் [illegible] நாடகத்திலும் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளேன். எமது கலாசாலையின் விரிவுரையாளர் அமரர் [illegible] சில நடன உத்திகளைப் பயின்றேன். அவர் எனது நாடகங்களுக்கு பாடல்களை எழுதி இசை அமைத்துத் தந்துள்ளார். கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நாளை நமதே, [illegible], [illegible] ஆகிய நாடகங்களை எழுதி மேடை யேற்றினேன். நாடகத்தைப் பார்த்த கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையின் பாராட்டுதலைப் பெற்றேன். ஆசிரியர்களால் நடிக்கப்பெற்ற 'ஒரு ஆசிரியர் ஓய்வுபெறுகிறார்' என்ற நாடகத்தை எழுதி மேடையேற்றினேன்.

முன்னாள் [illegible] கல்விப் பணிப்பாளர் [illegible], நாடக அரங்கக் கல்லூரி விரிவுரையாளர் [illegible] ஆகியோர் ஆசிரியர்களுக்கு நாடகக் களப் பயிற்சியை நடத்தினர். மாவட்டம் முழுவதும் நாடகச் சுற்றுலா நாடகங்களை மேடை ஏற்றுவித்தனர். அவர்களில் நானும் ஒருவனாக இருந்து செயல்பட்டேன்.

இராமநாதபுரம் [illegible] வித்தியாலயத்தில் அதிபராக இருந்தபோது [illegible] எழுதித் தயாரித்த [illegible] நாட்டிய நாடகம் மற்றும் செங்கோல் [illegible] தேசிய [illegible] மட்டத்திலும் [illegible] நாடகம் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றன. திருகோணமலையில் 1972இல் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் [illegible] பெண்களே நடித்த [illegible] நாடகத்தை மேடையேற்றினோம். அதே குழுவினர் நடித்த [illegible] திருமலை இந்துக் கல்லூரியில் [illegible] அரங்கில் மேடையேற்றப்பட்டது. திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரி ஆசிரியர்களின் [illegible] நடிக்க நாடகங்களையும் நான் நெறிப்படுத்தினேன். திருகோணமலை மாவட்டத்தில் [illegible] பாடசாலைகளின் ஆசிரியர், மாணவர்களுக்கு [illegible] அரங்கப் பயிற்சிப் பட்டறைகளை திருகோணமலை கல்வி [illegible] இணைந்து நடத்தியுள்ளேன்.


புரட்சிப் படைப்பாளி
கனக.மகேந்திரனுடன்
ஒரு நேர்காணல்

கேள்வி :— உங்கள் நாடக கலைஞர்கள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

பதில் :— கிளிநொச்சியில் ஆசிரியர், அதிபராகப் பணியாற்றிய காலத்தில் கலைஞர்களை உருவாக்கியுள்ளேன். நாடகத்துறையில் ஒரு சிறந்த முன்னோடியாகத் திகழும் [illegible] பகுதியில் பல நாடகங்களை எழுதித் தயாரித்து மேடையேற்றி வந்த திருமதி [illegible] ரஜனி இவர்கள் எல்லோரும் எனது கலைஞர்களே எனக் கூறுவதில் பெருமை கொள்கின்றேன்.

கேள்வி : உங்கள் நாடக மேடை அனுபவத்தில் மறக்கமுடியாத சம்பவம் பற்றி ..?

பதில் :— '[illegible]' என்ற நாடகம். ஏழ்மையில் [illegible] தங்கையை ஏமாற்றிய [illegible] வெட்டுவதற்கு அண்ணன் [illegible] எடுத்துக்கொண்டு ஓடுகின்றான். இக்காட்சியை மேடையில் பார்த்துக் கொண்டிருந்த [illegible] உணர்ச்சிவசப்பட்டு '[illegible]' என்று கூறிக்கொண்டு மேடையில் பாய்ந்தார். அவ்வளவாக [illegible] ஏமாற்றிய [illegible] முன்னாள் நாடகத் தயாரிப்பாளர் பி.விக்னேஸ்வரனும் நடித்திருந்தோம். அமரர் கருணா [illegible] 'மனைச்சேவகி' நாடகத்தை நெறிப்படுத்தியிருந்தார். [illegible]

கேள்வி : உங்களைப் பற்றி எங்களுடன் சில வார்த்தைகள்?

பதில் : எனது தந்தை [illegible] நான். எனது தந்தையார் 1965இல் [illegible] உதவிப் பணிப்பாளராக பணியாற்றினார். எனது அம்மா [illegible] கல்லூரியில் [illegible] பெற்றவர். [illegible] எனது தந்தை, [illegible] [illegible] [illegible] [illegible] எனது [illegible] [illegible] [illegible] முதல் [illegible]

கேள்வி :— கிளிநொச்சி, இராமநாதபுரம், [illegible] ஆகிய இடங்களில் ஆசிரியராக, அதிபராக பணிபுரிந்த நீங்கள், பின்னர் திருகோணமலை செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றீர்கள். இப்போது எவ்வாறு நாடகப் பணியைச் செய்கிறீர்கள்?

பதில் :— இன்றும் எனது நாடகத்துறைச் சேவை தொடருகின்றது. [illegible] [illegible] பெண் அடக்குமுறை, இளவயதுத் திருமணம், சிறுவர் [illegible] ஆகிய [illegible] சமூகத்தை [illegible] சமூகச் சீர்திருத்த நாடகங்களை எழுதி, [illegible] [illegible] [illegible] [illegible] மேடையேற்றியுள்ளேன். [illegible] [illegible] தமிழ்மொழித் தினப் போட்டிகளுக்கு நடுவராகப் பணியாற்றி வருகின்றேன்.

சந்திப்பு :- சி.குருபரன்

பிரசுரம் : தினக்குரல் 10.10.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மூத்த நாடகக் கலைஞர் கனக மகேந்திரன் உடனான நேர்காணல்

# 'நவீன யுகத்தின் மாற்றத்தால் கலைகள் மருவிச் செல்கின்றன'

மக்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் ஒரு கலைவடிவம் நாடகம், கலைப் பொருள் கொள்ளப்படுகிறது. இக் கலைகள் நமது சமூகத்தின் பெருமையையும் தமது பாரம்பரியத்தையும் பிரதிபலிப்பவை தம் உணர்ச்சிகளுக்கு வடிகாலாக அமைந்து நம் உள்ளத்தை தூய்மைப்படுத்துபவை. அந்த வகையில் திருக்கோணமலையை வசிப்பிடமாகக் கொண்டவரும், தனது 9 ஆவது வயதில் நாடக அரங்கில் மேடையேறி நடித்து இற்றைக்கு 80 வருடங்களுக்கு மேலாக இந்நாடகத் துறையில் ஈடுபட்டு வருபவருமான நாடகக் கலைஞர் கனக மகேந்திரா வை மாலைப் பொழுதில் அவரது இல்லத்தில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

2005 இல் திருகோணமலை செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயத்திலிருந்து அதிபராக ஓய்வு பெற்று, தற்போது திருகோணமலை நகரசபை நாடக ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் வலய, மாவட்ட, மாகாண, மட்டத் தமிழ்தினப் போட்டிகளிலும் மற்றைய கலைப் போட்டிகளிலும் 10 ஆண்டுகளுக்கு மேலாக நடுவராய் பணியாற்றி வருபவரும், கவிதைகளை மரபுத்தின் தளைவோடுகவும், சமாதான நீதவானும், சம்பல்மேடு நாடக நூலின் ஆசிரியராகவும், ஆரம்பத்திலிருந்து இன்றுவரை நாடகப் பயிற்சிகளை இலவசமாக மேற்கொண்டு வருபவருமான இக்கலைஞர் எம்முடன் பகிர்ந்து கொண்ட சுவாரஸ்யமான விடயங்களை வாசகர்களுக்காக தொகுத்துத் தருகின்றோம்.

**உங்களது ஆரம்பகால அதாவது இளமைக்கால நாடகத்தில் நீங்கள் நடித்த அனுபவங்கள் பற்றி கூற முடியுமா?**

எனக்கு 9 வயதிருக்கும் போது கவி பாரதியின் நண்பரான நாடக சபையினர் நாடகத்தைப் பார்க்கவென என்னை தந்தை குடும்பத்தோடு அழைத்துச் சென்றார். நடுநிசிப் பொழுது நான் நல்ல நித்திரை அன்று நல்லதங்காள் நாடகத்தில் இலங்கையில் வாழ்ந்த தென்னிந்திய எதிர்பாட் நடிகை இராமலெட்சுமி நல்லதங்காளாக நடித்துக் கொண்டிருக்கிறார். மூத்தபிள்ளையாக நடிக்கும் கதாபாத்திரம் வராமையினால் எனது தந்தை கிடப்பேன நித்திரைத் தூக்கில் இருக்கும் என்னை மேடையில் ஏற்றிவிட்டார்.

நல்லதங்காள் 6 பிள்ளைகளையும் கிணற்றுக்குள் போட்டு விட்டாள் கடைசியாக என்னைத் தூக்க வரும்போது நான்வர் திகழ ஓடு ஓடு மாட்டன் என்று சொல்லு அம்மா என் ராங்கலைக் கொல்லுகிறாய், சகோதரர்கள் எங்கே என்று கேட்டவன் பாதி மாறிக் கொல்லித் தந்தார்கள் ஏதோ சொல்லுவதைக் கேட்டுச் செய்து விட்டேன். மேடையால் இறங்கும் போது இந் நாடகத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் பாராட்டினார்கள். திரை நடிப்பில் நன்றாக நடித்ததாக வாழ்த்தினார்கள். இதுவே எனது முதல் நாடகப் பிரவேசமாகும். அதனைத் தொடர்ந்து அண்ணாவியரான எனது பேரனார் வசனமும், பாட்டும் எழுதி என்னை அடிக்கடி தொடர்ந்தும் ஊக்குவித்தார்.

தொடர்ந்து பாடசாலை நாடகங்களில் 11 வயதிலிருந்து நடிக்கத் தொடங்கினேன். காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் இல்லம் மட்ட நாடகப் போட்டியில் எமது நாடகம் முதலிடம் பெற்றது. நடுவர்களில் ஒருவரான நடிகமணி வி.வி.வைரமுத்து என் நடிப்பைப் பாராட்டினார். அவர் தனது நாடகங்களில் சில மேடைகளில் நடிக்க வைத்தார்.

1952களில் ஒரு பாடசாலையில் ஆசிரியராக இருந்த கலைப்பேரசு யுயுபொன்னுத்துரையின் வலைவனுக்கு வல்லவன், நல்ல மனைவி, திலகு...ம் ஆகிய நாடகங்களில் நடிப்பதற்கு வாய்ப்பளித்தார். க.பொ.த சாதாரண தரம் படிக்கும் காலத்தில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள் பலர் இணைந்து காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றம் எனும் கலை இலக்கிய சமூக விளையாட்டுத்துறைகள் சார்ந்த மன்றத்தை ஆரம்பித்து வருடா வருடம் ஆண்டுவிழா, பாரதி விழா நாடகப் போட்டிகள், கலைத்துறைப் போட்டிகள், கவி அரங்கம், விவாத அரங்கம் போன்றவற்றை நடத்தி வந்தோம். அம் மன்றத்தில் நீண்ட காலம் நாடகத்துறைச் செயலாளராகவும், பின்னர் அதன் தலைவராகவும் இருந்துள்ளேன்.

இதுவரையில் எனது தொடர் பங்களிப்பு ஒரு நீண்ட வரலாறு. இவ்வாறாக எனது நாடகக் கலைத்துறை பயணத்தின் பிரவேசத்திலிருந்து அதன் ஆர்வமும் தேடலும் முயற்சியும் சற்றும் குறைவடையாத நிலையில் இன்றுவரை அவனிடம் உள்ளது.

**உங்களது சாதனைகளோடு நாடகத் துறையில் பதிவு கூற முடியுமா?**

நாட்டில் நடந்தேறிய வன்முறைகளில் ஆகுதியான எம் இனிய அன்புள்ளங்களுக்கு சமர்ப்பணமாக இந்நூலினை 2015 இல் வெளியிட்டேன். இந் நூல் நீண்ட காலப் படைப்பின் முயற்சியின் இறுதிவடிவமாகும். அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின் ஒப்பர் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் ஒரு தொடர்பாளராக இணைந்து எயிட்ஸ் நோய்த் தடுப்புப் பிரிவில் சமூக விழிப்புணர்வு நாடகங்களைச் செய்ய வாய்ப்பு கிட்டியது. அந் நாடகங்களுக்கு நாலுகுரல் கொடுத்து ஆவணப்படுத்தி எனது கோரிக்கையினையும் அந்நிறுவனம் நடைமுறைப்படுத்தியது. இந் நூலில் இடம்பெற்ற தாளைய நாடகம் புட்டிப்பால், இரத்தம் இரத்தம், விழிப்புணர்வு வீதி நாடகம் ஆகிய மூன்றும் சம்பல்மேடு திருக்கோணமலை நகரசபை அரங்கு, அலஸ்தோட்டம் மூதூர் கிளிவெட்டி பட்டித்திடல் புளியடிச்சோலை கங்குவேலி, கச்சிமைபற்று பூநகர் அல்லைக்குளம் முத்துச்சேனை ஆகிய இடங்களில் அரங்கேற்றப்பட்டன.

**உங்களது நாடக வேலை அனுபவத்தில் மறக்க முடியாத சம்பவங்கள் பற்றி கூற முடியுமா?**

மலைக்கோவில் என்ற நாடகம் ஏழை மயில் வாழ்ந்து வந்த தங்கையை ஏமாற்றிய பணக்கார பாக்டரை வெட்டுவதற்கு அண்ணன் கத்தியை எடுத்துக் கொண்டு ஓடுகின்றான். இக் காட்சியை மேடையில் பார்த்துக் கொண்டிருந்த பார்வையாளர் ஒருவர் உணர்ச்சிவசப்பட்டு அவனை வெட்டடா என்று கூறிக் கொண்டு மேடையில் பாய்ந்தார். அண்ணனாக நானும் ஏமாற்றிய டாக்டராக ரூபவதனியின் முன்னைய நாடகத் தயாரிப்பாளர் மி.விக்கினேஸ்வரனும் நடித்திருந்தோம். இந் நாடகத்தினை அமரர் கருணானந்தசிவம் நெறிப்படுத்தியிருந்தார். இவ் அனுபவம் எனது வாழ்வில் மறக்கமுடியாத தருணமாகும்.

**நீங்கள் ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றிய பாடசாலைகளில் உங்களது நெறியாள்கையில் பயிற்றுவிக்கப்பட்ட நாடகத் துறையில் மாணவர்கள் அடைந்த வெற்றிகள் பற்றி கூற முடியுமா?**

கண்டாவளை அரசினர் வித்தியாலயத்தில் நான் நெறியாள்கை செய்த பிரகலாதன் நாடகம் வட மாகாண பாடசாலைப் போட்டியில் முதலிடம் பெற்றது. இராமநாதபுரம் மேற்கு அரசினர் வித்தியாலயத்தில் அரங்கேற்றப்பட்ட தேர்வருகுது நாட்டிய நாடகம் தமிழ்தினப் போட்டியில் மாவட்டத்தில் முதலிடம் பெற்றது. அத்தோடு சிலம்புச் செல்வி வரலாற்று நாடகம் இலக்கிய நாடகங்களில் முதலிடம் பெற்றது. சத்தியவான் சித்ருநடைக்கூத்து நாட்டுக் கூத்துக்களில் முதலிடம் பெற்றது. கயானை கண்டம் இசை நாடகப் போட்டியில் இரண்டாமிடம் பெற்றது. திருகோணமலை செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலய மாணவர்கள் நடித்த புத்திமான் பலவான் சிறுவர் நாடகம் சிறுவர் அரங்கப் போட்டியில் மாவட்டத்தில் முதலிடமும், கலியாட்டம் சிறுவர் நாடகம் வலயத்தில் இரண்டாமிடமும் பெற்றது. இதுவரையில் குறுகத்தில் இருப்பவை இவை மட்டுமல்ல.

**சமூகத்திற்கு பயனுள்ள பல நாடகங்களை இலவசமாக பயிற்றுவித்து நீங்கள் அரங்கேற்றியுள்ளீர்கள் உங்கள் வாழ்க்கை சரிதையில் பிரதிபலன் எதிர்பாராது உங்களது பணி பற்றி கூற முடியுமா?**

கலை என்பது ஒரு மனிதனின் உயிர்நாடி ஒவ்வொரு கலைஞனும் கலைக்காக வாழ வேண்டும். கலையினை வளர்த்தெடுக்க தன்னை அர்ப்பணிக்க வேண்டும் அவ்வகையில் நானும் என்னை கலைக்காக அர்ப்பணித்துள்ளேன் சமுதாயத்திற்குத் தேவையான ஒவ்வொரு நாடகத்தையும் பயிற்றுவித்து அதனை அரங்கேற்றும் போது உண்மையில் மனதில் அளவில்லாத மகிழ்ச்சியும், முழுமையான மனத்திருப்தியும் ஏற்படுகிறது.

**தற்காலத்தில் பாரம்பரியக் கலைகள் மருவிக் கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது அவ்வகையில் நாடகக் கலையின் நிலைப்பாடு பற்றியும் உங்களது கருத்தும் பற்றி கூற முடியுமா?**

ஆடல், பாடல் உரையாடல், அபிநயம் இசை என பல கலைகளின் கூட்டுப்பணியாக விளங்கி கண்ணுக்கும், செவிக்கும், சிந்தனைக்கும் ஒரு சேர விருந்தளிக்கும் உயரிய கலை நாடகம் ஆகும். இது தமிழின் தொன்மையான கலை வடிவமாக விளங்குகிறது. ஆயினும் நவீன யுகத்தின் மாற்றங்களினால் தமது பாரம்பரிய கலைகள் மருவிக் கொண்டு செல்கின்றன. மாணவர்களும், இளைஞர்களும் நம் மண்ணின் பெருமைமிக்க கலைகளில் ஈடுபடுவதற்கான ஆர்வம் குறைவான நிலையிலேயே காணப்படுகிறது. மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வேண்டுமென்று கற்கின்றார்களே தவிர கற்கின்ற பாடத்தில் பாண்டித்தியம் அடைய வேண்டுமென நினைப்பதில்லை.

பரீட்சை மையக்கல்வியாகவே காணப்படுகின்றது. மேலும் பாடசாலை கலை நிகழ்வுகளிலும் ஈடுபடுவதற்கான சூழல் மாணவர்கள் மத்தியில் மிகக் குறைவாக வேயுள்ளது. காரணம் பிரத்தியேக வகுப்புகளில் தங்களது அக்கறையினைக் காட்டி வருகின்றனர். அடுத்து இளைஞர்களும் நமது பாரம்பரிய கலைகளை விடுத்து மேற்கத்தைய கலாசாரக் கலைகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந் நிலைப்பாடு மாற வேண்டும். வருடந்தோறும் தமது பாரம்பரிய கலைகளை பிரதிபலிக்கும் வண்ணம் பாடசாலைகளிலும், அரச இடங்களிலும் நிகழ்வுகளை நடத்த வேண்டும். இது குறித்து கலைஞர்கள் சிந்திக்க வேண்டும். கலைஞர்கள் மட்டுமன்றி சமூக ஆர்வலர்கள், ஊடகங்கள், பொறுப்பதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும்.

**நாடகக் கலைத் துறையில் உங்களுக்குக் கிடைத்த விருதுகள் பற்றி கூற முடியுமா?**

2010 இல் கலாபூஷணம் விருதும், பிரதேச சாகித்திய விருதும், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் கலை அபிவிருத்தி போக்குவரத்து அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் முதலமைச்சர் விருதும், 2013 இல் கிளிநொச்சி மாவட்டத்தமிழ்ச் சங்கத்தினால் தமிழ் ஒளி விருதும், 2014 இல் நகர முதல்வர் விருதும் கிடைக்கப் பெற்றது.

**கலைகளுக்காகவே வாழ்கின்ற மூத்த கலைஞர்கள் கால ஓட்டத்தில் நம் மண்ணில் மறைந்து கிடக்கின்றனர். அவ் வகையில் ஒரு மூத்த கலைஞராக நீங்கள் கூற விரும்புவது?**

திருக்கோணமலையில கலைஞர்களை விட இலக்கியவாதிகளே அதிகம். ஒரு கவிதை நூலினை வெளியிட்டு தங்களைக் கலைஞராக ஒரு சிலர் உருவகித்துக் கொள்கின்றனர்.

கலைஞர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் பரவலாக்கப்பட்டுள்ளதே தவிர வழங்கலுக்கான வகையில்லை மற்றும் சலுகைகள் போதாது. அது பணமாக இல்லாது கௌரவிப்புகளாக இருத்தல் வேண்டும் இதன் மூலம் அவர்களின் மனநிலையில் ஒரு உந்து சக்தி ஏற்பட வாய்ப்புண்டு மேலும் சுகநலன்களில் கலைஞர் அனுபவங்கள் அக்கறை காட்ட வேண்டும். அரசாங்கமும், அரசியல்வாதிகளும் கலைகளையும், கலைஞர்களையும் சமமாக மதிக்க வேண்டும் இதுவே சக கலைஞனாக எனது மனநிலைப்பாடாகும்.

அவ் வகையில் எனது நாடகக் கலைப்பயணத்தின் மறக்க முடியாத பல விடயங்களை பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்த வீரகேசரியின் சங்கமம் கலைஞர் பகுதிக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப் பணி தொடர வாழ்த்துகிறேன்.

நேர்கண்டவர்
புஷ்பேந்திரன் தட்சாயினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாம்பல்மேடு நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட வைத்திய அதிகாரி திரு.ரொஹான் பிரசாந்த் அவர்கள் கனக மகேந்திரா அவர்களின் விழிப்புணர்வு நாடகங்கள் தொடர்பாக ஆற்றிய உரையின் தொகுப்பு**

**(பிரசுரம் : 03.06.2010 - வீரகேசரி)**

# கொடிய நோயை விழிப்புணர்வு செய்யும் விதத்தில் நாடகங்கள் நூலுருவில் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது

## - வைத்திய அதிகாரி திருமதி றொகான் பிரசாந்த்

மூதூர்,

திருகோணமலை நகரசபை அரங்கில் கனக மகேந்திராவின் "இரத்தம் இரத்தம்" என்னும் நாடகத்தை நான் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. அது மிகவும் சிறப்பாக எச்.ஐ.வி. எயிட்ஸ் தொடர்பான கருத்துக்கள் இலகுவில் மக்கள் மத்தியில் சென்றடையும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த நாடகங்கள் நூலுருவில் வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அதை உருவாக்கிய ஆசிரியரை நான் பாராட்டுகிறேன்.

இவ்வாறு 'சாம்பர் மேடு' நூல் வெளியீட்டின் போது சிறப்புரையாற்றிய திருகோணமலை பாலியல் நோய்ச் சிகிச்சை நிலைய வைத்திய அதிகாரி திருமதி ஜெ.றொகான் பிரசாந்த் தெரிவித்தார்.

ஒபர் நிறுவன திட்ட முகாமையாளர் க. மோகனசுந்தரம் தலைமையில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடந்த கனக மகேந்திராவின் நாடகத்தொகுப்பு நூல் வெளியீட்டில், முதன்மை விருந்தினராக திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச செயலாளர் திருமதி சா. ஜலதீபன் கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினராக முன்னாள் மாகாண பிரதிக்கல்விப்பணிப்பாளர் கலாபூஷணம் ச.அருளானந்தம் கலந்து கொண்டார்.

முதலில் ஆசியுரையை வேதாகமமாமணி சோ. இரவிச்சந்திரக் குருக்கள் வழங்கியதுடன், நூலாசிரியரை பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். இங்கு அட்டைப்பட ஓவியர் ஸ்ரீதரன் ஆசிரியரும் நூலாசிரியரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். வரவேற்புரையை 'நீங்களும் எழுதலாம்' கவிதை தொகுப்பு நூல் ஆசிரியர் தனபாலசிங்கம் நிகழ்த்தினார்.

இங்கு மேலும் பேசிய வைத்திய அதிகாரி மேலும் கூறியதாவது:-

இந்நூலிலே இன்று நாடகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2008 டிசம்பரில் இவரின் "இரத்தம் இரத்தம்" என்ற நாடகத்தை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

உலகளாவிய ரீதியில் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் கொடிய நோயை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதன் மூலம் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது எனது நிறைந்த நம்பிக்கையாகும். இவை நூலாக மட்டும் நின்று விடாது அரங்குகள் ஊடாகவும் சகல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படவேண்டும்.

அதற்கு சமூக தன்னார்வ தொண்டு அமைப்புக்கள் முன்வரவேண்டும். அதன் மூலமே நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கும் இந்நோயை ஆபத்தில் இருந்து எமது மக்களைக் காப்பாற்ற முடியும்.

பல்வேறு புத்திஜீவிகளும் உள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நோயைப் பற்றியும் சிலவற்றை நான் கண்ட அனுபவங்களுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

நம் நாட்டில் நாம் பேணிவரும் பண்பாடு, ஒருவருக்கு ஒருத்தி என்ற கோட்பாடு, கலாசாரம், சட்டம் ஒழுங்கு விதிகள் போன்றன மீறப்படும் சூழலில் இது போன்ற கொடிய நோய் தொற்றுக்கு நம் சமூகம் ஆளாகும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

வறுமை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, போர், இடம்பெயர்வு, அகதி முகாம் வாழ்க்கை, அடிக்கடி இந்தியாவிற்கு இடம் பெயர்ந்து வரும் சூழல் என்பன இவ்வாபத்துக்கு காரணியாக அமைந்துள்ளன.

தகாத பாலுறவு, தொற்றடைந்த தாயிலிருந்து பிறக்கும் குழந்தை, குருதி மாற்றீடு போன்றவற்றினால் எச்.ஐ.வி. இன்னுமொருவருக்கு தொற்றுகிறது. இலங்கையில் 4 ஆயிரம் பேர் வரை நோய் தொற்றுள்ளவர்கள் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

என்னிடம் சிகிச்சைக்கு வரும் பலரையும் அவதானிக்கும் போது மிகவும் வேதனையாகவுள்ளது. திருமலையில் 8 பேர் வரையுள்ளனர்.

ஒரு மாணவன் இவர் சிறந்த ஒரு உயர் நிலை குடும்பத்தைச் சார்ந்தவன், கல்விக்காக வெளிநாடொன்றில் இருந்த சூழலில் தகாத உறவுகளில் ஈடுபட்டுள்ளான். அதன் காரணமாக என்னிடம் வந்து தன்னை பரிசோதிக்குமாறு வேண்டினான் நான் எச்.ஐ.வி. தொற்றும் விதத்தில் நடைந்துள்ளேன். எனக்கு நிச்சயம் அது இருக்கும் என பரிசோதனை செய்யுங்கள் என வேண்டினான். ஆகவே இந்த சூழலில் பல உயர் நிலையில் இருக்கும் இளைஞர்கள் கூட இவ்வாறான தகாத சூழல் நடத்தையால் அவதியுறும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இது போன்று ஒரு பெண் வந்தார். அவருக்கு தொற்று ஏற்பட்டிருந்தது. அவர் வறுமை காரணமாக தொழில் நிமித்தம் வெளிநாடு சென்ற வேளை ஒரு தடவை தவறாக பலாத்காரப்படுத்தப்பட்டதனால் இந்நோய் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் வேறு தவறு எதுவும் செய்யவில்லை. தற்சமயம் இந்நோயால் அவதியுறுகிறார். இவ்வாறு பல சம்பவங்களைப் பார்க்கிறோம். அவை அனைத்தும் எமது கலாசார, பண்பாடுகளை மீறுவதனால் ஏற்படுவதை அவதானிக்கலாம்.

எனவே அத்தகைய கொடிய நோயை விழிப்புணர்வு செய்யும் விதத்தில் கனக. மகேந்திராவின் நூல் அமைந்திருப்பது பாராட்டத்தக்கது. இதனை ஒவ்வொருவரும் விளங்கிக் கொண்டு இந்த கொடிய நோயிலிருந்து எமது சமூகத்தை காப்பாற்ற வேண்டும். எமது இளைஞர், யுவதிகளைக் காப்பாற்றவேண்டும் வளர்ந்து வரும் சமூகக்காரணிகள், தொழில் நுட்பங்கள் இதற்கு ஆதாரவாகவுள்ளன என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

03.06.10 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சுபீட்சம் 05

திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை – 02

# நானிலமும் நயந்து பாராட்டிய நாடகக் கலைஞரின் சாதனைப் பயணம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபீட்சம் 06

# நானிலமும் நயந்து பாராட்டிய நாடகக் கலைஞரின் சாதனைப் பயணம்!













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீடுபுகழ் சூடிய மகுடங்கள்



கலாபூசணம் - 2010



கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது - 2010



தமிழ் எழில் விருது - 2014 (2013)



பிரதேச சாகித்திய விருது



மூத்த இலக்கியவாதி கௌரவிப்பு



சொற்சிலம்பம் கௌரவிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாண்மை மிகு இல்லாண்மை





பெற்றோருடன்



உடன்பிறப்புக்களுடன்






தன் பெரியையா குடும்பத்தாருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீள் வினையான் நீளும் குடி















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கை ஆண்ட கலைக் கோலங்கள் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலையும் மொழியும் காலமெல்லாம் சிறக்க காலம் தந்த தம் ஆசான் இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் பொற்காலம் கண்ட அதிபர் கலாபூசணம் கனக மகேந்திரா அவர்களின் நினைவினைப்போற்றி பாடசாலை பழையமாணவர்களால் இப்பாடல் சமர்ப்பணம்.

வரிகள்: புவனா இந்திரகுமார்
குரல்: இரா.செங்கதிர்
இசை: பி.எஸ்.விமல்
தொகுப்பு: ம.ரகிதாப்


காலம் தந்த பெரும் கொடையே கனக மகேந்திரா
கலங்கரை விளக்கே
ஆளுமையின் செயல்வீரன் ஆற்றல் மிகு
எங்கள் பள்ளி முதல்வன்
கல்விப்பாதை கல்முள் களைந்து
கனமிகு கால பணிபுரிந்த
கலைத்தாயின் சுடர் விளக்கே
மௌனமாகி மறைந்தது எங்கே
பெற்றவர் அன்பை நிதமும் கற்றுணர்
பொழிந்த எங்கள் ஆசானே
எம் நினைவிற்குள் ஒளிர்கின்ற அணையாத தீபம்
நினைவுடன் என்றும் வாழ்வோமே

வாயெடுத்து பாடுதற்கும் வரிகள் வரவில்லை
பாவிகள் நமக்கு
வந்து உம்மை அஞ்சலிக்க
வழிகளும் இல்லை எங்களுக்கு
துயர் நிறைந்த உங்களது அன்பு
குடும்பத்தினரின் கண்ணீர் துடைக்க
பள்ளி உறவு என்று சொல்லிக் கொள்ள
அருகினிலே யாருமில்லை
அருகினிலே யாருமில்லை........
பெற்றவர் அன்பை நிதமும் கற்றுணர்
பொழிந்த எங்கள் ஆசானே
எம் நினைவிற்குள் ஒளிர்கின்ற அணையாத தீபம்
நினைவுடன் என்றும் வாழ்வோமே
வட்டக்கச்சி இரா மேற்கு வரலாற்றில் உந்தன்
பெயர் இருக்கும்
மக்களையும் மண்ணையும் நேசித்து
உயர் பணியாற்றிய பெருந்தகையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் சமூகத்தை மனதால் நேசித்து
கனவிற்கு உயிர் தந்த ஓவியமே
பெரும் துயரில் நிலைகுலைந்து தவிக்கின்றோம்
எம் குரல் கேட்கிறதா
எம் குரலகள் கேட்கிறதா
பெற்றவர் அன்பை நிதமும் கற்றுணர்
பொழிந்த எங்கள் ஆசானே
எம் நினைவிற்குள் ஒளிர்கின்ற அணையாத தீபம்
நினைவுடன் என்றும் வாழ்வோமே

காலம் தந்த பெரும் கொடையே கனக மகேந்திரா
கலங்கரை விளக்கே
ஆளுமையின் செயல்வீரன் ஆற்றல் மிகு
எங்கள் பள்ளி முதல்வன்
கல்விப்பாதை கல்முள் களைந்து
கனமிகு கால பணிபுரிந்த
கலைத்தாயின் சுடர் விளக்கே
மௌனமாகி மறைந்தது எங்கே
பெற்றவர் அன்பை நிதமும் கற்றுணர்
பொழிந்த எங்கள் ஆசானே
எம் நினைவிற்குள் ஒளிர்கின்ற அணையாத தீபம்
நினைவுடன் என்றும் வாழ்வோமே
நினைவுடன் என்றும் வாழ்வோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆற்றியது ஆற்றியதால் போற்றுவார் போற்றினர்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org